
வரு.72 இல. 37 ★
www.vaaramanjari.lk
/Thinakaran.lk /ThinakaranLK
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI
තිනකරන් වාරමන්ජරී
2020 செப்டெம்பர் 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
September 13 Sunday, 2020
32பக்கங்கள் 40/-






காதலுக்கு எதிர்ப்பு: உயிரை மாய்த்த காதலர்கள் 03


அருகிவரும் குடிசைக் கைத்தொழில் 05


ஜனநாயகத்துக்கு விரோதமான 20ஐ ஏற்கமாட்டோம் 07


டெஸ்ட் வரலாற்றில் 600 விக்கெட்டுகள் வீழ்த்தி சாதனை 24


# புதிய அரசியலமைப்பை உருவாக்கவே ஜனாதிபதிக்கு மக்கள் ஆணை வழங்கினர்

## அனுராதபுரம் புனித பூமியில் மஹா சங்கத்தினர் ஆசி வழங்கி தெரிவிப்பு



நாட்டுக்குப் பொருத்தமான புதிய அரசியலமைப்பை தயாரிப்பதற்கு மக்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவுக்கு பெரும்பான்மை பலத்தை வழங்கியுள்ளதாக மஹா சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

மக்கள் எதிர்பார்ப்பை கட்டம் கட்டமாக நிறைவேற்றி தன்னிறைவான பொருளாதாரம் ஒன்றை கட்டியெழுப்புவதற்கான ஜனாதிபதியின் பயணத்தை மகிழ்ச்சியுடன் பார்த்துக் கொண்டிருப்பதாகவும் தேரர் குறிப்பிட்டுள்ளார்.

வரலாற்று முக்கியத்துவமிக்க அனுராதபுரம் அட்டமஸ்தானவில் சமயக் கிரியைகளில் ஈடுபட்டு ஆசிர்வாதங்களை பெற்றுக்கொண்ட ஜனாதிபதி, (12) முற்பகல் லங்காராமய, மிரிசவெட்டிய மற்றும் ஸ்ரீ சம்புத்த ஜயந்தி விகாரைகளுக்கு சென்ற வேளையிலேயே விகாராதிபதி தேரர்கள் இதனை தெரிவித்தனர்.


லங்காராம விகாரைக்கு சென்ற ஜனாதிபதி, விகாராதிபதி சங்கைக்குரிய ரலபனாவே தம்மஜோதி தேரரை சந்தித்து உரையாடினார். விகாரையின் பாதுகாப்பு நடவடிக்கைகளை பார்வையிட்ட ஜனாதிபதி, புனித பூமிக்கு வருகை தந்திருந்த பக்தர்களுடனும் உரையாடினார்.

ஜனாதிபதி மிரிசவெட்டிய விகாராதிபதி சங்கைக்குரிய ஈத்தல வெட்டுனுவெவே ஞானதிலக்க நாயக்க தேரரை சந்தித்து ஆசிர்வாதங்களை பெற்றுக்கொண்டார்.

ஸ்ரீ சம்புத்த ஜயந்தி விகாரரைக்கு சென்ற ஜனாதிபதி, சங்கைக்குரிய நுகேதென்னே ஸ்ரீ பஞ்ஞானந்த தேரரை சந்தித்து உரையாடினார்.

## சாரதி அனுமதி பத்திரம் பெற இரத்த பரிசோதனை அவசியமில்லை

**சுப்பிரமணியம் நிஷாந்தன்**



எதிர்காலத்தில் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கும்போது இரத்தப் பரிசோதனை செய்யப்படமாட்டாதென போக்குவரத்து சேவைகள் இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார். 04

## முக்கிய சில தீர்மானங்களை எடுக்க நாளை கூடுகிறது TNA

### 20வது திருத்தம் குறித்து விசேடமாக ஆராய்வு



**சுப்பிரமணியம் நிஷாந்தன்**

20ஆவது திருத்தச் சட்டம் குறித்து ஆராய்ந்து முக்கிய தீர்மானத்தை எடுப்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாளை திங்கட்கிழமை கொழும்பில் கூடவுள்ளது. 04

## பாசிக்குடா கடலில் நீராடச் சென்ற 17 வயது மாணவன் மரணம்

மட்டக்களப்பு பாசிக்குடா கடலில் இரு நண்பர்களுடன் நீராடச் சென்ற 17 வயது மாணவன் நீரில் மூழ்கி உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இச் சம்பவம் நேற்று முன்தினம் மாலையில் இடம்பெற்றுள்ளதாக கல்குடா பொலிஸார் தெரிவித்தனர். 04

## நல்லாட்சியில் ஊழல் ஒழிப்பு செயலகத்தில் மாபெரும் ஊழல்

### ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணையில் அம்பலமாகியது



ஊழல் தொடர்பில் ஆராய நல்லாட்சி அரசின் அமைச்சரவையின் ஒப்புதலுடன் அமைக்கப்பட்ட ஊழல் ஒழிப்பு குழு செயலகம் 29 மாதங்களாக பாரிய அளவிலான ஊழல்களைச் செய்து 33,714,807.59 மில்லியன் ரூபா பணத்தை செலவு செய்துள்ளமை தற்போது அம்பலமாகியுள்ளது.

அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவினால் நேற்று முன்தினம் 04


## மொகமட் முசம்மில் வைத்தியசாலையில்

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் மொஹமட் முசம்மில் திடீரென வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

திடீரென நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட நெஞ்சு வலி காரணமாக அவர் ஜயவர்தனபுர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## அரச காணிகளில் குடியிருப்போருக்கு அக் காணிகளை வழங்கும் திட்டம்

### அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியானது



அரசுக்கு சொந்தமான காணிகளில் குடியிருக்கும் பொது மக்களுக்கு அந்த காணிகளை பகிர்ந்தளித்து சட்டரீதியான ஆவணங்களை வழங்குவதற்கான அதி சிறப்பு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

கொழும்பு, கம்பஹா தவிர்ந்த நாட்டின் ஏனைய பகுதிகளில் இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ள 04



சமூகத்தில் கொரோனா வைரஸ் தொற்றுள்ளவர்கள் எவரும் அடையாளம் காணப்படாத நிலையில் நாடு படிப்படியாக வழமைக்கு திரும்பிக்கொண்டிருக்கிறது. மக்கள் உள்ளூரிலும் சுற்றுலா செல்வதற்கு ஆரம்பித்துவிட்டனர். வெள்ளவாயவுக்கும் எல்லவுக்குமிடையே காட்டுக்குள் இயற்கையாக அமைந்துள்ள 'எல்லவல்ல' நீர்வீழ்ச்சியில் நூற்றுக்கணக்கான உள்ளூர் சுற்றுலா பயணிகள் தினமும் நீராடுவதை காணலாம். *(படம்: காரைதீவு குறூப் நிருபர் வி.ரி.சகாதேவராஜா)*

## 10 வயதில் O/L பரீட்சை எழுத விரும்பும் சிறுமி



பத்து வயது சிறுமி ஒருவர் க.பொ.த சாதாரண தர பரீட்சை எழுத, பரீட்சைகள் திணைக்களத்திடம் சந்தர்ப்பம் கோரியுள்ளார். இதன்படி பொலன்னறுவை, அரலகங்வில 04

## யாழ். புதிய கட்டளைத் தளபதி நல்லை ஆதீனத்திடம் ஆசி

**பருத்தித்துறை விசேட நிருபர்**



யாழ். மாவட்டத்தின் புதிய கட்டளைத் தளபதியாக பொறுப்பேற்றுள்ள மேஜர் ஜெனரல் செனரத் பண்டார நேற்று நல்லை ஆதீன குருமுதல்வரை சந்தித்து கலந்துரையாடியதுடன் ஆசீர்வாதமும் பெற்றுக்கொண்டார்.

புதிதாக பதவியேற்றுள்ள கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் செனரத் பண்டார, பல தரப்பினரையும் சந்தித்து கலந்துரையாடி வருகின்ற நிலையில் நேற்றுக் காலை நல்லூர் 04

## ஆறுமுகன் இல்லாவிடினும் அவரது கொள்கையை CWC பின்பற்றும்

### பாராளுமன்றத்தில் ஜீவன் தொண்டமான்

**லோரன்ஸ் செல்வநாயகம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**



ஆறுமுகன் தொண்டமான் இல்லாவிட்டாலும் அவரது கொள்கைகளின்படியே செயற்படுவோம் என இலங்கை தொழிலாளர் காங்கிரசின் பொது செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார். பாராளுமன்றில் நேற்று முன்தினம் 04

### உடல் நலத்துடன் வாழும் முறை

## அமைச்சர் நாமலின் வேலைத்திட்டம் 'வோக் டோக்' என பெயரிட்டு அறிமுகம்



உடல் நலத்துடன் கூடிய வாழ்க்கை முறையை ஊக்குவிக்கும் நோக்கில் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, நடந்து செல்லும் போதே கூட்டத்தை நடத்தும் புதிய வேலைத்திட்டமொன்றை 04



என்ன தலைவரே, காலையிலிருந்து ஒரே யோசனையாக இருக்கிறீங்க....?

அது ஒண்டுமில்லை, ஊடகங்களுக்கு அறிக்கை விடலாம் எண்டா அரசாங்கம் நாட்டுல சகல பிரச்சினைகளயும் தீர்த்து வைத்துக் கொண்டிருக்குது... அதுதான் ஒரே யோசனையா இருக்கு......

## தோட்ட முகாமையாளரை இடமாற்றம் செய்யக்கோரி ஹற்றனில் போராட்டம்

### செம்புவத்த தொழிலாளர்கள் நேற்று போர்க்கொடி

**ஹற்றன் விசேட, ஹற்றன் சுழற்சி நிருபர்கள்**



சர்வாதிகாரிபோல் செயற்படும் தோட்டதுரையை உடனடியாக இடமாற்றம் செய்யுமாறு வலியுறுத்தி ஹற்றன், செம்புவத்த தோட்ட தொழிலாளர்கள் நேற்று தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டனர். சம்பளத்தை குறைத்து, நிபந்தனைகளை விதித்து தொழிலாளர்களின் வயிற்றில் அடிக்கும் துரையை வெளியேற்றும் 04

## மட்டக்களப்பில் வாள்வெட்டு குழுவின் தலைவருடன் இருவர் கைது

### கைக்குண்டுகள், வாள்களும் மீட்பு




மட்டக்களப்பு வாள்வெட்டு குழுவின் தலைவர் தனு உட்பட இருவரை வாள்கள் மற்றும் கைக்குண்டுடன் நேற்று முன்தினம் கைது செய்துள்ளதாக மட்டு. தலைமையக பொலிசார் தெரிவித்தனர். மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவிலுள்ள நாற்கேணி மற்றும் 04

## திருமண நாளன்றே ஆண் குழந்தைக்கு தந்தையானார் நாமல்



விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சரும் பிரதமரின் புதல்வருமான நாமல் ராஜபக்ஷ, ஆண் குழந்தையொன்றுக்கு தந்தையாகியுள்ளார். இந்நிலையில் கடந்த ஆண்டு செம்டெம்பர் 12 ஆம் திகதி, லிமினியை 04





கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் கற்கை நெறியைப் பூர்த்தி செய்யும் ஆசிரிய பயிலுநர் இரத்தினபுரி த.பரமநாதன் சுருக்கெழுத்து வழிகாட்டல் என்ற நூலை (11.09.2020) கலாசாலையில் வெளியிட்டார். நூலை கலாசாலை அதிபர் வீ. கருணலிங்கம் வெளியிட்டு வைக்க யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் உபபீடாதிபதி செல்வமலர் செல்வராசா பெற்றுக்கொண்டார்.










22வது கொடகே தேசிய சாகித்திய விருது விழா வியாழக்கிழமை (10) மாலை கொழும்பு 7. இலங்கை மன்றக் கல்லூரி கேட்போர் கூடத்தில் நடை பெற்றபோது மங்கள விளக்கை கொடகே நிறுவன தலைவர் எஸ்.சிரிசுமன கொடகே டவர் ஹோல் நிதியத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் புரவலர் ஹாசிம் உமர் ஆகியோர் இணைந்து ஏற்றுவதையும் வாழ்நாள் சாதனையாளர் விருதை கொடகே தம்பதியரிடமிருந்து எஸ்.முத்துமீரான் பெறுவதையும் சிறந்த படைப்புகளுக்கான விருதுகளை மலரன்பன். க.கோபாலபிள்ளை, சித்தி ரபீக்கா பாயிஸ்.மு.இ.அச்சிமுகம்மட். ஆகியோர் பெறுவதையும் மேமன் கவி உரையாற்றுவதையும் ஏனைய நிகழ்வுகளையும் படங்களில் காணலாம்.

(படங்கள் : ஏ.கே.விஜயபாலன்)

# கலாநிதி ஏ. எஸ். சந்திரபோஸை கௌரவிக்கும் நிகழ்வு



எஸ்.ஏ. அரியதுரை, பேராசிரியர் சந்திரபோஸ், எஸ். விஜயசந்திரன், ஓய்வு நிலை பேராசிரியர்கள் சோ. சந்திரசேகரன், எம்.எஸ். மூக்கையா, டி. தனராஜ், கலாநிதி எஸ். என் மொறாயஸ், தோட்ட வீடமைப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் எம். வாமதேவன், அட்டன் வலயக் கல்விப் பணிப்பாளர் பி. ஸ்ரீதரன் உட்பட கல்விப் புலம் சார்ந்த பலரும் கலந்து கொண்டார்கள்.

அதிதிகள் ஊர்வலமாக அழைத்து வரப்படுவதையும், பேராசிரியர் சந்திரபோஸ் கௌரவிக்கப்படுவதையும், பிரதம அதிதியான துணை வேந்தருக்கு கொட்டகலை அரசினர் ஆசிரியர் கலாசாலை அதிபர் திருமதி சந்திரலேகா கிங்ஸ்லி



இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் சிரேஷ்ட கலாநிதி ஏ. எஸ். சந்திரபோஸ் பேராசிரியராக பதவி உயர்வு பெற்றுள்ளதை பாராட்டி கௌரவிக்கு முகமாக மணிவிழாக் குழுவின் தலைவர் எம். அகிலன் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வு 29.08.2020 சனிக்கிழமை அட்டன் லக்ஷ்மி மஹால் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் மணிவிழா மலரை கையளிப்பதையும், கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

(கொட்டகலை தினகரன் நிருபர்)



ஓட்டமாவடியை சேர்ந்த எம்.ஐ.சல்மான் வஹாபின் சிறுவர் பாடல்கள் அடங்கிய இறுவெட்டு அறிமுக விழா சனிக்கிழமை (12) காலை கொழும்பு மருதானை அல் இம்தியாஸ் மகாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றபோது இறுவெட்டின் முதல் பிரதியை டவர் ஹோல் நிதியத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் புரவலர் ஹாசிம் உமர் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஏ.எல் எம்.உவைஸ்ஸிடமிருந்து பெறுவதையும் திறனாய்வு செய்த எழுத்தாளர் முஸ்டீன் எம்.ஐ.சல்மான் வஹாபியையும் காணலாம்.

# அரச நாடக விழா 2020







பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் வழிகாட்டலின் கீழ் தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்ப கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க மற்றும் நிஸங்க தித்தெனிய, அனுலா புலத்சிங்ஹள வண. மரிய சேவியர் அடிகள் ஆகியோர் தலைமையில் பல்துறைக் கலைஞர்களின் பங்குபற்றலுடன் அரச நாடகவிழா 2020 விருது வழங்கல் வைபவம் கடந்த வெள்ளிக்கிழமை மாலை கொழும்பு 07 தாமரைத் தடாக அரங்கில் நடைபெற்றது. நிகழ்வில் சினிமா நாடகத்துறையில் சாதனைகள் படைத்த சிரேஷ்ட கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

வண. மரிய சேவியர் அடிகளுக்கான விருதை அருட்தந்தை என்டன் ஸ்டெபனும், புத்ததாச கலப்பதி அனுலா புலத்சிங்கள ஆகியோருக்கு பிரதம விருந்தினராக வருகை தந்த இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க வழங்குவதையும் அருகில் பிரபல கலைஞர்களான மாலினி பொன்சேகா, ரவீந்திர ரன்தெனிய பேராசிரியர் யசேன கோட்டேகொட, ஆரியரத்ன எதுகல, தரணி அனோஜா கமகே கபிலகுணவர்தன ஆகியோரையும் தமிழ் குழு மற்றும் குறு நாடகத்திற்கான முதலாம், இரண்டாம், மூன்றாம் விருதுகளைப் பெற்ற கலைஞர்களையும் கலை நிகழ்வுகளையும் படங்களில் காணலாம்.

(படங்கள் : ஏ.கே.விஜயபாலன்)






யாழ் வணிகர் கழக மூத்த உறுப்பினரும் யாழ். இந்து சமயப் பேரவையின் செயலாளரும் இலங்கையின் பிரபல வர்த்தகருமான ஆனந்த சற்குணராசாவின் மணிவிழா நிகழ்வு யாழ் வணிகர் கழக பணிமனையில் கடந்த 05.09.2020 அன்று நடைபெற்றது. குடாநாட்டு வர்த்தகர்கள் ஒன்றிணைந்து இந்த மணி விழாவை நடத்தினர்.



வத்தளை இல 398 ஹெந்தல வீதியில் அமைந்திருக்கும் கப்றி சுப்பர் மார்க்கட் சந்தை படுத்தும் நிலையம் அண்மையில் கோலாகலமாக திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் நிறுவனத்தின் உரிமையாளரின் பெற்றோர்களான பொன்னுசாமி முத்துராஜ் தம்பதிகள் மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் நிர்வாக பணிப்பாளர் திருமதி சண்முகப்பிரியா கார்த்திகேசு ஆகியோரையும் படங்களில் காணலாம்.

(படங்கள் : ஏ.கே.விஜயபாலன்)




# காதலுக்கு எதிர்ப்புவரவே உயிரை மாய்த்த காதலர்கள்



## பரந்தனில் பரிதாபம்

உலக தற்கொலை தடுப்பு தினம் ஆண்டுதோறும் செப்டம்பர் மாதம் 10ஆம் திகதி அனுட்டிக்கப்படுகின்றது. இத்தினத்தில் தற்கொலையை தடுக்கும் விழிப்புணர்வுகள் உலகளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படுகின்றன. ஆனால் அன்றைய தினத்தில் தான் கிளிநொச்சியில் தற்கொகொலை செய்து கொண்ட இருவரினதும் சடலங்கள் கண்டு பிடிக்கப்பட்டன.

இவ்வாறான தற்கொலைக்கான காரணம் என்ன? தற்கொலை எண்ணம்கொண்டவர்ளை அதிலிருந்து எவ்வாறு விடுவிப்பது என்பது பற்றி பல்வேறு ஆய்வுகள் செய்யப்பட்டு ஆலோசனைகள் வழங்கப்பட்டாலும் இவ்வாறான தற்கொலைகள் நீள்கின்றன

ஆண்டொன்றுக்கு உலகளாவிய ரீதியில் சுமார் எட்டு இலட்சம் பேர் தற்கொலை செய்து கொள்வதாக ஆய்வுகள் கூறுகின்றன.

அதாவது நாற்பது நிமிடத்திற்கு ஒரு தற்கொலை என்ற அடிப்படையில் 15 வீதமான ஆண்களும் 8 வீதமான பெண்களும் தற்கொலை செய்து கொள்வதாகவும் இந்த ஆய்வுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

கிளிநொச்சி பெரிய பரந்தன் பகுதியில் கடந்த வியாழக்கிழமை தூக்கில் தொங்கிய நிலையில் ஆண், பெண் இருவரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளமை அந்த பிரதேசத்தை மட்டுமல்ல வடமாகாணத்திலுமே பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 4ம் திகதி முதல் காணாமல் போனதாக தெரிவித்து தேடப்பட்டு வந்த 28 வயதான சுசிதரன் மற்றும் 27 வயதான தனுசியா ஆகியோரே இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட்டனர்.

இவர்களின் காதலை பிரிக்க பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் முயன்றதால் இவர்கள் தற்கொலை செய்துள்ளனர் என அறிய முடிகின்றது.

பட்டதாரியான பெண் இம்மாதம் 2ம்திகதி வழங்கப்பட்ட பட்டதாரி நியமனத்தில் தொழில் வாய்ப்பை பெற்று கரைச்சிப் பிரதேச செயலகத்தில் கடமையேற்றுக் கொண்ட நிலையில் கடந்த 4ம்திகதி முதல் காணாமல் போயிருந்தார்.

இதேபோல சடலமாக மீட்கப்பட்ட ஆண் மின்சார சபையில் நீண்டகாலமாக பணியாற்றி வந்தவராவர். இவர்களின் காதல் நீண்டகாலமாக இருந்துள்ளது என்றும் காதலைப் பிரிப்பதற்கு பெற்றோரும் உறவினரும் பல தடவைகள் முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர் என அறியமுடிகின்றது.

வழமை போன்று யாழ்ப்பாணத்திற்கு கடமைக்குச்சென்ற இளைஞர் கடந்த 4ம்திகதி வெள்ளிக்கிழமை அவரது காதலி பணியாற்றிய கரைச்சிப் பிரதேச செயலகத்திற்கு சென்று அவர் கடமை முடித்து வரும் வரை காத்திருந்தார். அப்போது தனக்குத் தெரிந்த ஒருவரிடம் எப்போது வேலை முடியும் என்றும் காதலியுடன் நியமனம் பெற்ற கடமையில் உள்ள சக பட்டதாரி ஒருவர் தெரிவித்தார். அன்றைய தினமே அவர்கள் இருவரும் காணாமல் போயிருந்தனர்.

இரண்டு பேரும் காணாமல் போனமை தொடர்பில் தகவலறிந்த பின்னர் அடுத்தடுத்த நாட்களில் உறவினர்கள் நண்பர்கள் தேடி வந்துள்ளனர். இவ்வாறு தங்கள் உயிரை ஒன்றாக மாய்த்துக்கொண்ட

காதலர்களின் உடலங்கள் ஒருவாரத்தின்

பின்னர் கண்டுபிடிக்கப்பட்டன. ஒன்றாக இணைந்து மகிழ்வோடு பயணிக்க தாங்கள் கண்ட கனவுகளையெல்லாம் புதைத்து விட்டு இருவரும் இணைந்து இவ்வாறானதொரு தவறான முடிவை எடுக்க எவ்வாறு மனம் வந்தது என்று பலரும் அங்கலாய்க்கின்றனர்.

இந்த காதலர்களின் தவறான முடிவெடுப்புக்கு அவர்களது காதலுக்கு.வீட்டில் கிளம்பிய எதிர்ப்பே காரணம் என்று சொல்லப்படுகின்றது

கிளிநொச்சி மாவட்டத்தில் இந்த ஆண்டில் இடம் பெற்ற தற்கொலை மரணங்களில் அதிகமானவை பட்டதாரிகள் மற்றும் பல்கலைகழக மாணவர்களின் தற்கொலைகளாகும்.

யது பாஸ்கரன்...




# மன்னார் கடலில் அத்துமீறும் இந்திய இழுவைப்படகுகள்


# போதைப் பொருள் பாவனையும் கொரோனாவும் அதிகரிக்கலாம் என்ற அச்சத்தில் மன்னார் மக்கள்!

மன்னார் கடற்பிராந்தியத்தில் இந்திய இழுவைப் படகுகளின் வருகை தற்போதும் அதிகரித்துள்ளது. இவர்களின் அதிகரித்த வருகையால் மன்னார் மாவட்ட கடற்றொழிலாளர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியிருக்கிறது.

இலங்கையின் அயல் நாடான இந்தியாவில் 'கொரோனா' வைரஸ் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வது நாம் அறிந்ததே. இந்தியாவில் குறிப்பாக தமிழகத்தில் வைரஸ் தொற்றுள்ளவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வது அயல் நாடான இலங்கையை அச்சமடையச் செய்துள்ளது. இலங்கையில் தற்போது சமூகத் தொற்று காணப்படவில்லை.


ஆனால் இந்தியாவில் இருந்து கடல் மார்க்கமாக வரக்கூடியவர்களால் இங்கே தொற்று ஏற்படும் வாய்ப்பு அப்படியே இருக்கத்தான் செய்கிறது. எனவே இதை ஒரு காரணமாக வைத்து இலங்கை கடற்பிராந்தியத்தில் இந்திய மீனவர்களின் அத்துமீறி மீன் பிடித்தலில் ஈடுபட்டு வருகின்றனர்.

அவர்களுக்குத் தெரியும் இலங்கை கடற்படை வேண்டுமானால் வெருட்டிப் பார்க்குமே தவிர தம்மைக் கைது செய்யாது என்று, கடற்படையினருக்கு இவர்களை கைது செய்வதில் ஒரு தயக்கம் இருக்கிறது. காரணம், இவர்கள் மூலமாக தமக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சம். மேலும் கடந்த இரு வாரங்களாக இலங்கைக்கு அருகே தீப்பிடித்து எரிந்த எண்ணெய்க் கப்பலைக் கையாள்வதில் கடற்படையினர் ஈடுபட்டிருந்ததால் இலங்கை கடல் எல்லை கண்காணிப்பில் ஒரு தொய்வு ஏற்பட்டது உண்மை. இலங்கை கொரோனா தொற்றில் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் கடற்படையினரே என்பது உங்களுக்குத்தெரியும். இது இப்படி இருக்க, இந்திய மீனவர்கள் மூலம் பொருட்கள், குறிப்பாக போதைப் பொருட்கள், கடத்தப்படுகின்றன. எனவே, மன்னார் மீனவர்களின் மீன்பிடித் தொழில் பாதிப்படைந்துள்ளது. போதைப் பொருட்கள் மன்னாருக்குள் கடத்தப்படும் மற்றும் கொரோனா மன்னார் வழியாக இலங்கைக்குள் நுழையும் அபாயமும் இருப்பதால் மன்னார் மக்கள் அச்சமடைந்துள்ளனர். தமிழகத்தில் கொரோனா அதிகரித்துள்ள நிலையில் இந்திய மீனவர்களின் அத்து மீறிய வருகையும், எமது நாட்டு மீனவர்களுடன் இணைந்து சட்ட விரோத செயற்பாடுகளில் அவர்கள் ஈடுபடுவதும் கொரோனா வைரஸ் பரவல் ஏற்படும் சாத்தியம் அதிகரித்துள்ளதும் மன்னார் மாவட்டத்தில் இப்போது பேசு பொருளாகி உள்ளது.











இந்திய மீனவர்கள் கேரள கஞ்சா, பீடி சுற்றும் இலை, மஞ்சள் போன்றவற்றை இந்தியாவில் இருந்து சட்ட விரோதமான முறையில் இலங்கை கடற்பரப்பினுள் கொண்டு வருகின்றனர். இவை இந்திய மீனவர்களுடன் தொடர்பில் உள்ள மன்னார் மீனவர்களிடம் கைமாறுகின்றன.

மேலும் இலங்கையில் இருந்து தங்கக் கட்டிகள், ஆபரணங்களை அவர்கள் கொண்டு செல்கின்றனர். இவ்வாறான நடவடிக்கைகளினால் மன்னார் மாவட்ட மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கும், சவால்களுக்கும் தற்போது முகம் கொடுக்க வேண்டிய ஒரு சூழ்நிலை தோன்றியுள்ளது.

இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறிய வருகையை கண்டித்து புதன் கிழமை மன்னார் பேசாலை கிராம மக்கள் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

கடந்த 30 வருட கால யுத்தத்தின் போது அனுபவிக்காத பல்வேறு பிரச்சினைகளுக்கு தாம் தற்போது முகம் கொடுத்து வருவதாக போராட்டத்தில் ஈடுபட்ட பேசாலை கிராம மக்கள் தெரிவித்தனர்.

போதைப் பொருட்களை கொண்டு வருகின்ற இந்திய இழுவைப் படகுகள் மன்னார் முனை வரைக்கும் வந்து போதைப்பொருட்களை இலங்கைக்குள் கடத்துகின்றன.

இதனால் இப்பகுதியில் உள்ள இளைஞர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் ஆகியோர் போதைப்பொருள் பாவனைக்கு உள்ளாகும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

வட பிராந்தியத்தில் திறந்து விடப்பட்டுள்ள அனைத்துபகுதிகளையும் இலங்கை கடற்படை மற்றும் இராணுவத்தினர் மூட வேண்டும். மேலும் இந்திய இழுவைப்படகுகளின் வருகை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். மேலும் இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறிய செயற்பாட்டினால் மன்னார் மாவட்ட மீனவர்கள் தொழில் ரீதியாக பெரிதும் பாதிப்பு அடைந்துள்ளனர். எனவே ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் இவ் விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும். கடற்படை உடனடியாக விழித்துக் கொண்டு இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறிய வருகையை கட்டுப்படுத்த உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறிய வருகையை கட்டுப்படுத்துவதன் ஊடாக போதைப் பொருட்கள் கடத்தலையும் 'கொரோனா' வைரஸ் பரவுவதையும் முழுமையாக கட்டுப்படுத்த முடியும்.

றோசேரியன் லெம்பட் ...

# அவசர மீட்பக் குழுவக்கான சந்தர்ப்பம்



## மலரும் யுகத்திற்கு புதியதோர் வடிவம்

மிலிந்த மொரகொட

எரிபொருள் ஏற்றிச் சென்ற பாரிய கப்பலில் திடீரென ஏற்பட்ட தீயால் கடந்த சில நாட்களாக பெரும் பரபரப்பு நிலவியது. குவைத்திலிருந்து இந்தியாவை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த கப்பலில் ஏற்பட்ட தீப் பரவல் வெறும் பொருளாதார பாதிப்பு மாத்திரமல்ல. எண்ணெய் தாங்கிப் பகுதி பாதிப்படைந்து எரிபொருள் வெளியேறியிருந்தால் பெரும் சூழல் பாதிப்பும் ஏற்பட்டிருக்கும் . மீன் வளங்கள் உட்பட கடல் வாழ் உயிரினங்கள் அழிந்திருக்கும். உலகம் பூராவுமுள்ள கடற்கரைகள் பாதிப்படைந்திருக்கும். கடலில் ஏற்படும் பாதிப்பின் பின்னர் மீண்டும் வழமையான உயிரினங்கள் உருவாக முப்பது வருடங்கள் எடுக்கும் என சூழலியலாளர்கள் கூறுகின்றார்கள். தீயை அணைத்து ஏற்படவிருந்த அனர்த்தம் தவிர்க்கப்பட்டுள்ளது. அரச அதிகாரிகளும், கடல், விமான, இராணுவ படை வீரர்களும் பெரும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டதோடு இந்தியாவின் உதவியும் கிடைத்துள்ளது. கடலில் ஏற்பட்ட அனர்த்தத்தின் போது விரைவாக செயற்பட்டு தமது திறமையை முழு உலகுக்கும் இலங்கை காட்டியுள்ளது. அம் முயற்சி சர்வதேச சமூகத்தின் பாராட்டையும் பெற்றுள்ளது. இச் சம்பவத்தின் பின்னர் நாம் பாடமொன்றை கற்றுக் கொள்ள வேண்டும். இலங்கையைச் சூழவுள்ள கடலில் ஏற்படும் அனர்த்தங்களின் போது அதிலிருந்து மீட்க பிரிவொன்றை அமைக்க முடியும். அது நாட்டிற்கு புதிய சந்தர்ப்பமாகும்.

மேற்கு மற்றும் கிழக்கை இணைக்கும் பிரதான கடற் பாதை இலங்கைக்கு அருகில் பன்னிரண்டு கடல் மைல் தொலைவில் அமைந்துள்ளது. சர்வதேச அறிக்கைகளின்படி இந்த கடற் பாதையை வருடமொன்றுக்கு அறுபதாயிரம் கப்பல்கள் வரை உபயோகப்படுத்துகின்றன. எரிபொருளை கொண்டு செல்லும் கப்பல்களில் நூற்றுக்கு எழுபத்திரண்டு வீதமானவை இப்பாதையை பயன்படுத்துகின்றன. கொள்கலன்களை நூற்றுக்கு ஐம்பது வீதமான கப்பல்கள் கொண்டு செல்கின்றன. கொழும்பு, திருகோணமலை மற்றும் அண்மையில் அமைக்கப்பட்ட ஹம்பந்தோட்டை துறைமுகங்களில் அவசர மீட்பு சேவையொன்றை அமைக்கலாம். கடலில் அனர்த்தம் ஏற்பட்டால் முதலில் வான்வழியாகவே ஆராயப்படும். பின்னரே படகுகள் பயன்படுத்தப்படுகின்றன. மத்தள விமான நிலையம் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் நாட்டுக்கு பெரும் நன்மையாகும்.

கடற்பாதைக்கு மிக அண்மையில் உள்ள நாடு இலங்கையாகும். இந்தியாவின் துறைமுகத்துக்கு செல்ல இருபது தொடக்கம் முப்பது மணித்தியாலங்கள் எடுக்கும். ஆனால் இலங்கை எட்டு கடல் மைல் தொலைவிலேயே உள்ளது. கடற் பாதையில் அதிகளவு கப்பல்கள் பயணம் செய்வதோடு துறைமுகங்கள் அருகில் அமைந்திருப்பதும் அதிக நன்மை பயக்கும். இந்தியா,சீனா மற்றும் ஐரோப்பிய நாடுகளுடன் உள்ள நட்புறவும் எதிர்காலத்தில் ஏற்படுத்திக் கொள்ளக்கூடிய வியாபாரத்துக்கான சந்தர்ப்பமாகும்.

கடல் அனர்த்தங்கள் தொடர்பான நிபுணர்கள் இலங்கையில் முதலீடு செய்யலாம். அரச மற்றும் தனியார் பிரிவு தொழில்களில் இந்நாட்டுடன் இணைந்து நிறுவனங்களை ஆரம்பிக்க இடமளிக்கலாம்.

கப்பல்கள், தீயணைக்கும் படகுகள், ட்ரோன்கள் மற்றும் விமானங்களின் உதவியையும் இந்த அவசர மீட்பு பிரிவில் உள்ளடக்கலாம். அதன் மூலம் இந்து சமுத்திரத்தில் பயணம் செய்யும் கப்பல்களுக்கு ஒத்துழைப்பு வழங்கலாம். வர்த்தக கப்பல்களில் பணிபுரிபவர்களின் எண்ணிக்கை குறைவாகும். விசேடமாக எரிபொருள் கொண்டு செல்லும் கப்பல்களில் மிகக் குறைவானவர்கள் பணியாற்றுவார்கள். அவசர வேளைகளில் வெளியார் உதவி அவசியமாகும். எரிபொருள் மற்றும் கொள்கலங்களை கொண்டு செல்லும் கப்பல்கள் பெருமளவு தொகைக்கு காப்புறுதி செய்யப்பட்டுள்ளன.

அனர்த்தங்களிலிருந்து கப்பல்களை மீட்பது கப்பல் சேவை நிறுவனங்களுக்கு மாத்திரமல்ல காப்புறுதி நிறுவனங்களுக்கும் பெரும் பொருளாதார இலாபமாகும். இலங்கை கடல் அனர்த்த மீட்புப் பிரிவு பற்றி கவனம் செலுத்தினால் அவற்றின் ஆதரவைப் பெறலாம்.

தொழில்நுட்பம் மிகவும் வளர்ச்சியடைந்துள்ளது. தொடர்பாடல் வசதிகளுடன் உலகில் எந்தவொரு அனுபவம் வாய்ந்த அணியையும் அழைக்கும் மத்திய நிலையமாக செயல்படலாம். விசேட பயிற்சியுடன் வேலைவாய்ப்பு கிடைப்பதோடு அந்நிய செலாவணியை பெறும் வழியும் உண்டு.

தமிழில்: வீ.ஆர்.வயலட்

# வவுனியா- பெரியகாடு கொரோனா தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்கவைக்கப்பட்டிருந்த நபர் தப்பி ஓட்டம்

வவுனியா பெரியகாடு இராணுவ முகாம் தனிமைப்படுத்தல் நிலையத்தில் வெளிநாட்டிலிருந்து விஷேட விமானத்தில் அழைத்துவரப்பட்டு தங்கவைக்கப்பட்டிருந்த சிலாபம் பகுதியை சேர்ந்த நபர் ஒருவர் (11) இரவு தப்பி ஓடியுள்ளதாக இராணுவ முகாம் தனிமைப்படுத்தல் நிலையத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இந்நபரை கைது செய்வதற்கு பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் பொதுமக்கள் இது குறித்து அவதானமாக இருக்குமாறும் இந்த நபரின் பரிசோதனை அறிக்கை வெளிவராத நிலையில் தப்பி ஓடியுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்

இதேவேளை கடந்த வாரம் பெரியகாடு இராணுவ தனிமைப்படுத்தல் நிலையத்தில் இருவருக்கு கொரோனா நோய் தொற்று பரிசோதனையில் இனங்காணப்பட்டிருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. கடந்த வாரம் கட்டாலிலிருந்து விஷேட விமானத்தில் அழைத்து வரப்பட்டிருந்த 36 வயதுடய சிலாபம் மாதம்பே பகுதியைச் சேர்ந்த விஜித்த றுவான் குணவர்த்தன என்ற நபரே இவ்வாறு தப்பி சென்றுள்ளதாக பெரியகாடு இராணுவ முகாம் தனிமைப்படுத்தல் நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த விமானத்தில் அழைத்து வரப்பட்ட பயணிகள் கொரோனா நோய் தொற்று பரிசோதனைகளுக்காக பெரியகாடு தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்கவைக்கப்பட்டு, பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையிலேயே இந்த நபர் அங்கிருந்து (11) இரவு தப்பி ஓடியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## தியத்தலாவை தனிமைப்படுத்தல் நிலையத்தில் 02 பேருக்கு கொரோனா தொற்று உறுதி

பதுளை விசேட நிருபர்

தியத்தலாவை இராணுவ தனிமைப்படுத்தும் நிலையத்திலிருந்து வந்தவர்களிலிருந்து இருவர், கொவிட் 19 நோய்த்தொற்றுக்குள்ளாகியமை கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. அவ்விருவரும் நேற்று (12) கொழும்பு ஐ.டி.எச் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

கட்டார்,சவூதி நாடுகளிலிருந்து 44 பேர் நேற்று நாடு திரும்பியுள்ளனர்.இவர்கள் முதற்கட்டமாக தியத்தலாவை இராணுவ முகாம் தனிமைப்படுத்தும் நிலையத்தில் தங்கவைக்கப்பட்டு,சிகிச்சைக்குற்பட்டிருந்தனர்.இந்நிலையில் அவர்களில் இருவர் கொவிட் 19 நோய்த் தொற்றிற்குள்ளாகியிருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இவ்விருவரும் கண்டி பல்லேகலை மற்றும் நாத்தாண்டிய ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களென்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவ்விருவரும் கொழும்பு ஐ.டி. எச் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் நிலையில் ஏனைய 42 பேரும் தொடர்ந்தும் தியத்தலாவை இராணுவ தனிமைப்படுத்தும் நிலையத்தில் தங்கவைக்கப்பட்டிருப்பதாக தனிமைப்படுத்தும் முகாம் பணிப்பாளர் தெரிவித்தார்.

## வவுனியாவில் நள்ளிரவில் 4 மணிநேர வீதி சோதனை

### 49 சாரதிகளுக்கு எதிராக நடவடிக்கை

வவுனியா நிருபர்

வவுனியா நகர்ப்பகுதியில் 11 நள்ளிரவு முதல் நேற்று அதிகாலை வரை மேற்கொள்ளப்பட்ட 04 மணி நேரவீதி சோதனை நடவடிக்கையின் போது விதிமுறைகளை மீறி வாகனம் செலுத்திய 49 சாரதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வவுனியா போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரி திஸாநாயக்க தெரிவித்துள்ளார் .

இவ்விடயம் குறித்து மேலும் கருத்துத் தெரிவிக்கும்போது ,

நேற்றுமுன்தினம் (11) இரவு 11 மணியிலிருந்து நேற்று (12) அதிகாலை 03 மணிவரையிலும் வவுனியா நகர்ப்பகுதியில் விஷேட வீதி சோதனை நடவடிக்கை போக்குவரத்துப் பொலிசாரால் முன்னெடுக்கப்பட்டது . இவ் விஷேட நடவடிக்கையில் 28 பொலிசார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டு விதிமுறைகளை மீறி வாகனம் செலுத்திய 49 சாரதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. முக்கியமாக மது போதையில் ஆறு சாரதிகளும் சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்த மூன்று பேருக்கு எதிராக எதிர்வரும் 16 ஆம் திகதி நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் ஏனைய 40 பேர் தலைக்கவவசம் , கைத்தொலைபேசி பாவனை , காப்புறுதிப்பத்திரம் மோட்டார் ஆவணம் இன்றியும் போன்ற ஏனைய குற்றங்களுக்காக அவர்களிடம் தண்டப்பணம் அறிவிடப்பட்டுள்ளது . இவ்வாறான நடவடிக்கைகள் தொடர்ந்து நகரில் முன்னெடுக்கப்படவுள்ளது சாரதிகள் பொதுமக்கள் பொலிசாருக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு மேலும் தெரிவித்துள்ளார்.

## குவைத்தில் இலங்கைப் பணிப்பெண் சித்திரவதை செய்யப்பட்டு கொலை

### 'கல்ப் நியூஸ்' செய்தி வெளியிட்டுள்ளது

குவைத்தில் இலங்கை பணிப்பெண்ணொருவர் சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டுள்ளதாக அந்நாட்டின் 'கல்ப் நியூஸ்' தெரிவித்துள்ளது. 'கல்ப் நியூஸ்' இந்த சம்பவம் தொடர்பாக மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, எரிகாயங்கள் உட்பட பல காயங்களுடன் அமரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் இலங்கை பணிப்பெண் உயிரிழந்துள்ளார்.

இப் பணிப்பெண்ணிற்கு தொழில் வாய்ப்பை வழங்கியவர்களே அவரை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். எனவே அவர்களையும் விசாரணை செய்து வருகின்றோம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், தீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்ட இலங்கை பணிப்பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். முழுமையான அறிக்கையை பெறுவதற்காகவும் என்ன நடந்தது என்பதை உறுதி செய்வதற்காகவும் உயிரிழந்த பணிப்பெண்ணின் உடலை தடயவியல் பிரிவிற்கு அனுப்பியுள்ளோம் எனவும் பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பணிப்பெண் கொல்லப்பட்ட விவகாரத்தில் குவைத்தை சேர்ந்த தம்பதியினரை பொலிஸார் தொடர்ந்து விசாரணை செய்து வருகின்றனர்" என கல்ப் நியூஸ்' தெரிவித்துள்ளது.

## கொங்கோ நாட்டில் தங்க சுரங்கம் இடிந்து 50 தொழிலாளிகள் பலி



கொங்கோ நாட்டில் தங்க சுரங்கம் இடிந்து விழுந்ததில் 50 தொழிலாளர்கள் மண்ணுக்குள் புதையுண்டு உயிரிழந்ததாக அந்நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொங்கோ நாட்டில் கிழக்கு பகுதியிலுள்ள கமிட்டுகா (Kamituga) அருகே தங்க சுரங்கம் உள்ளது. இங்கு தொழிலாளர்கள் பலர் பணியாற்றி வருகின்றனர். இந்நிலையில் அப்பகுதியில் பலத்த மழை பெய்தது. இதனால் தங்க சுரங்கம் இடிந்து விழுந்தது. இதில் மண்ணுக்குள் தொழிலாளர்கள் பலர் சிக்கி கொண்டனர்.

50 தொழிலாளர்கள் உயிரிழந்துள்ளதாக உள்ளூர் சுரங்க தன்னார்வ தொண்டு நிறுவனம் தெரிவித்துள்ளது. இது குறித்து அதிகாரிகள் கூறும்போது, "தங்கச் சுரங்கம் இடிந்ததில் தொழிலாளர்கள் பலர் சிக்கிக்கொண்டனர். ஒருவரால்கூட வெளியே வரமுடியவில்லை. சுமார் 50 தொழிலாளர்கள் சிக்கி உயிரிழந்துள்ளதாக தெரிகிறது" என்றார்.

### சாரதி அனுமதி பத்திரம்...

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

சாரதி அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்வதற்காக பிரதானமாக எதிர்க்கால்தில் கண் பரிசோதனையே மேற்கொள்ளப்படும். தற்போதுள்ள நிலைமைகளின் பிரகாரம் கண் சற்று தெரியாவிட்டாலும், விரல் ஒன்று இல்லாவிட்டாலும் சாரதி அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது. சில நாடுகளில் ஒரு கால் இருந்தாலும் அனுமதிப் பத்திரம் கொடுக்கப்படுகிறது.

உண்மையாக வாகனம் செலுத்தும் போது ஒரு கால் இருந்தால் போதும். காலில் ஏதும் சிறிய பிரச்சினை இருந்தாலும் சாரதி அனுமதிப் பத்திரம் கொடுக்கப்படுவதில்லை. இதனை மாற்றியமைக்க நாம் திட்டமிட்டுள்ளோம்.

சகலருக்கும் எக்ஸ்ரே கதிர் பரிசோதனை மேற்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. அதற்கு செலவிடும் பணத்தை சேமிக்க முடியும். எதிர்வரும் காலங்களில் சீனி மற்றும் குருதி அழுத்தங்கள் தொடர்பான சேவைகளும் முன்னெடுக்கப்படவுள்ளன. இது நபரொருவர் சாரதி அனுமதி பத்திரத்தை பெறுவதில் எந்த தாக்கமும் செலுத்தாது. விண்ணப்பதாரிகளுக்கு அறியப்படுத்துவதற்காக மாத்திரமே இந்த சேவை முன்னெடுக்கப்படவுள்ளது.

விரைவில் பேட் பஸ் என்ற அப் ஒன்றையும் மோட்டார் போக்குவரத்து திணைக்களம் அறிமுகப்படுத்தவுள்ளது. இதன்மூலம் முறைப்பாடுகளை தெரிவிக்க முடியும். சட்டத்திற்கு விரோதமாக பஸ் ஒன்று செயற்பட்டால் குறித்த பஸ்ஸின் இலக்கம் மற்றும் புகைப்படமொன்றை அப் ஊடாக எமக்கு அனுப்பினால் அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன், பாரதூரமான காரணி என்றால் அனுமதிப் பத்திரத்தை இரத்துச் செய்யவும் நடவடிக்கையெடுக்கப்படும் என்றார்.

### அரச காணிகளில்...

நிலையில் இதற்காக விண்ணப்பிப்பதற்குரிய மாதிரி விண்ணப்பப்படிவம் மற்றும் வழிகாட்டு நெறிகளை உள்ளடக்கிய அதிசிறப்பு வர்த்தமானி அறிவித்தல் காணி ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் இம்மாதம் 30ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். பயனாளிகளைத் தெரிவு செய்வதற்கான காணிக் கச்சேரி எதிர்வரும் செப்.01 ஆம் திகதியிலிருந்து 21ஆம் திகதிக்கிடையில் பிரதேச செயலாளர் தீர்மானிக்கின்ற திகதியில் நடத்தப்படுமெனவும் வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் சமூக மட்டத்தில் செயற்பட்டுவரும் பொது நிறுவனங்கள் மற்றும் கிராம அபிவிருத்தி சங்கங்கள், இதற்காக விண்ணப்பிக்க தகுதியுடைய மக்களை அறிவூட்டுவது பயனளிப்பதாக அமையும்.

அரச காணியொன்றில் நிரந்தர வீடமைத்து, விவசாய நடவடிக்கையினை மேற்கொண்டு அல்லது ஏதேனும் அபிவிருத்தி நடவடிககையொன்றை மேற்கொண்டு உரிமை பாராட்டும் மக்களுக்கு சட்ட ரீதியான ஆவணங்களை பெற்றுக் கொடுப்பதற்காக நாடு முழுவதையும உள்ளடக்கும் வகையில்(விசேட அபிவிருத்தி திட்டம் நடைமுறைப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்ட கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்கள் தவிர்ந்த) தகுதியானோரைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பப்படிவங்கள் கோரப்படுகின்றன.

தங்களது விண்ணப்பத்தை பின்வரும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக ஒழுங்குமுறையில் பூரணப்படுத்தி, காணி அமைந்துள்ள பிரதேச செயலகத்திற்கு அல்லது கிராம அலுவலர், வெளிக்கள அலுவலர்களிடம் கையளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் காணி ஆணையாளர் நாயகம் ஹேரத் தெரிவித்துள்ளார் .

### முக்கிய சில தீர்மானங்களை...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலேயே இந்த கலந்துரையாடல் நடைபெறவுள்ளதுடன், கூட்டமைப்பின் அனைத்துப் பங்காளிக் கட்சிகளுக்கும் இக்கலந்துரையாடலுக்காக அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

20ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் நாளை எடுக்கவுள்ள தீர்மானத்தை கூட்டமைப்பின் பாராளுமன்ற குழுவில் விவாதித்து இறுதி முடிவெடுக்கப்படவுள்ளது. நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழு கூடவுள்ளமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

இதேவேளை, பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சிறுபான்மைக் கட்சிகளுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 20ஆவது திருத்தச் சட்டம் குறித்து முக்கிய கலந்துரையாடல்களை நடத்துவது குறித்து ஆலோசித்துள்ளதாகவும் அறிய முடிகிறது.

### மட்டக்களப்பில் வாள்வெட்டு...

ஊறணி பகுதிகளில் தொடர்ச்சியாக வாள்வெட்டு மற்றும் கஞ்சா வர்த்தகத்தில் ஈடுபட்டுவரும் வாள் வெட்டுக் குழு பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருவதாகவும் பெண்கள் தனிமையில் வீடுகளில் இருக்க முடியாத நிலை மற்றும் மக்களை அச்சுறுத்தி வருவதாகவும் இக் குழுவால் தங்களுக்கு உயிர் ஆபத்து ஏற்படும் என மக்கள் பொலிசில் முறைப்பாடு செய்திருந்தனர்.

இது தொடர்பில் பொலிசாருக்கு நீண்ட காலமாக முறைப்பாடுகள் கிடைத்து வந்துள்ளன. இந்நிலையில் புலனாய்வுத்துறையினருக்கு வாள்வெட்டு குழு பற்றி அறிவித்ததையடுத்து புலனாய்வுத்துறையினர் தொடர்ச்சியாக இவர்கள் தொடர்பாக தகவல்களை திரட்டிவந்துள்ள நிலையில் (11) மாலை நாவற்கேணி பிரதேசத்தில் வாள் வெட்டுக் குழுவின் தலைவர் தனு வாளுடன் மக்களை அச்சுறுத்தி வருவதாக பொலிசாருக்கு தகவல் கிடைத்தது.

இதனையடுத்து பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பி.கே. ஹெட்டியாராச்சியின் ஆலோசனையில் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் சப் இன்பெஸ்டர் முகமட், பொலிஸ் சார்ஜன் கிருபா தலைமையிலான பொலிஸ் குழுவினர் அவரை கைது செய்ய முற்பட்டபோது அவர் பொலிசார் மீது வாளால் வெட்ட முற்பட்டுள்ளார்.

அதிரடியாக பொலிசார் சுற்றிவளைத்து அவரையும் அவரது சாகாவான சாந்தன் ஆகிய இருவரை கைது செய்ததுடன் தனுவின் இடுப்பிலிருந்து கைக்குண்டு, வாள் ஒன்றையும் மீட்டுள்ளனர்.

### நல்லாட்சியில் ஊழல் ஒழிப்பு...

சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையினூடாக இந்த விடயம் தெரியவந்துள்ளது. 2015 ஆம் ஆண்டு ஜனவரி 21 அன்று முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் அமைக்கப்பட்ட ஊழல் ஒழிப்பு குழு செயலகம் 2015 பெப்ரவரி முதல் 2017 ஜூன் வரை அக்குழுவில் பணியாற்றிய 44 அதிகாரிகளுக்கு 22, 714, 079.27 மில்லியன் செலுத்தியுள்ளது.

இவை தொலைபேசி, மின்சாரம், நீர் கட்டணங்கள், மேலதிக மற்றும் விடுமுறைகளுக்கான கொடுப்பனவுகள், வாகன திருத்தப்பணிகள் மற்றும் ஏனைய விடயங்களுக்காக இந்த பணம் செலவிடப்பட்டதாகவும் சான்றுகள் காட்டப்பட்டுள்ளன. அதன்படி, இவ்வாறு இடம்பெற்ற பாரிய ஊழலை பொது மக்களுக்கு அம்பலப்படுத்துமாறு ஆணைக் குழு, பிரதமர் அலுவலக அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளது.

ஊழல் தடுப்பு அலுவலகம் எந்தவொரு சட்டபூர்வமான அந்தஸ்தும் இல்லாத நிறுவனமென்றும், அத்தகைய அலுவலகம் செயற்படுகிறதா? என்று தெரியவில்லையென்றும் சமீபத்தில் ஆணைக்குழு முன் சாட்சியமளித்த ரணில் விக்கிரமசிங்க மற்றும் மங்கள சமரவீர ஆகியோரின் சாட்சியங்களையும் ஆணைக் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

### பாசிக்குடா கடலில்...

வாழைச்சேனை செம்மன்ஓடை 04 ஆவது பிரிவு ஹிஸ்புல்லா வீதியைச் சேர்ந்த 17 வயது யாவாத் முகமட் றிஸ்வி என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இப் பிரதேசத்தைச் சேர்ந்த மாணவன் சம்பவதினம் (11) அவரது நண்பர்கள் இருவருடன் பாசிக்குடா கல்மலை கடல் பகுதியில் கடலில் நீராடச் சென்று நீராடிய நிலையில் கடல் கல்மலையில் சிக்கியே நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

### யாழ். புதிய கட்டளை...

வீதியிலுள்ள நல்லை ஆதீன குருமுதல்வரை சந்தித்து ஆசி பெற்றார்.

கலந்துரையாடலில் யாழ்.மாவட்டத்தின் நிலைமைகள் தொடர்பில் கலந்துரையாடினார்.நல்லை ஆதீன குருமுதல்வரை சந்தித்த கட்டளைத் தளபதி பின்னர் நல்லூர் ஆலயத்திற்கு சென்று வழிபாடுகளிலும் ஈடுபட்டார்.

### அமைச்சர் நாமலின்...

அறிமுகப்படுத்தியுள்ளார். "வோக் டோக்" என அழைக்கப்படும் இந்த கூட்டம் நடத்தும் முறைமைக்கமைய அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்கவுடன் இணைந்து முதல் கூட்டத்தை நேற்று முன்தினம் நடத்தியுள்ளார்.

தொழிற்துறையினர் மற்றும் ஆரம்ப, நீண்டகால பதிவு மதிப்பீடுகளை ஊக்குவிப்பதற்காக இவர்களின் இரண்டு அமைச்சுக்களும் இணைந்து செயற்படும் பல முறைகள் சம்பந்தமாக அமைச்சர்கள் இருவரும் கலந்துரையாடியுள்ளதாக தெரியவருகிறது.

### திருமண நாளன்றே...

விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் நாமல் ராஜபக்ஷ கரம் பிடித்தமையும் குறிப்பிடத்தக்கது. அத்தோடு, ஒருவருட திருமண பூர்த்தியை நேற்று கொண்டாடும் நிலையில், அவர் ஆண் குழந்தையொன்றுக்கு தந்தையாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

### 10 வயதில் O/L...

செனுலி லேஹன்ஸா என்ற 10 வயது சிறுமியே இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார். அவர் திம்புலாகல அரலகங்வில, விலயாய ஆரம்ப பாடசாலையில் கல்வி கற்று வருகின்றார். தான் 06ஆம் வகுப்பு கற்ற போதிலும், தன்னால் சாதாரண தர பரீட்சையில் 09 ஏ சித்தி பெற கூடிய திறன் உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி சிங்களம், ஆங்கிலம் மற்றும் கணிதம் மட்டுமல்லாமல் விலங்கியல் துறையிலும் நிபுணத்துவம் பெற்ற லேஹன்ஸா ஆவர்த்தன அட்டவணையை சில நொடிகளில் படித்து பாடசாலை அதிபர் உட்பட அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளார்.

செனுலி தனது முதல் ஆண்டில் இருந்தபோதும் ஆங்கிலத்தில் சரளமாக பேசினாரென்று அவரது பெற்றோர் கூறுகின்றனர். சிங்கள மொழியில் கற்கும் அவர் ஆங்கிலத்தில் இந்தளவு திறமையை காட்டியது ஆச்சரியமாக இருந்ததென அவர் குறிப்பிட்டுள்ளார்.

கணித பாடத்தில் விசேட திறமையை காட்டும் அவர் நம்பமுடியாத அளவிற்கு பில்லியன்களையும் டிரில்லியன்களையும் கணக்கிடுவார் என பெற்றோர் குறிப்பிட்டுள்ளனர்.

"எனக்கு 06ஆம் வகுப்பிலேயே சாதாரண தர பரீட்சை எழுத வேண்டும். அனைத்து பாடத்தில் ஏ சித்தி பெற முடியும். எனக்கு கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் உட்பட பல விடயங்களை செய்ய முடியும். எனக்கு உதவி செய்த ஒருவர் இருந்தால் என்னால் இலங்கைக்காக பல்வேறு வெற்றிகளை பெற முடியுமென" அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### தோட்ட முகாமையாளரை...

வரை போராட்டம் தொடருமெனவும் தோட்ட மக்கள் அறிவித்துள்ளனர்.

ஹற்றன் பிளாண்டேசன் நிர்வாகத்தின் கீழ் தான் செம்புவத்த தோட்ட மக்கள் தொழில் புரிகின்றனர். அத் தோட்டத்துக்கு ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் புதிய முகாமையாளர் (துரை) ஒருவர் வந்துள்ளார். அவர் வந்த பின்னரே 'அராஜக முகாமைத்துவம்' ஆரம்பமானது என தொழிலாளர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

" வரட்சியான, குளிரான காலத்திலும் 18 கிலோ பறித்தால்தான் ஒரு நாள் பெயர், அவ்வாறு இல்லாவிட்டால் அரை நாள் பெயரே வழங்கப்படுகின்றது. இது தொடர்பில் பல தடவைகள் சுட்டிக்காட்டியும், தொழிற்சங்கங்களை நாடியும் தீர்வு கிடைக்கவில்லை. தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட முற்பட்டால் வெளியிலிருந்து ஆட்களை அழைத்துவந்து கொழுந்து பறிக்கும் நடவடிக்கையில் துரை ஈடுபடுகின்றார்.

சம்பளம் குறைவாக வழங்கப்படுவதை சுட்டிக்காட்டினால், மற்றையதொரு வவுச்சர்மூலமே எஞ்சிய கொடுப்பனவு வழங்கப்படுகின்றது. இதனால் ஊழியர் சேமலாப நிதி, சேவை கொடுப்பனவு உள்ளிட்டவற்றிலும் தாக்கம் ஏற்படுகின்றது. இப்படி பல அடக்குமுறைகள் தொடர்கின்றன. இவற்றுக்கு எதிராக தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட தயாரானோம். பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்போம், தொழிலுக்கு செல்லுமாறு தொழிற் சங்க தலைவர்கள் அறிவித்தனர். " என்றும் மக்கள் குறிப்பிடுகின்றனர்.

தொழிற்சங்க தலைவர்களின் கோரிக்கையை ஏற்று நாம் நேற்று தொழிலுக்கு சென்றோம். ஆனாலும் 'நான் தான் துரை. எனது அனுமதியின்றி எப்படி நீங்கள் மலைக்கு செல்லமுடியும்' என துரை மிரட்டியதுடன் கொழுந்து நிறை பார்ப்பதற்கும் மறுப்பு தெரிவித்துள்ளார். அதிகாரிகளையும் அனுப்பவில்லை. இதனால் நாம் கொழுந்தை மடுவத்தில் கொட்டி எதிர்ப்பில் ஈடுபட்டோம்.

நேற்றுக் (12) காலையும் களத்துக்கு வந்தோம்.ஆனால் துரை வரவில்லை. அதிகாரிகளும் இல்லை. சிலவேளை நாங்கள் வேலைக்குச் சென்றால் வேறு காரணங்களைக் கூறி பழிவாங்கலாம். எனவே. இந்த துரைக்கு இடமாற்றம் வழங்கப்படும் வரை நாம் போராடுவோம். தோட்டத்திலுள்ள 15 ஏக்கர் காணியையும் இவர் வெளியாருக்கு வழங்கியுள்ளார்." எனவும் தொழிலாளர்கள் உள்ளக்

குமுறல்களை வெளிப்படுத்தினர்.

### ஆறுமுகன் இல்லாவிடினும்...

நடைபெற்ற அமரர் ஆறுமுகன் தொண்டமானுக்கு இரங்கல் தெரிவிக்கும் அனுதாபம் பிரேரணையில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

அமரர் ஆறுமுகன் தொண்டமான் மக்களுக்காக தொழிற்சங்கம் மற்றும் அரசியல் ரீதியாக உண்மையாக செயற்பட்ட தலைவராவார். மக்கள் நலனை எண்ணி சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தை உருவாக்கியதுடன், அதன் ஊடாக தொண்டமான் தொழில்பயிற்சி நிலையத்தை அமைத்து இளைஞர்களுக்கான வாய்ப்புகளை உருவாக்கி கொடுத்தார். அதேபோன்று தொண்டமான் நோர்வுட் மைதானத்தை அமைத்து பல விளையாட்டு வீரர்களை உருவாக்கவும் செயற்பட்டிருந்தார். மலையகத்தில் 44 பிரஜா சக்தி நிலைங்களை உருவாக்கியிருந்தார். நாம் இப்போதுதான் தொழில்நுட்பம் பற்றி பேசுகிறோம். ஆனால், அவர் அந்த காலத்திலேயே இதனை செய்து காட்டியுள்ளார். இன்று அனைவரும் ஆறுமுகன் தொண்டமான் பற்றியே பேசினர்.

அவரை அனைவரும் வேறு இடத்தில் வைத்துள்ளமை இதிலிருந்து விளங்குகிறது. இனம், மதம் பாராது சமமாக சேவைசெய்திருந்த காரணத்தால்தான் அவ்வாறு அவர்மீது மரியாதை வைத்துள்ளனர். என்னுடன் நேரம் செலவழிக்கவில்லையென எனது தந்தை மீது சற்று கோபம் இருந்தது. ஆனால், அவர் மக்களுக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளமையை பார்க்கும் போது அவையனைத்தும் நீங்கிவிட்டன.

மலையக மக்களையும் இந்த சமுதாயத்தில் சம அந்தஸ்துக்கு கொண்டுவரவே அவர் செயற்பட்டிருந்தார்.

ஆறுமுகன் தொண்டமானின் இறந்துள்ள போதிலும் அவரது கொள்கைகளை தொடர்ந்து நாம் அப்படியே செயற்படுத்துவோம். என்மீது ஒரு பாரம் சுமத்தப்பட்டுள்ளதாக கூறுகின்றனர். நான் அவ்வாறு பார்க்கவில்லை. நான் முதல் பாராளுமன்ற அமர்வுக்கு வரும் போது அவர் இங்குதான் இருந்தார்.

1,000 ரூபா தொடர்பில் இறுதியாக அவர் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார். இறுதியில் அதனை நடைமுறப்படுத்த முடியவில்லை. அதனை தொடர்ச்சியாக முன்னெடுத்து சம்பளத்தை பெற்றுக்கொடுப்போம். அதேபோன்று மலையக பல்கலைக் கழகத்தையும் உறுதியாக அமைத்து அவர் கண்ட கனவை நிறைவேற்றுவோம் என்றார்.







# அருகிவரும் குடிசைக் கைத்தொழில்

நாகரிக வரலாற்றில் மனிதன் ஆற்றங்கரையோரங்களில் குடியேறி வாழத்தலைப்பட்டான் என்பதற்கு பல்வேறு சான்றுகள் காணப்படுகின்றன. இவ்வாறு ஆரம்ப காலங்களில் ஆற்றங்கரைகளை அண்டி வாழ்ந்த மனித இனம் அந்த ஆற்று நீரைப் பயன்படுத்தி உணவிற்கு பயன்படுத்தியது காலப்போக்கில் அங்கு கிடைத்த பொருட்களிலான குடிசைக் கைத்தொழில் என பல்வேறு வளர்ச்சிப்போக்குகளை கண்டுள்ளான்.

இவ்வாறான பாரம்பரிய தொழில் முயற்சிகள் இப்போது மறைந்து வருகின்றன. அதாவது மட்பாண்ட உற்பத்திகள் பன்பாய் உற்பத்தி மற்றும் பன்புல்லிலான பொருட்களின் உற்பத்தி என்பன அருகி வருகின்றன.

மாறாக பிளாஸ்ரிக் அலுமினிய பொருட்களின் வருகையும் அதன் ஆதிக்கமும் தலைதூக்கியுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பகுதியில் இருபதிற்கும் மேற்பட்ட குடும்பங்களும் மாந்தை கிழக்கு பனங்காமம் கிராமத்தில் குறிப்பிட்ட சில குடும்பங்களும் பன்புல் பாய் மற்றும் இதர பொருட்களின் உற்பத்திகளை முன்னெடுத்து வந்தன.

அதாவது கடந்த 2009ம் ஆண்டு வரையும் இந்த இருபகுதிகளிலும் அதிகளவான பன் பாய்கள் மற்றும் இதர பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு நாட்டின் பல பாகங்களுக்கும் கொண்டு சென்று விற்பனை செய்யப்பட்டன.

மாந்தைகிழக்கு பனங்காமம் பகுதியில் வாழ்ந்த குடும்பங்கள் பறங்கியாற்றியல் இயற்கையாகவே காணப்பட்ட பன்புல்லை அறுவடை செய்து பதப்படுத்தி பாய்களை உற்பத்தி செய்தனர்.



இதனால் அவர்களது வருமானம் போதியளவில் காணப்பட்டது. இதன் மூலம் இவர்களை அன்டிக் காணப்பட்ட பல குடும்பங்கள் ஓரளவு தொழில்களை செய்து வந்துள்ளன.

ஆனால் இன்று இந்த பாய் உற்பத்தி பனங்காமம் கிராமத்தில் இல்லாது போய்விட்டது. இங்குள்ள மக்களின் பயன்பாடுகள் யாவும் பிளாஸ்ரிக் பாயாகவே காணப்படுகின்றது.

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட அணைக்கட்டு வீதியில் உள்ள கிராமத்தில் வாழ்ந்த குடும்பங்கள் இந்த பாய் உற்பத்தியையே குடிசைக்கைத்தொழிலாக மேற்கொண்டு வந்தன.

தற்போது 13 வரையான குடும்பங்கள் தவிர ஏனைய குடும்பங்கள் இவ்வாறான பாய் உற்பத்திகளை விட்டு விட்டு பல்வேறு வேலைகளையும் தேடிச்செல்கின்றன.

சுமார் நாற்பது வருடங்களுக்கும் மேலாக பன்புல் பாய் உற்பத்தியில் ஈடுபட்டு வரும் துணுக்காயைச் சேர்ந்த வடிவேல் கிருஸ்ணனுடன் இது தொடர்பில் கலந்துரையாடி போது அவர் பல்வேறுபட்ட விடயங்களை பகிர்ந்து கொண்டார்.

அதாவது தன்னுடைய பிரதான தொழிலாக பாய் உற்பத்தி காணப்படுகின்றது. காலம்காலமாக மேற்கொண்டு வந்தஇந்த தொழிலை இன்று செய்யமுடியாத நிலை காணப்படுகின்றது.

அதாவது பாய் உறபத்திக்கான பன்புல்லை பாலியாற்றின் கரையோரப் பகுதிகளில் இருந்து காலம் காலமாக வெட்டிபதப்படுத்தி வந்தோம். ஆனால் இன்று பன்புல் இனம் அழிவடைந்து வருகின்றது.

காரணம் பாலியாற்றுப் பகுதியில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் மணல் அகழ்வினால் புல்லின் வேர்கள் கிழங்குகள் அழிவடைந்து பன்புல் உற்பத்தி இல்லாமல் போவதுடன் ஆற்றின் நீண்ட தூரங்களுக்கு தேடிச்சென்று இந்த புல்லை அறுவடை செய்யவேண்டியுள்ளது.

இன்றைய காலத்தில் தனியொருவர் சென்று புல்லை அறுவடை செய்யமுடியாது கூலியாட்களைக் கொண்டு செல்லவேண்டும் அப்படி சென்றாலும் ஒருநாளில் தேவையான புல்லை அறுவடை செய்யக்கூடியதாக இல்லை. இவ்வாறு மணல் அகழ்வு தொடருமானால் இயற்கையாகவே உற்பத்தியாகி வரும் இப்புல்லினம் இல்லாமலேபோய்விடும் என்றும்

சு.பாஸ்கரன்
பரந்தன் குறூப் நிருபர்

குறிப்பிட்ட அவர் தற்போது உற்பத்தி செய்யும் குறைந்தளவு பாய்களையும் ஒரே தடவையில் சந்தைப்படுத்த முடியாது எமது கிராமத்தை அண்மித்த மல்லாவில் பொதுச்சந்தை மற்றும் கடைகளில் கொடுத்தாலும் அதற்கான விலை கிடைப்பதில்லை. அதைவிட, எங்களது பாய்களை விற்பனை செய்து அதற்கு பின்னரே அதற்கான பணத்தை தருகின்றனர்.

முன்பு நாங்கள் உற்பத்தி செய்யும் பாய்களை சந்தைப்படுத்த கூடிய வசதிகள் காணப்பட்டன. அதிகளவு பாய்களை உற்பத்தி செய்யக்கூடியதாக இருந்தது.

இதனால் மாதம் ஒன்றுக்கு அறுபதாயிரம் ரூபா கூட வருமானமாக பெறமுடிந்தது ஆனால் இன்று மாதத்தில் பத்தாயிரம் ரூபாவை கூட வருமானமாக பெறமுடியவில்லை

அந்த காலத்தில் பாய்களை பல பகுதிகளுக்கும் கொண்டு சென்று விற்பனை செய்ததுடன் வற்றாப்பளை பொங்கல் வன்னிவிளாங்குளம் புதூர் நாகதம்பிரான் மடுதேவாலயம் என ஆலய திருவிழாகளில் போது அங்கு

(தொடர் 20ஆம் பக்கம்)




நீங்கள் உபயோகிக்கும் தேங்காய் எண்ணெய்க்கு
தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் சான்றிதழ்
உள்ளதா என்பதைக் கவனியுங்கள்




தரத்திலான தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்

- உற்பத்தியின் போது சிறந்த தரத்திலான மூலப் பொருட்களை உபயோகிப்பார்.
- சுத்தமான தயாரிப்பு செயற்பாடுகளை மேற்கொள்வார்.
- ஏனைய எண்ணெய்களுடன் தேங்காய் எண்ணெய்யைக் கலக்க மாட்டார்.

தரத்தில் குறைந்த தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்

- தரக் குறைவான மூலப் பொருட்களை உபயோகிப்பார்.
- தயாரிப்பின் பின்னர் வேறு எண்ணெய்களுடன் தேங்காய் எண்ணெய்யைக் கலப்பார்

தரத்தில் குறைந்த தேங்காய் எண்ணெய் சந்தையில் கிடைக்கின்றனவா?

- ஆம். சில தேங்காய் எண்ணெய் வகைகள் தரத்தில் குறைந்தவையாகவும் கலவை செய்யப்பட்டவையாகவும் உள்ளன

தரத்தில் கூடிய தேங்காய் எண்ணெய்யை தெரிவு செய்ய வேண்டியது எதற்காக?

- தரத்தில் குறைவான தேங்காய் எண்ணெய் வகைகளை உட்கொள்வதால் ஏற்படும் நோய்களிலிருந்து (உயர் குருதி அழுத்தம், இருதய நோய்கள், புற்றுநோய் போன்றவை) பாதுகாப்புப் பெறுவதற்காகும்.

தரத்தில் கூடிய தேங்காய் எண்ணெய்யைத் தெரிவு செய்வது எவ்வாறு?

- தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் அத்தாட்சி உள்ளனவா என்பதைக் கவனியுங்கள்

சந்தையில் விற்பனைக்குள்ள தேங்காய் எண்ணெய்
தரத்தில் குறைந்தவை என்பதை
நீங்கள் அறிவீரா?



CERTIFIED
Coconut Development Authority Sri Lanka
A Product Certified by Coconut Development Authority

தெங்கு அபிவிருத்தி அதிகார சபை மற்றும்
சுகாதார ஊக்குவிப்புப் பணியகத்தின் செய்தியாகும்

தினகரன் வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429294, 2429296
பெக்ஸ் : 2429329

சார்வரி வருடம் ஆவணி மாதம் 28ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 முஹர்ரம் பிறை 24

# எதிர்ப்பது மட்டுந்தான் எதிரணியின் பொறுப்பா?

நாட்டின் நலன் கருதிய அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்குக் காத்திரமான பங்களிப்பை வழங்க வேண்டிய தலையாய பொறுப்பு எதிர்க்கட்சிக்கு உண்டு. எதிர்க்கட்சி எனும்போது ஒரு கட்சியை மாத்திரமன்றிப் பாராளுமன்றத்தில் எதிரணியில் உள்ள அனைத்துக் கட்சிகளையும் குறிக்கும். அந்த அனைத்துக் கட்சிகளின் சார்பில்தான் எதிர்க்கட்சித் தலைவர் செயற்படுவார்; செயற்பட வேண்டும்.

அரசாங்கத்தின் பணிகளை வலுவாக்குவதற்கும் நேர்வழியில் முன்னகர்த்துவதற்கும் எதிரணியின் காத்திரமான விமர்சனங்கள் மிக மிக இன்றியமையாதவை. அதற்கு எதிரணி வலுவானதாக இருக்க வேண்டும். எதிரணி பலவீனமாக இருப்பின், அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எந்த விதத்திலும் பங்களிப்பு செய்வதற்கு இயலாத நிலையே ஏற்படும்.

இன்றைய எதிர்க்கட்சியின் நிலவரம் மேற்குறிப்பிட்ட விடயத்திற்குச் சான்று பகர்வதாகவே இருக்கிறது. ஏனெனில், அவர்களுக்குத் தற்போதிருக்கும் முக்கிய பணியானது, பாராளுமன்றத்தில் ஓர் எதிர்க்கட்சி இருக்கின்றது என்பதை அடிக்கடி உறுதிசெய்துகொள்ள வேண்டிய பொறுப்பாக இருக்கும். அவர்கள் அதனைத்தான் இப்போது செய்துகொண்டிருக்கிறார்கள். எதிர்க்கட்சியினர் என்னதான் எதிர்ப்புகளை வெளியிட்டாலும், கருப்பு பட்டிகளை அணிந்தாலும், வெளிநடப்பு செய்தாலும் பாராளுமன்றத்தின் தற்போதைய நிலவரத்தின்படி எதிர்க்கட்சியினரால் எதுவுமே செய்ய முடியாது என்பதுதான் உண்மை. இந்த நிலையில்தான் இருபதாவது திருத்தத்தைச் செய்ய விடமாட்டோம், அதைச் செய்ய விடோம், இதைச் செய்ய விடோம் என்று எதிரணியில் ஒவ்வொருவரும் கூளுரைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் செய்வது முற்றிலும் பொய்யானதென்று அவர்களின் மனசாட்சிக்குத் தெரியும். இருந்தும் மக்களைக் கவர்வதற்காகத் தாங்கள் ஏதோ மிகுந்த பலத்துடன் இருப்பதைப்போன்று பாராளுமன்றத்தில் பாசாங்கு செய்துகொண்டிருப்பதாகச் சொல்கிறார்கள் அரசியல் அவதானிகள்.

உண்மையில், எதிர்க்கட்சி என்றால், அரசாங்கத்தின் எல்லா செயற்பாடுகளுக்கும் எதிர்ப்பை வெளியிட்டுக்கொண்டிருப்பது மட்டுந்தானா? என்ற கேள்வி நீண்ட காலமாகவே நிலவி வருகிறது. பாடசாலை பெற்றார் ஆசிரிய சங்கக் கூட்டத்தில் எப்போது பார்த்தாலும் ஆசிரியர்களைக் குறை சொல்வதற்கென்றே ஒரு கூட்டம் இருக்கும். கணக்கு வழக்குகளைக் கேட்பதற்கு மற்றொரு கூட்டம் இருக்கும். இப்படி பாராளுமன்றத்தில் காலத்துக்குக் காலம் எதிர்க்கட்சியாகவே இருக்கும் சில கட்சி உறுப்பினர்களும் அப்படித்தான் செய்துகொண்டிருக்கிறார்கள். மக்களுக்குச் சம்பந்தா சம்பந்தமில்லாமல் எதையெதையெல்லாமோ பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

ஒரு பாராளுமன்ற உறுப்பினரால் மக்களுக்கு ஆற்றக்கூடிய விடயங்கள் ஆயிரம் உண்டு. வெறுமனே தமக்கு வழங்கப்படும் நேரத்திற்கு எதையாவது உளறிக்கொட்டும் நிலையைத்தான் இப்போது காணக்கூடியதாக இருக்கிறது. இடம் பொருள் ஏவல் அறிந்து தெரிந்து உரையாற்றாமல், விதண்டாவாதங்களை முன்வைத்து வீண் பிரச்சினைகளையும் உருவாக்கிக்கொள்கிறார்கள். அண்மைக் காலமாகப் பாராளுமன்றத்தில் இந்த நிலையைக் கூடுதலாகக் காண முடிகிறது. தாம் உதிர்க்கும் சொற்கள் மற்றவரைப் பாதிக்குமா, நாம் சொல்வதில் நியாயம் இருக்கிறதா, அப்படியே நியாயம் இருந்தாலும் சூழ்நிலையுடன் பொருந்திப் போகுமா, இந்தக் கருத்தால் மக்களுக்கு ஏதாவது நன்மை பயக்குமா? என்பதைப்பற்றியெல்லாம் கிஞ்சித்தும் சிந்தித்துப் பார்க்காமல், சிலர் மேலெழுந்தவாரியாகப் பயனற்ற கதைகளைப் பேசுகிறார்கள்.

எதிர்க்கட்சியில் இருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்திற்கு ஆதரவாகப் பேச வேண்டும் என்று கட்டாயம் இல்லை. அவர்கள் குறித்த ஒரு விடயத்திற்காகத் தங்களின் எதிர்ப்பைப் பதிவு செய்வதற்குத் தங்களின் தரப்பு விமர்சனங்களை முன்வைக்கலாம். அதற்காக, மக்களுக்கும் எதிராக செயற்பட வேண்டும் என்றில்லையே! எதிர்க்கட்சியின் பணியாக, அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்பைத் தெரிவிப்பதற்கு நேரத்தைச் செலவழிக்கும் அதேநேரம், மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பயன்படுத்தலாமே!

உதாரணமாக, வருடக் கணக்காக இழுபறிப்பட்டுக்கொண்டிருக்கும் ஒரு பிரச்சினையைச் சுட்டிக்காட்டி, வாய்மூல விடைக்கான கேள்வியைத் தொடுக்கலாம். அல்லது தனி நபர் பிரேரணையொன்றைக் கொண்டு வரலாம். அப்படியே கொண்டு வந்தாலும், அதனைத் தங்களின் விளம்பரத்திற்காகப் பயன்படுத்திக்கொள்ளும் சூழலையே தற்போது காணக்கூடியதாகவிருக்கிறது. பாராளுமன்றத்திற்குப் புதிதாக சென்றிருக்கும் உறுப்பினர்களைத் தற்போதைக்குக் குறை கூற முடியாது. நீண்டகாலம் பாராளுமன்றத்தில் அங்கத்தவராக இருப்பவர்கள், மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக கேள்வி எழுப்பிய சந்தர்ப்பங்கள் மிக் குறைவு என்றுதான் சொல்ல வேண்டும். அரசாங்கத்திடம் கணக்கு கேட்கவும் விளக்கம் கேட்கவும் தங்களின் நேரத்தைச் செலவழிக்கும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள், அந்த நேரத்தைக் காத்திரமாகப் பயன்படுத்திக்கொண்ட சந்தர்ப்பங்கள் குறைவு. அதிலும், தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்களும் அரிது என்றுதான் குறிப்பிட வேண்டும். தமிழ் உறுப்பினர்களைப் பொறுத்தவரை அரைத்த மாவையே அரைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்ற ஒரு பொதுவான குற்றச்சாட்டு எப்போதும் உண்டு.

ஆகவே, இந்தக் குற்றச்சாட்டுகளைப் பொய்யாக்கும் விதத்தில், இனிவரும் காலங்களிலாவது எதிரணி பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களுக்குப் பாராளுமன்றத்தில் ஒதுக்கப்படும் நேரத்தை மக்களுக்காகப் பயன்படுத்திக்கொள்ள முயற்சிக்க வேண்டும்; முயற்சிப்பார்களா?

தினகரன் விளம்பரம் : 0112429367 | விற்பனை பிரிவு : 0112429444, 0112429378 | விளம்பர முகாமையாளர் : 0112429673 | தினகரன் ஆசிரியபீடம் : editor.vm@lakehouse.lk

# விக்னேஸ்வரன் மூட்டிய தீ

## சாத்தியமற்றுப் போகுமா பகை மறப்பு?

"இலங்கையின் மூத்த குடிகள் தமிழர்களே" என்ற விக்னேஸ்வரனுடைய முதல் பாராளுமன்ற உரை ஏற்படுத்திய அதிர்வலைகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. நல்விளைவாக அல்ல. பாதமாகவே. பாராளுமன்றத்தில் மட்டுமல்ல, சிங்கள ஊடகங்கள் தொடக்கம் சிங்களப் பொதுவெளி முழுவதிலும் விக்னேஸ்வரன் ஒரு எதிர்மறைப் பாத்திரமாகவே உணரப் படுகிறார். குறிப்பாக இனவாதியாக. (தமிழ்த்தரப்பில் வேறுவிதமாக)



இதைத்தான் விக்னேஸ்வரன் எதிர்பார்த்தாரா? அல்லது அவர் ஏதோ ஒன்றை நினைத்துப் பேச அது இன்னொன்றாக மாறியுள்ளதா? அதாவது அவர் எதிர்பாராமல் இதெல்லாம் நிகழ்ந்து கொண்டிருக்கிறதா?

நிச்சயமாக விக்னேஸ்வரன் எதிர்பார்த்தபடியே அனைத்தும் வெகு சிறப்பாக நடந்து கொண்டிருக்கின்றன. அவர் மூட்டிவிட வேண்டும் என்று எதிர்பார்த்த நெருப்பு நன்றாகப் பற்றிப்பிடித்துள்ளது. இப்பொழுது இலங்கை முழுவதிலும் விக்னேஸ்வரன் பேசப்படும் ஆளாகி விட்டார். விக்கினேஸ்வரனுடைய செய்திகளே முதல் பக்கத்தில் வெளிவந்து கொண்டிருக்கின்றன. தெற்கில் எதிர்மறையாளராக. இனவாதியாக. தமிழ்த்தரப்பில் இனப்பற்றாளராகவும் விடுதலைக் குரலாளராகவும் துணிந்து தமிழ்த்தரப்பைப் பற்றிப் பேசும் வல்லமை உள்ளவராகவும்.

கடந்த இரண்டு வாரங்களாகத் தமிழ் ஊடகங்களின் தலைப்புச் செய்திகளில் விக்கினேஸ்வரனே இருக்கிறார். "இந்த உபாயத்தினால் தமிழ்ச் சமூகத்திடம் ஒவ்வொரு நாளும் விக்கினேஸ்வரனுக்கான ஆதரவு பெருகிக்கொண்டிருக்கிறது. தமிழரின் அரசியலில் அண்மைக்காலத்தில் பேசப்படும் நபராக இருந்த சுமந்திரனைப் பின்னுக்குத் தள்ளி விட்டு விக்னேஸ்வரன் முன்னரங்குக்கு வந்துள்ளார். விக்கினேஸ்வரனையும் விட தீவிரமாகத் தமிழ்த்தேசியவாதத்தை முன்வைத்த கஜேந்திரன்ஸ்களையும் விக்னேஸ்வரன் முந்திச் செல்கிறார். இதன்மூலம் அடுத்த (வட) மாகாணசபைத் தேர்தலில் தன்னுடைய தரப்பின் வெற்றிக்கான வியூகத்தை விக்னேஸ்வரன் சிறப்பாக வகுத்துள்ளார்" என்று குறிப்பிடும் அரசியல் அவதானிப்பாளர் ஒருவரின் கூற்றை இங்கே குறிப்பிடுவது பொருத்தமாகும்.

இரண்டு தரப்பிலும் பேசப்பட வேண்டும் என்றால் அதற்கு இலகுவான வழி அல்லது ஆயுதம் இனவாதத்தைக் கையில் எடுப்பதே. சிங்களத் தரப்பிலும் விக்கினேஸ்வரனைப் போன்றவர்கள் உள்ளனர். அவர்களுடைய செய்திகளுக்கு சிங்கள ஊடகங்களில் மட்டுமல்ல, தமிழ்த்தரப்பிலும் தாராளமாக முக்கியத்துவம் கொடுக்கப்படும். இதை நீங்கள் தொடர்ந்து அவதானிக்கலாம்.

எனவே விக்னேஸ்வரன் எதை எண்ணிப் பேசினாரோ அது சிறப்பாகவே நடந்து கொண்டிருக்கிறது. இங்கே விக்னேஸ்வரன் என்று குறிப்பிடுவது தனியே விக்கினேஸ்வரனை மட்டும் குறிப்பதல்ல. அவரையும் அவருடைய இந்த நிலைப்பாட்டையும் ஆதரித்து நிற்கும் எல்லோரையுமே. ஆகவே இதனால் ஏற்படும் நன்மை தீமை அனைத்துக்கும் இவர்கள் அனைவரும் கூட்டுப் பொறுப்பேற்க வேண்டும்.

"விக்னேஸ்வரன் ஒன்றும் தவறாகப் பேசவில்லையே! அவர் உண்மையைத்தானே சொன்னார். வரலாற்று (தமிழ்) அறிஞர்களின் கருத்தைத்தானே கூறியிருக்கிறார்? இது எப்படித் தவறாகும்? சிங்களத் தரப்பினர் அரசியல் உள்நோக்கங்களோடு பொய்யான கற்பிதங்களை உருவாக்கி, வரலாற்றையே மாற்ற முற்படுகின்றனர். அதை மறுத்து, உண்மையைப் பேச முற்படுவது எப்படிப் பிழையாகும்? ஒடுக்கப்படும் மக்களின் வரலாற்றை மறைக்க முற்படுவதே ஒடுக்கும் அரசின் நோக்கமாகும். இந்த அநீதிக்கு எதிராகக் குரல் எழுப்பியுள்ள விக்கினேஸ்வரனைப் பாராட்ட வேண்டும். இதை, விக்னேஸ்வரன் கூறிய இந்த உண்மையை ஏற்றுக் கொள்ள முடியாதவர்கள் அவரை ஒரு இனவாதியாகச் சித்தரித்து பிரச்சினையைத் திசைதிருப்ப முற்படுகிறார்கள். இதுதான் சிங்களத்தரப்பில் எப்போதுமுள்ள தவறாகும்..." என்று விக்கினேஸ்வரனை ஆதரிப்போர் கூறுகின்றனர் (வாதிடுகின்றனர்).

மேலோட்டமாகப் பார்த்தால் அல்லது தர்க்கத்தின் அடிப்படையில் நோக்கினால் இந்த வாதம் சரிபோலவே தோன்றும். ஏனெனில் ஆட்சி அதிகாரத்தைக் கொண்டிருக்கும் சிங்களத் தரப்பானது தன்னுடைய வரலாற்றைப் பலமாக்குவதற்கு எடுக்கின்ற முயற்சிகள் ஏனைய மக்களை நிர்க்கதி நிலைக்குத் தள்ளியுள்ளது. அல்லது உள அச்சத்தை உருவாக்கியுள்ளது. அரசியலமைப்பிலும் சரி இலங்கை முழுவதிலும் உள்ள நிலப்பரப்பிலும் சரி பௌத்தப் பேரடையாளமே நிறுவப்படுகிறது. என்பதால்தான் விக்னேஸ்வரன் போன்றவர்களின் குரலை ஒடுக்குமுறைக்குள்ளாகிய சமூகத்தினர் பெரிதாகக் கொண்டாடுகின்றனர்.

ஆனால், அரசியலில் ஒரு விடயம் ஏற்படுத்தும் விளைவு எப்படி என்றே பார்க்க வேண்டும். அது எத்தகைய விளைவுகளை உடனடியாகவும் நீண்டகாலத்திலும் ஏற்படுத்தக் கூடியது என்று நோக்குவது அவசியம். தெற்கில் (அரசாங்கம், ஊடகங்கள், அரசியல் தலைவர்கள், கட்சிகள், அரசியல் வாதிகள், மதத்தலைவர்கள்) இனவாதம் பேசப்படுகிறது என்பதற்காக நாமும் (தமிழ் பேசும் தரப்பினரும்) பதிலாக இனவாதத்தையே கையில் எடுக்க முடியாது. அப்படியான அணுகுமுறையே கடந்த காலத்தில் நடந்தது. எஸ்.ஜே.வி. செல்வநாயகம், ஜீ.ஜீ. பொன்னம்பலம், நாகநாதன், வி. சுந்தரலிங்கம், அமிர்தலிங்கம் தொடக்கம் மாவை சேனாதிராஜா வரையில் இதுதான் நடந்தது. வேண்டுமானால் பழைய சுதந்திரன் தொடக்கம் அத்தனை தமிழ்ப் பத்திரிகைகளையும் பார்த்துக் கொள்ளுங்கள். அல்லது நினைவுபடுத்திப் பாருங்கள். இந்தச் செய்திகளில் பயன்படுத்தப்பட்ட சொற்களே மிகக் கடுமையானவை. ஊடக முறையியலுக்கும் ஜனநாயகப் பண்புக்கும் மாறானவை. உதாரணமாக "அரசுக்குப் பதிலடி, இடித்துரைப்பு, எச்சரிக்கை, காட்டம், சூளுரைப்பு, ஆவேசம், முழக்கம், கர்ஜனை, நிராகரிப்பு என எதிர்மறை உணர்வையும் வன்முறைக்கான தூண்டலையும் கொண்டவை. குறிப்பாகப் போர் மனநிலையைக் கொண்டவை.

இதனால்தான் நாம் வாயைக் கொடுத்து வயிற்றைப் பழுதாக்கியவர்களாக கசப்பான வரலாற்றனுபவங்களைப் பெற வேண்டிவந்தது. ஏட்டிக்குப் போட்டி என இனவாதிகள் (அவர்கள்) வைக்கின்ற பொறியில் சிக்கியவர்களாக மாறியதால் வந்த வினை இது. இதன் விளைவை ஒரு பெரும் போரிலும் பேரழிவிலும் அனுபவித்தவர்கள். இன்னும் அந்த அழிவிலிருந்தும் அது உண்டாக்கிய பின்னடைவிலிருந்தும் மீள முடியாமல் தவித்துக் கொண்டிருப்பவர்கள்.

ஆகவே இவ்வாறான மிகக் கசப்பான வரலாற்று அனுபவங்களைக் கொண்டிருக்கும் நாம் இனிமேலாவது கற்றுக் கொண்ட பாடங்களின் அடிப்படையில் மிக எச்சரிக்கையாக, மிகக் கவனமாக, மிக நுட்பமாக விடயங்களைப் புரிந்து கொள்ளவும் கையாளவும் வேண்டும். உணர்ச்சிகரமான இழுவிசைகளில் சிக்கக் கூடாது.

**சிங்களத்தரப்பினரில் பெரும்பாலானோர் வரலாற்றுப் போக்கிற்கு மாறாக அநேகமாக முரண்பாட்டு அரசியலையே கையாள முற்படுகின்றனர். இது நிகழ்காலத்துக்கும் எதிர்காலத்துக்கும் எதிரானது. அவர்கள் மீள மீள நமக்குப் பொறியையே வைக்கிறார்கள் என்றால், நாம் அதற்குள் போய் முட்டாள்தனமாக சிக்கிக் கொள்ள வேண்டுமா? அந்தப் பொறிக்குள் சிக்காதிருப்பதும் அதை உடைத்தெறிய வேண்டியதும் அல்லவா நம்முடைய வேலை!**

கூடியவரை அவதானமாகச் செயற்பட வேண்டும். எச்சரிக்கை உணர்வுக்கும் கவனத்திற்கும் நுட்பங்களுக்கும் எப்போதும் தேவையாக இருப்பது அறிவே. ஆகவே இலங்கையின் இனமுரண்பாட்டு அரசியலை அல்லது இனப்பகை அரசியலை அறிவுபூர்வமான அணுமுறையின் வழியாகவே எதிர்கொள்ள முடியும். இதையே சூழலும் நிகழ்காலமும் வரலாறும் நம்மிடம் கோருகின்றன.

போருக்குப் பிறகும் சிங்களத்தரப்பினரில் பெரும்பாலானோர் வரலாற்றுப் போக்கிற்கு மாறாக அநேகமாக முரண்பாட்டு அரசியலையே கையாள முற்படுகின்றனர். இது நிகழ்காலத்துக்கும் எதிர்காலத்துக்கும் எதிரானது. அவர்கள் மீள மீள நமக்குப் பொறியையே வைக்கிறார்கள் என்றால், நாம் அதற்குள் போய் முட்டாள்தனமாகச் சிக்கிக் கொள்ள வேண்டுமா? அந்தப் பொறிக்குள் சிக்காதிருப்பதும் அதை உடைத்தெறிய வேண்டியதும் அல்லவா நம்முடைய வேலை?!

வரலாறும் நிகழ்காலமும் எதிர்காலமும் கூட வற்புறுத்தி நிற்பது முரண்பாட்டு அரசியலை அல்ல. அவை வலியுறுத்திக் கொண்டிருப்பது, பகை மறப்பு அரசியலை. கற்றுக்கொண்ட பாடங்களின் அடிப்படையில் நல்லிணக்கத்தை. அமைதியையும் நிலையான சமாதானத்தையும் நோக்கிய புதிய அரசியலை. இதைச் செய்யாமல் மறுபடியும் முரண்பாட்டு (பகை வளர்ப்பு) அரசியலை அரசாங்கமும் சிங்களத்தரப்பும் செய்ய முற்படும் என்றால் அதுவே வரலாற்று நெருக்கடிக்குள் சிக்க வேண்டியதாக இருக்கும். சமகாலத்திலேயே அது வெளியுலகினால் எதிர்ப்புக்குள்ளாகும். நெருக்கடிக்குள்ளாகும். ஏனெனில் வெளியுலகம் (சர்வதேச சமூகம்) வலியுறுத்திக் கொண்டிருப்பது பகை மறப்பையும் நல்லிணக்கத்தையும் அமைதியையும் நீடித்த சமாதானத்தையுமே. இதற்கு எதிராகச் செயற்பட்டால் அது எப்படி அதனை அனுமதிக்கும்? ஆதரிக்கும்?

ஆகவே தவறான அரசியலை மேற்கொள்ளும் சக்திகளை நாம் தனிமைப்படுத்தி, அம்பலப்படுத்த வேண்டும். அதுவே அவற்றைத் தோற்கடிப்பதற்கான உபாயம். இதற்கு நமக்கு மிகுந்த நிதானம் தேவை. பொறுமையுடன் கூடிய நுட்பமான மாற்றுச் செயற்பாட்டு முறை அவசியம். அப்படிச் செய்ய வேண்டும் என்றால் இனவாதத்துக்குப் பதிலாக – பல்லின அடையாளத்தையும் பன்மைத்துவத்தையுமே வலியுறுத்த வேண்டும். தொடர்ந்து இந்த நிலைப்பாட்டில் நாம் உறுதியாக நிற்க வேண்டும். (இனவாத) விசத்தை இறுக்குவதற்கு மருத்துவர்கள் எடுக்கின்ற கடுமையான முயற்சியைப்போல, இதில் நாம் தீவிரமாகச் செயற்பட வேண்டும்.

விக்கினேஸ்வரனுடைய உரை பன்மைத்துவத்தைப் பற்றிப் பொருட்படுத்தவே இல்லை. அது தனியே தமிழ்ச்சமூகத்தை மட்டுமே மையப்படுத்தியது. இதனால்தான் அது இலகுவாக இனவாதமாகச் சித்திரிக்கப்படவும் உணரக்கூடியதாக இருந்தது. அவருடைய கூற்றுப்படி "தமிழ் மக்கள்தான் இலங்கையின் பூர்வ குடிகள், தமிழ் மொழியே உலகின் மூத்தமொழி" என்றால் சிங்களர் மட்டுமல்ல, முஸ்லிம்கள், மலையக மக்கள் போன்றோரின் வரலாற்றுப் பெறுமானம் என்ன? இது அந்தச் சமூகங்களையும் கேள்விக்குட்படுத்தி, வரலாற்று வெளியில் பின்தள்ளுவதாகவே அமையுமல்லவா. இதனால்தான் மூத்த எழுத்தாளர் தெளிவத்தை யோசப், தனிப்பட்டதொரு உரையாடலின்போது "ஆமா .. இப்ப என்ன பார்லிமெண்டுல தமிழாராய்ச்சி மாநாடா நடக்குது ?" என்று கேட்க வேண்டியிருந்தது.

இங்கே பிரச்சினை என்னவென்றால் நாம் எப்போதும் எண்ணிக் கொண்டிருக்கிறோம், எங்களுடைய நிலைப்பாடே சரியானது. நம்முடைய கருத்துக்களே சரியானவை. நம்முடைய சிந்தனையே சரியாகவே உள்ளது. நாம் சொல்வதெல்லாம் உண்மையானவையும் நியாயமானவையும். எங்களுடைய பிரச்சினையே ஆகப் பெரிய பிரச்சினை என்றவாறாக.

ஆனால், பல சந்தர்ப்பங்களிலும் இதெல்லாம் மற்றவர்களால் எப்படிப் புரிந்து கொள்ளப்படுகிறது? எப்படி நோக்கப்படுகிறது? என்று நாம் பார்ப்பதில்லை. "என்னுடைய சொற்களுக்கு எதிராளியின் மனதில் இன்னோர் அர்த்தமுண்டு" என்ற த. அகிலனின் கவிதையை இங்கே நினைவு படுத்த வேண்டும். ஆளாளுக்கு வேறுபடுகின்ற அர்த்தம் மாதிரித்தான் சமூகத்துக்குச் சமூகம் வேறுபட்ட மனநிலை, சிந்தனைப்போக்குகளுடன் இருக்கும். இது அந்தந்தச் சமூகத்தின் வரலாற்றுப் பிரக்ஞை, அரசியல் விளைவுகள், பொருளாதார நெருக்கடிகள், வாழ்நிலை, பண்பாட்டுச் செல்வாக்கு எனப்பலவற்றினால் உருவாகுவது.

இதையெல்லாம் புரிந்து கொள்வதற்கு அதிகம் சிரமப்படவேண்டியதில்லை. சாதாரண நீதிமன்ற வழக்குகள், பொலிஸ் நிலையத்தில் நடக்கும் விசாரணைகள் போன்ற சந்தர்ப்பத்திலெல்லாம் ஒரு தரப்பின் நியாயத்துக்கும் நோக்குநிலைக்கும் மறுதரப்பின் நியாயத்துக்கும் புரிந்து கொள்ளும் முறைமைக்கும் இடையில் உள்ள தன்மைகளை நாம் பார்க்கிறோமே. இங்கு மட்டுமல்ல, வகுப்பறையில், ஏன் நம்முடைய வீடுகளில், குடும்பத்தில், நட்பு வட்டத்தில் கூட இத்தகைய வேறுபட்ட புரிதல்கள், மனநிலைகள் உள்ளது என்பதைப் பார்க்கிறோம். அதிகம் ஏன், "நாம் ஒன்றை நினைக்கத் தெய்வம் வேறொன்றை நினைக்கிறது" என்ற பழமொழியை இந்த இடத்தில் நினைவிற் கொள்ளலாம்.

ஆகவே விக்கினேஸ்வரனுடைய உரையென்பது நிச்சயமாக தவறான – பாதகமான விளைவுகளையே உண்டாக்கும் என்ற கவலை சமூக நன்மைகளைக் குறித்துச் சிந்திப்போரிடம் காணப்பட்டது. இப்பொழுது அதுவே நடந்திருக்கிறது. சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுத்தானாம் ஆண்டி என்பதைப்போல அமைந்து விட்டது. தனிப்பட்ட ரீதியில் அவர் தமிழ்ச்சமூகத்தில் ஒருசாராரிடம் வழிபாட்டுக்குரிய அளவுக்கு உயர் நிலையில் வைத்துக் கொண்டாடப்படலாம். அதனால் அவருக்குச் சில லாபங்கள் தற்போது கிடைக்கலாம். அவர் இந்த மாதிரியான ஆட்களிடம் பெரும் புகழையும் பெறக்கூடும். ஆனால், தமிழ்ச்சமூகத்துக்கு அவர் நெருக்கடிகளை உருவாக்கியவராகவே வரலாறு நிரூபிக்கும். உண்மையில் நடப்பதும் நடக்கப் போவதும் அதுதான். இது விக்கினேஸ்வரனையும் அவரை ஆதரிப்போரையும் நிச்சயமாக வரலாற்றின் குப்பைக் கூடைக்குள்ளேயே தள்ளும். சாதாரணமாக அலல, குற்றவாளிகளாக.

**கருணாகரன்...**

# 20ஐ ஏற்க மாட்டோம்

தமிழர் தரப்பு பலமாக இருக்க வேண்டிய இந்தக் கால கட்டத்தில் கூட்டமைப்பு பதிவு செய்யப்பட்டு ஒரே தலைமைத்துவத்தின் கீழ் அனைத்துத் தமிழ்த் தேசியக் கட்சிகளையும் இணைத்துச் செயற்பட வேண்டும் என்கிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினரும் புளொட் அமைப்பின் தலைவருமான தர்மலிங்கம் சித்தார்த்தன். தினகரன் வாரமஞ்சரிக்கு வழங்கிய நேர்க்காணலில் அவ்வாறு பதிவுசெய்யப்படும்போதே அனைத்து தமிழ் தேசிய அமைப்புகளும் ஓரணியில் பயணிக்கும் சூழல் ஏற்படுமென்கின்றார் அவர்...



**கே: தேர்தல் முடிவுகளை கூட்டமைப்பாக நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

**பதில்:** கடந்த தேர்தல்களுடன் ஒப்பிடுகின்ற போது இந்த பாராளுமன்றத் தேர்தல் முடிவுகள் என்பது கூட்டமைப்பிற்கு பெரிய பின்னடைவை ஏற்படுத்தியிருக்கின்றது. அதற்குப் பல காரணங்கள்.

குறிப்பாக கூட்டமைப்பில் இருக்கக் கூடிய சிலருடைய நடவடிக்கைகள் சொல்லாடல்கள் மக்கள் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தது. அந்த அதிருப்தியே கூட்டமைப்பின் பின்னடைவிற்கு மிக முக்கிய காணமெனக் கருதுகின்றேன்.

அதே நேரத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகள் என்ற ரீதியில் பார்த்தால் கடந்த தேர்தலைப் போலவே இந்த தேர்தலிலும் சமமாகவே ஆசனங்கள் பெறப்பட்டுள்ளன. குறிப்பாக யாழ்ப்பாணத்தை எடுத்துக் கொண்டால் கடந்த தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 5 ஆசனங்களைப் பெற்றது. இம்முறை தமிழ்த் தேசியக் கட்சிகள் எல்லாமாக 5 ஆசனங்களைப் பெற்றுள்ளன.

**கே: கூட்டமைப்பிற்கு ஆசனங்கள் குறைவடைய வேறு கட்சிகள் ஆசனங்கள் பெற்றுக் கொண்டதை எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

**பதில்:** யாழ்ப்பாணத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஆசனத்தைப் பெற்றுக் கொண்டாலும் அதற்கு அப்பால் அரச கட்சிகளும் அரசுடன் சேர்ந்து இயங்குகின்ற கட்சிகளும் ஆசனங்களைப் பெற்றுக் கொண்டுள்ளன. அதிலும் வடக்கு கிழக்கைப் பொறுத்தவரையில் கூட்டமைப்பை தவிர அரசிற்கு ஆதரவாக 5 ஆசனங்கள் பெறப்பட்டுள்ளன.

இது அரசாங்கத்திற்கு பலத்தைத் தந்திருக்கின்றது. அதே நேரத்தில் தமிழத் தரப்பாக தமிழர்களின் அபிலாசைகளை வென்றெடுக்கின்ற அமைப்பாக செயற்படுகின்ற கூட்டமைப்பிற்கு பாதிப்பு தான். ஏனெனில் தமிழர் தரப்பாக நாம் செயற்படுகின்ற போது எமது பலம் குறைவடைகின்றமை எமது அபிலாஷைகளை வென்றெடுப்பதில் பாதிப்பை ஏற்படுத்துவதாகவே அமையும்.

**கே: இவ்வாறானதொரு நிலைமையில் கூட்டமைப்பின் செயற்பாடுகள் எவ்வாறாக அமையுமெனக் கருதுகின்றீர்கள்?**

**பதில்:** நாட்டில் பலமான ஒரு அரசாங்கம் வந்திருக்கின்ற போது தமிழர் தரப்பில் இருந்தும் அரசின் சார்பாக தெரிவு செய்யப்பட்டு ஆதரவை வழங்குவது அரசாங்கம் தாம் நினைத்ததை விரும்பியதை செய்யலாம் என்ற எண்ணத்தை ஏற்படுத்தலாம். அது அவர்களுக்கு வசதியானதாகவும் இருக்கலாம்.

ஆனால் தமிழ் தரப்பாக நாம் செயற்படுகின்ற போது கூட்டமைப்பின் கருத்துக்களைக் கேட்கத் தேவையில்லை என்ற நிலையை அது ஏற்படுத்தலாம். அவ்வாறு பகிரங்கமாகத் தெரிவிக்கப்பட்டும் உள்ளது. ஆனால் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை வென்றெடுக்கக் கூடிய தரப்பாக நாமே தொடர்ந்தும் செயற்படுவோம். அவ்வாறான எமது செயற்பாடுகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும்.

ஆகவே இன்றைய சூழலில் அனைத்து தமிழ்த் தேசியக் கட்சிகளும் ஒன்றிணைய வேண்டியது அவசியமானது. அதிலும் ஆகக் குறைந்தது பாராளுமன்றத்தில் ஒன்றிணையாவிட்டாலும் ஒருமித்துச் செயற்பட வேண்டியது அவசியம்.

**கே: தேர்தலுக்குப் பின்னராக கூட்டமைப்பின் பதவி நிலைகளில் மாற்றம் ஏற்படுத்த வேண்டுமென்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டு வருகின்ற நிலையில் அவ்வாறான மாற்றங்கள் சாத்தியப்படுமா?**

**பதில்:** கூட்டமைப்பின் பதவி நிலைகளிலுள்ளவர்களின் சில செயற்பாடுகளும் இந்த பின்னடைவிற்கு காரணமாக இருப்பதால் அதில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டிய தேவையும் இருக்கின்றது. ஆயினும் அதில் முக்கியமாக பதவி நிலைகளில் மாற்றங்கள் ஏற்படுவதைக் காட்டிலும் பாராளுமன்ற உறுப்பினர்களின் நடவடிக்கைகள், சொல்லாடல்கள், கருத்துக்களில் மாற்றங்கள் ஏற்பட வேண்டியது அவசியம்.

பதவி நிலைகளில் மாற்றம் கொண்டு வர வேண்டிய தேவை உள்ளது. மக்கள் மத்தியில் மீண்டும் நம்பிக்கையை நாங்கள் கட்டியெழுப்ப வேண்டுமானால் பதவி நிலைகளில் மாற்றம் ஏற்பட வேண்டும. அதற்கான முயற்சி எடுக்கப்படுகிறது. அதனடிப்படையில் பேச்சுவார்த்தை நடக்கிறது.

**கே: அவ்வாறான மாற்றங்கள் ஏற்படாதவிடத்து கூட்டமைப்புக்குள் மீண்டும் குழப்பங்கள் ஏற்படுமா?**

**பதில்:** கூட்டமைப்பாக நாங்கள் ஒருமித்து ஒன்றாக இணைந்த பயணிக்க வேண்டிய தேவை உள்ளது. ஆகவே கூட்டமைப்பை பலப்படுத்த வேண்டிய தேவையும் ஏற்பட்டிருக்கின்றது. அதற்காக கட்சிக்குள் சில மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். மாற்றம் என்பது கூட்டமைப்பை முன்னோக்கி கொண்டு செல்வதாகவே அமைய வேண்டும்.

அதனடிப்படையில் ஒன்றாக ஒருமித்து பயணித்து கூட்டமைப்பை பலப்படுத்த வேண்டும். ஆகவே மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டியது மிக மிக அவசியமானது. ஆயினும் அவ்வாறான மாற்றங்களை செயற்படுத்தத் தவறினால் கூட்டமைப்பிற்குள் ஒற்றுமையை நிலைநாட்டுவது மிகக் கடினமாக இருக்குமென்றே கருதுகின்றேன்.

**கே: ஒற்றுமை வலியுறுத்தப்படுகின்ற நிலையில் கூட்டமைப்புடன் வேறு தமிழ்த் தேசியக் கட்சிகளை மீண்டும் இணைத்துக் கொள்ள பேச்சுக்கள் நடக்கின்றதா?**

**பதில்:** அவ்வாறான பேச்சுக்கள் கூட்டமைப்பிற்குள் நடைபெறுகின்றனவா எனத் தெரியவில்லை. ஆனால் எங்களது கட்சி அப்படி எதனையும் செய்யவில்லை. ஆனால் ஒற்றுமைக்காக பகிரங்க அழைப்புக்கள் எல்லாம் விடுக்கப்பட்டிருக்கின்றன. அதனடிப்படையில் ஒற்றுமையாக வேலை செய்ய ஒன்றுபடுவது சம்பந்தமாக பேசப்படுகிறது. தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படுவதன் முக்கியத்துவத்தை உணர்த்தியிருப்பது போலவே எனக்குத் தெரிகின்றது.

**கே: கூட்டமைப்பை பதிவு செய்ய வேண்டுமென மீண்டும் பங்காளிக் கட்சிகள் கோரிக்கைகள் முன்வைத்துள்ள நிலையில் அதற்கான சாத்தியங்கள் இருக்கின்றனவா?**

**பதில்:** கூட்டமைப்பு பதியப்படாத காரணத்தினால் தான் இதுவரை காலமாக கூட்டமைப்பிற்குள் குழப்பங்கள் இருந்து வந்தது. அது மாத்திரமல்லாமல் கூட்டமைப்பில் இருந்து விலகிய கட்சிகளும் தனிநபர்களும் கூட இதே காரணத்தைத்தான் முன்வைத்திருக்கின்றனர். குறிப்பாக கூட்டமைப்பிற்குள் கட்டுப்பாடுகள் இல்லாத காரணத்தால் தான் விலகியதாகவும் தெரிவக்கின்றனர். ஆகவே கூட்டமைப்பிற்குள் ஏற்பட்டுள்ள குழப்பங்கள் குழறுபடிகளுக்கு கூட்டமைப்பு பதிவு செய்யப்படுவது அவசிமானது. அவ்வாறு பதிவு செய்யப்பட்டால் அந்தப் பிரச்சினைகள் ஏற்படாதென்றே கருதுகின்றேன். அதுவே காலத்தின் கட்டாயமாகவும் இருக்கின்றது.

தமிழர் தரப்பு பலமாக இருக்க வேண்டிய இந்தக் கால கட்டத்தில் கூட்டமைப்பு பதிவு செய்யப்பட்டு ஒரே அமைப்பாக ஒரே தலைமைத்துவத்தின் கீழ் அனைத்துத் தமிழ்த் தேசியக் கட்சிகளையும் இணைத்துச் செயற்பட வேண்டும். அவ்வாறு கூட்டமைப்பு செயற்பட்டால் இலக்கை அடைவதற்கு மிக உறுதுணையாக இருக்குமென்று நம்புகிறேன்.

**கே: 20 ஆவது திருத்தம் தொடர்பில் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன?**

**பதில்:** 19ஆவது திருத்தத்தை இல்லாமல் செய்து கொண்டு வரப்படுகின்ற ஒரு திருத்தமாகவே 20ஆவது திருத்தம் அமைகின்றது. அதாவது ஜனாதிபதியின் அதிகாரத்தை வலுப்படுத்துவதாகவும் ஜனநாயகத்திற்கு விரோதமான ஒரு செயற்பாடாகவுமே நாம் பார்க்கின்றோம்.

நாட்டின் ஜனநாயகத் தன்மைக்குப் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய இந்த திருத்தத்தை நாங்கள் ஆதரிக்கவில்லை. அதனை நாங்கள் எதிர்க்கின்றோம். அந்த திருத்தம் பாராளுமன்றம் கொண்டு வரப்படுகின்ற போதும் அதற்கு நாங்கள் எமது ஒட்டுமொத்த எதிர்ப்பை வெளியிடுவோம்.

**கே: இந்த திருத்தத்திற்கு எதிராக கூட்டமைப்பு ஏதும் சட்ட நடவடிக்கை எடுக்குமா?**

**பதில்:** 20 ஆவது திருத்தம் நாட்டிற்கும் ஜனநாயகத்திற்கும் பாதிப்பை ஏற்படுத்துவதாக நாம் கூறுவது போன்று ஏனைய கட்சிகள் பலவும் கூறுகின்றன. அதிலும் விசேசமாக அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்ற சிலரும் கூறுகின்றனர். அகவே இந்த திருத்தத்திற்கு பாராளுமன்றத்தில் போதிய பலம் கிடைக்குமா என்பது தெரியவில்லை.

அதேநேரம் எதிர்க்கட்சிகளில் இருப்பவர்கள் சிலரும் இந்த திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களிக்கப் போவதாகவும் சொல்லப்படுகின்றது. இவ்வாறு ஆதரவு எதிர் என பல கருத்துக்கள் தொடர்ந்தும் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. எது எப்படியென்றாலும் நாம் இதனை பாராளுமன்றில் எதிர்ப்போம்.

அதற்கு அப்பால் வெளியில் ஏதும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமாக இருந்தால் நீதிமன்றம் செல்வதாகவே இருக்கும். ஆனால் இது தொடர்பில் நாம் இன்னும் சரியானதொரு முடிவை எடுக்கவில்லை. நாம் கட்சிக்குள் பேசி இது தொடர்பில் ஒரு தீர்க்கமான முடிவை எடுத்து அறிவிப்போம்.

அதேநேரம் வேறுசிலர் நீதிமன்றம் போவதாகச் சொல்கின்றனர். ஆகவே நாங்களும் அது தொடர்பாக ஆராய்ந்து முடிவை எடுப்போம் என்றார்.

**எஸ்.நிதர்ஷன்...**
(பருத்தித்துறை விசேட நிரூபர்)

---



# கசப்பும்... இனிப்பும்...

– தமிழ்மணி மானா மக்கீன்



## கசப்பு

மனித சமூகத்தை இல்லாதொழிக்க வந்த ஒரு கிருமி போல், இயற்கையும் தன் பங்குக்கு கடல் சீற்றம் என்றும், பேய்க்காற்று என்றும், நிலச்சரிவென்றும் 'படம் காட்டுவது' நியதியாகப் போய்விட்ட நிலையில், கடல் சூழ் நம் தீவில் நமது வாழ்க்கை 'நித்திய கண்டம்' பூரண ஆயுசு!

குறிப்பிடப்பட்ட மூன்று பயங்கரங்களிலிருந்து பாதுகாப்புப் பெற, சமூக உணர்வாளர்கள், ஊடகவியலாளர்கள், இலக்கிய நெஞ்சங்கள் அபாயச் சங்கு ஊதினாலும், எச்சரிக்கை மணி ஒலித்தாலும் ஒற்றுமைப்படாத மக்களும் பிரிந்து நின்று பழகிப் போன அரசியல் தலைமைகளும் எந்தவித உணர்வும் இல்லாமல் கொண்டாட்டம், கோலாகலம் என தினமொரு ஊர்வலம் அதேபாதையில் (அழிவை நோக்கிப் போய்க் கொண்டிருக்கும் அதே ஊரில்) பாருங்கள், கிழக்கிலங்கை அம்பாறை, மாவட்ட அழகிய ஒலுவில் கிராமத்திற்கு நடக்கப் போகும் அழிவைக் குறித்த ஒரு கசப்பு வில்லையை 23/08/2020 இதே பக்கத்தில் விழுங்கச் செய்தேன்.

கிட்டத்தட்ட இருபது நாட்கள் முழுசாகப் போயும் ஒரு சிறு எதிரொலி கூடக் கேட்கவில்லை. பெரும்பாலானோர் கள்ள மௌனிகளா?

ஓர் ஒலுவில் ஓலம், அவலம் இப்படியென்றால், இன்னொரு கிராமமும் ஜோடியாக இணையும் துயரச் செய்தி அம்பாறை மாவட்டத்திலிருந்து,

அதனால் இரண்டாம் முறையும் கசப்பு வில்லை.

கடந்த 06/09/2020ல் இருபத்து நான்கு வயது இளம் வாலிபத்து 'தினக்குரல்' ஒரு 'சமூகப்பார்வை' பார்த்து சஞ்சலமிட்டுள்ளது.

பார்வை பார்த்த செ. துஜியந்தன் என்ற அம்பாறை மாவட்ட ஊடகவியலாளருக்கு நன்றி பகர்ந்து சில துளித் தகவல்கள்.



அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பிரதேசத்தின் கடற்கரைப் பகுதியில் இல்மனைற் மணல் அகழ்வு இடம்பெறுவதற்கான ஏற்பாடுகள் மிகத்தீவிரமாக இடம்பெற்றுவருகின்றன.

இல்மனைற் அகழ்வதன் மூலம் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவதுடன் எதிர்காலத்தில் திருக்கோவில் என்றொரு கிராமம் இருந்ததா? என்பதற்கான அடையாளங்கள் இல்லாமல் போகும்





நிலையேயுள்ளது. நடிகர் அஜீத்தின் 'சிற்றிசன்' படத்தில் அத்திப்பட்டி என்றொரு கிராமம் காணாமல் போனதைப்போன்ற நிலையே இங்கும் ஏற்படலாம்.

திருக்கோவில் பிரதேச மக்கள் மீன்பிடி, விவசாயம், தென்னை மரங்கள் மூலம் தேங்காய் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றார்கள். இவர்களின் வாழ்வாதாரம் இவற்றிலேதான் தங்கியுள்ளது. இங்குதான் வரலாற்றுப் பிரசித்திபெற்ற திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலயம் அமைந்துள்ளது. இவ்வாலயம் கடற்கரை ஓரத்தில் இருப்பதினாலும் தற்போது அங்கு வேகமாக இடம்பெற்றுவரும் கடலரிப்பினாலும் அவ்வாலயம் அழிந்துவிடுமோ? என்ற அச்சம் மக்கள் மத்தியில் தொற்றிக் கொண்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் திருக்கோவில் பிரதேச சபையின் தவிசாளர் கமலராஜனிடம் கேட்டபோது.

"அம்பாறை மாவட்டத்தில் கடலரிப்பினால் ஒலுவில், நிந்தவூர், கல்முனை, திருக்கோவில் எனப் பல கிராமங்கள் காவுகொள்ளப்படுவதை தடுக்க முடியாது போய்விடும். தற்போதைய நிலையை ஒப்பிட்டுப் பார்க்காது இன்னும் இருபது வருடங்களில் வருகின்ற சந்ததிக்கு நாம் எதனை விட்டுச் செல்லப்போகின்றோம் எனப்பாருங்கள்.

இயற்கையை சீண்டாமல் வாழுவோம்
இயற்கை எம்மை சீண்டாமலும் வாழுவோம்" என்கிறார்.

ஆகமொத்தத்தில், வாராவாரம் கொழும்பிலிருந்து நமது அழகிய கிராமங்கள் அழிவதை நிறுத்த கசப்புவில்லைகள் அனுப்பிவைக்க வேண்டிய அவசியமில்லை. (மாத்திரைகளின் விலைகள் வேறு எகிறிப் போயிருக்கின்றன.)

செயல்படவேண்டிய செயல்வீரர்கள் கிழக்கிலேயே அனைத்துத் துறைகளிலும் உள்ளனர். அவர்கள் வீறுகொண்டு எழட்டும்.

எவ்வாறாயினும் திருக்கோவில் பிரதேச சபைத் தவிசாளர் கமலராஜன் பெயரிட்டுள்ள, கல்முனை, நிந்தவூர், ஒலுவில், திருக்கோவில் அழிந்துவிடுமாயின் அந்த இழப்பைத் தாங்கிக் கொள்ள என் போன்ற மூத்த பேனா முனைக்காரர்களால் முடியாமல் போகும்.

எனக்கு ஒரு சிறு ஆறுதல் செய்தியும் கிடைத்துள்ளது அபிமானிகளே!

அப்பகுதி நாடாளுமன்ற உறுப்பினர்களான, எச்.எம்.எம். ஹாரீஸ், பைசால் காசிம் ஆகியோர் தீர்க்கமான தீர்வொன்றைக் காண, கரையோரப் பாதுகாப்பு, கரையோர வளங்களுக்குப் பொறுப்பான அமைச்சர் மற்றும் பணிப்பாளர்கள், அதிகாரிகள் கவனத்திற்குக் கொண்டு சேர்த்திருக்கிறார்களாம். கிழக்கில் அவர்கள் மட்டுமா பிரதிநிதிகள்? அனைத்து அரசியல் பேதங்களையும் மறந்து, துறந்து ஊர்களின் அழிவுகளைத் தடுக்க ஒன்றுபட்டால் பாரம்பரிய மக்களையும் வளங்களையும் பாதுகாத்திடலாமே...?

பிரார்த்தனைகள்.

## இனிப்பு 1

வாருங்கள், அலைகடல் கடந்து, இந்தியக் கரையை அடைவோம் இனிப்பொன்றைச் சுவைக்க...

இனிப்பு வகைகளுக்கு பஞ்சமில்லாத தமிழகம் வேண்டவே வேண்டாம்! கிருமி ஆக்கிரமிப்புக் குறைந்த வட இந்திய மராட்டிய மாநிலத்தில் ஒரு சிறு கிராமத்திற்குள் நுழைவோம். நமக்கு வேண்டிய இனிப்பை, அதாவது இனிப்பு தகவலை வழங்க ஒரு வஸீமா ஷேக் வரவேற்பு நல்குகிறார்.

நேற்றையப் பொழுது வரையில் அவர் கூலித் தொழிலாளி ஒருவரது மகள்... இன்றோ, ஒரு மாவட்ட துணை அதிபர், ஆட்சியர் இந்தியப் பேச்சு வழக்கில் கலெக்டர்.

இது எப்படி சாத்தியமாயிற்று ஒரு தொழிலாளியின் பெண்ணுக்கு?

அவர் பிறந்த, வாழ்ந்த குடும்பமே உறுதுணை.!

இங்கே 'தொழிலாளியின் மகள்' என்று பதியும் பொழுது, அது அவளது தந்தையைக்குறிக்காது. அவர் மன நலம் பாதித்துத் தனிமை வாழ்க்கை வாழும் மனிதர்! தாய்! தான் தொழிலாளி!

அந்த அருமை 'உம்மா'வும் அவர் பெற்றெடுத்த ஆண்சிங்கம் இம்ரானும் வஸீமாவின் கல்வித் தாகத்தைத் தீர்க்க தீர்க்கமான முடிவெடுத்தனர்.

அன்பான அன்னையார் விவசாயக் கூலித் தொழிலாளியாக உழைத்தார்.

அண்ணன் இம்ரான் பி.எஸ்.சி. படிப்பை இடை நிறுத்தி விட்டு வாடகைக்கு முச்சக்கர வண்டி எடுத்து ஓட்டி சம்பாதித்தார்.

எட்டுப் பேர் கொண்ட குடும்பம் அரை வயிறும் கால் வயிறுமாக வாழ்ந்து படிப்புச் செலவைச் சரிகட்ட படாதபாடு பட்டனர்.

மேல்நிலைத் தேர்வில் மாவட்டத்திலேயே முதலிடம் பிடித்த அவர், திறந்த நிலைப் பல்கலைக்கழகத்தில் இளங்கலைப்பட்டம் பெற்றார்.

மராட்டிய மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத் தேர்வே தனது இலக்கு என்பதில் தீர்க்கமாக இருந்த வஸீமாவுக்கு அதற்கான பயிற்சி நிலையக் கட்டணம் தான் பயமுறுத்தியது.

ஆறே ஆறு மாதங்கள் மட்டுமே போகமுடிந்தது. முயற்சியைக் கைவிடவில்லை. சுயமாகவே கற்கத் தொடங்கினார். முந்தைய ஆண்டு கேள்வித் தாள்களைத் திரட்டினார். தினமும் நூலகம் சென்று சகல நாளேடுகளின் வாசிப்பிலும் கவனம் செலுத்தினார்.

தனது முதல் முயற்சியில் எழுத்துத் தேர்வில் வென்ற வஸீமா, நேர்முகத் தேர்வில் வெறும் 2 மதிப்பெண்களில் வெற்றியை நழுவ விட்டார்.

மீண்டும் ஓராண்டு காலப் போராட்டம்.

இரண்டாவது முறையில் வென்று, நாக்பூர் விற்பனை வரித்துறையில் இரண்டாம் நிலை அதிகாரியானார். பணிபுரிந்தபடியே தொடர்ந்து படித்து, மறுபடியும் அரசுப் பணியாளர் தேர்வெழுதி, மாநில அளவில் பெண்களில் மூன்றாமிடம் பிடித்தார்.

இப்பொழுது அவர் மாவட்ட துணை அதிபர், ஆட்சியர்!

ஒரு காலத்தில் தன் பட்டப்படிப்பையே நிறுத்தி தன் உயர்வுக்கு உழைத்த அண்ணன் இம்ரான் மீண்டும் படிப்பைத் தொடர்கிறான். பட்டதாரியாகப் போகிறான்!

அருமை உம்மா, அவர்கள் தன் உற்ற கணவரைக் கண்காணித்தவாறு ஓய்வில்!

தியாகங்கள் என்பதே இஸ்லாமியக் கோட்பாடு!





ஜீவன் தொண்டமான் கவனத்திற்கு...!

## கிடப்பில் போடப்பட்ட வீடமைப்புத் திட்டங்கள்–2

# காடாகக் கிடக்கும் புப்புரஸ்ஸ ஸ்டெலன்பேர்க் வீடமைப்பு



நவராஜா ...
படங்கள்: தெல்தொட்ட தினகரன் நிருபர்

கண்டி மாவட்டம் கம்பளை தேர்தல் தொகுதிக்கு உட்பட்ட புப்புரஸ்ஸ ஸ்டெலன் பேர்க் கந்தலா கீழ் மற்றும் மேற் பிரிவு மக்கள் கடந்த 2015ம் ஆண்டு மண்சரிவு இயற்கை அனர்த்தத்திற்கு உள்ளான முப்பது குடும்பங்களுக்கும் வீடன் தோட்டப்பிரிவில் வீடற்றவர்கள் என அடையாளம் காணப்பட்ட பத்து குடும்பங்களுக்குமாக மொத்தம் நாற்பது வீடுகள் அமைக்கும் பணிகள் 2016.06.16 அன்று ஆரம்பிக்கப்பட்டன.

டிரஸ்ட் நிறுவனமும் தோட்ட நிர்வாகமும் இணைந்து கட்டுமானப் பணிகளை முன்னெடுத்தன. இதில் முப்பத்தாறு வீடுகள் அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

எனினும் பணிகள் இடையிலேயே நின்று போனது. காரணம் தெரியவில்லை. கடந்த மூன்று வருடங்களாக கட்டுமானப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. அரைகுறையாக கட்டப்பட்டுள்ள வீடுகளின் சுவர் வெடிப்புக் குள்ளாகியுள்ளன. கூரைகள் காற்றில் காவிச் செல்லப்பட்டுள்ளது. ஏழு பேர்ச் என்று கூறப் பட்டாலும் வீடுகள் அருகருகேயே அமைந்துள்ளன.



ஒரு வீட்டின் கூரையின் மழை நீர் பக்கத்து வீட்டுக் கூரையில் விழும் வகையில் ஏனோதானோ என வீடுகளை அமைத்திருக்கிறார்கள். மலசலகூட கழிவு கிடங்கு முற்றத்தில் அமைத்திருக்கிறார்கள். இலவசமாக வீடு கொடுக்கிறோம் என்பதால் இப்படியெல்லாம் செய்யலாமா? கட்டுமானப் பணிக்கு துறை தேர்ச்சியற்ற தோட்டத் தொழிலாளர்களே குறைந்த கூலியில் அமர்த்தப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே கட்டப்பட்ட வீடுகள் என்பதால் மிகுதியை பூர்த்தி செய்து கொடுப்பது பெரிய சுமையாக இருக்காது. டிரஸ்ட் ஏன் இதை செய்து முடிக்கவில்லை என்பதை தேடிப்பார்த்தால் தெரிந்து கொள்ளலாம். பல மில்லியன்களை விழுங்கியுள்ள இந்த வீடமைப்பை பூர்த்தி செய்து கொடுத்தால் செலவு செய்யப்பட்ட பணத்துக்கு பெறுமதி கிடைக்கும். பாதிக்கப்பட்ட தொழிலாளர் குடும்பங்களுக்கு வீடுகளும் கிடைக்கும் அல்லவா?

தூசு தட்டி எடுத்து இத் திட்டத்தை முடித்து வைப்பவர்களுக்கு புண்ணியம் கிடைக்கட்டும்!

## மலைநாட்டு எழுத்தாளர் மன்ற ஆளுமை

# மன்றத்தின் இணைச்செயலாளராகத் திகழ்ந்த ஜே. அந்தனி!



மலைநாட்டு எழுத்தாளர் மன்றத்தின் இணைச்செயலாளராக (1963 1966) மன்றத்தின் சப்ரகமுவ மாகாண இணைப்பாளராக (1967973)களில் பணியாற்றிய மலைச்சுடர் ஜே. அந்தனி மலையக தொழிலாளர்களுக்காக அவர்கள் மத்தியில் நின்று தொழிற்சங்கம் மூலமாக போராடிய பெருமகன்.

அவரது அரை நூற்றாண்டுகால சிந்தனை, கொடூரமாக சுரண்டப்பட்ட துயரம் தோய்ந்த அந்த மக்களின் நலன் கருதிய எழுத்துகளாகவே இருந்தன. வகிக்காத பதவிகளை வகித்ததாக முகநூலில் காட்டாமல் செய்த பணியையே சொல்லத் தயங்கும் அமைதியான பெருமனதின் சொந்தக்காரன் அந்தனி. அவர் ஒருபோதும் தன்னை முன்னிலைப்படுத்தியவர் அல்ல.

பத்திரிகை நிருபராக, 'நண்பன்' இதழில் ஆசிரியராக, தொழிற்சங்கப் போராட்டவாதியாக, தோட்டப் பாடசாலை ஆசிரியராக, தோட்டக் காரியாலய அதிகாரியாக, தோட்ட சேவையாளர் சங்க பிரதிநிதியாக, கர்தினால் ஆண்டகையின் இணைப்பாளராக, அரச சார்பற்ற நிறுவனத்தின் ஒருங்கிணைப்பாளராக, அரை நூற்றாண்டுக்கு மேல் ஆளுமைகளை கொண்ட மலையகத்தின் மூத்தபெருமகனாக மலைநாட்டு எழுத்தாளர் மன்ற வரலாற்று நூலுக்காக தன் அனுபவங்களை பகிர்ந்து கொள்கிறார்.



மலையக எழுத்தாளர் வரிசையில் ஒரு பிரதான இடத்தில் இருக்கவேண்டியவர் பத்திரிகையாளர் ஜே. அந்தனி. ஆனால் அவர் பிரகாசிக்காமல் போனது அவர் தெரிவுசெய்த தொழில் என்றும் கருதமுடியும். தலைமை ஆசிரியராக எட்டு ஆண்டுகள் சேவையாற்றிய இவர் அரசாங்கம் தோட்டப் பாடசாலைகளைப் பொறுப்பேற்கவிருந்த காலகட்டத்தில் ஆசிரியர் சேவையை விட்டுவிட்டு தோட்டக் காரியாலயத்தில் இலிகிதராக இணைந்துகொண்டார். ஆங்கிலத்தில் புலமை கொண்டவராக இருந்ததால் தோட்டத்துரையின் பிடிவாதத்தினால் அவர் தோட்டக் காரியாலயம் செல்ல வேண்டியதாயிற்று.

எச்.எச். விக்கிரமசிங்க...

கேகாலை மாவட்ட உந்துகொடை, மரகதவள்ளி தோட்டத்தில் 1932.04.26 ஜோசப், அன்னம்மாள் தம்பதிகளின் ஏழாவது பிள்ளையாகப் பிறந்தார். குடும்பத்தில் நான்கு பெண்கள், நான்கு ஆண்கள், பெற்றோர் கேரளாவை பூர்வீகமாகக் கொண்டவர்கள். 1915களில் புலம்பெயர்ந்து இலங்கை வந்தனர். இவர்கள் ஆரம்பத்தில் சிங்களக் கிராமத்தில் வாழ்ந்து வா்த்தகத் துறையில் ஈடுபட்டு பின்னர் தோட்டத்தில் சேர்ந்து பல்வேறு வேலைகளில் ஈடுபட்டுள்ளார். அப்போது பிறந்த அந்தனி, அண்ணன் செபஸ்டியன், தம்பி பீட்டர் ஆகியோர் தோட்டப் பாடசாலையில் படிப்பை ஆரம்பித்துள்ளனர். இம்மூவரும் எட்டியாந்தோட்டை புனித கபிரியேல் ஆங்கிலப் பாடசாலையில் கல்வியைத் தொடர்ந்தார்கள். மூன்று பேரும் விடுதியில் தங்கியே படித்தனர். ஜே.வி. செபஸ்டியன் விடுதி மாணவ தலைவனாக நியமிக்கப்பட்டார்.

எட்டாம் வகுப்புவரை படித்துவிட்டு அவிசாவளை, புனித மரியாள் ஆங்கிலப் பாடசாலையில் படித்தார். உயர்வகுப்புக்கு வந்ததும் அந்தனி விடுதியை விட்டு விலகிவிட்டார். அப்போது எட்டியாந்தோட்டையில் பிரதான தொழிற்சங்கமான ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் இயங்கியது. இதன் தலைவர் அமரர் கே.ஜி. எஸ் நாயர் ஆவார். கேரளாவை பூர்வீகமாகக் கொண்டவர் என்பதால் அந்தனியின் தந்தையுடன் நல்லபழக்கம். நாயருக்கு அப்போது இரண்டு தையல் கடைகள் இருந்தன. கடையின் மாடியில் அந்தனி தங்கிப் படிக்கலானார். யாழ்ப்பாணத்து ஆசிரியர்மார் தமிழைக் கற்பித்ததால் அந்தனிக்கு தமிழில் ஆர்வம் ஏற்பட்டது. படிக்கும்போதே ஞாயிறு வீரகேசரி, சுதந்திரன், தினகரன், நவஜீவன் பத்திரிகைக்கு கதை, கவிதை, கட்டுரை எழுதுவார்.

இவரது ஆக்கங்கள் அடிக்கடி பத்திகைகளில் பிரசுரமானதால் பாடசாலையில் நன்கு அறிமுகமானார். மாலையில் காங்கிரஸ் காரியாலயம் சென்று அங்குள்ள பத்திரிகைகளை வாசிப்பதுண்டு. அங்கே பணியிலிருந்தவர்களும் நன்கு படித்தவர்கள். பிரதிநிதியாக பி.ஏ. படித்த ஒரு இந்தியர் இருந்தார். வீரகேசரியில் சேவையாற்றிய டி.எம். முருகையாவும் நாவலப்பிட்டி குயின்ஸ்பரி தோட்ட எம். ஜெயராமன் ஆகியோர் அங்கு பணியாற்றினார். அப்போதும் அவர் பத்திரிகைகளுக்கு எழுதிக்கொண்டிருந்தார். இரவு 10 மணிவரை திறந்திருக்கும். எப்போதும் ஆங்கில தட்டச்சுக்களின் ஓசை கேட்டுக்கொண்டே இருக்கும் அட்டனைச்



சேர்ந்த பி. பெருமாள் என்பவரும் பிரதிநிதியாக இருந்தார். பின்னர் தொழிலாளர் தேசிய சங்கத்தின் செயலாளராய் இருந்துவிட்டு மரணமானார். கலைஞர் அசமான கந்த கோவிந்தசாமி தேவர் என்ற கவிஞரும் இருந்தார். அமரர் வி.பி. கணேசனும் அவரது வகுப்பில் படித்ததால் நாயரின் கடையைவிட்டு வெளியேறி வி.பி கணேசனுடன் இறுதிவரை தங்கியிருந்தார். பேச்சிமுத்து என்ற கணக்காளர் தினகரன் நிருபராகவும் இருந்தார். இவருக்கு வெளியே செல்ல நேரம் கிட்டாததால் தினகரனுக்கு அவரது பெயரில் எழுதச்சொன்னார். அந்தனிக்கு அது புதிய அனுபவம் தமிழில் நல்ல புலமை இருந்ததால் அவரது செய்திகள் அடிக்கடி தமிழ் பத்திரிகைகளில் வெளிவரலாயிற்று.

(தொடர் 19ஆம் பக்கம்)


# பெருந்தோட்டங்களுக்கு தபால் சேவை

தபால் சேவைகளுக்கு பொறுப்பான இராஜாங்க அமைச்சராக மட்டக்களப்பு மாவட்டத்தை சேர்ந்த எஸ். வியாழேந்திரன் எம்.பி நியமிக்கப்பட்டதும் அவர் மலையக தோட்டப்புற தபால் சேவைகளின் குறைபாடுகளை நீக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக ஊடகங்களில் கூறியிருந்தார். இது மகிழ்ச்சி தரக்கூடியதாக உள்ளது. 2006 இல் இதே சேவைகளுக்கு பொறுப்பாக செயற்பட்ட இராஜாங்க அமைச்சர் மறைந்த எம். எஸ். செல்லசாமி, தோட்டப்புறங்களுக்கு 344 பேர் தோட்ட தபால் அலுவலர்களை நியமனம் செய்த அவரது பங்களிப்பும் நினைவுப்படுத்த வேண்டியுள்ளது.

இந்நியமனத்திற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் 500 பேருக்கு வழங்கப்பட்டிருந்தாலும் திறைசேரி 400 பேரின் நியமனத்திற்கே நிதி ஒதுக்கீடு வழங்கியிருந்தது. எனவே 344 பேர் வரையே நியமனம் வழங்கப்பட்டிருந்தது. இந்த இடைவெளியை நிரப்புவதற்கு எடுக்கப்பட்ட பல்வேறு முயற்சிகள் கைகூடாத நிலையில் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் மூலம் இது சாத்தியமாகலாம் என்ற எண்ணத்தின் அடிப்படையில் அது பற்றிய ஒரு விளக்கத்தை தரவே இக்கட்டுரை முயற்சிக்கின்றது.

**பின்னணி**

மலையக தோட்டப்புறங்களில் தபால் சேவை பல குறைபாடுகளை கொண்டதாகவிருந்தது. அவற்றை நீக்க பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆரம்ப காலங்களில் தோட்ட மக்களுக்கு வருகின்ற கடிதங்கள் தோட்ட நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டன. தோட்ட வீடுகளுக்கு சரியான முகவரி இல்லாததினாலும் தாமதமாக உரியவரிடம் சேர்வதும் சில நேரங்களில் கடிதங்கள் காணாமல் போவதும் குறைபாடுகளாக சுட்டிக்காட்டப்பட்டன.




எனவே தபால் சேவைகள் தோட்ட நிர்வாகத்திற்கு ஊடாகவின்றி நேரடியாக மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்பதே பிரதான கோரிக்கையாக அமைந்திருந்தது. அரசாங்க சேவைகள் தோட்டப்புறங்களை சென்றடையவில்லை என்ற நிலைப்பாட்டிற்கு ஒரு உதாரணமாகவே தபால் சேவையும் சுட்டிக்காட்டப்பட்டது.



**முகவர் தபால் முறைமை**
**(Agency Postal System)**

2002 இல் முகவர் முறைமை ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்படி ஏறக்குறைய 125 க்கு மேற்பட்ட தோட்டங்களில் தபால் நிலையங்கள் நிறுவப்பட்டு இதற்கு பொறுப்பாக அத்தோட்டத்தை சேர்ந்த ஒருவர் உப தபால் அதிபராக நியமிக்கப்பட்டு அவருக்கு முதல் வருடத்தில் ரூபா 3000 மும் இரண்டாம் வருடத்தில் ரூபா 2000மும் மூன்றாம் வருடத்தில் 1000 ரூபாவும் கொடுப்பனவாக கொடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

இவர் உப தபால் அதிகாரியைப் போல நடத்துவாரென எதிர்பார்க்கப்பட்டது. முத்திரைகள் விற்பனை, தபால் சேகரிப்பது, கிட்டியுள்ள தபால் கந்தோரிலிருந்து கடித பொதியை கொண்டு வந்து உரியவர்களுக்கு சேகரிப்பது போன்று கடமைகள் அவருக்கு பொறுப்பாக்கப்பட்டது. இதுவரைக்கும் தோட்ட நிர்வாகத்திடம் இருந்த பொறுப்புகள் ஒரு வகையில் பதிலீடு செய்யப்பட்டன. 2005 இல் இந்த உத்தியோகத்தர்கள் தங்களுக்கு ரூபா 1000 போதாது, இந்த தபால் நிலையங்களில் எங்களுக்கு எவ்வித வருமானமும் இல்லை.

ஆகவே கொடுப்பனவை கூட்ட வேண்டும் என்று கோரிக்கையை முன் வைத்தனர். இந்த 125 பேரும் அமைச்சிற்கு அழைக்கப்பட்டு அவர்களோடு அப்போதைய தோட்ட வீடமைப்பு உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அமைச்சர் முத்துசிவலிங்கம் தலைமையில் கலந்துரையாடல் நடத்தப்பட்டது. நான் அமைச்சின் செயலாளராக இருந்தேன். கலந்துரையாடலின் இறுதியில் இம்முறைமை பொறுத்தமற்றது. எனவே இதை தொடர முடியாது எனவும் இதற்காக மாற்று ஏற்பாடுகள் மேற்கொள்ள வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

**அமைச்சரவை குழு நியமனம்**

இத்தபால் சேவையை மறுசீரமைப்பதற்காக 2005 இல் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு இது குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு குழு ஒன்று தொலைத்தொடர்பு தபால் சேவை அமைச்சின் செயலாளர் தலைமையில் அமைக்கப்பட்டது. நான் இக்குழுவின் ஒருங்கிணைப்பாளராக செயற்பட்டேன். இக்குழுவின் சிபாரிசுகளில் ஒன்று தோட்டப்புறங்களுக்கு என தோட்ட தபால் அலுவலகர் (Estate Postal Man) என்ற பிரிவினரை தேவைகளுக்கு ஏற்ப நியமிப்பது என்றும் இதன்படி தேவைகள் மாவட்ட ரீதியாக இனங்காணப்பட்டு படித்த தோட்ட இளைஞர்களை நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்து நியமனம் செய்வது என்றும் சிபாரிசு செய்யப்பட்டது.

எம். வாமதேவன்...
முன்னாள் செயலாளர்,
தோட்ட வீடமைப்பு, உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சு

(தொடர் 19ஆம் பக்கம்)

## சேதி சொல்லும் மாயாண்டி ஆவி



சொல்லட்டுமா சொல்லட்டுமா
சேதியெல்லாம் சொல்லட்டுமா
உடுக்கடித்து சேதியெல்லாம்
அடுக்கடுக்காய் சொல்லட்டுமா.

நான் மாண்டு மடிஞ்சவன்டா
மாயாண்டி ஆவியடா செத்து
மடிஞ்சவன்டா சிவலோகம்
போனவன்டா
மீண்டும் வந்திருக்கேன் மிச்சமீதி
சொல்லப்போறேன்

எண்ணி சிலகாலம் எதிர்பாரா
யுத்தம்வரும் உலக யுத்தம்வரும்
எண்ணெய் எமக்குவராது
எமது தேயிலையும் எடுபடாது
விளங்குதா மக்களுக்கு....

புதிய பானம் ஒன்றுவரும் புதுசு
என்பதால் இலசு எல்லாம்
இதை விரும்பி நாடும்
தேயிலைக்கு ஒருநோய் வரும்
அன்று கோப்பிக்கு வந்ததுபோல்
கடும்வெயிலும்வரும்தேயிலை
காய்ந்து கருகி சருகாகும்
விளங்குதா மக்களுக்கு...

விஞ்ஞானி ஒருவன் வருவான்
வீரவசனம் பேசுவான்
உடலுக்கு இது கேடு என்பான்
உலகத்தான் இதை நம்புவான்
இந்தியன் சீனன் மலேசியன்
இந்தோனேசிய காரன் எல்லாம்
குறைந்த விலையில் கொடுப்பான்
இவனிடம் உலகத்தான் எடுப்பான்.
விளங்குதா மக்களுக்கு....

எண்ணெய்க்கு தேயிலை
என்னைக்கும் நீடிக்காது.
விளங்குதா மக்களுக்கு
தேயிலை இல்லனு செத்து
மடியிரதா நீ இல்ல
மாற்று தொழிலை நீ தேடுடா
விளங்குதா மக்களுக்கு...
மீண்டும் வருவேன் மிச்சமீதியை தருவேன்
மாயாண்டி ஆவி நான்
மறுபடியும் வருவேன்...!

நவகவி நவராஜா

## சதிகளையும் தடைகளையும் தாண்டி

# சாதிக்க முடியும் என்பதை பொதுத் தேர்தல் நிரூபித்துள்ளது'



உரையாடியவர்கள்
தலவாக்கலை பி. கேதீஸ்

**மலையக மக்கள் முன்னணியின் அனைத்து பதவிநிலைகளிலிருந்தும் நீங்கள் நீக்கப்பட்டுள்ளதாக மலையக மக்கள் முன்னணியின் தேசிய சபையில் முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கட்சியின் தலைமை அறிவித்துள்ளது இது தொடர்பாக நீங்கள் என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்?**

நானும் தேசிய சபையில் இருக்கின்றேன். அதில் நானும் ஒரு உறுப்பினர். எனக்கு தேசிய சபை கூடுவது தொடர்பாக எந்தவித அழைப்பும் விடுக்கப்படவில்லை. என்னுடைய ஆதரவாளர்களும் எத்தனையோ பேர் தேசிய சபையில் இருக்கின்றனர். அவர்களுக்கும் எவ்வித அழைப்பும் விடுக்கவில்லை. தேசிய சபை கூட்டப்படபோகின்ற விஷயம் எங்களில் ஒருவருக்கு கூட கிடைக்கவில்லை. ஆகவே அவர்களுக்கு சார்பானவர்களையும் அவர்களுக்கு தேவையானவர்களையும் வைத்து தேசிய சபை கூட்டப்பட்டு இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. சாதாரண ஒரு குழுவினால் என்னை மலையக மக்கள் முன்னணியிலிருந்து நீக்கிவிட முடியாது. மலையக மக்கள் முன்னணயின் உறுப்பினர்கள் என்னுடன் இல்லை என்றால் இந்த 17107 பேர் யார்? சந்தா பணம் எங்கே செல்கின்றது. நிதி அறிக்கை எங்கே? உறுப்புரிமையை பழி வாங்கும் நோக்கத்தோடு நீக்குவது ஒரு கேவலமான விடயம். அதுதான் இப்போது நடந்தேறியிருக்கின்றது.

இது தொடர்பாக எனக்கு அறிவிக்கும்போது அதற்கான நடவடிக்கையை எடுப்பேன். தனியொருவரை இவர்கள் நீக்கவில்லை. மலையக மக்கள் முன்னணியின் 17107 பேரை நீக்கியிருக்கின்றார்கள். மலையக மக்கள் முன்னணியின் மண்வெட்டி சின்னத்திற்கு எதிராக எனது போராட்டம் அமையாது நான் எந்தவிதத்திலும் கட்சியின் யாப்பை மீறவில்லை. நான் கட்சிக்கு எதிராக செயற்படவுமில்லை.

**பாராளுமன்றத் தேர்தலில் உங்களுக்குக் கிடைத்த ஆதரவு பற்றிய உங்கள் கணிப்பீடு எவ்வாறு உள்ளது? அரசியலில் தொடர்வதற்கான சக்தியை அளித்திருக்கிறதா?**

நிச்சயமாக, இளைய சமூகத்தவர்களும், குறிப்பாக பெண்களும், மலையக மக்கள் முன்னணியையும் என் தந்தையின் அரசியலை உண்மையாக நேசித்தவர்களும் மலையக அரசியலில் ஒரு மாற்றத்தை விரும்புகிறார்கள் என்பதனை எனக்கு வாக்களித்ததன் மூலம் நிரூபித்துள்ளார்கள். தனிநபராக பல்வேறு சதிகளையும் தடைகளையும் தாண்டி சாதிக்க முடியும் என்ற நம்பிக்கையை இது தந்துள்ளது.

**இத் தேர்தலில் நீங்கள் கற்றுக்கொண்ட பாடங்கள் என்ன?**

இந்த தேர்தலில் நான் முழுக்க முழுக்க என் தந்தை வழியில் மக்கள் சக்தியை நம்பியே களமிறங்கினேன். எந்த இடத்திலுமே எனக்கு எதிர்ப்புகள் இருக்கவில்லை. ஆனால் எனக்கு ஆதரவளித்த பலர் ஏதாவது வேறு ஸ்தாபனங்களுக்கு கட்டுப்பட வேண்டிய நிர்பந்தத்துக்கு உள்ளாகினார்கள். மக்கள் மத்தியில் செல்வதற்கு ஸ்தாபன அமைப்பு முறை அவசியமென்பதனை உணர்கிறேன்.

**‘மலையக மக்கள் முன்னணியின் தேசிய சபையில் நானும் ஒரு உறுப்பினர். சபை கூட்டப்படுவது பற்றி எனக்கு அறிவித்தல் விடுக்கப்படவில்லை. எனது ஆதரவாளர்களுக்கும் அழைப்பு அனுப்பப்படவில்லை. தமக்கு வேண்டியவர்களை மட்டும் வைத்துக் கொண்டு எடுக்கப்பட்ட முடிவை நான் ஏற்கவில்லை. மலையக மக்கள் முன்னணியில் இருந்து என்னை நீக்கியிருக்கிறார்கள் என்றால் 17107 பேரையும் நீக்கியிருக்கிறார்கள் என்பதே அர்த்தம்’**

**வரவிருக்கும் மாகாணசபைத் தேர்தலில் இறங்கும் உத்தேசம் உண்டா? மண்வெட்டிச் சின்னத்தில் தானா?**

மாகாண சபைத் தேர்தலில் நிச்சயமாக களமிறங்குவேன். கள நிலைமைக்கேற்ப நல்ல முடிவுகளை எடுப்பேன்.

**நீங்கள் பாராளுமன்றத் தேர்தலில் வெற்றியீட்ட மாட்டீர்கள் என்பது எமக்குத் தெரியும். ஆனால் இத்தேர்தலைப் பயன்படுத்தி மண்வெட்டியினதும் தலைவர் சந்திசேகரனினதும் செல்வாக்கு இத்தனை வருடங்களின் பின்னர் எவ்வாறு இருக்கிறது என்பதை நாடிபிடித்துப் பார்க்கவே போட்டியிட்டீர்கள் என்பதும் தெரிந்த விஷயம்தான். இந்த பரீட்சார்த்த முயற்சி வெற்றியளித்துள்ளதா என்பதே கேள்வி**

வெற்றி தோல்வியென்பது மக்களின் வரவேற்பை பொறுத்தது. எனது தந்தையினது நினைவுகளும் கொள்கைகளும் மக்கள் மத்தியில் இன்றும் நிலைத்து வாழ்வதனை அறிந்து கொண்டேன். அவரது உணர்வுபூர்வமான அரசியல் இன்று மட்டுமல்ல; என்றும் மக்கள் மனதில் வாழும் என்பதில் சந்தேகமே இல்லை. என் தந்தையின் வீரமிக்க அரசியலில் பங்கெடுத்து இன்று ஓய்வு பெற்றவர்களின் பிள்ளைகளும் அவர்களின் பிள்ளைகளும் எனக்கு முழுமையாக ஆதரவளித்து செயற்பட்டமை எனது தந்தையின் கொள்கைக்கு கிடைத்த வெற்றியாகும். அதே போன்று இன்றைய இளைஞ'ர்களும் எனது அரசியலையும் மாற்றத்தையும் விரும்பியதும் எனது வெற்றியாகும்.



சட்டத்தரணி அனுஷா சந்திரசேகரனுடன் ஒரு மனந்திறந்த உரையாடல்

**இன்றைய பாராளுமன்றத்தில் பல்வகையான கருத்துகளையும் சித்தாந்தங்களையும் கொண்டவர்கள் உள்ளார்கள்.**

**இப் பாராளுமன்றத்தை நீங்கள் எப்படிப் பார்க்கின்றீர்கள்?**

பாராளுமன்றத்தில் எல்லா வகையான கருத்துக்களையும் பிரதிபலிக்கும் பல கட்சி சார்ந்தவர்கள் இருக்கலாம். ஆனால் நாம் என்ன சொல்கிறோம் எமது செயற்பாடுகள் எவ்வாறு இருக்கின்றன என்பதில் தான் எமது அடையாளம் பதியப்படும். மலையக சமூகம் சார்ந்த பிரச்சினைகளுக்காகவும் முழு சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளுக்காவும் என் தந்தை தனிநபராக பாராளுமன்றத்தில் குரல் எழுப்பிய போதும் பல்வேறு விமர்சனங்களுக்கு முகம் கொடுத்துள்ளார். ஆனால் அவர் தடம் மாறவில்லை. ஒரு களத்தை நாம் எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதுதான் எமது வலிமை.

**தமிழ் முற்போக்கு கூட்டணியில் அறுவரும் இ.தொ.கா.வில் இருவருமாக எட்டு மலையகப் பிரதிநிதிகள் பாராளுமன்றத்தில் உள்ளனர். இவர்கள் கவனிக்க வேண்டிய முக்கிய விஷயங்களாக, பிரச்சினைகளாக நீங்கள் எவற்றை எல்லாம் பட்டியலிடுவீர்கள்?**

எத்தனை பிரதிநிதிகள் இருக்கின்றார்கள் என்பது எமது எண்ணிக்கையாக இருக்கலாம். இவர்களின் செயற்பாடு எமது சமூக உரிமைகளை எவ்வாறு வெற்றிகொள்ளப் போகிறது என்பதில்தான் இதன் உண்மையான அர்த்தம் அடங்கியுள்ளது. ஐந்து வருடகாலத்தை வெறுமனே கழிப்பதிலும், அரச நிதி ஒதுக்கீட்டில் ஒரு சில அபிவிருத்தி வேலைகளை செய்வதும், எனது சமூக உயர்வுக்கு பயனற்ற விடயங்களை பேசுவதிலும் காலத்தை கழிக்காமல் ஏனைய சமூகங்களுடன் ஒப்பிடும் போது பல தசாப்தங்கள் பின்னடைந்த நிலையில் காணப்படும் எம் மக்களுக்கு கௌரவமான சமூக அந்தஸ்துக்காக இவர்கள் செயற்பட வேண்டும்.

"ஜீவன் தொண்டமானின் செயற்பாடுகள் முழு மலையகம் சார்ந்ததாக அமைய வேண்டும் என்பதே என் எதிர்ப்பார்ப்பு'

**மறைந்த ஆறுமுகன் தொண்டமான் பற்றிய உங்கள் அனுபவங்கள் பற்றி?**

எனது தந்தையுடன் புரிந்துணர்வுடனான உறவினை கொண்டிருந்தார். இ.தொ.கா என்ற மிகப்பெரும் ஸ்தாபனத்தை உயிரோட்டமாக வைத்திருந்த ஆளுமைமிக்கவர். கட்சி ரீதியிலான இடைவெளி இருந்த போதும் கூட சமூகம் என்ற அடிப்படையில் என் தந்தையும் அவரும் பயனுள்ள விடயங்களை உண்மையாகவே ஆராய்ந்து ஒன்றிணைந்து செயற்பட்டமை இருவரிடமுமே இருந்த உயரிய குணமாகும்.

**ஜீவன் தொண்டமான் - உங்கள் அளவீடுகள் எவ்வாறு உள்ளன?**

பேசுவதை குறைத்து செயலில் காட்டுவேன் என்று அவரே அடிக்கடி கூறுகின்றார். இ.தொ.கா என்ற ஸ்தாபனத்தின் செயலாளராகவும் பாராளுமன்ற உறுப்பினராகவும் இருந்தாலும் கூட இவரது செயற்பாடுகள் முழு மலையகம் சார்ந்ததாக அமையும் என்பது என் எதிர்பார்ப்பு.

**‘என் தந்தை தனிநபராக பாராளுமன்றத்தில் பிரச்சினைகளின் பேரில் குரல் எழுப்பிய போது விமர்சனங்களுக்கு ஆளானார். ஆனால் அவர் தடம் மாறவில்லை. ஒரு களத்தை நாம் எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதிலேயே எமது வலிமை தங்கியிருக்கிறது’**

**ஆயிரம் ரூபா தின வேதனம் கிடைக்குமா? அடிபட்டுப் போய்விடுமா?**

இது கம்பனிகளும்,கூட்டு ஒப்பந்த கட்சிகளும் மற்றும் அரசாங்கமும் ஒன்றுகூடி முடிவெடுக்கப்பட வேண்டிய விடயம். ஆயிரம் ரூபாய் என்ற அடையாளத்துக்குள் அடக்கப்படாமல் தொழிலாளர்களின் வாழ்க்கை செலவுக்கேற்ற கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும் என்பதுவே எனது நிலைபாடு.

**இந்தத் தோட்டத் தொழிலுக்கு அப்பால் செல்ல வேண்டிய அவசியம் உள்ளது என்றால் அதுபற்றிய உங்கள் பார்வையை பகிர்ந்து கொள்வீர்களா?**

இப்போதும் எமது இளைஞர் யுவதிகள் தோட்டத் தொழிலைக் கைவிட்டு விட்டு இடம்பெயர்ந்து செல்வதை காண்கிறோம்.பெருந் தோட்டத்துறையில் காணப்படும் நெருக்கடிகள் குறைபாடுகள் நேர்மையாக இனம் காணப்பட்டு தொழிலாளர்கள் நம்பிக்கை பெறும் வகையில் மாற்றப்படாவிட்டால் எம்மவர்கள் வேறு தொழில் நாட்டம் கொள்வதை தவிர்க்க முடியாது.

**மிளகு, கிராம்பு, கருவா போன்ற உப உணவு உற்பத்திகளை தரம் சார்ந்த பொருட்களாக உயர்த்த வேண்டும் என அரசு நினைக்கிறது. இது ஒரு வாய்ப்பு. காணி உரிமையற்ற தொழிலாளர்கள் இதை எப்படி பயன்படுத்தி முன்னேறலாம் எனக் கருதுகிறீர்கள்?**

எம் மக்களை காணி உரிமையுள்ளவர்களாக மாற்ற வேண்டும் என்ற அடிப்படையில்தான் எனது தந்தை 7 பேர்ச்சஸ் காணியுடன் வீடமைப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார். காணி உரிமையற்ற நிலையில் எமது மக்களின் எல்லா தொழிலும் கூலித் தொழிலாகவே அமையும். உற்பத்தி செய்யப்படும் பயிர்கள் எவ்வளவு இலாபம் தருகின்றன என்பதைப் போன்றே அதனை உற்பத்தி செய்பவர்களின் நலன்களும் கவனிக்கப்பட வேண்டும். அல்லது கோப்பி தேயிலை பயிர்ச்செய்கை போலவே இதுவும் அமைந்து விடும். மண் உரிமையே எம் மக்களின் சொத்துரிமையுமாகும்.

**இப் பாராளுமன்றத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திலகராஜ் இல்லை. அதை ஒரு வெற்றிடமாகப் பார்க்கிறீர்களா? மாகாண சபைக்கு அவர் சுயேட்சையாகவாவது போட்டியிடலாம் எனக் கருதுகிறீர்களா? அவரைப் பற்றிய உங்கள் மதிப்பீடு என்ன?**

அவர் பாராளுமன்ற தேர்தலுக்கு நியமிக்கப்படாமை மற்றும் தேசியபட்டியல் கிடைக்காமை பற்றி பல்வேறு கருத்துக்களை அவரும் அவர் சார்ந்த ஸ்தாபனமும் பதிவிட்டுள்ளன.

(19 ஆம் பக்கம் பார்க்க)

## இருபதில் இருதலைக்கொள்ளி நிலைப்பாடுகள்;

# ஜனநாயகவாதிகள் விரும்புவது என்ன?




சுஜப் எம். காசிம்

இருபதாவது திருத்தம் தமிழ் பேசும் சமூகங்களின் இருப்பை ஆபத்துக்குள்ளாக்குமா? இதுதான் அரசியலில் இன்றைய பேசு பொருள். எத்தகைய எதிர்ப்புக்களையும் பொருட்படுத்தாது எடுத்த காரியத்தை முடிப்பதிலே அரசாங்கம் மும்முரமாயுள்ளது.

ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கருத்துக்கள் இதில் உள்வாங்கப்படவில்லை என்ற கருத்தும் நிலவுகின்றது. இக்கட்சியின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி எதிர்பார்த்த பிரதிப் பிரதமர் மற்றும் சிரேஷ்ட அமைச்சர் பதவிகளும் இந்த இருபதில் இல்லை. இந்தப் பதவி இவருக்காகவே இருபதில் உள்வாங்கப்படுமென முன்னர் பலத்த எதிர்பார்ப்புக்கள் இருந்தமை எல்லோருக்கும் தெரிந்த விடயம். இருபதாவது திருத்தம் வரப்போகிறது. வரப்போகிறதென்பதிலும் பார்க்க நிறைவேறப் போகிறதென்பதே பொருத்தமானது.

'19' ஐ ஒழிப்பது மட்டுமல்ல அரசியல் சட்டங்கள், ஒரு குடும்பத்தைப் பழிவாங்கப் புரட்டப்பட்டதை புரிந்து கொள்ளவும் வேண்டும். அவ்வளவுதான், இந்தக் கணக்கு, கணிப்பீடுகள் தான், இருபதில் நாட்டம்கொள்ள வைத்துள்ளது. இருபதில் இருப்பவைகள் பற்றி அறியும் முன்னரே இருப்பதையும் கெடுக்கும் சில தன்னிச்சையான செயற்பாடுகள், சிலரை எரிச்சலூட்டியும் உள்ளன.

அரசியலமைப்பின் 18 ஆவது திருத்தத்தை ஆதரித்தவர்கள், இன்று இருபதில் இருதலைக்கொள்ளியாக இருப்பது எதற்காக? ஜனநாயகத்தில் உள்ள அக்கறையா? சமூகம் பாதிக்கப்படுமென்ற ஆதங்கமா? இதில், இவர்களது சிறுபான்மைச் சமூகங்கள் மாத்திரம் எவ்வாறு பாதிக்கப்படும்? 'நிறைவேற்று அதிகாரம்' தனிநபர் ஒருவரிடம் குவிவது ஜனநாயகத்துக்கு ஆபத்தென்றால், 2014 இல் 18 ஆவது திருத்தத்துக்கு ஆதரவளித்திருக்கக் கூடாது. கடந்த காலத்தில் இவ்வதிகாரத்தை ஒழிக்கப்போவதாக் கூறி ஆட்சிக்கு வந்தோர் நடந்துகொண்ட விதங்களில் இவ்வுண்மையைப் புரியலாம். எல்லையின்றிப் பாவிப்பதற்கல்ல நிறைவேற்று அதிகாரம். எடுத்தெறிந்து போவதற்குமல்ல இவ்வதிகாரத்தின் பதவிக்காலத் தவணைகள். இவைகள் உணரப்பட்டிருந்தால் 18 ஆவது திருத்தம் நிறைவேறுவதை சிறுபான்மைத் தலைமைகள் அன்று நிறுத்தியிருக்கும். எல்லாவற்றையும் சந்தர்ப்பவாதமாகப் பார்த்த இவர்கள், எவற்றையும் சமயோசிதமாகப் பார்க்கவில்லையே!

இது மட்டுமல்ல, இரட்டைப் பிரஜாவுரிமைச் சிக்கலை நீக்குவது பற்றியும் இருபது கூறுவதுதான் பெரும் சர்ச்சையாகி வருகிறது. புலம்பெயர் டயஸ் போராக்கள் பாராளுமன்றம் வரவும் இது வழிவகுக்கும் என்கிறது ஐக்கிய மக்கள் சக்தி. எதையாவது தூக்கிப்பிடித்து தென்னிலங்கையில் நிலைக்க முயலும் ஐக்கிய மக்கள் சக்திக்கு, இருபதும் இரட்டைப் பிரஜாவுரிமை விடயமும் கைக்கு வந்த ராசியாகி விட்டது. இதனால்தான் புதிய பாராளுமன்றக் கூட்டத் தொடரில், வடக்கின் முன்னாள் முதல்வர் ஆற்றிய உரையை தென்னிலங்கை முதலீடாகப் பாவிப்பதற்கு முயற்சிக்கிறது.

இவ்வாறான சந்தர்ப்பங்களை தூக்கிப் பிடிக்கும் கடுமையான முயற்சிகள்தான், கடந்த காலத் தவறுகளுக்குப் பிராயச்சித்தமாக அமையும். நல்லாட்சி காலத்தில் பௌத்த துறவிகள் குறித்து, எவ்வித பொருட்டுமின்றிப் போன போக்குகளே, தென்னிலங்கையிலிருந்து தம்மைத் தூரப்படுத்தியதாக ஐக்கிய தேசியக் கட்சியும், ஐக்கிய மக்கள் சக்தியும் கவலைப்படுகின்றன. இதற்காகத்தான் இந்த எத்தனங்கள். சிறுபான்மைக் கட்சிகளின் கூட்டிலிருந்தாலும், சிங்கள மக்களைக் கைவிடவில்லை எனக் காட்டும் இந்த முயற்சிகள், காலப்போக்கில் இத்தலைமைகளையும் கைவிட வைக்கலாம். இவ்வாறு நிகழின், 'இலங்கை பெரும்பான்மையினரின் நாடு' என்ற தோற்றப்பாடுகள் பலமடைவதைத் தவிர்க்க இயலாது.

எதற்கும் அச்சம் தேவையில்லை. பௌத்த மதத்தைப் பேணி, 19 இல் இருந்த ஆணைக் குழுக்களை அவ்வாறே பாதுகாத்து, ஜனநாயகம் பேணப்படுமெனக் கூறும் அரசாங்கம், பழிவாங்கக் கொண்டுவரப்பட்ட விடயங்கள் அனைத்தையும் நீக்கியே இருபது வருகிறதென்கிறது. இரட்டைப் பிரஜாவுரிமை தடுக்கப்படாதிருப்பின், தற்போதைய ஜனாதிபதி அமெரிக்கக் குடியுரிமையை நீக்கியிருக்கத் தேவையில்லை. காணாமல் போனோர் அலுவலகம், படையினரை டயஸ்போராவிடம் மண்டியிட வைக்கும் வெளிநாட்டு அரசியல் பொறி. இவற்றையெல்லாம் செய்த “19” இனியும் எதற்கு?

இதுதான் அரசின் சிந்தனை. எனவே, இந்தச் சூழலை எதிர்கொள்ளும் சமயோசிதம் தமிழ் பேசும் மக்களின் காலக் கடமையாகியுள்ளது. 19 இல் அறிமுகமான ஆணைக் குழுக்கள் சிலதையும் இருபதாவது திருத்தம் பாதுகாக்கப்போவது எதற்காக? இந்த ஆணைக் குழுக்களையும் ஜனநாயகத்துக்கான அடித்தளங்களாக புதிய அரசாங்கமும் கருதுகிறதா? எனவே, ஜனநாயக விரும்பிகள் அச்சப்படவும் தேவையில்லை என்ற நிலைப்பாடுகளும் இதிலுள்ளன.

ஆனால், இவ்வாறான புதிய திருத்தங்கள் மற்றும் புதிய அரசியலமைப்பு என்பவை, இனப்பிரச்சினையின் அடிநாதமாகப் பார்க்கப்படும் சுவடுகளை இல்லாமலாக்காதிருந்தால் போதும். மாகாண சபைகளை (13 ஆவது திருத்தம்) பிரிவினையின் அடையாளமாகச் சிலரும், அதிகாரப் பகிர்வின் அர்த்தமாகச் சிலரும் நோக்குகையில், அரசுக்கு இது பற்றி என்ன நோக்கம் உள்ளது என்பதுதான் அனைவரதும் ஆவல். உரிமைப் போராட்டம் நடந்ததற்கான சுவடுகளையாவது மையப்படுத்தி, இனப் பிரச்சினையின் தீர்வுகள் முன்னகர்த்தப்படுமா? ஒரு காலத்தில் ஆட்சியாளர்களைப் பணிய வைத்துப் பேரம் பேசிய பலங்கள், சர்வதேசத் தலையீடுகள் இல்லாதுள்ள இன்றைய பேரெழுச்சியில், வெறும் ஆதங்கங்களோடு அரசியல் செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன.

Uva Wellassa University

## தேசத்தின் அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்வதையிட்டு பெருமிதம் கொள்ளுங்கள்

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகமானது தேசத்தின் வளங்கள் மையத்திற்கு பெறுமதி சேர்ப்பதை குறிக்கோளாகக் கொண்டு கல்விப் பணியைத் தொடருவதோடு, பயிலுநர் பட்டதாரிப்பட்ட மற்றும் விசேட நிறுவன கற்கைகளில் ஒரு புதிய போக்கை அமைப்பதிலும் ஈடுபட்டுள்ளது. பல்கலைக்கழகத்தின் குறித்த கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்கள், பெறுமதிமிக்க, திறமையுள்ள பட்டதாரிகளை உருவாக்குவதன் மூலம் ஒரு புதிய சமுதாயத்தை கட்டியெழுப்பி, தொழில் வழங்குநர்களுக்கு அனுகூலங்களை பெற்றுக்கொடுப்பதற்காக கவனமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இப்பாரிய தேசிய முயற்சியில் நீங்களும் பங்குதாரராகலாம்.

### பெறுகை அறிவித்தல்

**பின்வருவனவற்றை வழங்குவதற்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து விலைமனுக்களை, ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் பெறுகைக்குழுத் தலைவர் அழைக்கின்றார்.**

| இல | விபரக்குறிப்பு | விலைமனு எண் | விலைமனுப் பிணையின் பெறுமதி | மீளளிக்கப்படாத வைப்பு (ரூ) | விலைமனுக்கள் மூடப்படும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|
| 01 | ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பவியல் கற்கைகள் பீட உயிரியல் முறைமை தொழில்நுட்பவியல் பிரிவின் ஆரம்ப நிலை ஆய்வு கூடத்தின் வடிவமைப்பு மற்றும் தளபாடமிடல் | UWU/G/ NCB/20/01 | 200,000.00 | 3,500.00 | 2020.10.05 அன்று பி.ப.2.30 மணிக்கு |
| 02 | தொழில்நுட்பவியல் கற்கை பீடத்தின் பொறியியல் தொழில்நுட்பவியல் பிரிவின் திரவ பொறிமுறை மற்றும் Thermo dynamics ஆய்வு கூடத்தின் வடிவமைப்பு மற்றும் தளபாடமிடல் | UWU/G/ NCB/20/04 | 200,000.00 | 3,500.00 | 2020.10.05 அன்று பி.ப.2.30 மணிக்கு |
| 03 | தொழில்நுட்பவியல் கற்கைகள் பீடத்திற்கான ஆய்வுகூட உபகரணங்களை வழங்கி, ஒப்படைத்து, நிறுவி மற்றும் இயங்கச் செய்தல் | UWU/G/ NCB/20/02 | 405,000.00 | 7,300.00 | 2020.10.05 அன்று பி.ப.2.30 மணிக்கு |

ஒரு எழுத்துருவிலான விண்ணப்பத்தை பிரதி நிதியாளரிற்கு (வழங்கல் மற்றும் களஞ்சியம்) சமர்ப்பித்து மற்றும் மேலே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஒவ்வொரு விலைமனுவிற்குமான உரித்தான மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தியமைக்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக சிறாப்பரிற்கு சமர்ப்பிப்பதன் மூலம் அல்லது இலங்கை வங்கியின் கணக்கு இலக்கமான 3114820 இற்கு பணத்தை நேரடியாக வைப்புச் செய்வதன் மூலம், 2020.09.14 முதல் 2020.10.05 அன்று பி.ப.12.30 மணி வரை எந்தவொரு விலைமனுதாரரினாலும் ஒரு முழுமைப்படுத்தப்பட்ட விலைமனு ஆவணங்களின் தொகுதியொன்றை கொள்வனவு செய்து கொள்ளலாம். பல்கலைக்கழக இணையத்தளமான http://www.uwu.ac.lk/procurement/ இலிருந்தும் விலைமனுக்கோரும் ஆவணங்களை விலைமனுதாரர்க்கு பதவிறக்கம் செய்து கொள்ளலாம். பல்கலைக்கழக இணையத்தளத்திலிருந்து விலைமனுக்கோரும் ஆவணங்களைப் பெற்றுக்கொள்பவர்கள், பணக்கொடுப்பனவு பற்றுச்சீட்டு/வைப்புத் துண்டின் மூலப்பிரதியை இணைத்து பூர்த்தி செய்யப்பட்ட ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மே/பா ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக கணக்கு இலக்கமான 3114820 இற்கு, இலங்கை வங்கியின் எந்தவொரு கிளையிலும் மேலே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கட்டணம் செலுத்தப்படல் வேண்டும். (விலைமனுதாரர்களுக்கு விலைமனுகோரும் ஆவணங்களை இலவசமாகவும் பரீட்சித்துப் பார்க்கலாம்.)

விலைமனுக்கள், 2020.10.05 அன்று பி.ப.2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் நேரடியாக அல்லது பதிவுத்தபாலில் அனுப்பி வைக்க வேண்டியதுடன் அதன் பின்னர் உடனடியாக விலைமனுக்கள் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதிகள் (அனுமதியளிக்கப்பட்ட கடிதத்துடன்) விலைமனு திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவார்கள். விலைமனுக்கள் சேர்க்கப்படும் முத்திரை பொறிக்கப்பட்ட தபாலுறைகள் அதன் இடதுபக்க மேல் மூலையில் உரித்தான விலைமனு எண் குறிக்கப்பட்டு, பதுளை, பசறை வீதி, ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக பெறுகைக்குழுத் தலைவரிற்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும் அல்லது ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக பதிவாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப்பெட்டிக்கு சேர்க்கப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை, பிரதி நிதியாளரிடமிருந்து (வழங்கல்கள் மற்றும் களஞ்சியம்) 055-2226475 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பினை ஏற்படுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பல்கலைக்கழக பெறுகைக்குழு (உயர்மட்டத்திலானது)**
**ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்**
**பதுளை.**
**2020.09.13**



## விலைமனுக்களுக்கான அழைப்பு

### கொழும்பு பல்கலைக்கழகம்

**Refurbishing Smart Class Rooms 3.3, Room No. 223, Faculty of Arts**
**(AHEAD/RA2/ELTAELSE/FOA/WORKS/04/i)**
**Refurbishing Smart Class Rooms 3.3, Room No. 128, Faculty of Arts**
**(AHEAD/RA2/ELTAELSE/FOA/WORKS/04/ii)**
**Refurbishing of Training Room – 1, Faculty of Management & Finance,**
**University of Colombo – (AHEAD/RA2/ELTAELSE/FMF/WORKS/01**

1. இலங்கை சனநாயக சோசலிச குடியரசானது உலக வங்கியின் சர்வதேச அபிவிருத்தி முகவராண்மையிலிருந்து AHEAD செயற்றிட்ட ஆகுசெலவிற்காக கடனொன்றைப் பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பகுதியொன்றை கொழும்பு பல்கலைக்கழக Refurbishing Smart Class Rooms 3.3, Room No. 223, Faculty of Arts, Refurbishing Smart Class Rooms 3.3, Room No. 128, Faculty of Arts and Refurbishment of Training Room-1, Faculty of Management & Finance என்ற ஒப்பந்தத்திற்கான பணக்கொடுப்பனவுகளுகாக செலவிட உத்தேசித்துள்ளது.
2. கொழும்பு பல்கலைக்கழகத்தின் Refurbishing Smart Class Rooms 3.3, (Room No. 128), (AHEAD/RA2/ELTAELSE/FOA//WORKS/04/i), Refurbishing Smart Class Rooms (3.3) Rooms 223 (AHEAD/RA2/ELTAELSE/FOA/WORKS/04/(ii) Faculty of Arts and Refurbishing of Training Room-1, Faculty of Management & Finance, (AHEAD/RA2/ELTAELSE/ FMF/ WORKS/01 என்ற ஒப்பந்தத்திற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கொழும்பு பல்கலைக்கழகத்தின் சார்பாக, பிராந்திய பெறுகைக் குழுத் தலைவர் பெசேவ நீங்கலாக பின்வரும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள மதிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆகுசெலவிற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார்.
3. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை பொறியியலுக்கான பிரதி பணிப்பாளரிடமிருந்து -AHEAD செயற்றிட்டம் (தொலைபேசி 0112586145) பெற்று, வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் கொலேஜ் ஹவுஸ் இடப்பரப்பில் அமைந்துள்ள கொழும்பு பல்கலைக்கழக OTS அலுவலகத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.
5. 2020 செப்டம்பர் 14 ஆம் திகதியிலிருந்து 2020 ஒக்ரோபர் 7 ஆம் திகதி வரையும் வேலை நேரங்களில் எந்தவொரு மக்கள் வங்கியிலிருந்தும் 505170600013 என்ற கணக்கிலக்கத்திற்கு பின்வரும் அட்டவணையின் பிரகாரம் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தை செலுத்தியமைக்கான பணக்கொடுப்பனவு பற்றுச்சீட்டை AHEAD இன் பெறுகைக்கான பிரதி பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். மேலேயுள்ள ஆவணச் சான்றை சமர்ப்பிக்கும் விலைமனுதாரர்களுக்கு மாத்திரமே விலைமனுக்கோரல் ஆவணங்கள் வழங்கப்படும்.
6. விலைமனுவின் செல்லுபடியாகும் காலப்பகுதியானது 2021 சனவரி 08 ஆம் திகதி வரையுமாகும்.
7. கொழும்பு பல்கலைக்கழக துணைவேந்தரின் பெயரில் பின்வரும் அட்டவணையில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளவாறு இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு பெற்றுள்ள எந்தவொரு வர்த்தக வங்கியிலிருந்தும் நிபந்தனையற்றதும் இலகுவில் ரொக்கப் பணமாக மாற்றக்கூடியதுமான விலைமனுப்பிணையுடன் அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனு உத்தரவாதமானது 2021 பெப்ருவரி 5 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

| Package No. | Description | Bid Security – Rs. | Non-refundable fee – Rs. | Cost Estimate – Rs. |
|---|---|---|---|---|
| 01. | Refurbishing Smart Class Room 3.3, Room N o.223, Faculty of Arts (AHEAD/ RA2/ ELTAELSE/FOA/WORKS/04/i) | 50,000.00 | 3,000.00 | 5,000,000.00 |
| 02. | Refurbishing Smart Class Room 3.3, Room No. 128, Faculty of Arts (AHEAD/RA2/ ELTAELSE/FOA/WORKS/04//ii) | 50,000.00 | 3,000.00 | 5,000,000.00 |
| 03. | Refurbishing of Training Room-1, Faculty of Management & Finance, (AHEAD/RA2/ ELTAELSE/FMF/WORKS/01) | 50,000.00 | 2,500.00 | 4,100,000.00 |
| Visit University website http://www.cmb.ac.lk to inspect the document | | | | |


8. கொழும்பு பல்கலைக்கழக கொலேஜ் ஹவுஸ் 1 ஆம் சபை அறையில் 2020 செப்டம்பர் 23 ஆம் திகதியன்று விலைமனு முன்கூட்டம் நடைபெறும்.
9. விலைமனுக்கோரல் ஆவணங்களுடன் இணைக்கப்பட்டுள்ள படிவங்களிலேயே முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் நகல் பிரதியுடன் மற்றும் விலைமனுப்பிணையுடனும் தபாலுறையொன்றில் அல்லது பக்கெட் ஒன்றில் சேர்க்கப்பட்டு முத்திரையிடப்பட்டு, ஒவ்வொரு தபாலுறையிலும் அல்லது பக்கெட்டிலும் அவைகளின் இடது பக்க மேல் மூலையில் கேள்விப்பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். (விலைமனுப்பிணையானது விலைமனுக்கோரல் ஆவணத்தின் மூலப்பிரதியுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்).
10. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் 2020 ஒக்ரோபர் 8 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படலாம் அல்லது பதிவாளரின் அலுவலகத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள கொலேஜ் ஹவுஸ் இல் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படலாம். விலைமனுக்களை மூடிய பின்னர் புதிதான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
11. விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே கொலேஜ் ஹவுஸ் 1 ஆம் இலக்க சபை அறையில் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் நிகழ்வில் பங்குபற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
12. பிராந்திய பெறுகை குழுத் தலைவரானவர் எந்தவொரு காரணத்தையும் முன்வைக்காமல் எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக் கொள்வதற்கும் அல்லது எந்தவொரு அல்லது அனைத்து விலைமனுக்களையும் நிராகரிப்பதற்கான உரிமையை கொண்டுள்ளதுடன் அவரது தீர்மானமே இறுதியானதும் முடிவானதுமாகும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**கொழும்பு பல்கலைக்கழகம்,**
**இல.: 94, குமாரதுங்க முனிதாச மாவத்தை,**
**கொழும்பு-03.**



## இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
### சட்டக் கற்கைகள் துறை

40 ஆண்டுகள்



## சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் 2021/2022

1. மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடத்தின் சட்டக் கற்கைகள் துறையால் நடாத்தப்படுகின்ற மேற்படி நிகழ்ச்சித் திட்டத்தின் அனுமதிப் பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்களை **13 செப்டெம்பர் 2020 இல் இருந்து 13 ஒக்டோபர் 2020 வரை** பெற்றுக்கொள்ள முடியும்.
2. 18 வயது அல்லது 18 வயதிற்கு மேற்பட்ட பின்வரும் கல்வித் தகைமைகள் அல்லது தொழில் ரீதியான தகைமைகள் கொண்டிருக்கும் எந்த நபரும் அனுமதிக்கான தகுதி வாய்ந்தவர்கள் ஆவர்.
   அ. க.பொ.த உயர்தரப் பரீட்சையில் (உயர்தரம்) ஒரே பிரிவை சார்ந்த நான்கு (04) பாடங்களிலும் சித்தி (பழைய பாடத்திட்டத்தின் கீழ் 4 பாடங்கள்). அவற்றில் 3 பாடங்களிற்கான சித்தி ஒரே அமர்வில் பெறப்பட்டிருத்தல், **அல்லது**
   ஆ. க.பொ.த உயர்தரப் பரீட்சையில் மூன்று (3) பாடங்களிலும் ஒரே அமர்வில் ஒரே பிரிவை சார்ந்த பாடங்களில் சித்தி (புதிய பாடத்திட்டத்தின் கீழ் 3 பாடங்கள்) , **அல்லது**
   இ. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் ஏதேனும் நிகழ்ச்சித் திட்டத்தின் SLQF மட்டம் 2 இல் முப்பது (30) அல்லது அதற்கு மேற்பட்ட course credits இனைக் கொண்டிருத்தல், **அல்லது**
   ஈ. இலங்கை உயர்நீதிமன்றின் சட்டத்தரணியாக இருத்தல், **அல்லது**
   உ. திறந்த பல்கலைக்கழகத்தின் செனற் சபையினால் ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய இதற்கு சமமான அல்லது மேலான தகுதிகளைக் கொண்டிருத்தல்.
3. மேற்படி நிகழ்ச்சித் திட்டத்திற்கான தெரிவு, டிசம்பர் 2020 இல் இடம்பெறும் போட்டி பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். தேர்வு பரீட்சை ஆனது இலங்கை பரீட்சை திணைக்களத்தால் நடாத்தப்படும். பரீட்சை தொடர்பான விபரங்கள் இலங்கை பரீட்சை திணைக்களத்தால் விண்ணப்பதாரிகளிற்கு அறிவிக்கப்படும்.
4. விண்ணப்பப்படிவங்கள் நிகழ்நிலையில் (online) மாத்திரமே பெற்றுக் கொள்ள முடியும் என்பதுடன், அவ்விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பில் விண்ணப்பதாரிகளே முழுப்பொறுப்புடையோர் ஆவர். எந்த சந்தர்ப்பத்திலும் அச்சிடப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
5. விண்ணப்படிவத்தை பூர்த்தி செய்வதற்கு முன்னர் **https://www.ou.ac.lk** இல் உள்ள கையேட்டை வாசிக்கவும்.
6. விண்ணப்பதாரி ஒருவர் விண்ணப்பப்படிவத்தில் வழங்கியுள்ள தகவல்கள் அல்லது கல்வித்தகைமை / தொழிற் தகைமை ஆவணங்கள் தொடர்பில் அளித்துள்ள தரவுகள் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் கருதும் பட்சத்தில் தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்தியை பதிவின் போது நிகழ்ச்சித் திட்டத்திற்குள் உள்வாங்காது இருப்பதற்கான சகல உரிமைகளையும் இலங்கை திறந்த பல்கலைக்கழகம் கொண்டுள்ளது.
7. மேலதிக விபரங்களிற்கு பொது தகவல் நிலைய காரியாலயத்தின் 011 2881327/ 256 எனும் தொலைபேசி இலக்கத்தை அழைக்கவும்.

Apply Online Only

**விண்ணப்பப்படிவக் கட்டணம் 2000/=**
**எமது வலைத்தளத்தின் (online) மூலம் விண்ணப்பிக்கவும் : https://reginfo.ou.ac.lk/applyonline/**
**நிகழ்நிலை (online) விண்ணப்பப்படிவங்களை 13.09.2020 இல் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.**
**விண்ணப்ப இறுதித் திகதி : 13.10.2020**

கிடைக்கக்கூடிய புலமைப்பரிசில்கள் - மஹாபொல புலமைப்பரிசில், பல்கலைக்கழக மாணவர் உதவிப்பண கொடுப்பனவு, விரிவாக்கல் உதவிப்பண கொடுப்பனவு, உள்ளீர்ப்பு உதவிப்பண கொடுப்பனவு (மேலதிக விபரங்களிற்கு மாணவர் விவகாரங்கள் மற்றும் நலச்சேவைகள் பிரிவினைத் தொடர்பு கொள்ளவும்- 0112881374)

பதிவாளர்
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
நாவல, நுகேகொட

ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தில்

# S.P.B நலம் நலம் பெற வேண்டும் நிகழ்வு

இலங்கையின் முத்தமிழ் கலைஞர்கள் இணைந்து வழங்கும் முத்தமிழில் பாடிய பிரபல பாடகர் S.P.B நலம் நலம் பெற வேண்டும் என்னும் விசேட நிகழ்ச்சி இன்று 13ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 5.30 மணிக்கு கொழும்பு 07, இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன சமரகோன் கலை அரங்கத்தில் நடைபெறவுள்ளது. நிகழ்ச்சிகளை பிரபல அறிவிப்பாளர் உவைஸ் ஷெரிப் தொகுத்து வழங்கவுள்ளார்.



இந்நிகழ்ச்சியில் பிரபல பாடகர் S.P. பாலசுப்பிரமணியம் பற்றிய கவிதைகளும் சிறப்புரைகளும் இடம்பெறவுள்ளன.

S.P. பாலசுப்பிரமணியம் பாடிய ஆயிரக்கணக்கான பாடல்களில் ரசிகர்களை மிகவும் கவர்ந்த பாடல்கள் பலவும் நம் நாட்டுக் கலைஞர்களால் இங்கு பாடப்படவுள்ளன.

இதில் கலந்து கொள்ளுமாறு அனைத்து கலைஞர்களும் அழைக்கப்படுகின்றனர்.

பிரபல தொழில் அதிபர்களும் கலைஞர்களும் ஊடகவியலாளர்களும் சமூக சேவையாளர்களும் இவ்விழாவில் கலந்து கொள்ள சிறப்பிக்கவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

**இன்றைய நிகழ்வுகள்**

# கொழும்பில் பொற்பணி செம்மல் விருது வழங்கும் நிகழ்வு

தந்தை செல்வா நற்பணி மன்றத்தின் பொற்பணி செம்மல் விருது வழ ங்கும் நிகழ்வு இன்று 13ஆம் திகதி காலை கொழும்பு கலைமகள் வித்தியாலத்தில் நடைபெறவுள்ளது. கலைஞர் கே. ஈஸ்வரலிங்கம் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்குவார்.

இவ்விழாவில் , விவேகானந்தா தேசிய பாடசாலையின் பிரதி அதிபர் திருமதி சந்திரிக்கா, ரோயல் கல்லூரியின் பிரதி அதிபர் நந்தினி செல்லதுரை, கலைமகள் வித்தியாலய உப அதிபர் திருமதி தேவயோகம், ஆ. சுகேந்திரன், மட்டக்குளி கிராம சேவையாளர் ஷாந்தினி மோஹன், ஜிந்துப்பிட்டி கிராம சேவையாளர் H.A.A.P.பெரேரா, பான் ஏசியா வங்கி முகாமையாளர் தினேஷ் ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்த நிகழ்வு கலைமகள் வித்தியால அதிபர் செல்வநாயகம் தலைமையில் நடைபெறும். நிகழ்வில் பிரதம விருந்தினராக வீரகேசரி பத்திரிகை பிரதம ஆசிரியர் ஸ்ரீகஜன் கலந்து சிறப்பிப்பார்.

இதற்கான ஒழுங்குகளை மன்றத் தலைவர் என். ராஜா, பொதுச் செயலாளர் எஸ்.கே. தளையரட்ணம் ஆகியோர் மேற்கொண்டு வருகின்றனர். இன்று 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான முன்னோடி கருத்தரங்கும் இலவசமாக நடத்தப் படும்.

## வாசகர் நெஞ்சம்



கடந்த வாரம் செந்தூரம் இதழில் பிரசுரிக்கப்பட்ட வளர்ந்து வரும் ஆளுமை, திறன், ஊக்கம், கலைஞானம், ஆற்றல், என்பன ஒருங்கே அமைந்த ஆளுமைப்பெண். பேட்டி முழுமையாக வாசித்தேன். மகிழ்ச்சி. திருவருள் துணையுடன் மேலும் சிறப்பு பெறுக. இவ்வாறான ஆளுமைமிக்க தினகரன் பத்திரிகைக்கும் பேட்டி கண்டோர்க்கும் பத்திரிகை குழுமத்தினருக்கும் மனமார்ந்த நிறைந்த நல்வாழ்த்துக்கள். பாராட்டுகள்.

- கலாநிதி சிவஶ்ரீ கு.வை. க. வைத்தீஸ்வர குருக்கள்

## விலைமனு கோரல்

### வரையறுக்கப்பட்ட லங்கா சதொச நிறுவனத்துக்கு சி சி டீ வி கண்காணிப்பு அமைப்பு (CCTV Surveillance System) வழங்கல், பொருத்துதல், பரிசோதித்தல் மற்றும் பராமரித்தல்

வரையறுக்கப்பட்ட லங்கா சதொச நிறுவனத்தின் தலைவர், வரையறுக்கப்பட்ட லங்கா சதொச நிறுவனத்துக்கு சி.சி.டீ.வி கண்காணிப்பு அமைப்பு (CCTV Surveillance System) வழங்கல், பொருத்துதல், பரிசோதித்தல் மற்றும் பராமரித்தல் சேவை வழங்க விரும்புபவர்கள், உள்நாட்டு வழங்குனர்கள், அங்கீகாரம் பெற்ற முகவர்கள் மற்றும் உற்பத்தியாளர்களிடம் முத்திரையிடப்பட்ட விலைமனு கோரல்களுக்காக அழைப்பு விடுக்கிறார்.

விபரங்கள் : விலை மனு கோரல் பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள படி
தேவைகள் : விலை மனு கோரல் பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள படி

ஆர்வமுள்ள விலை மனுதாரர்கள், விலை மனு கோரல் பத்திரங்களை ரூபா. 5,000 (மீளப் பெற முடியாதது) செலுத்தி **14.09.2020** தினத்திலிருந்து **06.10.2020** வரையான காலப்பகுதியில் இல. 27, சி. டபிள்யு. இ. (CWE) செயலக கட்டிடம், வொக்சோல் வீதி, கொழும்பு - 02 இல் அமைந்திருக்கும் வரையறுக்கப்பட்ட லங்கா சதொச நிறுவனத்தின் பிரதான காரியாலயத்தில், 3 ஆம் மாடியிலுள்ள கொள்முதல் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம்.

விலைமனு கோரல் பத்திரங்கள், 06.10.2020 ஆம் திகதி பிற்பகல் 1.00 மணி அல்லது அதற்கு முன்னர் இல. 27, சி. டபிள்யு. இ. (CWE) செயலக கட்டிடம், வொக்சோல் வீதி, கொழும்பு - 02 எனும் முகவரிக்கு கிடைக்கும் விதமாக பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட வேண்டும் அல்லது அதே முகவரியில் 3 ஆம் மாடியிலுள்ள கொள்முதல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலை மனுக்கோரல் பெட்டியில் இடப்பட வேண்டும். விலை மனு கோரல் பத்திரத்தின் முத்திரையிடப்பட்ட கடித உறையின் இடது மேல் மூலையில் **"வரையறுக்கப்பட்ட லங்கா சதொச நிறுவனத்துக்கு சி.சி.டீ.வி கண்காணிப்பு அமைப்பு** (CCTV Surveillance System) வழங்கல்" எனக் குறிப்படப்பட்டிருக்க வேண்டும்.

அனைத்து விலை மனுகோரல் பத்திரங்களும் மதிப்பிடப்பட்ட மொத்த **தொகையில் 2%** (மீளப் பெறக்கூடிய) பாதுகாப்புத் தொகையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

விலை மனு கோரல் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் காலம் **06.10.2020** திகதி பிற்பகல் **1.00** மணியுடன் நிறைவடைவதோடு உடனடியாக விலை மனுதாரர்கள் முன்னிலையிலேயே விலைமனு கோரல் பத்திரங்கள் திறக்கப்படும். தெரிவு செய்யப்பட்ட விலை மனுதாரர், மீளப் பெற முடியாத பதிவுக் கட்டணமாக ரூபா. **20,000** (ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட வழங்குனர்களைத் தவிர) மற்றும் மதிப்பிடப்பட்ட மொத்த தொகையில் **10% (மீளப் பெறக்கூடிய)** செயல்திறன் பாதுகாப்புக் கட்டணமாக செலுத்த வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு கீழுள்ள அதிகாரியை தொடர்பு கொள்ளவும்
கொள்முதல் பிரிவின் பிரதிப் பொது முகாமையாளர் - 071 1506120, 077 2535354
விலை மனு கோரல் பத்திர ஒப்பந்தம் சம்பந்தமான தீர்மானமெடுக்கும் முழு அதிகாரமும் வரையறுக்கப்பட்ட லங்கா சதொச நிறுவனத்தின் தலைவரை சார்ந்தது.

தலைவர்
வரையறுக்கப்பட்ட லங்கா சதொச நிறுவனம்

வர்த்தக அமைச்சு
குறைந்த விலையில் உங்களிடத்தில்
லங்கா சதொச LANKA SATHOSA

தினகரன் BUDGET adz
It suits your budget




Advertise Here
5.8cm (Height) x 8cm (Width)
Rs. 1,000/- +VAT
Contact : Mahroof - 077 7 270 078
011 2 429 367 / 011 2 429 368
adzsuo@gmail.com

Uva Wellassa University

## தேசத்தின் அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்வதையிட்டு பெருமிதம் கொள்ளுங்கள்

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகமானது தேசத்தின் வளங்கள் மையத்திற்கு பெறுமதி சேர்ப்பதை குறிக்கோளாகக் கொண்டு கல்விப் பணியைத் தொடருவதோடு, பயிலுநர் பட்டதாரிப்பட்ட மற்றும் விசேட நிறுவன கற்கைகளில் ஒரு புதிய போக்கை அமைப்பதிலும் ஈடுபட்டுள்ளது. பல்கலைக்கழகத்தின் குறித்த கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்கள், பெறுமதிமிக்க, திறமையுள்ள பட்டதாரிகளை உருவாக்குவதன் மூலம் ஒரு புதிய சமுதாயத்தை கட்டியெழுப்பி, தொழில் வழங்குநர்களுக்கு அனுகூலங்களை பெற்றுக்கொடுப்பதற்காக கவனமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இப்பாரிய தேசிய முயற்சியில் நீங்களும் பங்குதாரராகலாம்.

**பெறுகை அறிவித்தல்**

**பின்வருவனவற்றை வழங்குவதற்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து விலைமனுக்களை, ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் பெறுகைக்குழுத் தலைவர் அழைக்கின்றார்.**

| இல | விபரக்குறிப்பு | விலைமனு எண் | விலைமனுப் பிணையின் பெறுமதி | மீளளிக்கப் படாத வைப்பு (ரூ) | விலைமனுக்கள் மூடப்படும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|
| 01 | தொழில்நுட்பவியல் கற்கை பீடத்தின் உயிரியல் முறைமை தொழில் நுட்பவியல் பிரிவிற்கு ஆய்வு கூட உபகரணங்களை வழங்கி, ஒப்படைத்து, நிறுவி மற்றும் இயங்கச் செய்தல் | UWU/AHEAD/RAI/R3/FTS/GOODS/NCB/LE/02 | 279,000.00 | 3,500.00 | 2020.10.05 அன்று பி.ப.2.00 மணிக்கு |

ஒரு எழுத்துருவிலான விண்ணப்பத்தை பிரதி பெறுகை பணிப்பாளரிற்கு (AHEAD/OTS) சமர்ப்பித்து மற்றும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறாக ஒவ்வொரு விலைமனுவிற்குமான மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தியமைக்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக (AHEAD/OTS) அலுவலகத்திற்கு எந்தவொரு வேலைநாளிலும் மு.ப.9.00 மணி மற்றும் பி.ப.3.00 மணி இடையே சமர்ப்பிப்பதன் மூலம் அல்லது இலங்கை வங்கியின் கணக்கு இலக்கமான 82592579 இற்கு பணத்தை நேரடியாக வைப்புச் செய்வதன் மூலம், 2020.10.05 அன்று பி.ப.12.00 வரை எந்தவொரு விலைமனுதாரரினாலும் ஒரு முழுமைப்படுத்தப்பட்ட விலைமனு ஆவணங்களின் தொகுதியொன்றை கொள்வனவு செய்து கொள்ளலாம். பல்கலைக்கழக இணையத்தளமான http://www.uwu.ac.lk/procurement/ இலிருந்தும் விலைமனுகோரும் ஆவணங்களை விலைமனுதாரர்க்கு பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பல்கலைக்கழக இணையத்தளத்திலிருந்து விலைமனுக்கோரும் ஆவணங்களைப் பெற்றுக்கொள்பவர்கள், பூர்த்தி செய்யப்பட்ட ஆவணங்களை பணப்பற்றுச்சீட்டு/வைப்புத்துண்டின் மூலப் பிரதியுடன் சமர்ப்பிக்கலாம், ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக கணக்கு இலக்கமான 82592579 இற்கு, இலங்கை வங்கியின் எந்தவொரு கிளையிலும் மே/பா AHEAD செயற்றிட்டம் என கட்டணம் செலுத்தப்பட வேண்டும். விலைமனுதாரர்களுக்கு விலைமனுகோரும் ஆவணங்களை இலவசமாகவும் பரீட்சித்துப் பார்க்கலாம்.

விலைமனுக்கள், 2020.10.05 அன்று பி.ப.2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் நேரடியாக அல்லது பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படவேண்டியதுடன் அதன் பின்னர் உடனடியாக விலைமனுக்கள் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதிகள் (அனுமதியளிக்கப்பட்ட கடிதத்துடன்) விலைமனு திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவார்கள். விலைமனுக்கள் சேர்க்கப்படும் முத்திரை பொறிக்கப்பட்ட தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் உரித்தான "விலைமனு எண்" குறிக்கப்பட்டு, பதுளை, பசறை வீதி, ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக பெறுகைக்குழுத் தலைவரிற்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும் அல்லது ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக பதிவாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப்பெட்டிக்கு சேர்க்கப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை, பெறுகை பிரதி பணிப்பாளரிடமிருந்து 055-3127378 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பினை ஏற்படுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பல்கலைக்கழக பெறுகைக்குழு (உயர்மட்டத்திலானது)**
**ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்**
**பதுளை.**
**2020.09.12**

திறன் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகள் இராஜாங்க அமைச்சு

**தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை**

## 2021ஆம் ஆண்டின் பயிலுநர்கள் ஆட்சேர்ப்பு
### தன்னியக்க வாகன எந்திரவியல் பயிற்சி நிறுவகம்

பின்வரும் முழுநேர கற்கைகளுக்காக (16-25 வயதுக்கு இடைப்பட்ட) இலங்கை இளைஞர்களிடம் இருந்து 2021 ஆம் ஆண்டின் பயிலுநர்கள் ஆட்சேர்ப்புக்காக தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையின் நோக்கெல்லைக்கு உட்பட்டு இயங்கும் தன்னியக்க வாகன எந்திரவியல் பயிற்சி நிறுவகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| 1. | முழுநேர கற்கைகள் | காலம் | கல்வி தகைமைகள் |
|---|---|---|---|
| 1.1 | Automobile Mechanic | 3 ஆண்டுகள் | சிங்களம், கணிதம் மற்றும் விஞ்ஞானம் உட்பட 6 பாடங்களுடன் இரு அமர்வுகளில் க.பொ.த. (சா/த) பரீட்சையில் சித்தி **குறிப்பு:** 2021.01.01 இற்கு 16-25 வயதுக்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும் பால் (ஆண்/ பெண்) |
| 1.2 | Automobile Electrician | 3 ஆண்டுகள் | |
| 1.3 | Machinist | 3 ஆண்டுகள் | |
| 1.4 | Automobile A/C Mechanic | 3 ஆண்டுகள் | |
| 1.5 | Automobile Tinker | 2 ஆண்டுகள் | அரசாங்க பாடசாலை அல்லது அரசாங்கம் அங்கீகரித்த பாடசாலை ஒன்றில் தரம் 8 சித்தி 2021.01.01 இற்கு 16-25 வயதுக்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும் பால் (ஆண்/ பெண்) |
| 1.6 | Automobile Painter | 1 ½ ஆண்டுகள் | |

**2. கற்கை விபரம்**

2.1 இரட்டை பயிற்சி முறை மற்றும் தேசிய தொழிற்தகைமை கட்டமைப்பின் (NVQ) கீழ் திறன் அடிப்படையில் அனைத்து கற்கைகளும் நடத்தப்படும்.

2.2 1.1 - 1.4 கற்கைகளின் கீழ் நிறுவக பயிற்சியை (காலம் - 12 மாதங்கள்) வெற்றிகரமாக பூர்த்திசெய்யும் பயிற்சியாளர்கள் அறிவு மற்றும் திறன்களை மேலும் வளர்த்துக்கொள்வதற்கு அரசாங்கம்/ தனியார் ஒட்டோமொபைல் நிறுவனங்களில் தொழில் பயிற்சிக்காக இணைக்கப்படுவார்கள்.

2.3 1.5 - 1.6 கற்கைகளின் கீழ் நிறுவக பயிற்சியை (காலம் - 06 மாதங்கள்) வெற்றிகரமாக பூர்த்திசெய்யும் பயிற்சியாளர்கள் அறிவு மற்றும் திறன்களை மேலும் வளர்த்துக்கொள்வதற்கு அரசாங்க/ தனியார் ஒட்டோமொபைல் நிறுவனங்களில் தொழில் பயிற்சிக்காக இணைக்கப்படுவார்கள்.

2.4 கற்கை இல. 1.3 இல் CNC துருவல் இயந்திரம், கடைசல் இயந்திரம், CAM நிரலாக்கம், Head facing machine, Boring machine, Crank grinding machine, Tool cutter grinding machine போன்ற பயிற்சிகள் உள்ளடங்கும்.

**3. வழங்கப்படும் சான்றிதழ்கள்**

தேசிய தொழில் பயிற்சி தகைமை இறுதி மதிப்பீட்டில் சித்தி பெறும் பயிலுநர்கள் தன்னியக்க வாகன எந்திரவியல் பயிற்சி நிறுவகத்தின் சான்றிதழுடன் தேசிய தொழிற் தகைமை தரம் - 4 சான்றிதழ் (மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் மூலம் அங்கீகரிக்கப்பட்டது) வழங்கப்படும்.

**4. கற்கை தேர்வு**

மேலுள்ள கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்களிடம் உளச் சார்புத் தேர்வு ஒன்றின் மூலம் (காலம் - 1 மணி நேரம்) கணிதம் மற்றும் பொது அறிவு பரீட்சிக்கப்படும். இந்த உளச் சார்புத் தேர்வில் பெறும் புள்ளிகள் அடிப்படையில் விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சை ஒன்றுக்கு அழைக்கப்படுவார்கள்.

**5. விண்ணப்பிக்கும் முறை**

5.1 விண்ணப்பதாரர்கள் மக்கள் வங்கியின் தெமட்டகொடை கிளையில் 071100103320674 என்ற கணக்கு இலக்கத்தில் தன்னியக்க வாகன எந்திரவியல் பயிற்சி நிறுவகத்திற்கு 400 ரூபாவை செலுத்தி வங்கியிடம் இருந்து பெற்ற பற்றுச்சீட்டை விண்ணப்பத்தின் பின் பக்கமாக வழங்கப்பட்டிருக்கும் இடைவெளியில் ஒட்டுதல் வேண்டும்.

5.2 முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் (வர்த்தமானி அறிவித்தலில் தரப்பட்டுள்ள விண்ணப்பப் படிவ வடிவத்தை பயன்படுத்தி) 2020 ஒக்டோபர் 22 அன்று அல்லது அதற்கு முன்னர் "பணிப்பாளர்/ அதிபர், தன்னியக்க வாகன எந்திரவியல் பயிற்சி நிறுவகம், இல.: 69/A, பேஸ்லைன் வீதி, ஒருகொடவத்த" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "2021 ஆம் ஆண்டின் பயிலுநர்கள் ஆட்சேர்ப்பு" என்று குறிப்பிடவும் அல்லது **www.aeti.edu.lk** என்ற எமது இணையதளத்திற்கு பிரவேசிக்கவும்.

5.3 மேலதிக விபரங்களுக்கு 0112-572977 மற்றும் 0112-532182 என்ற தொலைபேசி இலக்கங்களில் பதிவாளரை தொடர்புகொள்ளவும் மற்றும் 2020 செப்டெம்பர் 11 அன்று பிரசுரிக்கப்பட்ட சிங்கள வர்த்தமானி அறிவித்தலை பார்க்கவும்.

**தலைவர்,**
**தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை**

பொருளாதார அரசியல்



கலாநிதி
எம்.கணேசமூர்த்தி
பொருளியல்துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்

# தங்க விற்பனையாளர்களுக்கு அதிர்ச்சியாக அமைந்த தங்கத்தின் மீதான வரி நீக்கம்

‘அரசாங்கம் தங்கம் மீதான இறக்குமதி தீர்வை நீக்கத்தை அறிவித்தபோது உள்ளூர் ஆபரண உற்பத்தியாளருக்கு ஊக்குவிப்பு வழங்கும் நோக்கிலேயே அந்நடவடிக்கை எடுக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. தங்கச்சந்தை முகவர்கள் எதிர்பாராவிதமாக ஆச்சரியமூட்டும் நடவடிக்கையாக மேற்கொள்ளப்பட்டதனால் ஓரிரு மாதங்களின் பின்னரே அதன் தாக்கம் முழுமையாக உணரப்படலாம்’

இலங்கை அரசாங்கம் தங்க இறக்குமதி மீது விதிக்கப்பட்டிருந்த 15 சதவீத இறக்குமதித் தீர்வையை அண்மையில் நீக்கிவிட்டது. கடந்த சில மாதங்களாக உலக சந்தையில் தங்கத்தின் விலை சடுதியாக அதிகரித்துச் சென்றதன் விளைவாக இலங்கையிலும் அதன் விலை உச்சத்தைத் தொட்டது. இவ்விலை அதிகரிப்பின் காரணமாக தங்க ஆபரண விற்பனையில் சடுதியான ஒரு வீழ்ச்சி ஏற்பட்டது.

இலங்கையில் தங்கத்தின் விலையை நிர்ணயிப்பதில் இந்தியா, ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் சிங்கப்பூர் தங்கச் சந்தைகளின் செல்வாக்கும் உண்டு. தங்கத்தின் விலை அதிகரித்துச் சென்றபோது தங்க ஆபரண விற்பனையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்ட போதிலும் விற்பனையாளர்கள் ஊக நோக்கத்தில் (speculative purpose) தொழிற்பட்டதனால் தங்கம் விற்கப்படாவிட்டாலும் விலை அதிகரிப்பு காரணமாக கையிருப்பிலுள்ள தங்கத்தின் பணப்பெறுமதி அதிகரிக்கும் என்ற எதிர்பார்க்கையுடன் இருந்தனர்.

தற்போது அரசாங்கம் தங்க இறக்குமதி மீது விதிக்கப்பட்டிருந்த தீர்வையை முன்னறிவிப்பின்றி திடீரென நீக்கிவிட்டமையானது தங்க விற்பனையாளருக்கு எதிர்பாரா அதிர்ச்சியையும் அழுத்தத்தையும் தந்திருக்கிறது.

இந்தியா மற்றும் இலங்கை போன்ற நாடுகளின் கலாசாரத்துடன் பின்னிப்பிணைந்த ஒன்றாக தங்கம் உள்ளபடியால் திருமணம் போன்ற முக்கிய சடங்குகளின் போது தங்கத்தைக் கொள்வனவு செய்வது தவிர்க்க முடியாத ஒன்றாகக் கருதப்படுகிறது. அதன் சடுதியான விலையேற்றம் வறிய மற்றும் மத்தியதர வர்க்கத்தினரை வெகுவாகப் பாதித்தது. தற்போது இறக்குமதித் தீர்வையின் நீக்கம் காரணமாக இலங்கையின் தங்கவிலை, வரி நீக்கப்பட்டதால் அதே 15 சதவீதத்தினால் குறைவடைய வேண்டுமென பொதுமக்களால் எதிர்பார்க்கப்படுகிறது. சாதாரண ஒரு இறக்குமதிப் பொருள் தொடர்பில் தீர்வை நீக்கமானது தீர்வையின் அளவினால் உள்ளூர் விலைகளைக் குறைக்க வேண்டும்.

அவ்வாறு நிகழவேண்டுமாயின் இறக்குமதியின் மீது வேறு தொகை சார்ந்த தடைகள் (quantitative barriers) இருக்கக்கூடாது. ஆனால் இலங்கைக்குள் தங்கத்தை இறக்குமதி செய்வதில் தொகை சார்ந்த நிர்வாக கட்டுப்பாடுகள் உள்ளன.

எனவே தீர்வைக் குறைப்பின் முழுப்பயனும் நுகர்வோரை தானாகச் சென்றடைய வாய்ப்பில்லை. அத்துடன் செட்டியார் தெரு வட்டாரங்களின் துலங்கல்களின் படி முன்னைய தீர்வை வீதத்தில் இறக்குமதி செய்யப்பட்ட தங்கக் கையிருப்புகள் முடிவடையும் வரை விலைக்குறைப்பு சாத்தியமில்லை எனக் கூறப்படுகிறது. அவ்வாறு செய்யுமாறு கட்டாயப்படுத்துவது வியாபாரிகளை நட்டமடையச் செய்யலாம்.

அரசாங்கம் தங்கம் மீதான இறக்குமதி தீர்வை நீக்கத்தை அறிவித்தபோது உள்ளூர் ஆபரண உற்பத்தியாளருக்கு ஊக்குவிப்பு வழங்கும் நோக்கிலேயே அந்நடவடிக்கை எடுக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. தங்கச்சந்தை முகவர்கள் எதிர்பாராவிதமாக ஆச்சரியமூட்டும் நடவடிக்கையாக மேற்கொள்ளப்பட்டதனால் ஓரிரு மாதங்களின் பின்னரே அதன் தாக்கம் முழுமையாக உணரப்படலாம்.

எவ்வாறாயினும் உள்ளூர் தங்க வியாபாரிகளால் நீண்டகாலத்திற்கு தங்க விலைகளைத் தொடர்ந்தும் வைத்திருப்பது சாத்தியமில்லை. உலக சந்தையிலுள்ள ஊக வணிகர்களின் கருத்துக்களின் படி தங்கத்தின் தற்போதைய அதிகரித்த விலைப் போக்கு ஏற்கெனவே உச்சத்தைத் தொட்டுவிட்டு வந்துள்ளபடியினால் இதைவிட மேல்நோக்கிச் செல்லக்கூடிய சாத்தியம் இந்தச் சுற்றில் இல்லை எனக் கூறுகின்றனர்.



எனவே அடுத்துவரும் மாதங்களில் தங்கத்தின் விலை குறைவடையும் சாத்தியங்கள் ஏராளமாக உள்ளன. எனவே ஒருபுறம் இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுள்ள தீர்வை நீக்கத்துடன் சர்வதேச சந்தையில் தங்கத்தின் விலை வீழ்ச்சியும் சேர்ந்து இலங்கையில் எதிர்வரும் மாதங்களில் தங்க விலைகளை கீழ்நோக்கி நகர்த்தும் என நம்பலாம்.

கடந்த சில மாதங்களில் தங்கத்தின் விலை சடுதியாக உயர்ந்து சென்றமைக்கு தெளிவான சில காரணங்கள் உள்ளன. முதலாவது உலக நாடுகளில் பொருளாதார வளர்ச்சியில் ஏற்பட்ட மெதுவடைவு. குறிப்பாக வேகம் குறைந்து பொருளாதாரங்கள் மெதுவடையும் போது பெற்றோலியத்தின் கேள்வி குறைவடைந்து அதன் விலைகள் வீழ்ச்சியடையும். பெற்றோலியத்தின் விலை கடந்த 10 வருடங்களில் இல்லாதபடி மிகக் குறைந்த விலைகளைத் தொட்டுவிட்டு வந்தது. ஆயினும் அவ்விலை வீழ்ச்சியின் நன்மையை இலங்கையர்கள் இதுவரை பெற அரசாங்கம் அனுமதிக்கவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

உலக பெற்றோலிய விலை வீழ்ச்சியின் காரணமாக பெற்றோலியத்துறை மீது மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள், தங்கத்தை நோக்கி நகர்ந்தன. மறுபுறம் கோவிட் 19 நோயைத் தொடர்ந்து. அமெரிக்க டொலரின் பெறுமதி கணிசமாக தளம்பல்களுக்கு உட்பட்டது. எனவே உலக அந்நியச் செலாவணி வர்த்தகச் சந்தையிலும் மெதுவடைவு அவதானிக்கப்பட்டது. உலகப் பொருளாதார மெதுவடைதல் மற்றும் கோவிட் 19 நோய்த் தாக்கம் ஏற்பட்டதன் பின்னர் உலக நாடுகள் பொருளாதார நடவடிக்கைகளை உதைத்து ஸ்டார்ட் (kick start) செய்யும் நோக்கில் விரிவாக்க பணக்கொள்கை நடவடிக்கையாக தத்தமது நாடுகளின் உள்ளூர் வட்டிவீதங்களைக் குறைத்தன. சில வேளைகளில் இந்த மெய்வட்டி வீதங்கள் (மெய்வட்டி வீதமானது சாதாரணமாக நாம் அவதானிக்கும் வட்டி வீதமாகிய பெயரளவு வட்டி வீதத்திலிருந்து பண வீக்கவீதத்தை கழித்துப் பெறப்படும் வட்டி வீதமாகும்) எதிர்க்கணியமாக இருந்தன. பணவீக்கமானது வட்டி வீதத்தைவிட உயர்வாக இருப்பதே இதற்குக் காரணமாகும்.

உதாரணமாக, நமது சேமிப்புக்கணக்கில் இருக்கும் மீதித் தொகைக்கு 5 சதவீத வருடாந்த வட்டி வழங்கப்படுவதாகக் கொள்வோம். குறித்த வருடத்தில் விலை மட்டங்கள் அதிகரித்துச் செல்லும் சதவீதம் (அதாவது பணவீக்க வீதம்) 7 வீதமாக இருப்பதாகவும் கருதினால் மெய்வட்டி வீதமானது எதிர்க்கணிய 2 சதவீதமாகும்.

சுருக்கமாகச் சொன்னால் 100 ருபாவை முதலீடு செய்தால் வருட இறுதியில் 5 ருபா வருவாய் கிடைக்கும். அதேவேளை முதலீடு செய்த 100 ரூபாவின் பெறுமதி வருட இறுதியில் பணவீக்கம் காரணமாக 7 ரூபாவினால் வீழ்ச்சியடைந்திருக்கும். 5 ரூபா வட்டி உழைக்கப்பட்டாலும் முதலீட்டின் பெறுமதி 7 வீதத்தினால் குறைவதனால் முதலீட்டாளர் தேறிய ரீதியில் 2 சதவீத நட்டத்தை எதிர்கொள்ள நேரிடும். இந்நிலையில் வட்டியை ஈட்டித் தரும் சொத்துக்களில் (திறைசேரி உண்டியல்கள் திறைசேரி பிணையங்கள் போன்றன) முதலீடுகளை மேற்கொள்வதானது போட்ட முதலுக்கே ஆப்பு வைக்கும் நடவடிக்கையாக அமையும்.

ஒருபுறம் சர்வதேச பொருட் சந்தையில் (international commodity market) பெற்றோலியம் போன்ற பண்டங்களின் விலை வீழ்ச்சி மறுபுறம் பணக்கொள்கை மாறியதால் வட்டிவீதத்தில் ஏற்படுத்தப்பட்ட வீழ்ச்சி, அத்துடன் படிப்படியாக அதிகரித்துச் செல்லும் உள்நாட்டுப் பணவீக்கப் போக்குகள் என்பன ஒன்றிணைந்து முதலீட்டாளர்களை பாதுகாப்பான மாற்று முதலீட்டு வாய்ப்புகளை நாடத் தூண்டியுள்ளது.

இவ்வாறான நிச்சயமற்ற பொருளாதார சூழல்களின் போது ஏற்படும் இடரபாயங்களுக்கு ஈடுகொடுக்கும் பாதுகாப்பான முதலீட்டுக் கருவியாக தங்கம் செயற்படுகிறது. எனவே முதலீட்டாளர்கள் ஏனைய மாற்று முதலீட்டு வாய்ப்புகளிலிருந்து தங்கத்தை நோக்கி தமது முதலீடுகளை திருப்பிவிட்டமை தங்கத்தின் விலை குறுகிய காலத்தில் சடுதியாக அதிகரித்தமைக்கான முக்கிய காரணமாகும்.

இலங்கையிலும் கூட அண்மையில் அரசாங்கம் பொருளாதார நடவடிக்கைகளை ஊக்குவிக்க வட்டி வீதங்களை பெருமளவில் குறைத்துள்ளமையையும் அதன் காரணமாக நிலையான சொத்துக்கள் மற்றும் நெடுவாழ்வுப் பொருள்களான வாகனங்கள் போன்றவற்றின் மீதான இலங்கை மக்களின் ஈடுபாடு அதிகரித்துள்ளதையும் அவதானிக்க முடிகிறது.

ஆயினும் முதலீட்டு நோக்கத்திற்கான இலங்கையில் தங்கத்தை கொள்வனவு செய்வோரின் சதவீதம் குறைவென்றே கூறலாம். சர்வதேச சந்தையில் ஏற்படும் விலையதிகரிப்பு இலங்கையின் தங்க விலைகளிலும் தாக்கம் செலுத்துவதைத் தவிர்க்க இயலாது. ஆயினும் ஏனைய நாடுகளுடன் ஒப்பீடு செய்யும் போது இலங்கையில் தங்கத்தின் விலை ஒப்பீட்டு ரீதியில் சற்றுக் குறைவென்றே கூறலாம்.

கடந்த அரசாங்கத்தின் பதவிக்காலப் பகுதியில் இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு தங்கம் கடத்தப்படும் சம்பவங்களின் எண்ணிக்கை அதிகரித்ததைத் தொடர்ந்தே இலங்கையின் தங்க இறக்குமதிகள் மீது 15 சதவீத இறக்குமதித் தீர்வை விதிக்கப்பட்டது.

இப்போது அது நீக்கப்பட்டமை உற்பத்தியாளர்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் நீண்டகால நன்மைகளைப் பெற்றுத்தரக்கூடும் ஆயினும் அதனால் ஏற்படும் உடனடித்தாக்கங்கள் ஏற்படுத்தும் சந்தைப் பாதிப்புகள் குறித்தும் கவனமெடுத்துச் செய்திருந்தால் நல்லது.

## தொண்டமான் நினைவுகள் 03



# தென் தமிழர்களின் முகவரியாக விளங்கும் காலி கிட்டங்கி

இ.தொ.காவின் நிறுவுனர் சௌமியமூர்த்தி தொண்டமானுக்கு நெருக்கமானவர்கள் பலர். அவர்களில் ஒருவர் சேதுராமன். வேவண்டன் தோட்டத்தின் ஒரு டிவிஷனான பூச்சிகொடவில் பிறந்து வளர்ந்தவர். பூச்சிகொட தோட்டம் தற்போது தனியார் வசம் உள்ளது. தொண்டமானுக்குப்பின்னர் வேவண்டனையும் பூச்சிகொடையையும் அவரது மகன் இராமநாதன் தொண்டமான் நிர்வகித்துவந்தார்.

சேதுராமன் தற்போது காலியில் வசிக்கிறார். கிட்டங்கியில் நகைக் கடை வைத்துள்ள அவர் அவ்வப்போது தன் சொந்த ஊருக்கு வந்து போகிறார். சௌமியமூர்த்தியாருக்கு நெருக்கமானவர். தொண்டமான் நினைவுகள் பற்றிக் கேட்டால் நிறையவே பேசுகிறார். தொண்டமான் காலிக்கு அல்லது தென்பகுதிக்கு வருகிறார் என்றால் அவருக்கு முதலில் நினைவுக்கு வருபவர் சேதுராமன் தானாம்.

“தமிழ் பொலிஸ்காரர்களை நியமித்தவரும் தொண்டமான்தான். அவர்களை அரசாங்கம் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவைத்தது. அது தமிழ்த் தீவிரவாதம் வடக்கில் தீவிரம் பெற்றுக் கொண்டிருந்த காலம். அவர்கள் அங்கே பணியாற்ற மிகவும் அச்சமடைந்திருந்தனர். நான் இவ்விடயத்தை தொண்டமானிடம் எடுத்துச் சென்று அவர்களை தெற்கிற்கு மாற்றுமாறு சொன்னேன். அவர் அதை ஏற்றுக் கொண்டார். இடமாற்றலைப் பெற்றுக் கொடுத்தார்” என்று கூறும் சேதுராமன், தென்னிலங்கைக்கு அவர்கள் மாற்றலாகி வந்ததும் உயர் சிங்கள பொலிஸ் அதிகாரிகள் இந்த மலையகத் தமிழ் பொலிஸ்காரர்களை தமது கைப்பாவைகளாக வைத்துக் கொண்டார்களாம். கடைக்குச் செல்வது வீட்டு வேலைகள் செய்ய அனுப்புவது என்று தமது வேலையாட்களாக வைத்துக் கொண்டார்கள் என்று அப் பொலிஸ்காரர்கள் சேதுராமனிடம் சொன்னார்களாம்.



ஜெயபிரகாஷ் நாராயணனும் அவரது பாரியாரும் வேவண்டன் வந்திருந்தபோது... சௌமியமூர்த்தி, மனைவி பேரக் குழந்தைகளுடன்...



சௌமியமூர்த்தி, ப.சிதம்பரம், செல்லசாமி மற்றும் மூப்பனார்

காலியில் கிட்டங்கி என்றால் அது தமிழர்கள் தங்கி வர்த்தகம் செய்யும் இடம் என்று பொருள். ஒல்லாந்தர் காலம் முதல் தமிழர்கள் இங்கு செல்வாக்குடன் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். அக்காலத்தில் காலி துறை முகமே பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்த ஒரே துறைமுகம் என்பதால் நிறைய தமிழ், முஸ்லிம் வர்த்தகர்கள் இங்கே வசித்து வந்தனர். குறிப்பாக தமிழ் செட்டிமார் வட்டிக்குக் கடன் கொடுக்கும் லேவாதேவி வர்த்தகத்திலும் அரிசி இறக்குமதியிலும் பணம் சம்பாதித்து வந்தனர். ஒல்லாந்தருக்கும், வெள்ளைக்காரர்களுக்கும் அவர்கள் வட்டிக்கு பணம் கொடுத்தனர். கிட்டங்கி என்றால் பண்டகசாலை என்று அர்த்தம். அரிசி பெருமளவில் இறக்குமதி செய்து இங்கே வைக்கப்பட்டதால் கிட்டங்கி என்று பெயர்வந்தது. செட்டிமார் யுகம் மறைந்தாலும் தமிழ் நகைக்கடைகள் இங்கே இயங்கிக் கொண்டிருக்கின்றன. இது ஒரு விசாலமான கட்டடம். 30 நகைக் கடைகள் மற்றும் 25 சில்லறைக் கடைகள் இங்கே இயங்கி வருகின்றன.



கோதை தொண்டமான், சௌமியமூர்த்தி, கவர்னர் ஜெனரல் ஒலிவர் குணதிலக்க மற்றும் நேருஜி

இலங்கையிலேயே முதல் முதலாக ஆடிவேல் விழாவை ஆரம்பித்து நடத்தியவர்கள் காலி தமிழர்கள்தான் என்கிறார் சேதுராமன், இது முன்னூறு வருட பழைமை வாய்ந்த தேர்த்திருவிழா. காலி நகரத்தார் எழுப்பிய முருகன் கோவிலில் இருந்து ஆறு மைல் தொலைவில் உள்ள உனவட்டுனவில் அமைந்திருக்கும் பிள்ளையார் கோவிலுக்கு ஆடித்தேர் புறப்பட்டுச் செல்லுமாம். ஒன்ன வெட்டுனா (அதோ, வீழ்ந்துவிட்டது) என்பதே உணவெட்டன என்பதாக மருவி விட்டதாகச் சொல்வார்கள். சஞ்சீவி மலையை அனுமான் எடுத்துச் சென்ற போது கீழே விழுந்த ஒரு பகுதியே உளவட்டுன என்பார்கள். 1971 ஜே.வி.பி. கிளர்ச்சியின் பின்னர் தடைபட்ட இந்த வேல் விழா அப்படியே கைவிட்டுப் போனதாம்.

ஒரு முறை காலியில் நடைபெற்ற மீலாத் விழாவுக்கு சௌமியமூர்த்தி தொண்டமான் வந்தாராம். இதைக் கேள்விப்பட்ட சேதுராமன், உங்களுக்கும் மீலாத்துக்கும் என்ன சம்பந்தம்? அங்கே என்னத்தை பேசப் போகிறீர்கள் என்று சந்தேகத்துடன் கேட்டாராம். அன்றைய மீலாத் விழாவில்தான் வடக்கை ஒரு வருட காலத்துக்கு பிரபாகரனிடன் கொடுத்துப் பாருங்கள் என்ற அதிரடியான கருத்தை அவர் தெரிவித்தார் என்கிறார் சேதுராமன். உண்மையில் அது அரசியல் பிரளயத்தை நாட்டில் ஏற்படுத்திய பேச்சு. என்னசேர், இப்படிப் பேசிவிட்டீர்களே? என்று சேதுராமன் கேட்டபோது, எல்லாம் காலியில் நம்ம சேதுராமன் இருக்கிறாரே என்ற தைரியத்தில்தான் என்று சொல்லிச் சிரித்தாராம் தொண்டமான்!

சேதுராமன் இன்னொன்றையும் சொன்னார்.

கருப்பையா பிள்ளை காலத்தில் ரம்பொடை சுரங்கப்பாதைக்கு அருகே பல கடைகள் இருந்தன என்றும் அதனால் அந்த இடம் பணியயகடை என அழைக்கப்பட்டதாம். அப்போது ரம்பொடை நகரும் காணப்படவில்லை என்பதால் தேவையானவற்றை பணியகடையில் தான் வாங்க வேண்டியிருந்தது. இந்தக் கடைகள் கருப்பையா கங்காணிக்குச் சொந்தமானவை. பல சரக்கு பொருட்கள், எண்ணெய் என்பன இக் கடைகளில் கிடைத்தன. தொழிலாளர்கள் மட்டுமின்றி ஆங்கிலேயர்களும் ஏனையோரும் இக்கடைகளிலேயே பொருட்களை வாங்கினர். இது போன்ற கடைகளை கருப்பையா கங்காணி அதாவது தொண்டமானின் அப்பா நுவரெலியா மாவட்டத்தின் வேறு பகுதிகளிலும் நடத்திவந்தார். இது தவிர, பிரிட்டிஷ் துரைமாரிடம் ஸ்டேர்லிங் பவுண்களை வாங்கிக் கொண்டு பதிலாக இலங்கை நாணயங்களை வழங்கும் money changing தொழிலிலும் துரைமார், தமிழ் வர்த்தகர்களுக்கு வட்டிக்கு கடன் வழங்கும் தொழிலிலும் கருப்பையா கங்காணி ஈடுபட்டிருந்தார்.

வாழ்க்கையில் முன்னுக்கு வருவது என்பது, கிடைத்த வாய்ப்புகளை எல்லாம் பயன்படுத்திக் கொள்ளல் என்று பொருள்படும். போதிப் படிப்பறிவில்லாத, சாதாரண குடும்பத்தில் இருந்து பிழைப்புக்காக வந்த ஒருவர், தான் பணியாற்றிய வேவண்டன் தோட்டத்தையே விலை கொடுத்து வாங்கியிருக்கிறார் என்றால் அவர் இயல்பிலேயே முழுமையான வர்த்தக மூளை கொண்டவராக இருந்திருக்க வேண்டும். அவரிடம் ஒரு தூரநோக்கும். இலட்சியமும் இருந்திருக்க வேண்டும். அதனால்தான் அவரால் இந்த அளவுக்கு உயர முடிந்தது. இதே மூளையுடன் அவர் இன்று இருந்திருந்தால் ஒரு பெரும் வர்த்தக சாம்ராஜ்யத்தின் தலைவராக இருந்திருப்பார்.

பெருந்தோட்டங்களைச் சேர்ந்த பலர் லயன்களில் பிறந்தவர்கள். அவர்களில் பலர் பெரும் முதலாளிகளாக, வர்த்தக நிறுவன உரிமையாளர்களாக, கல்வியில் சிறந்தவர்களாக மாறி இருக்கிறார்கள். எனவே, பெருந்தோட்டங்களில் சாதாரண குடும்பங்களில் பிறந்த இளைஞர்கள் தோட்ட வேலையே விதி என்றிருந்து விடக் கூடாது. தமது தோட்டங்களில் இருந்து வெளியே சென்று இன்று பிரபலமான மனிதர்களாகவும், வர்த்தகர்களாகவும் விளங்குவோரை முன் மாதிரியாகக் கொள்ள வேண்டும். முன்னேறுவதற்கான எந்த வழிகளும் இல்லாத ஒரு காலத்தில் ஒருவரால் ஒரு தோட்டத்தையே வாங்க முடிந்தது என்பதில் இருந்து, மனமிருந்தால் மார்க்கமுண்டு என்பது எவ்வளவு தூரம் உண்மையான வார்த்தை என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

சௌமியமூர்த்தி தொண்டமானின் உழைப்பால் உயர்ந்த அப்பா கருப்பையா பெரிய கங்காணி, அவ்வப்போது தமிழகம் செல்வார் தன் குடும்பத்தாரை பார்ப்பதற்காக. அச்சமயத்தில் சௌமியமூர்த்தி பிறக்கவில்லை. அவர்களுக்கு குழந்தை இல்லாததால் அதை ஒரு குறையாக உறவினர்கள் சொல்லிக் கொண்டிருப்பார்கள். இப்போதும் கூட, திருமணமான தம்பதியினருக்கு ஐந்து வருடங்களாக மகப்பேறு வாய்க்கவில்லையானால் அதையே பெரிய பிரச்சினையாக எடுத்துக் கொண்டு கண்ட இடமெல்லாம் உங்களுக்கு குழந்தை இல்லையா? எனக்கு தெரிந்த ஒரு டொக்டர் இருக்கிறார். என்று ஆரம்பிப்பார்கள். அந்தக் காலத்தில் ஒரு தம்பதியினருக்கு ஆறு குழந்தைகளாவது இருக்கும். குழந்தை இல்லை என்று சொல்வது பெரும் பிரச்சினையான விஷயம். இப்போது, எனக்குத் தெரிந்த ஒரு டொக்டர் இருக்கிறார்.

(19ஆம் பக்கம் பார்க்க)

அருள் சத்தியநாதன்...

# வெறும் பாலுறவில் மட்டுமே தாம்பத்திய வாழ்க்கை தங்கியுள்ளதா?

## ஓர் இலகுவான சோதிட விளக்கம்!

தமிழக திரைப்படங்களிலும், தொலைக்காட்சி நாடகங்களிலும் இருந்திருந்து ஒரு காட்சி தவறாமல் இடம்பெறும். அதாவது, கல்யாணம் கட்டிக் கொடுத்து நெடு நாட்களோ அன்றிச் சில நாட்களோ தன் மகளைப் பிரிந்திருக்கிற ஒரு தாயானவள், மீண்டும் அவளைச் சந்திக்க நேர்கிற போது அவளிடம் கேட்கிற முதல் கேள்வி இதுவாகத்தானிருக்கும், அதாவது 'சந்தோஷமா இருக்கியாடி?' சந்தோஷமென்று அந்தத் தாய் குறிப்பிடுவது பொன்பொருள், மாடிமனை, மாடு, கன்று வசதிகளை மட்டுமல்ல, அது அவற்றுக்கும் மேலானது, அதுதான் தாம்பத்திய உறவு! ஒரு ஆணும் பெண்ணும் மணவாழ்வில் ஒன்றிணைவதற்கு காதல் ஒரு காரணமாயிருக்கும். பேசிச் செய்கிற கல்யாணமாயினும் அதன் பிறகு ஒருவரையொருவர் புரிந்து கொண்டு காதலால் கட்டுண்டு ஐக்கியமாய் வாழ்ந்தவர்களுமுண்டு. அவ்விதம் இணைந்தவர்களுடைய அன்னியோன்னியமும், நீயின்றி நானில்லையென்ற நெருக்கமும் ஏற்பட காமமும் முக்கிய காரணமானது. அந்தக்காமமே தாம்பத்திய உறவாக வெளிப்பட்டு, கணவன் மனைவிக்கிடையே ஓர் அந்தரங்கமான பிரியத்தையும், ஆழமான நேசிப்பையும் அன்னியோன்நியத்தையும் ஏற்படுத்துகிறது எனலாம். மண்பார்த்து விளைவதில்லை, மரம்பார்த்து படர்வதில்லையென்று விதியை நம்பி இருந்தவரை ஆண்களும் பெண்களும் தாங்கள் ஏற்றுக்கொண்டமை சகித்துக் கொண்டு வாழ்க்கை நடத்தினார்கள்.

ஆனால் இன்று அப்படியில்லை. ஆண்களுக்குச் சமமாக மட்டுமல்ல, அவர்களுக்கு மேலாகவும் பெண்கள் வளர்ந்து விட்டார்கள். பட்டம், பதவி, அரசியல், விளையாட்டு என்று ஆண்களோடு போட்டி போட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்நிலையில் தங்களுக்கு மாப்பிள்ளை தேடுகிற பொறுப்பை பெரும்பாலானோர் தாய் தந்தையருக்குக் கொடுப்பதில்லை. தாங்களாகவே தேடிக் கொண்டு, கல்யாணம் செய்து வைக்கிற பொறுப்பை மட்டுமே பெற்றோரிடம் விட்டு விடுகிறார்கள். இவ்விதம் இணைந்த தம்பதிகளிடையே சொற்ப நாட்களில் விரிசல் ஏற்பட்டு, இணைந்த வேகத்திலேயே பிரிந்துவிடவும் நேரிடுகிறது.

இந்தியாவில் பெரும்பாலான விவாகரத்து வழக்குகளை பெண்களே போடுகிறார்களென்று அண்மைய ஆய்வொன்று கூறுகிறது. பாலுறவில் தங்களைத் திருப்திப்படுத்துகிற சக்தி தத்தம் கணவன்மாருக்குக் கிடையாதென்பதே அவர்கள் கூறும் காரணம். இவ்விதம் பல முறைப்பாடுகள், வழக்குகள்! இதனால் டில்லி உயர் நீதிமன்ற நீதிபதி மிஸ்ரா, மணம் செய்வதற்கு முன்னால் அதற்குத்தகுந்த உடல் நிலை, தகுதி சம்பந்தப்பட்ட ஆண் பெண்ணிடையே இருக்கிறதா என்பதையறிய மருத்துவ பரிசோதனையை சட்டபூர்வமாக்கலாமா என்ற யோசனையை ஊடகங்களினூடாக பொது வெளியில் விவாதம் நடத்தி முடிவு செய்ய அழைப்பு விடுத்துள்ளார். இந்த அழைப்பானது பாரம்பரிய பண்பாடு மற்றும் ஒழுக்க விழுமியங்களைப் பேணும் குடும்பங்கள், மற்றும் சமயப் பெரியார்கள், கல்விமான்களிடையே ஒரு சலசலப்பை ஏற்படுத்தியிருந்தாலும், நம்நாட்டு கலாசார, பண்பாட்டு விழுமியங்கள் இன்றைய நவீன நாகரீகம் மற்றும் கல்வி முறைகளால் சிதைந்து போகக் கூடாதென்பதை விரும்பும் பெரியோர்களால் இந்த பகிரங்க விவாதத்திற்கும் சட்டச் சீர்த் திருத்தம் கொண்டு வரப்படுவதற்கும் எதிர்ப்புத் தெரிவிக்கப்படுகிறது.

நம் சமூகத்தில் சோதிடப்படி ஜாதகப் பொருத்தம் பார்த்தே கல்யாணங்கள் நடந்தேறுகின்றன. இப்படியான குடும்பங்களில் கணவன் மனைவிக்கிடையே காலப்போக்கில் விரிசல் ஏற்பட்டு அது விவாகரத்துவரை போனால், அது அவரவர் சாதகக்கணிப்பிலுள்ள தவறு அல்ல. சாதகம் சரியான நேரம் பார்த்து கணிக்கப்பட்டிருக்க வேண்டும். இவ்விதம் அத்திவாரமே பிழையானால் அப்புறம் அதன் மீது எழுப்பப்படும் கட்டிடம் நிலைக்குமோ?

கணவன் மனைவி உறவில் பாலுணர்வு முக்கியமானது. அதுவே காதலாகி கசிந்துருகி இல்லறத்தை நெடுநாள் கொண்டு செல்ல வைக்கிறது. சந்ததி விருத்தியாக வாழ்வில் அடுத்த கட்டத்தை நோக்கி நகர்த்துகிறது. கணவனையும் மனைவியையும் பாலுறவில் என்றென்றும் திருப்திகாண வைக்கிற பரஸ்பர கிரக அமைப்பு பற்றி மந்திரேசுவரர் என்ற சோதிட மேதை தமது 'பலதீபிகை' என்ற சோதிடக்கிரந்தத்தில் குறிப்பிடுவதாவது: ஒரு பெண்ணினுடைய சாதகத்தில் செவ்வாய் நின்ற ராசிக்கு ஒரு கேந்திரத்தில் ஆணின் சாதகத்திலுள்ள சுக்கிரன் அமர்ந்திருக்கக் காணப்பட்டால், அதுவே அவர்களது நீடித்த தாம்பத்திய வாழ்க்கைக்கு உத்தரவாதம் தருவதாகும். கேந்திரமென்பது 4ஆம், 7ஆம், 10ஆம் ராசிகள் அல்லது வீடுகளாகும். பெண்ணின் சாதகத்தில் செவ்வாய் இருந்த ராசியில் ஆணின் சாதகத்தில் சுக்கிரன் அமர்ந்திருக்கக் காணப்படுவதும் ஒரு கேந்திரமாகவே கொள்ளப்படும்.

பெண்ணென்றால் பொதுவாகவே அழகுதான். அதிலும் செவ்வாய் தோஷமுள்ள பெண்ணானவள் ஏதோவொரு விதத்தில் விசேட அழகுடன் காணப்படுவாள். அந்த அழகை காட்டிலெறிந்த நிலாப் போல பயனற்றதாக்குவதுதான் செவ்வாய் தோஷத்தின் விசேடமே! செவ்வாய் தோஷமென்பது ஆண் – பெண்ணிடையே நட்புக்கு ஓர் உத்தரவாதம் தருகிற அமைப்பாகும். ஆனால் செவ்வாயோடு சுக்கிரன் சேர்ந்திருக்கிற தோஷமானது அவரவர் ஒழுக்கத்தில் தளப்பமுண்டாக்கிக் கேவலப்படுத்தும்.



ஆகவே அத்தோஷத்தினால் ஏற்படுகிற அபவாதத்திலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் ஒரேவழி, தம்மைப்போலொத்த செவ்வாய் – சுக்கிரச் சேர்க்கையுள்ள சாதகரையோ அன்றிச் சாதகியையோ தேடிக் கல்யாணம் செய்து கொள்வதாகும்.

இச்சேர்க்கையென்பது செவ்வாயும் சுக்கிரனும் நேர்ப்பார்வை மூலம் ஒன்றையொன்று நோக்குவதும், ஒருவர் வீட்டில் மற்றவர் மாறியிருந்து பரிவர்த்தனம் பெறுவதும் கூட தோஷமாகவே கருதப்படும்.

மேலும் பஞ்சாங்கம் குறிப்பிடும் 14 பொருதத்தங்களில் எல்லாமே பொருந்தி வரவேண்டுமென்பதில்லை. அவ்விதம் பொருந்துவது சாத்தியமுமில்லை.

முக்கியமாக கிரகம், வசியம், யோனி, ரச்சுப் பொருத்தங்கள் பொருந்தினாலே போதுமாது. இவையே தம்பதிகளை இரும்பும் காந்தமும் போல வாழும் காலம் வரைக்கும் ஒன்றியிருக்க வைக்குமென அந்நூலில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

திருவோணம்
thiruvonamsj@gmail.com

# சட்டவிரோத மஞ்சள் கடத்தலை தடுப்பது எவ்வாறு?



'மஞ்சளின் உள்ளூர் உற்பத்தி தன்னிறைவு அடையும் வரை மஞ்சள் தூளின் விலையேற்றத்தையும் 'சட்ட விரோத தல்களையும் தடுப்பது மிகவும் சவாலானதாகும்'



எஸ்.றொசேரியன் லெம்பேட்
மன்னார் குறூப் நிருபர்

நாட்டில் ஏற்பட்ட 'கொரோனா' தொற்றின் தாக்கத்தை தொடர்ந்து இலங்கையில் அண்மைக் காலமாக மஞ்சள் தூளுக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதோடு, விலை எப்போதும் இல்லாத அளவுக்கு அதிகரித்துள்ளது.

இதனை சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டோர், இந்தியாவில் இருந்து கஞ்சா, ஹெரோயின் மற்றும் பீடி இலைகளை சட்ட விரோதமாக கடல் மார்க்கமாக நாட்டிற்குள் கொண்டு வருவது போன்று தற்போது மூடை மூடையாக மஞ்சள் கட்டிகளையும் கொண்டு வர ஆரம்பித்துள்ளனர்.

குறிப்பாக இந்தியாவில் இருந்து தலைமன்னார் மற்றும் மாவட்டத்தின் ஏனைய கடற்பிராந்தியங்கள் ஊடாக மன்னார் மாவட்டத்திற்கு கடத்தி வருகின்றனர்.

மன்னாரில் இருந்து ஏனைய மாவட்டங்களுக்கு மஞ்சள் கட்டிகள் மூடை மூடையாக கொண்டு செல்லும் சட்ட விரோத நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்ற போதும் சட்டத்தின் முன் அவர்கள் மாட்டிக்கொள்ளும் நிலையும் தொடர்கின்றது.

மன்னார் மாவட்டத்தில் மஞ்சள் தூள் ஒரு கிலோ 4 ஆயிரம் ரூபாய் முதல் 5 ஆயிரம் ரூபாய் வரை சில வர்த்தக நிலையங்களில் மறைமுகமாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

தற்போது இந்தியாவில் இருந்து மன்னார் கடற்பிராந்தியங்கள் ஊடாக கடத்தி வரப்படுகின்ற மஞ்சள் கட்டி மூடைகள் கடற்படையிடம் சிக்கிக் கொள்ளுகின்றது.



இவை உள்ளூர் பெறுமதியில் பல கோடிகள் தேறும். அரசாங்கம் கிலோவுக்கு 750 ரூபாய் என்று விலை நிர்ணயம் செய்துள்ள போதிலும், சுமார் 5000 ரூபாய் வரை இந்த மஞ்சள் கட்டிகள் மறைமுகமாக விற்கப்படுகின்றன.

கடற்படையினருக்கு கிடைக்கின்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது கடற்கரை பகுதிகளில் இருந்து குறித்த மஞ்சள் கட்டி மூடைகள் தொடர்ந்தும் மீட்கப்படுகின்றன.

அல்லது கடத்தல் காரர்கள் தாங்கள் தப்பித்துக் கொள்ளுவதற்காக கடலில் மஞ்சள் மூடைகளை மிதக்க விட்டுச் செல்லுகின்றனர்.

கடற்கரையில் இருந்து மஞ்சள் மூடைகளை கொண்டு செல்லும் போதும் கடற்படையினர் மற்றும் பொலிஸாரிடம் மாட்டிக் கொள்ளுகின்றனர்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் மஞ்சள் கடத்தல் காரர்கள் மற்றும் உதவியாளர்கள் சட்டத்தின் பிடியில் மாட்டிக் கொள்ளுகின்றனர்.

கொரோனா' வைரஸ் பரவலால் ஏற்பட்டுள்ள நெருக்கடியான பொருளாதார சூழலில் ரூபாயின் பெறுமதி மேலும் வீழ்ச்சியடைவதை தடுப்பதற்காக இலங்கையில் வாகனங்கள் உட்பட பல பொருட்களை இறக்குமதி செய்வதற்கு தற்காலிகமாக தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, மஞ்சள் மற்றும் ஏலம், மிளகு, கராம்பு உள்ளிட்ட வாசனைத் திரவியங்களின் இறக்குமதிக்கும் கடந்த ஆண்டின் இறுதியில் தடைவிதித்த அரசாங்கம், அவற்றின் உற்பத்தியை உள்ளூரில் ஊக்குவிக்கப்போவதாக கூறியது.

இறக்குமதித் தடைக்கு முன்னர் இலங்கை தன் மஞ்சள் தேவைக்கு இந்தியாவிலேயே முழுமையாக தங்கியிருந்தது.

ஆனால் சிறிதளவாக உள்ள உள்நாட்டு உற்பத்தியை அதிகரித்து தன்னிறைவு அடைய முடியும் என்று அரசு நம்புகின்றது.

அதற்காக 100 கிராமங்களில் மஞ்சள் செய்கையை விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

ஆனால், இந்த இறக்குமதி தடையால் இப்போது சட்ட விரோத மஞ்சள் கடத்தல் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

தற்போது உடலுக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய அளவுக்கு கலப்படம் செய்யப்பட்ட மஞ்சள் தூள் சந்தைக்கு வந்துள்ளதாக நுகர்வோர் அதிகார சபை மக்களை எச்சரித்துள்ளதோடு, மஞ்சள் கொள்வனவு செய்கின்ற போது மக்களை விழிர்ப்புணர்வுடன் செயற்படுமாறு அறிவுறுத்தி உள்ளனர். இந்த நிலையில், அதிக அளவு மஞ்சள் தூளினை நாளாந்தம் உணவுடன் பயன்படுத்தும் பழக்கம் இலங்கை மக்களிடம் காணப்படுகின்றது.

அதனை ஒரு வியாபார நோக்காகக் கொண்டு இன்றைய காலப்பகுதியில் இந்தியாவில் இருந்து மஞ்சள் கட்டிகள் அதிக அளவில் தலைமன்னார் கடற்பரப்பு உட்பட மாவட்டத்தின் ஏனைய கடற்பிராந்தியம், மற்றும் புத்தளம் கடற்பரப்பு ஊடாக மன்னார் மாவட்டத்திற்கும், ஏனைய இடங்களுக்கும் சட்ட விரோதமாக கொண்டு செல்லப்படுகின்றது.


இதனால் இலங்கை நாட்டின் சுகாதார நிலைமையும் பாதிப்படையும் நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போதைய நாட்டின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு மஞ்சள் தூளின் இறக்குமதி தடுக்கப்பட்ட நிலையில், மஞ்சளின் உள்ளூர் உற்பத்தி தன்னிறைவு அடையும் வரை, மஞ்சள் தூளின் விலை யேற்றத்தையும் சட்ட விரோத கடத்தல்களையும் தடுப்பது மிகவும் சவாலான விடயமாக அமையும் என்பதே உண்மை.






# அண்ணா எனும் ஆலமரம்



மாவுசா இரா. தமிழ்ப்பித்தன்,
கடவத்தை

காஞ்சியிலே பிறந்த அண்ணா
கன்னித் தமிழ் காத்த அண்ணா
சேறாடி கிடந்த தமிழை
நீராட்டித் தந்த அண்ணா
இரும்பாகக் கிடந்த தமிழை
கரும்பாக மாற்றிய அண்ணா
நீ மட்டும் எழுச்சி கொண்டு
எழுந்து நிற்க வில்லை யென்றால்
ஆரிய மாயை யினால்
ஆட்டம் கண்டிருக்கும் தங்கத்தமிழ்
தமிழினைக் கண்ணாய்க் காத்தாய்
தமிழர்த் திரு நாடும் கண்டாய்
தமிழையும் ஆண்டது நீ
தமிழ் நாட்டையும் ஆண்டவன் நீ
கம்பரசம் தந்ததும் நீ – வடவர்
கொம்பதனை உடைத்ததும் நீ
ஆலமரமென கிளை விரித்தாய்
விழுதுகள் பலபரப்பி வீரியம் கொண்டாய்
கற்றவர் கல்லாதார் எல்லாருக்கும்
ஏற்ற மிகு அண்ணாவாக திகழ்ந்தாய் நீ
தமிழும் தமிழினமும் தரணியில் உள்ளவரை
தங்கத்தமிழ் அண்ணா உனை போற்றும்
பொதிகை மலைத் தென்றலும் கூட
'மெரினா' வில் உன் சமாதிக்கு சாமரம் வீசும்

# களிப்பே பொங்கவில்லை!

கல்முனைப் பூபால்

விவசாயி உழுதாற்றான் மனித உயிர் வாழும் – செந்நெல்
விளையாத நிலமெல்லாம் பசிநெருப்பே மூளும்
களவெட்டிக் குள் நுழைந்து... வைக்கோ லடித்து
காகம், குருவியை விரட்ட 'டேயன்னா' போட்டு
உழுது நெல் விதைக்கையிலே அட்டைக்கடி பட்டு
உதிரத்தைச் சாறாக்கி மாடாய் உழைத்தும்
அடவுவைத்த நகைகளையும் திருப்ப முடியாது
அவதியுறும் உழவனுக்கு களிப்பென்று பொங்கும்!?
உழவு இயந்திர காரனுக்கு அரைவாசி உழைப்பு
உரம், கெமிக்கல் தந்தவர்க்கு பத்தில் இருபங்கு
வளவளெனச் சளப்புகிற வட்டவிதா னைக்கும்
வயல்குளிக்க தண்ணிதந்த ஓவிசர்க்கோர் கப்போட்
உழவுமுதல் சூடடிக்கும் மட்டும், பணிஸ் தேநீர்
உவந்தளித்த சந்திக்கடை நானாவுக்கு கொஞ்சம்
இவைக்கு பங்குவைத்து முடிய, வெறுங்கையே
எஞ்சும்... விவசாயிக்கு களிப்பென்று பொங்கும்!
அண்ணன் இருக்க... தம்பி செழித்தால்...
அகம் நாம் மகிழ்வதில்லை! சும்மா
அதுஇது... என்று அவனைக் குழப்பி
விடாமல்நாம் துயில்வதில்லை
எங்கும் பொறாமை,.... எதிலும் கயமை
இதுவே எம் வாழ்வாகி
இருப்பத னாற்றான், களிப்பின் வரவு
நடைபெறா திருக்கிறது
ஒன்றா இரண்டா உறவை அரிக்கும்
கறையான் புற்றுக்கள் – அறிவு
ஒளியை மறைத்து இருளை வளர்க்கும்
பொய் பிர மிட்டுக்கள்!
அன்பும்... உறவும் அகல அகல
மனமே பாலைவனம்
ஆச்சு,... இதனால் களிப்பும்... சிரிப்பும்
அகன்றே போச்சின்று!

# நெல்சன் மண்டலோ



றுசைனா ஹாசீம் அக்கரைப்பற்று 02

வரலாற்றின் நாயகன்
வையகத்தின் மாமைந்தன்
இனவெறியை இல்லாதொழித்தவன்
தென்னாபிரிக்க தென்றல்
உலகப் புகழ் நெல்சன் மண்டேலா
கறுப்பினத்தவர்க்கு ஏற்பட்ட
அதிகார அடக்குமுறைகளை
கடுமையாக எதிர்த்தவர்
அநீதி அடங்க வேண்டுமென்று
அயராது உழைத்தவர்
கறுப்பின மக்களின் உரிமைக்காக
கடுமையாகக் குரல் கொடுத்தவர்
தென்னாபிரிக்காவை வளம்
பெறச் செய்த தலை சிறந்த அதிபர்
தன் மக்களுக்காக சிறைவாசம்
அனுபவித்த தியாகி
தன் நாடு வளர்ச்சிப் பாதையில்
நடைபோட விதை விதைத்துச்
சென்ற உத்தமர்
வாழ்க உன் புகழ் வையகம் எங்கும்

# நிலைத்து நிற்கும்!

கிண்ணியா,
ஜெனீரா ஹைறுல் அமான்

அழகிய பேச்சால் நெஞ்சை
அமுதமாய் அள்ளித் தந்தாய்
பழகிய சிறிது காலம்
பாசத்தை நிறைத்து விட்டாய்
எழிலுடன் நடை பயின்றாய்
எரிச்சலே கொள்ள மாட்டாய்
விழிகளால் கவி வடிப்பாய்
வியப்புறு பணிகள் செய்வாய்
புன்னகை உதட்டில் மின்ன
புதுப்புது சேதி சொல்வாய்
தன் கையே தனக்குதவியாய்
தனிமையில் சமையல், செய்வாய்
பொன்முகம் மலர நாளும்
பொறுப்புடன் கடமை புரிவாய்
உன்னகம் நாடிவருவோரை
உபசரிப்பதில் உயர்ந்து நிற்பாய்
என்னகம் குளிரப் பேசி
என்னை நீ மயக்கி விட்டாய்!
யாரையும் குறை கூறாது
யதார்த்தமாய் பேசி நிற்பாய்
உரைகளால் சொல்ல ஒண்ணா
உறவினை வளர்த்து விட்டாய்
வரையறை இன்றி நட்பு
வளர்ந்திட வேண்டும் நாளும்
கரைபுரண் டோடும் சினேகம்
காலமெலாம் நிலைத்து நிற்கும்!

# தாரமான தாய்

கலாபூஷணம் பி.எம்.எம்.ஏ.காதர்

என்னில் அவளாகிய
என்னவளுக்கு
அறுபத்தொருவயது
அவள் எனக்கு
தாரமாகித் தாயானவள்
நிறையன்பில்
நிரந்தரமானவள்
நிம்மதி தந்தவள்
நெஞ்சில்
நிறைந்தவள்
வார்த்தையில் நிதானம்
வரம்புமீறாத பேச்சு
வாழ்தலைப் புரிந்தவள்
புரிதலில் வாழ்பவள்
என்னவள்
பொறுமைக்கு
உதாரணமானவள்
மறுமைவாழ்வை
சிந்திப்பதில்
சிறப்பானவள்
தாயன்பின் மகத்துவத்தை
தாரமாய் வந்துதந்தவள்
சேய் போல் என்னை
சேதாரமின்றி
வாழவைப்பவள்
அவள்
இல்லாதபொழுதுகள்
எப்போதும் எனக்கு
ஏக்கம்தான்
நான் மரணித்த பின்பும்
அவள் வாழவேண்டும்

# ஓ... வசந்தமே



வான்மதி

எனக்கு இன்று வசந்த காலம்
நீ என்னை முதன் முதலில்
பார்த்தது இன்னும் ஞாபகம்
நான் நடுத்தர வயதை தாண்டி
இருந்தும் நீ என்னை
உன்னுடையவள் ஆக்கிக் கொண்ட
நாள் முதல் நாள் போன்று
இன்றும் என்னை ஆராதிக்கின்றாய்
என் அழகு தேவதை நிலை
மாறிய போதும் உன் அன்பு
மட்டும் ஓயவில்லை
கடல் அலை போன்று திரும்ப
திரும்ப எழும்பி வருகின்றது

# காதல்



எம்.எச். ரீமா, குருநாகல்

சொல்லி வராதது காதல்
சொல்ல முடியாததும் காதல்
சுகமாய் வருவதும் காதல்
சுமையாய் வருவதும் காதல்
தூக்கத்தை தொலைப்பதும் காதல்
ஏக்கத்தை வளர்ப்பதும் காதல்
கனவைத் தருவதும் காதல்
நினைவைக் கலைப்பதும் காதல்
நினைத்தால் இனிப்பதும் காதல்
நிம்மதியை இழப்பதும் காதல்
இவை அனைத்தும் உன்னை
பார்த்த பின்பு தானே
ஏற்பட்டது...


# அற்புதக் காதலன்




கலாபூஷணம்
அப்துல் ஹலீம்,
ஏறாவூர்06

பாதாதிகேசமாய் என்னை
(ஸ்) பரிசிப்பான்
காதோரம் வந்து தெம்மாங்குக்
கானம் இசைப்பான்
கடலோர மண்மீது
கால் நீட்டி நான் படுக்க
உடலின் மேலூர்ந்து என்னை
உறக்கத்திலாழ்த்திடுவான்
வண்ண மலர்களின்
வாசங்களிற் புரண்டுவந்து
என்னுடனிணைந்து
என்னையொரு –
சந்தன மரமாக்கிடுவான்
தென்னை இளங்கீற்றுக்களும்
தேன் மலர்ச் சோலைகளும்
கன்னி இளங் கூந்தல்களும்
அவன் மேல் –
காதல் வலை வீசி நிற்கும்
கட்புலனாகாமல் வந்து
காதல் செய்யும் தென்றலவன்
அள்ளி யணைக்க முயல்வோர்க்கு
அகப்படாத வோர்
அற்புதக் காதல் மன்னன்

# மிதிவண்டிபோல





திருமதி
மணிமேகலை, வரதராஜன்
வந்தாறுமூலை

சாத்திவிட்ட மிதிவண்டி போல
சாய்ந்தே கிடக்கிறது மனதும்
சார்ந்து வாழ்ந்த காலம்போய்
சாய்ந்து கொள்ள காலமின்றி
சேர்ந்து மிதித்த காலங்களை
சோர்ந்திருக்கும் மனம்
சுற்றும் போது...
தத்தித் தெத்தி சுற்றிப் பழகிய
நாட்களும்
வீழ்ந்து சீறி எழுந்து தடவி
இரத்தம் துடைத்து
மருந்தின்றி மறுபடியும் பழகி
மிதி வண்டி விளையாட்டுப்
போட்டியில்
மிகையாய் பங்கேற்று
மிகுந்த பரிசுகள்
பெற்றதையும்
அம்மாவுக்கு உதவியாய்
ஆண்மகன் போல
அசராமல்
அலுவல்கள் பார்த்ததையும்
விதி வண்டியோடு
வாழ்ந்த காலத்தை
இந்த வனப்பழந்த வயசான
சொல்லுதப்பா
முன் ஒன்றுமாய்
பின் ஒன்றுமாய்
காற்று இரண்டும்
போன பின்பு
இந்த
காயம் மட்டும்
சாயந்தே கிடக்கிறது
சுற்ற முடியாமல்
காலச் சுழற்சிகள்
இப்படித்தான்
தனிமைப்படுத்துகிறது
இதயம் இருந்தாலும்
இரும்பு துருப்பிடிப்பதுபோல
விருப்பு வெறுப்புகளாக
இருப்புக் கொள்ளாமல்
இப்படியே கிடக்கிறது
உதவியற்றும்
உதவி முடியாமலும்

# நேரம் உயிர் போன்றது



திவுளான சவாஹிர்,
பொலன்னறுவை

நேரம் பொன்னானதென்பது
பொய்யானது
நேரம் பெறுமதி
கடந்தது
ஒருமுறை போனால்
திரும்பாத
உயிர் போன்றது
உலகில் உச்ச
மதிப்பு உயிருக்கென்றாய்
நேரம் கூட அப்படித்தான்
நேராரோக்கியம்
இல்லையென்றால்
உடலாரோக்கியம்
கெட்டுப்போவாய்
நேர முகாமைத்துவம்
சரியென்றானால்
உன் பணிகளெல்லாம்
உனக்குப் பணியும்
ஒரு நிமிடம்
தவறியதால்
வாழ்க்கையில்
பெரிய இழப்புக்களை
சந்தித் தோர் கோடி
நேரம் தவராமையால்
சாதனைகள் பல
சாதித்தோர் பலகோடி
நேரம் தவராதிரு
அது உன்னை
தவறாக்காது
நேரம் தவறாத
எல்லா நேரமும்
நல்ல நேரமே
உன் நேரம்
நல்லதா கெட்டதா
என்பதை நேரம்
தீர்மானிப்பதில்லை
நீயே தீர்மானிக்கிறாய்
நெஞ்சுறுதியோடு
நேரமுகாமை செய்
நேரம் தவறாமல்
வெற்றிகள் உன்
காலடி தேடும்

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்
மிகிந்தலை

# அறிவித்தல்

## கல்விசார் மற்றும் பரீட்சை நடவடிக்கைகள் தொடர்பாக பல்கலைக்கழகம் மீண்டும் திறக்கப்படல்

இலங்கையைப் பாதித்துள்ள கொரோனா வைரஸ் நிலைமை காரணமாக மூடப்பட்டிருந்த இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்திலுள்ள கீழ்க்காணும் பீடங்களின் கல்விசார் மற்றும் பரீட்சை நடவடிக்கைகளுக்காக கீழே காட்டப்பட்டுள்ளவாறு பல்கலைக்கழகம் திறக்கப்படவுள்ளது.

**01. சமூகவியல் மற்றும் மானுடவியல் பீடம்**
2015/2016 கல்வியாண்டின் முதுமாணி (விசேடம்) மற்றும் 2016/2017 கல்வியாண்டின் முதுமாணி (சாதாரண/விசேட) மற்றும் 2017/2018 (சாதாரண/விசேட) பாடநெறிகளை கற்கும் மாணவ மாணவிகளுக்காக மாத்திரம் விரிவுரை மீளாய்வு மற்றும் பரீட்சை நடவடிக்கைகளுக்காக 2020.09.16 அன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாக இத்தால் அறிவிக்கின்றேன்.

**02. முகாமைத்துவ கல்வி பீடம்**
முகாமைத்துவ பீடத்தின் 2019 கல்வியாண்டில் புதிய மாணவ மாணவிகளின் கல்வி நடவடிக்கைகள் 2020.09.28 அன்று ஆரம்பிக்கப்படுவதுடன் 2016/2017 அன்று கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுவதாக மேலும் அறிவிக்கின்றேன்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பீடங்களிலுள்ள வதிவிட வசதிகளைப் பெற்றுள்ள அனைத்து மாணவ மாணவிகளும் 2020.09.15 அன்று பி.ப.4.00 மணிக்கு முன்னர் விடுதிக்கு வருகைதர வேண்டும்.

அவ்வாறே முகாமைத்துவ கல்வி பீடத்தின் 2019 கல்வியாண்டிலுள்ள புதிய மாணவ மாணவிகள் 2020.09.27 அன்று விடுதிகளுக்கு வருகைதர வேண்டும்.

**பதிவாளர்,**
**இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்,**
**மிகிந்தலை**

சுகாதார அமைச்சு
SPMC
அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம்

# சுகாதார சேவைகள் தொடர்பாக விலைமனுக்கோரல் 2020/2021

இரத்மலானை, கந்தவலவத்த, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, இல.11 என்ற இடத்தில் அமையப்பெற்றுள்ள அரச மருந்தாக்கல் உற்பத்திக்கூட்டுத்தாபனம் (SPMC) மூலம், சுகாதார சேவைகள் தொடர்பாக, அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட சுகாதார சேவைகளை வழங்கும் நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன.

விலைமனுப்பத்திரங்களை பெற்றுக்கொள்வதற்கு மீளளிக்கப்படாத ரூ.1000/- வைப்புத்தொகையை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் கணக்குப்பிரிவிற்குச் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டுடன் எழுத்துருவிலான வேண்டுதலொன்றை, திட்டமிடல் மற்றும் பெறுகை பொது முகாமையாளரிற்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள், 2020 செப்டம்பர் 29ஆம் திகதி மு.ப.10.00 மணிக்கு முன்னர் இரத்மலானை, கந்தவலவத்த, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, இல.11, அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபன பெறுகை குழுத் தலைவரிற்கு கிடைக்கத்தக்கதாக பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும் அல்லது அதற்காக வைக்கப்பட்டுள்ள விலைமனுப்பெட்டிக்குச் சேர்க்கப்படல் வேண்டும்.

விலைமனுக்கள் சேர்க்கப்படும் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் விலைமனு மாதிரிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விலைமனு இலக்கமான SPMC/P&P/LQ/SANITARY/01/2020 என்பது குறிப்பிடப்படல் வேண்டும்.

அது தொடர்பாக ஏதேனும் தெளிவுறுத்தல்கள் தேவையெனில், 011-2637574 அல்லது 011-2635353 மூலம் திட்டமிடல் மற்றும் பெறுகை பிரதி பொது முகாமையாளரை அழையுங்கள்

**தலைவர்**
**அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம்,**
**இலக்கம் 11,**
**சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை,**
**கந்தவலவத்த, இரத்மலானை.**

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil your Future Dreams

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தினால் நடாத்தப்படும் பயிற்சிக் கற்கை நெறிகளைக் கற்பிப்பதற்காக பயிற்றும் போதனையாளர்கள் பயிற்றுநர் போதனை குழுவில் பதிவு செய்யப் படுகின்றனர். விண்ணப்பப் படிவங்கள் மற்றும் மேலதிக விபரங்களுக்கு பணியகத்தின் இணைய தளத்திற்குப் பிரவேசிக்கவும்.
www.slbfe.lk
இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம்
24 மணி நேர சேவை - 1989
பயிற்சிப் பிரிவு - 0112791909

Repeat Your Ad For Better Offers

வாழ்வை மீண்டும் வளமாக்குங்கள் www.neptunehealth.lk
உள்நோயாளர் மருத்துவ சேவைகள்

மனநல ஆரோக்கிய சிகிச்சைகள் உட்பட மன அழுத்தம், போதைபொருள் பாவனைக்கு அடிமையாதல், Bipolar Disorder, உக்கிரமான நடத்தையுடைய நோயாளிகள்
30ற்கும் மேற்பட்ட **முன்னணி மருத்துவர்களால்** மும்மொழியிலும் சிகிச்சைகள் வழங்கப்படுகிறது.
NO. 186, PARK ROAD, Narahenpita.
Tel: 0720 239 747 / 0720 222 555 / 0112 590200
NEPTUNE HEALTH BE KIND TO YOURSELF

# விலைமனு கோரல் அறிவித்தல்

## இலங்கை கடற்படையினருக்கு உரிய சேவைக்கு பொருத்தமில்லாத வாகனங்களை விற்பனை செய்தல்

இலங்கை கடற்படையினருக்கு உரிய சேவைக்கு பொருந்தாத வாகனங்களை விற்பனை செய்வதற்காக 2020 ஒக்டோபர் மாதம் 07ஆம் திகதி 1400 மணித்தியாலம் வரையான காலப்பகுதியில் இலங்கை கடற்படை தலைமையகம், தபால் பெட்டி இல. 593, கொழும்பு 1 எனும் முகவரியில் விலைமனு கோரல் சபையின் தலைவர் மூலம் முத்திரையிடப்பட்ட விலைமனு கோரல்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. அது தொடர்பாக விபரங்கள் மற்றும் நிபந்தனைகள் கீழ்க்காணும் வகையில் அமைகின்றன.

1. விற்பனைக்குள்ள வாகனம் ஒன்று அல்லது அதற்கு மேலதிகமானவைகளுக்கு விலைமனு கோரல்களை சமர்ப்பிக்க முடியுமென்பதுடன் ஒவ்வொரு வாகனம் மற்றும் மொத்தத்திற்காக (LOT) வெவ்வேறாக விலைகளை குறிப்பிட்டு விலைமனு கோரல்களை விண்ணப்பிக்க வேண்டும்.

2. விலைமனுகோரல் கட்டணமாக மீள் பெறமுடியாத ரூ. 500/- மற்றும் மீள் பெற்றுக்கொள்ளும் வகையில் கீழ்க்காணும் வகையில் பிணைகள் அனைத்து வாகனம் / தொகைக்காகவும் சமர்ப்பிக்க வேண்டியதுடன் அவ்வாறான தொகை கடற்படை தலைமையகத்தில் பணிப்பாளரிடம் (நிதி) பணமாக செலுத்தப்பட வேண்டும். அதன் பொருட்டு வழங்கப்படும் பற்றுச்சீட்டு சிரேஷ்ட அதிகாரிக்கு (களஞ்சிய முகாமைத்துவம்), SLNS, கெமுனு, வெலிசர, ராகம எனும் இடத்தில் ஒப்படைத்த பின்னர் விலைமனுகோரல் ஆவணங்கள் வாரத்தின் வேலைநாட்களில் 0900 மணித்தியாலம் தொடக்கம் 1600 மணித்தியாலம் வரை 2020 செப்டெம்பர் மாதம் 14ஆம் திகதி தொடக்கம் 2020 ஒக்டோபர் மாதம் 06ஆம் திகதி வரை வழங்கப்படுவதுடன், ஏதேனும் வாடிக்கையாளரிடம் விலைமனு கோரல் வழங்கிய பின்னர் விலைக்கு வாங்குவதை நிராகரித்தால் அல்லது குறிப்பிட்டுள்ள திகதியை அகற்றுவதற்கு தவறினால் அப்பணம் மீள் செலுத்தப்படமாட்டாது.

**மொத்த வாகனத்திற்காக (இலகுரக மற்றும் கனரக வாகனங்கள்) ரூ. 15,000.00**

| வாகன இலக்கம் | வாகன வகை | தயாரித்த வருடம் |
|---|---|---|
| නාහ 1146 | கார் | 1996 |
| නාහ 1142 | கார் | 2000 |
| නාහ 5182 | கார் | 1999 |
| නාහ 5179 | கார் | 1999 |

**வாகன இடிபாடுகள் (இலகுரக மற்றும் கனரக வாகனங்கள்) ரூ. 7,500.00**

| வாகன இலக்கம் | வாகன வகை | வாகன இலக்கம் | வாகன வகை |
|---|---|---|---|
| නාහ 1409 | கார் | නාහ 1407 | கார் |
| නාහ 1406 | கார் | නාහ 5998 | டிபென்டர் |
| නාහ 1410 | கார் | නාහ 5286 | டிரக்டர் |
| නාහ 1411 | கார் | නාහ 8059 | ஜேசீபீ |
| නාහ 1412 | கார் | නාහ 8060 | ஜேசீபீ |
| නාහ 1408 | கார் | නාහ 6332 | டிரக் |
| නාහ 1413 | கார் | නාහ 6242 | டிரக் |

மொத்தம் 01 (இடிபாடுகள் மோட்டர் வண்டி-10 Lot ஒன்றாக) ரூ. 2,000.00
மொத்தம் 02 (இடிபாடுகள் கை டிரக்டர்-02 டிபென்டர் இடிபாடுகள்-01 Lot ஒன்றாக) ரூ. 2,000.00
மொத்தம் 03 (இடிபாடுகள் ஏபீசீ-02 Lot ஒன்றாக) ரூ. 2,000.00

3. விற்பதற்கு உள்ள சேவைக்கு பொருந்தாத வாகனங்கள் 2020 செப்டெம்பர் மாதம் 14ஆம் திகதியிலிருந்து 2020 ஒக்டோபர் மாதம் 06ஆம் திகதி வரைக்கும் SLNS, கெமுனு, வெலிசர, ராகம இலங்கை கடற்படை விற்பனை முற்றத்தில் 0900 மணித்தியாலத்தில் இருந்து 1600 மணித்தியாலம் வரை அரசாங்க வேலை நாட்களில் பரிசோதனை செய்து பார்க்க முடியும் என்பதுடன் வருகை தரும் நபர்கள் தனது தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் அடையாள அட்டை ஒன்றை கொண்டு வர வேண்டும்.

4. 2020 ஒக்டோபர் மாதம் 07 திகதி 1400 மணித்தியாலம் வரை விலைமனு கோரல்களை ஒப்படைக்க முடியும் என்பதுடன், நேரம் முடிவடைந்த உடனே இலங்கை கடற்படை தலைமையகத்திற்கு முன்வைக்கப்பட்ட விலைமனு கோரல்கள் திறந்து பார்க்கப்படும் என்பதுடன் மேலதிக தகவல்களுக்காக தொ.இ. 011-7193375 தொடர்பு கொள்ள முடியும்.

**தலைவர்**
**திணைக்களம் விலைமனு கோரல் சபை**
**இலங்கை கடற்படை தலைமையகம்**
**தபால் பெட்டி இல. 593,**
**கொழும்பு-01.**

# தேசிய ஆராய்ச்சி பேரவை

## இலங்கை

# 2021ஆம் ஆண்டிற்கு வழங்குநர்களைப் பதிவு செய்தல்

01. 2021 ஆம் ஆண்டில் பண்டங்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக தேசிய ஆராய்ச்சி பேரவையுடன் பதிவு செய்ய விரும்பும் உற்பத்தியாளர்கள், உள்ளூர் உற்பத்தியாளர்கள், வழங்குநர்கள் மற்றும் சிவில் பொறியியல் ஒப்பந்தக்காரர்கள்/ உசாத்துணையாளர்களிடமிருந்து தேசிய ஆராய்ச்சி பேரவையின் தலைவரினால் விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

02. ஒரு வகுதிக்கு மேலதிகமாக பதிவு செய்தல் தேவைப்படின், ஒவ்வொரு வகுதிக்கும் தனித்தனியான விண்ணப்பங்கள் ஒரு தபாலுறையில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பதாரியொருவர் (பெரும்பாலும் உள்ளூர் முகவர்) ஒரு முதன்மையாளருக்கு மேலதிகமாக பதிவு செய்தலுக்கு விண்ணப்பித்தால் தனியானதொரு விண்ணப்பம் அவ்வாறான ஒவ்வொரு முதன்மையாளருக்கும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

03. பதிவு செய்தலுக்கான கட்டணத்திற்கான பணக்கொடுப்பனவானது (மீளளிக்கப்படாதது) கட்டணங்கள் (5 ஆம் பிரிவின் பிரகாரம்) விண்ணப்பங்களுடன் ''பொரளை இலங்கை வங்கி, சுப்பர் கிறேட், 192935'' என்ற வங்கி கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கப்படல் வேண்டும். பண வரவுத் துண்டானது விண்ணப்பங்களுடன் இணைக்கப்படல் வேண்டுமென்பதுடன் உரித்தான துண்டில் கம்பனியின் பெயரும் குறிப்பிடப்படல் வேண்டும். காசோலைகள் அல்லது வங்கி வரைவுகள் அல்லது காசுக் கட்டளைகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. மாறாக விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட மாட்டாது.

04. 2020 செப்டெம்பர் 14 ஆம் திகதியிலிருந்து 2020 செப்டெம்பர் 28 ஆம் திகதி வரையும் அலுவலக நேரங்களில் (மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும்) பதிவு செய்தலை கோரும் விண்ணப்பதாரிகள் கொழும்பு-07, வித்யா மாவத்தை, 120/ 7, தேசிய ஆராய்ச்சி பேரவை, கணக்காளரிடமிருந்து விண்ணப்பங்களின் தொகுதியொன்றை ''பொரளை, இலங்கை வங்கி, சுப்பர் கிறேட், 192935'' என்ற கணக்கிலக்கத்திற்கு விண்ணப்பக் கட்டணத்தை (மீளளிக்கப்படாதது) செலுத்தி பெற்றுக் கொண்ட வங்கித் துண்டை சமர்ப்பித்து, பெற்றுக் கொள்ளல் வேண்டும். எந்தவொரு சூழ்நிலையிலும் 2020 செப்டெம்பர் 28 ஆம் திகதிக்கு பின்னர் விண்ணப்பங்கள் வழங்கப்பட மாட்டாது.

05. பண்டங்கள் மற்றும் சேவைகளின் வகுதிகள் மற்றும் பதிவு செய்தல் கட்டணம் (மீளளிக்கப்படாதது)

| வகுதி இல. | வகுதி விளக்கம் | பதிவு செய்தல் கட்டணத் தொகை (ரூபாவில்) |
|---|---|---|
| ஏ.1 | மருத்துவ உபகரணம் மற்றும் ஆய்வுகூட உபகரணம் (10 மில்லியனுக்கு மேலதிகமாகவும் அல்லது நிகராகவும் மற்றும் 50 மில்லியனுக்கு குறைவாகவும்) | 12,500.00 |
| ஏ.2. | மருத்துவ உபகரணம் மற்றும் ஆய்வுகூட உபகரணம் (2 மில்லியனுக்கு மேலதிகமாகவும் அல்லது நிகராகவும் மற்றும் 10 மில்லியனுக்கு குறைவாகவும்) | 3,500.00 |
| ஏ.3. | ஆய்வுகூட இரசாயனங்கள் மற்றும் கண்ணாடிப் பொருட்கள் | 3,500.00 |
| ஏ.4. | அலுவலகம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் உபகரணம் (தொலைநகல் இயந்திரங்கள், நிழற்படப்பிரதியாக்கல் இயந்திரங்கள், டுப்ளிக்கேசன் இயந்திரங்கள், லமினேட்டிங் இயந்திரங்கள், ஓவர்ஹெட் புரஜெக்டர்கள், கணனிகள், அச்சுப்பொறிகள், சேர்வர்கள், UPSs, பல்லூடக புரஜெக்டர்கள், வலையமைப்பு, வலையமைப்பு மற்றும் இணைந்த துணைப்பொருட்கள், இன்னும் பலவும். | 1,000.00 |
| ஏ.5. | காகிதாதி மற்றும் ஏனைய அலுவலக தேவைப்பொருட்கள் | 1,000.00 |
| ஏ.6. | தளபாடம் மற்றும் இணைப்புக்கள் | 1,000.00 |
| ஏ.7. | சுத்திகரிப்பு சேவைகள் | 1,000.00 |
| ஏ.8. | ஆய்வுகூட சேவைகள் (வரிசைப்படுத்தல், இன்னும் பலவும்) மற்றும் ஏனையவை | 1,000.00 |
| ஏ.9 | போக்குவரத்து சேவைகள் | 1,000.00 |
| ஏ.10 | சுத்திகரிப்பு பொருட்கள், சமையலறை பொருட்கள் மற்றும் ஏனைய துணைப்பொருட்கள் | 1,000.00 |
| ஏ.11. | கூரியர் சேவை (உள்ளூர் மற்றும் வெளிநாடுகள்) | 1,000.00 |
| ஏ.12. | அச்சடித்தல் சேவைகள் (ஸ்பைரல் கட்டல், பேர்வெட் கட்டல், நிழற்படபிரதியாக்கல் மற்றும் ஸ்கேனிங்) | 1,000.00 |
| ஏ.13. | கழிவு முகாமைத்துவம் சேவைகள் (இலத்திரனியல் கழிவு, தாள்கள், இன்னும் பலவும்) | 1,000.00 |
| ஏ.14. | ஏனைய சேவைகள் (உணவுகள் மற்றும் குடிபானங்கள், உணவு வழங்கல் சேவை, பானங்கள் மற்றும் மதிய உணவு, இயற்கை நீர் போத்தல்கள், பால்மா, சீனி, தேயிலை, கழிவறை தாள்கள், நீர் போத்தல்கள்) | 1,000.00 |
| ஏ.15. | வாகன சிறிய பழுதுபார்த்தல்கள் (வளிச்சீராக்கல் இயந்திர பழுது பார்த்தல்கள், மின்னியல் பழுது பார்த்தல்கள், இயந்திர சிறிய பழுதுபார்த்தல்கள், இன்னும் பலவும்) | 1,000.00 |

06. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவங்கள் அத்துடன் அனைத்து அவசியமான ஆவணங்கள் ஆகியன பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

**தலைவர்,**
**தேசிய ஆராய்ச்சி பேரவை,**
**1207, வித்யா மாவத்தை,**
**கொழும்பு-07.**

07. விண்ணப்பத்தை அடக்கியுள்ள தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ''2021 ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களின் பதிவு செய்தல்'' என குறிப்பிடப்பட்டு தலைவர், தேசிய ஆராய்ச்சி பேரவை, 120/ 7, வித்யா மாவத்தை, கொழும்பு-07 என முகவரியிடப்பட்டு 2020 செப்டெம்பர் 28 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

08. அஞ்சலில்/ தபாலில் ஏற்படும் எவ்வித தாமதத்திற்கும் தேசிய ஆராய்ச்சி பேரவையானது எவ்வித பொறுப்பையும்/ கடப்பாட்டையும் ஏற்காது. தேவைப்படுத்தப்பட்டுள்ள தகவல்/ ஆவணங்களை விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரியொருவரின் விண்ணப்பமானது மதிப்பீடு செய்யப்பட மாட்டாது என்பதுடன் பதிவு செய்தல் கட்டணம் மற்றும் வகுதிக் கட்டணங்களும் மீள்செலுத்தப்பட மாட்டாது.

**தலைவர்,**
**தேசிய ஆராய்ச்சி பேரவை,**
**120/ 7, வித்யா மாவத்தை,**
**கொழும்பு-07.**

**தொலைபேசி: 011-2675176**
**மின்னஞ்சல் : dilushi@nrc.gov.lk/admindesk@nrc.gov.lk**
**தொலைநகல் : 011-2675136**
இணையம் : www.nrc.gov.lk

## களனி பல்கலைக்கழகம்

# பதவி வெற்றிடங்கள்

2020 செப்டம்பர் 30 ஆம் திகதி வரையும் பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான தகைமையுடைய நபர்களிடமிருந்து விண்ணப்பங்களை களனி பல்கலைக்கழகமானது வரவேற்கின்றது.

**நிரந்தரமான பதவிகள்**

**கணனியாக்கம் மற்றும் தொழில்நுட்பவியல் பீடம்**

**1. பிரயோக கணனியாக்க திணைக்களம்**

- **பொறியியல் கற்கைநெறி**
  விரிவுரையாளர் (தகுதிகாண்நிலை)/விரிவுரையாளர் (உறுதிப்படுத்தப்படாதநிலை)/ சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II/I
- **விஞ்ஞான கற்கைநெறி**
  விரிவுரையாளர் (தகுதிகாண்நிலை)/விரிவுரையாளர் (உறுதிப்படுத்தப்படாதநிலை)/ சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II/I

**2. மென்பொருள் பொறியியல் திணைக்களம்**

- **கணனி பொறியியல் கற்கைநெறி**
  விரிவுரையாளர் (தகுதிகாண்நிலை)/விரிவுரையாளர் (உறுதிப்படுத்தப்படாதநிலை)/ சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II/I

**3. கணனி முறைமைகள் பொறியியல் திணைக்களம்**

- **பொறியியல் கற்கைநெறி**
  விரிவுரையாளர் (தகுதிகாண்நிலை)/விரிவுரையாளர் (உறுதிப்படுத்தப்படாதநிலை)/ சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II/I
- **கணனி விஞ்ஞானம்/ தகவல் தொழில்நுட்பவியல் கற்கைநெறி**
  விரிவுரையாளர் (தகுதிகாண்நிலை)/விரிவுரையாளர் (உறுதிப்படுத்தப்படாதநிலை)/ சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II/I
- **கணிதம் கற்கைநெறி**
  விரிவுரையாளர் (தகுதிகாண்நிலை)/விரிவுரையாளர் (உறுதிப்படுத்தப்படாதநிலை)/ சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II/I

**விண்ணப்பிக்கும் முறைமை:**
மேலேயுள்ள பதவிகளுக்கான விதிக்கப்பட்ட விண்ணப்பப்படிவம் மற்றும் விபரங்களை அலுவலக நேரங்களில் பிரதி பதிவாளர்/கல்விசார் தாபனங்கள் இடமிருந்து பெற்றுக் கொள்ளலாம் அல்லது **www.news.kln.ac.lk** என்ற பல்கலைக்கழக இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம். விண்ணப்பப்படிவங்களை தபால் மூலம் பெற்றுக் கொள்ள விரும்புவோர் 23x10 செ.மீ. என்ற அளவிலான சுயமுகவரியிடப்பட்ட, முத்திரை ஒட்டப்பட்ட உறையொன்றை அனுப்புதல் வேண்டும். 2020 செப்டம்பர் 30 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் உரித்தான சான்றிதழ்களின் பிரதிகளுடனான விண்ணப்பங்கள் பிரதி பதிவாளர்/கல்விசார் தாபனங்கள், களனி பல்கலைக்கழகம், களனி என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியான விண்ணப்பங்களை விண்ணப்பதாரிகள் சமர்ப்பித்தல் வேண்டும். பூர்த்தி செய்யப்படாத, தெளிவில்லாத அல்லது தாமதமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். உறையின் இடது பக்க மேல் மூலையில் பதவிப் பெயர் சுட்டிக்காட்டப்படல் வேண்டும்.

அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் விண்ணப்பதாரிகள் அவர்களது நிறுவன தலைமைகளூடாகவே அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரிகளின் தெரிவுப் பட்டியலை தயாரிப்பதற்கான உரிமையை பல்கலைக்கழகம் கொண்டுள்ளது.

**பதிவாளர்,**
**களனி பல்கலைக்கழகம்,**
**களனி.**
**11.09.2020**

## இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்
### மிஹிந்தலை
# வெற்றிடங்கள்

இப்பல்கலைக்கழகத்தில் வெற்றிடமாகவுள்ள கீழ்க்காணும் பதவிகளுக்காக தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து 2020.10.15ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### 01. உதவி விடுதிப் பொறுப்பாளர் (முழுநேர) IIம் தரம் - ஆண்

**தகைமைகள்:**

(1) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டதாரியாக இருத்தல். பல்கலைக்கழக விடுதி நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் பற்றிய அனுபவம் உள்ளவர்கள் பற்றி கூடிய கவனம் செலுத்தப்படும்.

**சம்பள விகிதம்:** ரூ. 42,885 - 18x660 - 54,765 P.M-U-MN3 (II)

**வயதெல்லை:** 45 வருடத்திற்கு மேற்படாத விண்ணப்பதாரியாக இருத்தல் வேண்டும்.

### 02. பாதுகாப்பு பரீசோதகர் IIம் தரம்

**தகைமைகள்:**

(1) அ. திறமைச் சித்திகள் ஐந்து (05) உடன் ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் சித்தியடைந்திருப்பதுடன், திறமைச் சித்திகள் பெற்றுக்கொண்டுள்ள பாடங்களில் சிங்களம்/ தமிழ் மொழி அல்லது இலக்கியம் மற்றும் எண் கணிதம்/ வர்த்தக எண் கணிதம்/ கணித பாடங்கள் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**அல்லது**

ஆ. மூன்றுக்கு மேற்படாத அமர்வுகளில் க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சையில் 06 பாடங்களில் சித்தியடைந்துள்ள பல்கலைக்கழக துறையில் குறைந்த பட்சம் ஐந்து (05) வருட திருப்திகரமான நிரந்தர சேவை காலத்தையுடைய ஊழியராக இருத்தல். அவ்வாறு சித்தியடைந்த பாடங்களில் சிங்களம்/ தமிழ் மொழி அல்லது இலக்கியம் மற்றும் எண் கணிதம்/ வர்த்தக எண் கணிதம்/கணிதம் உள்ளடக்கப்படல் வேண்டும்.

(2) பொலிஸ் சேவையில் அல்லது இராணுவ சேவையில் அல்லது பல்கலைக்கழக துறையின் பாதுகாப்புச் சேவை நிறுவனமொன்றில் ஐந்து (05) வருடங்களுக்குக் குறையாத திருப்திகரமான சேவையில் இருத்தல் வேண்டும்.

(3) விளையாட்டு விடயங்களில் செயற்பாட்டு பங்களிப்பொன்று இருத்தல் வேண்டும்.

(4) உயரம்: 5 அடி 4 அங்குலத்திற்குக் குறையாது இருத்தல் வேண்டும்.
மார்பு: 34 அங்குலத்திற்கு குறையாது இருத்தல் வேண்டும் (சாதாரணமாக)

**சம்பள விகிதம்:** ரூ. 30,725 - 17x300 - 35,825 (மாதாந்தம்) U-MN1 (III A)

**வயதெல்லை:** 45 வருடத்திற்கு மேற்படாத விண்ணப்பதாரியாக இருத்தல் வேண்டும்.

தேவைப்படும் தகைமைகள் மற்றும் மேலதிக விபரமான தகவல்களுக்கு தயவு செய்து பல்கலைக்கழகத்தின் இணையத்தளம் **www.rjt.ac.lk** இற்கு பிரவேசித்து அங்குள்ள மாதிரிகள் மற்றும் அறிவுரைகளுக்கு அமைவாக உங்களது விண்ணப்பங்களை அனுப்பலாம் அல்லது முகவரி எழுதப்பட்ட 23x10 செ.மீ. அளவான முத்திரையிடப்பட்ட உறையுடன் குறித்த பதவியைக் குறிப்பிட்டு 2020.10.02 இற்கு முன் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். தரப்பட்டுள்ள மாதிரிகளுக்கு அமைவாகாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

அரச/ மாகாண அரச சேவையில்/ அரச திணைக்களங்களில்/ நியதிகள் சபைகளில் கடமையாற்றும் தனி நபர்கள் குறித்த துறையில்/ திணைக்களங்களின் தலைமையூடாக விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

கல்வி, தொழில்சார் மற்றும் சேவை அனுபவம் பற்றிய சான்றிதழ்களின் உறுதி செய்யப்பட்ட போட்டோப் பிரதிகளை விண்ணப்பத்துடன் இணைத்திருத்தல் வேண்டும்.

சகல விண்ணப்பங்களும் கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் 2020.10.15ஆம் திகதிக்கு முன்பு அனுப்புதல் வேண்டும். தாமதமான மற்றும் எம்மால் வழங்கப்படும் அல்லது எமது இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட மாதிரிகளுக்கு அமைவாகாத மற்றும் பூர்த்தியற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.

***முகவரி: உதவிப் பதிவாளர், கல்விசாரா நிறுவனப் பிரிவு, இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம், மிஹிந்தலை.***

**பதிவாளர்,**
**இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்,**
**மிஹிந்தலை.**
**2020.09.13**

BE BETTER INFORMED! News you can trust now free on your mobile phone.
Visit - apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!
Dinamina Daily News Thinakaran
AVAILABLE AT
LAKE HOUSE

# வாரமஞ்சரி சிறு விளம்பரம்

## வர்த்தகம்

**208 வியாபார ஸ்தலம்** விற்பனைக்கு/ குத்தகைக்கு

கல்கிஸ்ஸவில், வியாபாரத்திற்கு பொருத்தமான ஸ்தல மொன்று குத்தகைக்கு விடப்படும். 06 அறைகள், 07 கழிவறைகள், மண்டப மொன்று கொரிடோர் மற்றும் அனைத்து வசதிகளுடன் வாகனங்களை நிறுத்தி வைக்கப் போதிய இடவசதியும் உண்டு. 0768 117270. 053283

## வேலைவாய்ப்பு

**301 வேலை வாய்ப்பு** வேலை வாய்ப்புகள்/சேவைகள்

எந்த வகையிலான வியாபாரங்கள், கம்பனிகள், தோட்டங்கள், உணவகங்களுக்கு தனிப்பட்ட முகாமைத்துவ உதவி சேவை. 0771003533. info@assistanywhere.work. 054280

**308 வெற்றிடங்கள் சந்தைப்படுத்தல்**

கொழும்பு புறநகர் பகுதியிலுள்ள ஒரு முன்னணி நிறுவனம் சந்தைப்படுத்தும் அலுவலர்களைச் சேர்த்துக்கொள்கின்றது. அடிப்படைச் சம்பளம், கமிஷன், வாகனம், மருத்துவ வசதி உண்டு. அழையுங்கள் 0773928246, 0716226578, 0777697622, 0718144320, 0714895429, 0114201539 046122

வென்னப்புவ பிரீமாவுடன் இணைந்த நிறுவனத்திற்கு சேல்ஸ்மேன் தேவை. கம்பியூட்டர் அறிவு. மோட்டார் சைக்கிள் அனுமதிப்பத்திரம் தேவை. 0776384759 (ரோஹித்த) 054179

**310 வெற்றிடங்கள்** எழுது வினைஞர்/ செயலாளர்கள்

எமது மாரவில தெங்கு உற்பத்தியாளர்களின் கூட்டுறவு வர்த்தக சங்கத்தில் களஞ்சியப் பொறுப்பாளர் பதவிக்கு கூடுதல் சபளம், மேலதிக கொடுப்பனவு, EPF+ETF உடன் ஓய்வூதிய சம்பளமும் உண்டு. விபரங்கள் செப்டெம்பர் 11ஆம் திகதி டெய்லி நியூஸ் மற்றும் சிங்கள பத்திரிகை ஒன்றில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. தொடர்புகள் 0322254272. 054219

**311 வெற்றிடங்கள் தகவல் தொழில்நுட்பம்**

கொழும்பிலுள்ள முன்னணி நிறுவனமொன்றில் இணையத்தளங்களை பராமரிக்கவும் இற்றைவரையாக்கவும் பகுதிநேர அடிப்படையில் கடமையாற்ற Web developer தேவைப்படுகின்றார். தொடர்பு 0753272598. மின்னஞ்சல் :fathimahazna06@gmail.com 054008

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

**315 வெற்றிடங்கள் கல்வி**

பயிலுநர் ஆங்கில ஆசிரியர்கள் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. க. பொ.த. (உயர்) தரப் பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியுடையவர் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பப் படிவத்திற்கும் மேலதிக விபரங்களுக்கும் தமது பெயர் முகவரியை 0769141960 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு SMS செய்யவும். 053320

**320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்**

Chinese Restaurant ஒன்றிற்கு Kitchen Helpers மற்றும் Stuarts தேவை. சம்பளம் பேசித் தீர்க்கலாம். 0722352272/ 0750561561. 053469

Shorteats வேலை தெரிந்த ஒருவர் தேவை. மற்றும் பேஸ்டி shop ஒன்றுக்கு கை உதவிக்காக ஒருவர் தேவை. 0768847462 054181

**322 வெற்றிடங்கள்** மேசன் மற்றும் தச்சு தொழிலாளர்கள்

கொழும்பு, மொறட்டுவையில் அமைந்துள்ள வேலைத் தளத்திற்கு மேசன் பாஸ், கையுதவி யாட்கள் வழங்கக் கூடிய சேவை வழங்குநர்கள் உடன் தேவை. (சிங்கள அறிவு அவசியம்) தூரப் பிரதேசத்தவர்கள் விரும்பத்தக்கது. தலைமையகத்திற்கு நேரில் அல்லது அழையுங்கள். 0717786349, 0702691786, 0702206944 பஸ்நாயக்க கன்ஸ்ரக்சன்ஸ் (பிரைவட்) லிமிட்டட், 217/1, செரி உயன, மாக்கொல வீதி, மாக்கொல. 054347

071-6010206 தச்சு தொழிலாளிகள், 2600/- நாளாந்தம் சம்பளம், வேல்டின் தொழிலாளர்கள், இரும்பு பெயின்ற், சுவர் பெயின்ற் தொழிலாளர்கள், மேசன்மார் 2500/-, வோட்டர்பேஸ், டைடேனியம் பாஸ்மார், உதவியாளர்கள் தேவை. 070-2748203, 0702553399. 053611

**325 தொழில்துறை பொது**

கொழும்பிலுள்ள முன்னணி வர்த்தக நிறுவனமொன்றிற்கு Stock Control அனுபவமுள்ள ஆண் களஞ்சிய பொறுப்பாளர் தேவை. ஆங்கிலத்தில் உரையாடவும், தரவுகளை பதிவு செய்யவும் முடியுமாக இருத்தல் வேண்டும். கணனி அறிவைப் பெற்றிருத்தல் வேண்டும். தொடர்பு 0753272598. மின்னஞ்சல் : fathimahazna06@gmail.com 054016

கொழும்பு உணவகத்திற்கு தேநீர் பென்றியாள் ரொட்டி கோக்கி தேவை. கெஷியர் வேலைக்கு பயிற்சிக்காக 20 வயதிற்கு குறைந்த கிராமப்புற ஆண்கள் தேவை. 071 7953507. 054500

கொழும்பு உணவகத்தை நடாத்திச் செல்லக்கூடிய கோக்கி, ரொட்டி உட்பட சகல வேலைகளும் தெரிந்த தம்பதி அல்லது நம்பிக்கையான இருவர் தேவை. தங்குமிட வசதியுண்டு. 072 1728438. 054230

புளொக் கல் செய்வதற்கு ஆள் தேவை. கொட்டாவ 0703338331/ 0770842668 054296

070-7914000, 0775188932 கொழும்பில் அமைந்துள்ள பிஸ்கட் உற்பத்தி நிறுவனத்திற்கு களஞ்சியப் பொதி பிரிவிற்கு ஊழியர்கள் தேவை. உணவு, தங்குமிடத்துடன் 45,000/ இற்கு அதிகமான சம்பளம். 054330

## பொது

**427 டியூஷன்**

கிருளப்பனையில், தமிழ், சிங்களம். ஆங்கிலம், ஹிந்தி, அரபு மொழிகளுக்கான பிரத்தியேக வகுப்புகள். உங்கள் வசதிக்கேற்ப நேரத்தை ஒதுக்கிக் கொள்ளலாம். 0772945268. 053222

## சொந்த விடயம்

**528 தங்குமிட வசதிகள்**

பொரளையில் குளிரூட்டப்பட்ட அறைகள் ரூ.3000/- மாத்திரமே. 0777268835. 054078

## காணி/தோட்டம்

**616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு**

கல்கிசை 8.5 பேர்ச் காணி விற்பனைக்கு. பிட்சா ஹட் இற்கு பின்னால். தரகர் வேண்டாம். ஒரு பேர்ச் 38 இலட்சம். 0765792187, 0703316529. 053137

கொழும்பு15, பிரதான வீதிக்கு முகப்பாக 6 பேர்ச் காணி விற்பனைக்கு. விலை ரூ. 9000,000/=. தொ.பே. 0773988235. 054238

தெஹிவளை கவ்டானவில், 02 பள்ளிவாசல்களுக்கிடையே, 03 நிமிட நடைபயண தூரத்தில், சுற்று மதிலுடன் கூடிய, 8.68 பர்ச்சு காணியில் அமைந்த வீடு. காலி வீதி மற்றும் சந்திக்கு ஐந்து நிமிட நடைபயணம் 55 மில்லியன். தரகர் வேண்டாம். 0715306699, 0718024374. 053382

பொரலஸ்கமுவ 25 வருடங்கள் பழைமையான வீட்டுடன் 9.25 பேர்ச்சு முக்கோண வடிவிலான காணி. 11 அடி பாதை (ஒரே சமயத்தில் ஒரு வாகனம்) அமைதியான பிரதேசம். சிக்கலற்ற உறுதி. உரிமையாளர் இடம்பெயறுகிறார். சந்திக்கு 600 மீற்றர்கள். தெஹிவளை 119 பஸ் வீதிக்கு 200 மீற்றர்கள். 3 படுக்கையறைகள் + 1 குளியலறை, அமரும் அறை, சமையலறை, பணியாளர் அறை + குளியலறை, தோட்டம் மற்றும் ஒரு வாகனத்திற்கான பார்கிங். a) உடைத்துக் கட்ட முடியும், b) திருத்தம் செய்யலாம். கண்டிப்பாக தரகர் வேண்டாம். 1 பேர்ச் 1.55 மில்லியன் மற்றும் வீட்டிற்கு ரூ. 2.2 மில்லியன் மொத்தம் 16.5 மில்லியன் அழையுங்கள் 0112517110/ 0752082567. 051594

மத்தேகொட வீடமைப்புத் திட்டத்தில் 4B புதுப்பிக்கப்பட்ட வீடு விற்பனைக்கு. 071-1926187. 053950

Colombo-4, Sea side புதிய ஆடம்பர தொடர்மாடி மனையில் பல நவீன வசதிகளுடன் 2 Bedrooms, 2 Bathrooms, Living and Dining area, Car Parking, Gym, Pool, CCTV, 24 hours SQ 920 உடன் விற்பனைக்கு உண்டு. Deed available. +94757619114. 046024

0776 5 02 878 கொழும்பு பிரதேசத்தில் மாத்திரம் சொத்துக்களை வாங்கவும் விற்கவும் தயவு செய்து தொடர்பு கொள்ளுங்கள். மொஹமட் காணி தரகர். 054446

**621 வீடு சொத்து கண்டி மாவட்டம் விற்பனைக்கு**

0777-282147, 20-20 புத்தாண்டிற்கு தலதா மாளிகை சார்ந்த புனித பூமியில், மிகப் பெறுமதியான சொத்துக்கள், வீடுகள் 10 மில்லியன் முதல் அதற்கு மேல். பல்வேறு வியாபாரஸ்தலங்கள் 20 மில்லியன் முதல் அதற்கு மேல், கடைகள், தோட்டங்கள் 1 ஏக்கர் முதல் அதற்கு மேல், வீடமைப்புத் திட்டமொன்று, சகல அனுமதிப் பத்திரங்களும் விற்பனைக்கு. 0777 438169 047024

போவல கண்டி நகர சபை எல்லைக்குள் 3 மாடி வீடு - 12 படுக்கையறை குளியலறைகள், தோட்டம் 14 வாகனங்களுக்கான நிறுத்துமிட வசதி 22 பேர்ச் இல் விற்பனைக்கு.0770232738, 071-3319875. 051383

**641 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு**

இரத்மலானையில் வாகன தரிப்பிட வசதிகளுடன் வீடொன்று வாடகைக்கு உண்டு. வாடகை 24000/-. 0716358211, 0778328256. 054679

கொழும்பு நீர்கொழும்பு பிரதான வீதியிலிருந்து 300 மீற்றர் வத்தளை மாபோல பங்களாவத்தையில் அமைந்துள்ள இரண்டு மாடி வீடு, 05 படுக்கையறைகள், 3 குளியலறைகள், இரண்டு வாகனங்களை நிறுத்தி வைக்கப் போதிய கராஜ், தோட்டம், OKI LYCEUM சர்வதேச பாடசாலைகள், ARPICO FOODCITY சுபர்மார்க்கட்டுகள், ஹேமாஸ் தனியார் வைத்தியசாலை சமீபமாக அமைந்துள்ளது. மாதாந்தம் ரூ. 80, 000.00 தொ.பே 0767416502 - 0777893786. 054592

**642 வீடு சொத்து கம்பஹா மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு**

0775740748 வத்தளை ஹெந்தளை பொக்குண வீதியில் 4 அறைகள், சாந்தி வீதியில் 2 அறைகளுடன் வீடு வாடகைக்கு/ குத்தகைக்கு. 0713 421954. 053948

**671 வீடு சொத்து தேவை**

கிளிநொச்சி, பூனணிக்கு நகரத்தில் 20 ஏக்கருக்கு மேல் நீரில் மூழ்காத 12, அடிக்கு மேல் உள்ள வீதியுடன் உள்ள காணி தேவைப்படுகின்றது. வீதிக்கு முன்னால் மின்சார சபையின் தூண்கள் இருத்தல் வேண்டும். கோழி பண்ணைக்கு ஏற்றதும் தூய உறுதி பத்திரத்துடன் இருத்தல் வேண்டும். 99 இல் அல்லது 33ல் அரசாங்கத்தினால் கொடுக்கப்பட்ட நிலங்களும் விமர்சிக்கப்படும். Sarath :- 077-8839513 053973

**Repeat Your ad For Better Offers**

# UNIVERSITY OF RUHUNA
## FACULTY OF AGRICULTURE

### Admission of Diploma Holders in Agriculture to BSc. Agricultural Resource Management and Technology Degree Programme - Academic Year 2020/2021

The Faculty of Agriculture, University of Ruhuna calls applications from Diploma Holders in Agriculture to follow the BSc Agricultural Resource Management & Technology Degree Programme. The duration of the degree is four academic years.

Every candidate should satisfy the following requirements:

**(1) Academic Qualifications :**
A two year Diploma in Agriculture or Animal Production from any School of Agriculture of the Department of Agriculture, Aquinas University College, Hardy Institute of Technical Training, Affiliated University College or any other recognized institution approved by the Ministry of Education or University Grants Commission.
**OR**
A two year Diploma from National College of Education with Agriculture as the main subject.
**With**
**GCE (O/L)**
Six passes in one sitting, with four credit passes including Science and Mathematics.
**AND**
**GCE (A/L)**
At least three passes in one sitting of the following subjects: Botany, Chemistry, Zoology, Biology, Physics, Mathematics (Pure/Applied), and Agriculture.

**(2) Experience :**
Five years (05) of experience (on the closing date of application) as a permanent employee in the government or private sector, in the field of Agriculture/Animal Production or related sectors, after obtaining the Diploma in Agriculture.

**(3) Age Limit :**
**Should be below 40 years of age, on the closing date of application**
An examination for the selection of up to ten candidates to follow the above degree programme will be held shortly. The examination will consist of the following :

a. An aptitude test: 30 minutes
b. Subject matter paper: 02 hours (MCQ & Structured Essay Type)

Employees in the agricultural field of government and private sector organizations, who possess the above qualifications, are eligible to sit for the examination. The maximum number of attempts allowed to sit for this entrance examination will be three.

The Head of institutions concerned should make arrangements to grant scholarships/study leave for the selected persons to follow the programme on full-time basis.

Application forms and other details can be obtained from the Faculty of Agriculture, University of Ruhuna, Mapalana, Kamburupitiya after a cash payment of Rs.500/= to the Assistant Bursar, Faculty of Agriculture. Duly completed applications should be forwarded through the respective Heads of the Institutions to reach the Assistant Registrar, Faculty of Agriculture on or before 15th October 2020. Those who wish to obtain application forms and other relevant particulars by post should send a self addressed stamped envelope of the size 9" x 4" addressed to the Assistant Registrar, Faculty of Agriculture, University of Ruhuna, Mapalana, Kamburupitiya along with a Bank Deposit Slip to the value of Rs.500/= written in favour of the Faculty of Agriculture, University of Ruhuna, Account No. 133100160000029 held at the People's Bank, Kamburupitiya branch indicating the applicant's name and address.

**Registrar**
**University of Ruhuna**
**Matara**

மீண்டெழு

சுகந்தி மணிமாறன்

# அதீதப் பெண்ணியம்

சமூக ஊடகங்களில் Womyn, Womxn ஆகிய இரண்டு சொற்கள் இன்று பிரபலமாகியுள்ளது. சட்டென்று பார்க்கும்போது சொற்பிழை என்றுகூடத் தோன்றலாம். ஆனால், கடந்த சில ஆண்டுகளாகப் பெண்ணியவாதிகள் மத்தியில் புழக்கத்தில் இருக்கும் இந்தச் சொற்கள் தற்போது அதிகமாகக் கையாளப்படுகின்றன. தற்போது பெண்ணியவாதிகள் மட்டுமல்லாமல், சொல்லில்கூட ஆணைச் சார்ந்திருக்க விரும்பாதோர் அனைவரும் தங்களை Womxn என்றே அறிமுகப்படுத்திக் கொள்கின்றனர்.

பெண்கள் இப்படிப் புதிய சொல்லை உருவாக்கிப் பயன்படுத்தத் தொடங்கினால் ஆண்கள் சும்மா இருப்பார்களா? அவர்களும் தங்கள் பங்குக்குப் புதிய சொல்லைக் கண்டறிந்திருக்கின்றனர். அதையும் வழக்கம்போல் பெண்களை ஒடுக்கத்தான் பயன்படுத்துகிறார்கள். உங்களைப் பெண்ணியவாதி என்று அறிமுகப்படுத்திக் கொண்டாலோ பாலினப் பாகுபாடு, பெண்ணுரிமை போன்றவற்றைப் பற்றிப் பேசினாலோ சமூக ஊடகங்களில் பெண்ணியம் சார்ந்து எழுதினாலோ உங்களுக்கு FemiNAZI என்கிற பட்டம் பெண் வெறுப்பு கொண்ட ஆண்களால் சூட்டப்படுகிறது. பெண்ணியத்தையும் ஹிட்லரின் நாஜிப்படையின் கொள்கையையும் இணைத்து அவர்கள் இந்தச் சொல்லை உருவாக்கியிருக்கிறார்கள். அதாவது, பெண்கள் பேசும் பெண்ணியம் நாஜிக் கொள்கையைப் போன்றது என்று பொருளாம். அதீதப் பெண்ணியம் என்று இந்தச் சொல்லுக்கு விளக்கமும் வைத்திருக்கிறார்கள். பெண்ணியம் பேசும் பெண்களை அவமானப்படுத்துவதுடன் அவர்களின் நோக்கத்தையும் செயல்பாட்டையும் இந்தச் சொல் கேள்விக்கு உள்ளாக்கிறது. எல்லாவற்றுக்கும் மேலாக, பெண்களின் உரிமைக் குரலை அடக்க முயல்கிறது. பெண்கள் இதையும் கடந்துதான் வந்தாக வேண்டும்.




எப்போதும் ஆணைச் சார்ந்து இருப்பவர்கள் தான் பெண்கள் என்று சொல்லப்பட்டு வருவதை உறுதிப்படுத்தும் விதமாக மொழியும் ஆண் மொழியாகத்தான் இருக்கிறது. நாம் பயன்படுத்தும் சொற்களில் பெரும்பாலானவை ஆணையோ ஆண்பாலையோ மையப்படுத்தி உருவாக்கப்பட்டவையாகத்தான் இருக்கும். தமிழும் இதற்கு விதிவிலக்கல்ல.

ஆசிரியர், நடிகர், இளைஞர், கவிஞர், மருத்துவர் போன்ற பல சொற்கள் இருபாலரையும் குறிக்கும் என்றாலும், அந்தச் சொற்களைக் கேட்டதுமே நம் மனம் ஓர் ஆணைத்தான் கற்பனை செய்கிறது. நிலைமை இப்படி இருக்கும்போது விவசாயி, விஞ்ஞானி என்பது போன்ற சொற்களைப் பற்றிக் கேட்கவே தேவையில்லை. ஆங்கிலத்தில் பெண்ணைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் Woman, Women ஆகிய இரண்டும் ஆணைக் குறிக்கும் Man, Men போன்றவற்றைப் பின்னொட்டாகக் கொண்டிருக்கின்றன. சொல்லில் கூட ஆணை மையமாக வைத்துத்தான் குறிப்பிட வேண்டுமா என நினைத்த பெண்ணியவாதிகள் சிலர், ஆணைக் குறிப்பிடும் சொல்லைத் தவிர்க்கும் விதமாக Womyn என்ற சொல்லைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். இது பெண்களை மட்டும் பிரத்யேகமாகக் குறிப்பிடப் பயன்படுத்தப்பட்டது. 1975ல் அறிமுகப்படுத்தப்பட்ட இந்தச் சொல், ஒத்த சிந்தனையுடைய பெண்ணியவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால், இந்தச் சொல் நேர் தன்மைக் கொண்டது. அதாவது திருநங்கையர் இந்தச் சொல் மூலம் தங்களை அடையாளப்படுத்திக்கொள்ளக் கூடாது. அவர்கள் பிறப்பால் ஆண் என்பதே இதற்குக் காரணம்.

அதனால், மாற்றுப்பாலினத்தோர், தன்பால் ஈர்ப்பு கொண்டோர் ஆகியோரையும் பெண்கள் என்கிற குடையின் கீழே கொண்டுவரும் வகையில் Womxn என்ற சொல்லைப் பின்னாள்களில் பயன்படுத்தத் தொடங்கினர்.

இந்தச் சொல்லை உச்சரிப்பதில் உள்ள சிக்கலையும் இவர்கள் புரிந்து கொண்டுள்ளனர். ஆனால், அதற்காக அடையாளத்தில் கூட ஆணைச் சார்ந்துதான் இருக்க வேண்டுமா என்பது இவர்களின் வாதம். ஆண்டுதோறும் புதுப்புது சொற்களுக்கு இடமளிக்கும் அகராதி, பெண்களைக் குறிக்கும் இந்தச் சொல்லையும் ஏற்றுக்கொள்ளும் என நம்பிக்கையுடன் சொல்கிறார்கள்.

# ஆணாதிக்க அரசியலை வெற்றி கொள்வதே இன்றைய தேவை



## 2020 பொதுத் தேர்தல் பெண் பாராளுமன்ற உறுப்பினர்களின் வீழ்ச்சி ஒரு நோக்கு...

**செல்வி. தீபிகா உமாமகேஸ்வரி**

**யாரும் அறிந்திராத இளம் பெண் அரசியல்வாதி,.....இளம் பெண்கள் அரசியலுக்கு வர அஞ்சும் காலசக்கரத்தை உடைத்தெறிந்து ஆண்களுக்கு நிகராக போட்டி போடும் நவீன நங்கையாவார்,.....ஜனநாயக இடதுசாரி முன்னணியின் மகளிர் அணித் தலைவியான தீபிகா உமா 2020 பாராளுமன்ற தேர்தலில் யாழ்ப்பாணத்தில் போட்டியிட்டவர். பெண்களின் உரிமைகளை இடதுசாரி கோணத்தில் நோக்கும் இவர் பெண்களின் உரிமைகள் தொடர்பில் முற்போக்கான நவீன சிந்தனைக் கொண்டவர்.அவருடன் யாழ். இல்லத்தில் நடத்திய கலந்துரையாடலில்...**

***2020 பொதுத் தேர்தலில் கடந்த தேர்தலை விட பெண்களின் வெற்றி வீதம் குறைவடைந்துள்ளதற்கான காரணம்***

பெண்களுக்கான முன்னுரிமையை சமூக மட்டத்தில் மக்கள் வழங்காததால் தான் இம்முறை பெண்களின் வெற்றி வீதம் குறைவடைந்திருக்கிறது என்று நான் கருதுகின்றேன். அத்தோடு பெண்கள் அரசியலில் ஈடுபட்டு என்ன தான் செய்தார்கள் என்ற பழைய பல்லவியை இன்றும் சமூகத்தில் இருந்து விடுபட்டு போனதாக தெரியவில்லை.இவ்வாறான சமூக சிந்தனைகளும் பெண்களின் வெற்றி வாய்ப்பில் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கலாம்.

***நீங்கள் சார்ந்துள்ள கட்சியில் பெண்களை அரசியலில் ஈடுபடுத்துவதற்கான செயற்பாடுகள் தொடர்பில் உங்கள் கருத்து...***

பெண்களுக்குள்ள பிரத்தியேக பிரச்சினைகளை பெண்களால் தான் தீர்க்க முடியும் என்ற நோக்கம் எமது கட்சிக்குள்ளது.

பெண்களுக்கான சில பிரச்சினைகளை ஆண் அரசியல்வாதிகளிடம் சொல்வதற்கு தயக்கம் என்றொரு காரணத்தினால் தான் எங்களது கட்சியில் பெண்களை அரசியலில் ஈடுபடுத்தி செயற்படுகின்றார்கள். பெண்களை தலைமைத்துவமாக கொண்டு எத்தனையோ குடும்பங்கள் இருக்கின்றன. அவர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள், சவால்களை கருத்துக்களை பதிவு செய்ய, தங்களுக்கான தேவையை சொல்வதற்காகவோ பெண்கள் முன்வர வேண்டும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.ஏன் பெண்கள் அரசிலை வெறுக்கிறார்கள் என்ற தெளிவற்ற நிலையில் தான் நானும் இருக்கிறேன்.இன்று பெண்கள் எல்லா துறைகளிலும் முன்னோக்கி சொல்லும் போது ஏன் அரசியல் துறையில் மற்றும் பின்னோக்கிய நகர்வை காட்டுகிறீர்கள்.

***வெற்றி கிடைத்திருந்தால் பெண்களின் நிலைமையை மாற்றுவதில் எவ்வாறான திட்டங்களை முன்னெடுத்திருப்பீர்கள்?***

பெண்களின் பாதுகாப்பிற்கான செயற்றிட்டத்தை தான் நான் முதலாவதாக ஆரம்பித்திருப்பேன். அவர்களின் தெளிவாக அறிவதற்கான சந்தர்ப்பமாகவும் பெண் வேட்பாளர்களை நோக்குகின்றனர். எனது கருத்துக்கிணங்க பெண்களின் அரசியல் பிரவேசத்தால் ஊழல் மோசடிகளை முற்றாக கட்டுப்படுத்தலாம் என நான் நினைகிறேன்.

***தமிழ்ப் பெண்களுக்கு அரசியலில் ஈடுபடுவதற்கான முட்டுக்கட்டைகள் தொடர்பில் உங்கள் பார்வையிலான கருத்து?...***

பெண் வேட்பாளர் என்று அரசியலில் நுழையும் பொழுது சமூக மட்டத்தில் எத்தனையோ பிரச்சினைகளை எதிர்நோக்க நேரிடிகிறது. எத்தனையோ சவால்களை சமூகம்,வீட்டில் எதிர்நோக்கவேண்டி வரும்.அத்தோடு அவமானப்படுத்தல்களும் பயமுறுத்தல்கள் என்று தொடரும் அவலங்கள்.பெண் தானே இவளால் என்ன செய்ய முடியும் என்றொரு கேள்வியிருக்கும். பெண்களாகிய நாங்கள் எந்தவிதத்திலும் சலைத்தவர்கள் அல்ல என்ற ஒரு குறிக்கோளை எங்களுக்குள் வைத்திருப்பதன் மூலம் இவ்வாறான முற்றுகட்டைகளை தளர்த்தி எங்களுடைய நோக்கத்தை நோக்கி தனிப் பாதையில் பயணிக்கின்றோம்.

***தேர்தல்களில் பெண்களின் வாக்களிப்பு சதவீதம் வீழ்ச்சியடைவதற்கான காரணங்கள்,...***

சில பெண்கள் வாக்களிப்பதன் முக்கியத்துவத்தை தெரியாத காரணத்தினால் அவர்கள் வாக்களிப்பு நிலையங்களுக்கு சென்று தங்களது வாக்குரிமையை நிறைவேற்ற மறுப்பதாலும்.

வாக்காளர்கள் பதிவட்டை, வாக்குச் சீட்டு இல்லாமல் எத்தனையோ பேர் இருக்கின்றார்கள். இவ்வாறான பிரச்சினைகளால் அவர்களின் வாக்குகள் அளிக்கப்படாமல் இருக்கிறது. பெண்களுக்கு வாக்களிப்பதால் கிடைக்கும் நன்மைகள் தொடர்பில் தெளிவற்ற தன்மையும் விழிப்புணர்கள் வழங்கப்படாததும் தாக்கம் செலுத்துகின்றன.

***நீங்கள் போட்டியிட்ட தேர்தல் களம் பெண் என்ற ரீதியில் சந்தித்த சவால்கள்,.***

நீ ஒரு பெண், எவ்வாறு நீர் எங்கள் பிரதேசத்தில் பிரசாரம் செய்வாய் என்று நானும் பார்க்கிறேன் என ஆண் வேட்பாளர்கள் மிரட்டல் செய்தனர். எங்களை தாண்டி எப்படி நீ இந்த இடத்துக்கு வரப்போறாய் என்று பல்வேறு கட்சிகளில் இருந்து தொந்தரவுகள் தந்தனர். அதையும் தாண்டி மக்களுக்காக நான் சில விடயங்களை சமூகத்தில் செய்திருக்கிறேன்.இன்றும் செய்து கொண்டு தான் இருக்கிறேன்.

***இந்த பொதுத் தேர்தல் முடிவுகள் பெண்கள் பக்கம் பார்க்கும் போது உங்களின் கருத்து,..***

பெண்கள் இன்னும் முன்னுக்கு வந்து சுதந்திரமாக செயற்பட வேண்டும் என்று நான் விரும்புகின்றேன். அதாவது, தங்களின் பாதுகாப்பு தான் இப்போது சமூக மட்டத்தில் பெண்கள் எதிர்நோக்குகின்ற பாரிய பிரச்சினை. அவர்கள் பொது சேவையில் ஈடுபடுவதாக இருந்தாலோ அல்லது அவர்கள் தொழிலுக்கு போய் வரும் போது எத்தனையோ பிரச்சினைகளை சந்தித்து தங்களுடைய பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாத ஒரு சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். சுதந்திரமாக செயற்பட முடியாத ஒரு நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அதற்கான திட்டங்களை கட்டாயம் நான் அவர்களுக்கு செய்து கொடுத்திருப்பேன்.

***பெண்கள் தொடர்ந்தும் அரசியலில் ஈடுபட வேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?.***

பெண்கள் தொடர்ந்தும் அரசியலில் ஈடுபட வேண்டும். இப்போது தான் பெண்கள் அரசியலில் ஈடுபடுவதற்கு முன்வருகின்றார்கள். புதிய புதிய பெண் வேட்பாளர்கள் அறிமுகமாகிக் கொண்டிருக்கின்றார்கள். இவர்கள் அனைவரும் தொடர்ந்தும் செயற்பட்டால் நிச்சயம் பெண்கள் அரசியலில் ஒரு நல்ல நிலைக்கு வருவார்கள் என்று நான் எதிர்பார்க்கின்றேன். அவர்களுக்கான அங்கீகாரம் சமூக மட்டத்தில் இருந்து மிக விரைவில் கிடைக்கும் என்று நான் நினைக்கின்றேன்.

# எரிமலை ஆராய்ச்சியில் சாதித்த பெண் எரிமலையியலாளர்

எரிமலை ஆராய்ச்சி மிக ஆபத்தான துறை. உலகம் முழுவதிலுமே சொற்பமான அளவில்தான் எரிமலையியலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களில் ஒரு பெண் எரிமலை ஆராய்ச்சி செய்கிறார் என்றால் ஆச்சரியப்பட வேண்டிய விடயமாகும். எரிமலையைப் பெரும்பாலானவர்கள் பார்த்திருக்க வாய்ப்பே இல்லை. அப்படிப்பட்ட எரிமலைகளின் மீது அளவற்ற காதல்கொண்டிருந்தார் கட்டியா க்ராஃப்ட். அவர் எரிமலைக்காக தன் உயிரையே கொடுத்தவர் .

பிரான்ஸில் பிறந்த கட்டியாவுக்குக் கேள்விகள் கேட்பதும் துணிச்சலான காரியங்களைச் செய்வதும் இயல்பு. அறிவியலின் துணைகொண்டு, ஒவ்வொன்றையும் கேள்விக்குட்படுத்தினார். பள்ளிப் படிப்பை முடித்தவுடன் எரிமலையியலாளர் ஆக வேண்டும் என்றார். பெற்றோர் சம்மதிக்கவில்லை என்றவுடன், க்ரைம் நாவல் எழுத்தாளராகப் போகிறேன் என்றார். இரண்டுமே ஆண்களுக்கான துறை, வேண்டாம் என்று சொல்லிவிட்டார்கள். ஆனாலும், எரிமலையியலாளர் ஆகும் இலட்சியத்தில் உறுதியாக இருந்தார் கட்டியா.

18வது பிறந்த நாளின்போது கட்டியாவின் நச்சரிப்பு தாங்காமல், அவரை எட்னா மலைக்கு அனுப்பி வைத்தார்கள். ஒரு வாரம் அங்கே தங்கி எரிமலையைப் பற்றிய தகவல்களைச் சேகரித்தார். படங்களை எடுத்தார். மாதிரிகளைக் கொண்டுவந்தார். ஆனாலும் எரிமலையியலாளராவதற்குச் சம்மதம் கிடைக்கவில்லை.

கட்டியா தினமும் இரவில் வீட்டுக்குத் தெரியாமல் எங்கோ சென்று வருகிறார் என்பதை அவரது அப்பா கண்டுபிடித்தார். பூமி உருண்டைக்குள் மோட்டார் சைக்கிள் ஓட்டும் சாகசத்தைச் செய்துவிட்டே திரும்புகிறார் என்பதை அறிந்ததும் பெற்றோர் அதிர்ந்து போனார்கள். முதலில் பட்டப்படிப்பை முடித்தால், பிறகு விருப்பப்பட்டதைச் செய்யலாம் என்றார்கள்.

கடினமாக உழைத்தார். படிப்பை நிறைவு செய்தபோது தேசிய அறிவியல் ஆராய்ச்சி மையத்தில் பயிற்சியாளராகும் வாய்ப்பு வந்தது. 20 வயதில் பிரதமரிடம் விருது பெற்ற கட்டியா, எரிமலை ஆராய்ச்சியாளரானார்.

ஒருநாள் பள்ளி நண்பரைச் சந்தித்தபோது, எரிமலைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்யும் மௌரிஸ் க்ராஃப்ட்டைச் சந்திக்க வேண்டும் என்று கட்டியாவைக் கேட்டுக்கொண்டார். இருவரும் சந்தித்தார்கள். நண்பர்களானார்கள். 1970ம் ஆண்டு திருமணமும் செய்துகொண்டார்கள். ஓர் எரிமலைக்குத்தான் தேனிலவுக்குச் சென்றார்கள்.

கட்டியாவும் மௌரிஸும் பெரும்பான்மையான நேரத்தை ஆய்வுக்கூடத்திலேயே செலவிட்டனர். எரிமலை பற்றிய தகவல்களைப் படிக்க நேர்ந்தால், உடனே அந்த இடம் நோக்கிக் கிளம்பிவிடுவார்கள். பயணத்துக்கான நிதியை உள்ளூர் மக்களிடமும் அருங்காட்சியகத்திடமும் பெற்றோரிடமும் பெற்றுக் கொள்வார்கள்.

மௌரிஸ் எரிமலையைப் பற்றிய குறிப்புகளை எடுத்துக்கொள்வார். கட்டியா படங்களையும் மாதிரிகளையும் எடுத்துக்கொள்வார். வீட்டு வேலைகளுடன் ஆராய்ச்சிகளையும் செய்துகொண்டே இருப்பார். ஆராய்ச்சியில் கவனம் இருந்ததால் பொது நிகழ்ச்சிகள் அவருக்குச் சலிப்பைக் கொடுத்தன. ஆனால், எரிமலைகள் குறித்து குழந்தைகள், பெரியவர்களிடமிருந்து வரும் மெயில்களுக்கு உடனடியாக பதில் அளிப்பதை விருப்பத்துடன் செய்தார்.

எரிமலைக் கற்கள், பாறைகள், புகைப்படங்கள், வீடியோக்கள் என்று உலகிலேயே மிகப் பெரிய எரிமலை அருங்காட்சியகத்தை உருவாக்கினார் கட்டியா. பல்வேறு இடங்களில் உரைகள் நிகழ்த்தினார். ஆவணப்படங்களைத் திரையிட்டார். எரிமலைகள் குறித்து ஏராளமான தகவல்களை அறிந்திருந்த கட்டியா, அவற்றின் ஆபத்துகளைப் பற்றிப் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை.

1985ம் ஆண்டு கொலம்பியாவில் உள்ள ஓர் எரிமலை வெடித்ததால் 23 ஆயிரம் மக்கள் இறந்து போனார்கள். அதற்குப் பிறகே எரிமலை வெடிப்பு குறித்த விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்த வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார் கட்டியா. யுனெஸ்கோ உதவியுடன் ஆவணப்படத்தை வெளியிட்டு, ஏராளமான உயிர்களைக் காப்பாற்றினார்.

கட்டியாவும் மௌரிஸும் தங்கள் வாழ்க்கையில் 175 எரிமலை வெடிப்புகளைப் பார்த்திருக்கிறார்கள். நெருங்கி ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். ஒட்டுமொத்தமாக உள்ள ஆயிரம் எரிமலையியலாளர்களில் `உயிருடன் இருக்கும் எரிமலைகள்' குறித்து ஆராய்ச்சி செய்த 50 நபர்களில் கட்டியாவும் மௌரிஸும் இடம்பெற்றனர்.

“எரிமலைகளை நேசிப்பதைப் போலவே அவற்றின் மூலம் ஏற்படக்கூடிய ஆபத்துகளையும் அறிந்தே இருக்கிறோம். உயிர் பற்றிய பயம் இருவருக்கும் இல்லை. ஒருவேளை எரிமலையால் கொல்லப்பட்டாலும் அதில் எங்களுக்குப் பெருமிதம் தான்” என்றார் கட்டியா.


1991 ஜூன் 3... ஜப்பானின் அன்ஸென் எரிமலை வெடித்து கட்டியா, மௌரிஸ் உட்பட 41 பேரின் உயிர்களைப் பறித்துவிட்டது. 23 ஆண்டுகாலம் இருவரும் ஆராய்ச்சி செய்ததன் மூலம் கிடைத்த தகவல்கள், இன்றும் அறிவியலாளர்களுக்கு மிகப் பெரிய உதவியாக இருக்கின்றன.



**அம்பாள் நாராயணசாமி கடந்த 8ஆம் திகதி தனது 90 ஆவது வயதில் காலமானதையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

# இலங்கையில் சைவ உணவக சாம்ராஜ்யமே நடத்திய அம்பாள் நாராயணசாமி

**மணி ஸ்ரீகாந்தன்...**



இலங்கையில் சைவ உணவகங்களின் தோற்றமும் வளர்ச்சியும் என்ற பொருளை எடுத்துக் கொண்டால் இவ்விடயத்தில் ஆக்கபூர்வமான எந்தவொரு ஆய்வும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. இந்நாட்டில் தினசரி இலட்சக்கணக்கான மக்களுக்கு குறைந்த கட்டணத்தில் நிறைவான உணவுகளை வழங்கும் சேவையை 'சைவக்கடைகள்' ஆற்றி வருகின்றன.

தமிழ் மக்களுடனும் தமிழ் உணவு கலாசாரத்துடனும் தவிர்க்க முடியாத ஒரு பிணைப்பை சிங்கள மக்கள் மத்தியில் சைவ உணவகங்கள் ஏற்படுத்தியுள்ளன என்றால் மிகையல்ல. தோசையும் வடையும் இன்று சிங்களவர்களின் உணவாகவும் மாறிப்போனதற்கு சைவ உணவகங்கள் காரணமாக இருந்துள்ளன. கறிகளுக்கு, சைட்டிஷ்களுக்கு சைவ உணவகங்கள் கட்டணம் அறவிடுவதில்லை என்பதாலும், ஏனைய உணவகங்களுடன் ஒப்பிடும்போது சைவ உணவகங்களில் விலை மலிவு என்பதாலும் அவற்றுக்கான மவுசு குறையவே இல்லை. நிர்வாகம் சரியாக செய்தால் சைவ உணவகம் நடத்தி யாரும் நஷ்டப்படுவதில்லை.

கொழும்பு ஆமர் வீதி சந்தியில் அமைந்திருக்கும் அம்பாள் கபே உணவகத்தை பார்த்திருப்பீர்கள். அந்தக்கடையில் நடுநாயகமாக நெற்றியில் திருநீற்றுப் பட்டையோடு ஐயங்கார் பாணியில் ஒரு பெரியவர் அமர்ந்திருப்பார். அவர் பெயர் நாராயணசாமி.

சினிமா, வர்த்தகம் என பல்துறை வித்தகராக ஒரு காலத்தில் கொடிகட்டிப் பறந்த ஒரு பெரிய மனிதர். அவர் நம் நாட்டில் ஒரு காலத்தில் வைரசாக பரவி இருந்த ஜெக்பொட் சூதாட்டத்தின் முக்கிய புள்ளியாக விளங்கியவர் இவர்தான். கொழும்பில் மட்டும் தனக்கு 300 ஜெக்பொட் சென்டர்கள் இருந்ததாக ஒத்துக்கொள்ளும் இவர், முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸதான் ஜெக்பொட் சென்டர்களுக்கு சாவு மணி அடித்தவர் என்கிறார்.

கிருலப்பனையில் இருந்து பின்னர் 83 கலவரத்தில் எரியூட்டப்பட்ட கல்பனா தியேட்டர் உட்பட 27 அம்பாள் சைவ ஹோட்டல்களுக்கு சொந்தக்காரராக விளங்கிய அவரை ஒரு காலை வேளையில் ஆமர் வீதி அம்பாள் உணவகத்தில் சந்தித்துப் பேசியபோது....

இப்போது 83 வயது. உடல் தளர்ந்து நடை தளர்ந்து காணப்பட்டாலும் தினமும் காலையில் எழுந்து எட்டரை மணிக்கெல்லாம் ஆமர்வீதி அம்பாள் உணவகத்துக்கு வந்து விடுகிறார்.

"இந்த வயதான காலத்தில் நீங்கள் வீட்டில் ஓய்வாக இருக்கலாமே! ஏன் இப்படி வந்து கஷ்டப்படுகிறீர்கள்?" என்று கேட்டதற்கு,

"என் உடம்பு மட்டும்தான் பலவீனம் அடைந்திருக்கிறது. மனதளவில் நான் இன்னும் இளமையாகத்தான் இருக்கிறேன்" என்று கம்பீரமாக பதில் சொல்கிறார் நாராயணசாமி.

"இப்போ நீங்கள் பார்க்கிற நாராயணசாமிக்கும் அப்போ இருந்த நாராயணசாமிக்கும் ரொம்ப வித்தியாசம். அந்தக்காலத்தில் காலையில் எழுந்த உடன் ஒரு முக்கால் போத்தல் பால் குடித்து விட்டுத்தான் பல் விளக்குவேன். உடல் பயிற்சி செய்வேன். என்னைப்போல ஆட்டுரலில் உட்கார்ந்து மணிக்கணக்கில் மாவாட்ட யாருக்கும் வராது" என்று பழைய நினைவுகளில் மூழ்குகிறார் நாராயணசாமி.

தமிழகத்தில் பாஞ்சாலங்குறிச்சி கயத்தாறு பக்கத்தில் உள்ள ஊரைச் சேர்ந்தவர். சிறுவயதில் தொழிலாளியாக கொழும்புக்கு வந்தவர் தனது 14வது வயதில் கொழும்பு செட்டியார் தெருவில் இருந்த கிருஷ்ண கபே ஹோட்டலில் பரிமாறுபவராக பணியாற்றி இருக்கிறாராம்.

"மாவாட்டுவது, பத்திரம் கழுவுவது, மேசையை சுத்தப்படுத்துவது உள்ளிட்ட அனைத்து வேலைகளையும் நான் செய்திருக்கிறேன். சைவ உணவகம் ஒன்றில் எனக்குத் தெரியாத வேலையே கிடையாது. அப்போது எனக்கு அந்த ஹோட்டலில் மாதச் சம்பளம் 30 ரூபா தந்தாங்க. ஐந்து வருஷம் தொடர்ச்சியாக அங்கே வேலை செய்திருக்கிறேன்.

இப்போ மின்சாரத்தில் ஓடும் ஆட்டுக்கல் 18 ஆயிரம். ஆனா அப்போது பெரிய ஆட்டுக்கல் 13 ரூபாவுக்கு விற்கப்பட்டது. அதில ஐந்து கிலோ உளுந்து போட்டு ஆட்டலாம். தோசை ஒன்று 5 சதத்திற்கும், மசால் தோசை 10 சதத்திற்கும் விற்கப்பட்டது. இப்போ மசால் தோசையின் விலை 130 ரூபா. அந்தக்காலத்தில் எனது ஹோட்டல்களில் பசும்பாலில்தான் டீ போடுவார்கள். அதற்காகவே பேலியாகொடை, கிரிபத்கொடை, மாவலை உள்ளிட்ட பகுதிகளில் மூன்று பால் பண்ணைகளை அமைத்திருந்தேன். சுமார் 1200 பசுமாடுகள் இருந்தன. மாடுகளின் உணவுக்காக ஒரு பசும்புல் தோட்டமும் எனக்கு இருந்தது. அதோடு குருநாகலில் 118 ஏக்கரில் ஒரு தென்னந் தோட்டமும் இருந்தது" என்று தன் வர்த்தக எல்லைகளை விபரித்துச் சென்ற போது, இவர் சாமானியர் அல்ல, அக்காலத்தில் ஒரு பெரும் தொழிலதிபராக இருந்தவர் என்பது புரிந்தது.

"இப்போது சைவ உணவகங்களில் பல இயந்திரங்கள் வந்து விட்டன. புதிய சமையல் நுணுக்கங்கள், சமையல் தொழில்நுட்பங்கள் வழக்கத்துக்கு வந்து விட்டன. எனவே அன்றைய தோசை, இட்லி, சாம்பாரின் சுவையை விட இன்றைய தோசை, இட்லியின் சுவை, செய்நேர்த்தி அதிகம் தானே? என்று கேட்டோம்.

"இல்லை.. அன்றைய சுவை இப்போது இல்லை. ஏனென்றால், அன்றைக்கு நாங்கள் வாங்கிய உளுந்து, அரிசி, வெங்காயம், பருப்பு போன்ற மூலப் பொருட்கள் இரசாயனங்கள் கலக்காதவை, இன்றைக்கு எல்லாம் இரசாயனம் கலந்தவையாகி விட்டன. மெஷின் பட்டு மாதிரி மாவாட்டினாலும் அன்றைக்கும் விழுது மாதிரி வரும் வரை நாங்களும் மாவாட்டிய பின்னர்தான் வடை, தோசை சுடுவோம். ஆகவே, அன்றைக்கு பண்டங்கள் சுவையாகவும் தரமாகவும்தான் இருந்தன" என்கிறார் நாராயணசாமி.

நம் நாட்டில் தயாரிக்கப்பட்ட 'மஞ்சள் குங்குமம்' திரைப்படத்தின் தயாரிப்பாளரான இவர் அந்தப் படத்திற்கு 4 இலட்சம் ரூபா முதலீடு போட்டிருக்கிறார். அன்றைய திகதியில், 70களின் ஆரம்பப் பருவத்தில், இது ஒரு பெரிய தொகை. ஆனால் போட்ட பணம் திரும்பக் கிடைக்கவில்லை இவருக்கு.

"மஞ்சள் குங்குமத்தை ஆரம்பத்தில் கிங்ஸ்லி செல்லையாதான் தயாரித்தார். பிறகு அவர் கை விட்டுவிட நான் தொடர்ந்தேன். படத்தில் இலாபம் பார்க்கும் நோக்கில் நான் அதை செய்யவில்லை. எனக்கு நடிக்க வேண்டும் என்ற ஒரு ஆசை இருந்தது. அதற்காக செய்தேன். பருத்தித்துறை கடற்கரையில் நான் பேசுவது மாதிரி ஒரு சீன் எடுத்தோம். படத்திற்கு போட்ட முதலீட்டில் பாதிதான் வந்தது. அதன் பிறகு சினிமா படம் எடுப்பதை பெரிய அளவில் செய்யலாம் என்று தீர்மானித்தேன்.

எம். ஜி. ஆரை கதாநாயகனாக போட்டுப் படம் எடுத்தால் நிறைய காசு பார்க்கலாம் என்று நினைத்து அவரோடு பேசினேன். அதற்கு எம். ஜி. ஆரும் சம்மதித்தார். ஆனால் அவர் ஒரு கண்டிஷன் போட்டார். இந்திய படத்திற்கான இந்திய உரிமையை தான் எடுத்துக்கொள்வதாகவும் மற்ற நாடுகளுக்கான உரிமையை என்னை எடுத்துக்கொள்ளும்படியும் சொன்னார். நானும் சம்மதித்தேன். ஆனால் அப்போதிருந்த இலங்கை அரசு அதற்கு அனுமதி தரவில்லை. அதனால் திட்டத்தைக் கைவிட வேண்டியதாயிற்று' என்று தன் சினிமா அனுபவம் பற்றிப் பேசினார் நாராயணசாமி.

தங்களின் வெற்றியின் ரகசியம் என்ன என்று நாராயணசாமியிடம் கேட்டோம்.

முயற்சி, நேரத்தை வீணடிக்காமல் பயன்படுத்துவது, திட்டமிடல், சிக்கனம் என்று நச் சென்று பதில் சொன்னார்.

பெரு வாழ்வு வாழ்ந்து முடித்துவிட்ட நாராயணசாமிக்கு ஒரே ஒரு மனக்குறை. உடல் தளர்ந்து விட்டதே, நடக்க சிரமப்பட வேண்டியிருக்கிறதே என்பதுதான் அது. 83 வயதுவரை வாழ்பவர்கள் இன்று எத்தனைபேர்? எம்மைப் பொருத்தவரை அவர், வயதுக்கான தளர்ச்சியைத் தவிர, நன்றாகத்தான் இருக்கிறார். உயரங்களைத் தொட்ட, எல்லைகளை விஸ்தரித்துக் கொண்ட, முன் மாதிரியாகக் கொள்ளக்கூடிய நிறைவான வாழ்க்கை வாழ்ந்தார் அவர்.

எம்முடன் பேசிக் கொண்டிருந்த நாராயணசாமி, அம்பாள் கபேயை நோட்டம் விடுகிறார். சாப்பிட்டுக் கொண்டிருந்த ஒருவர் அங்கும் இங்குமாக பார்க்கவே, ஒரு பணியாளரை பார்வையால் நிறுத்தி,

"அவருக்கு என்ன வேணும்னு கேளு" என்கிறார்.

இந்த வயதிலும் அவர் இரத்தத்தில் ஊறிப்போன வயிறார உணவிடும் குணம் உயிரோட்டத்துடன் அவருள் இயங்கிக் கொண்டிருப்பதை எம்மால் காணமுடிந்தது.

**நன்றி வண்ண வானவில்**



றைகம் கீழ் பிரிவு ஆலய நிர்மாண பணிகளின் போது நாராயணசாமி மற்றும் கடைசியாக உடன் வருபவர் கந்தையா மாஸ்டர் இவ: எம்.பீ.பாலன்,நாராயணசாமி,ஸ்ரீசங்கர்,(கண்ணாடி), முன்னால் அமைச்சர் திருச்செல்வம், ஹெலன் குமாரி, உதயகுமார் மணவை தம்பி, நாராயணசாமி, மற்றும் கிங்ஸ்லி செல்லையா



டி.எம்.எஸ்.ஜெமினியுடன் நாராயணசாமி



செல்லச்சாமி தொண்டமானுடன் அம்பாள்





# மோகத்தைக் கொன்றுவிடு

**பெண்ணவளின் மென்னழகை பேறென்று எண்ணும்**
**விண்ணளவாய் வாஞ்சை கொள்ளும் – நன்மனது,**
**பித்தேறும் பிரமையுறும் பிறர் நகைக்க நிற்கும்.**
**செத்தேனும் காதல் செயும்**

**கல்வியதைக் கருதாது காசு உழைக்க மேவாது**
**அல்லலதைக் கூட அது அலட்டிக்–கொள்ளாது.**
**கண்ணிலே தோன்றி கருத்திலே நிலைகொண்ட.**
**விண்ணமுதை விண்டுரைக்கும் வியந்து,**

**கனவுலகில் நீந்தும் கண்ணாடி முன் நிக்கும்**
**அனவரதமும் அழகு பேணும் – நினைவிழந்து**
**புறச்சட்டை போடும் பிறஸ் இன்றிப் பல்துலக்கும்**
**குறைத்தூக்கம் கொள்ளும் குறி**

**பெற்றோரை மதியாது போராடக் கூசாது**
**கற்றோரை நாடிக் களியாது – குற்றுயிராய்**
**மனங்கொண்ட பெண்ணை மன்றாடித் தொழுதேற்றி**
**அணைத்தின்பம் காணும் அது**

**உடல் மெலியும் உழைப்பிழக்கும் உணவின்றித்திரியும்**
**கடல் மலையை காலடியாய் என்னும் –விடலறியா**
**விருப்பதனில் வீழ்ந்து வீட்டுசுகம் தான் எய்தும்**
**நெருப்பணைத்து நேசமுறும் நெஞ்சு**

**கட்டி அணைக்கும் கண்ணீரைத் தான் கொட்டும்**
**எட்டி தொலைவிருந்தால் ஏக்கமுறும் _ கிட்ட வந்தால்**
**முகம் திருப்பி நின்று முரண் கொள்ளும் சிறுபொழுது**
**அகமகிழ்ந்து அன்பூட்டும் அது**


**கூடிமகிழும் குவலயத்தின் நினைவிழக்கும்.**
**நாடி நலம் துய்த்து நன்றுரைக்கும் – வாடிநிதம்**
**பிரிவுற்றால் ஏங்கும் பிணம் போல ஆகும்.**
**அருகுற்றால் உயிர்க்கும் அது**

**உண்டசுவையும் சலிக்கும் உடைவிருப்பம் அற்றிறுப்போம்.**
**பண்டு முதல் பற்றியவை பறிபோம் _ பெண்ணழகோ**
**உற்று உடன்பிறந்த உயிர் போல நிலை கொண்டு**
**பற்றுதே பாழ்மனதைப் பார்**

*கம்பநேசன்*



# பாரம்பரியத்தில் காலஞ்சென்ற ஏ.எம்.சாஹூல் ஹமீத் நினைவுகள்



இம்மாதம் 15ஆம் திகதி செவ்வாய் இரவு 8.15க்கு முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பாகும் பாரம்பரியத்தில் மர்ஹூம் ஏ.எம். சாகுல் ஹமீத் நினைவுகள் மீட்டப்பட இருக்கின்றன.

பாணந்துறை ஹேனமுல்லையில் பிறந்த காலஞ்சென்ற ஏ.எம். சாஹூல் ஹமீத் தமிழ், சிங்களம், ஆங்கிலம், அரபு, ஹிந்தி, பாளி ஆகிய மொழிகளில் பாண்டித்தியம் பெற்றவர். தனக்கிருந்த சிங்கள மொழி ஆளுமையினாலும், தமிழ் மொழி வளத்தாலும் சகல இன மக்கள் மத்தியிலும் செல்வாக்கு பெற்றவராக திகழ்ந்தார்.

இவரது மொழி ஆளுமை இன உறவுக்கு துணை சேர்க்க இவருக்கு பெரிதும் உதவியது. முஸ்லிம்கள் சிங்கள மொழியை கற்பது அவசியம் எனும் முனைப்பில் பாரிய பங்காற்றினார்.

1960ஆம் ஆண்டு தொட்டு முஸ்லிம் சேவைக்கு ஏ.எம். சாஹூல் ஹமீத் அவர்கள் தனது இறுதி மூச்சு வரை பெரும் பங்களிப்பு செய்தார். முஸ்லிம் சேவையில் இவர் வழங்கிய புர்தா ஷரீஃப் விளக்கம், கஸீத்துல் புர்தா நிகழ்ச்சிகள் நேயர்கள் மத்தியில் பெரும் புகழை தேடிக்கொடுத்தன.

இன்னும் இஸ்லாமிய நற்சிந்தனை, குத்பா பிரசங்கம், கலந்துரையாடல், வரலாற்றில் ஓர் ஏடு என அதிகமான நிகழ்ச்சிகளை வானொலிக்கு வழங்கி நம் நாட்டில் மட்டுமல்லாது கடல்கடந்த நாடுகளிலும் பிரபலமானார்.

# மட்டக்களப்பு வேத்துச்சேனைக் கிராம மக்கள் கேட்பதெல்லாம் என்ன?

வ.சக்திவேல்

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவாங்கரைப் பெரு நிலத்தின் போரதீவுப் பற்றுப் பிரசேத்திற்குட்பட்டதே வேத்துச்சேனை எனும் குக் கிராமமாகும். வருடாந்தம் வடகீழ் பருவப் பெயர்ச்சிக் காலமான ஐப்பசி தொடக்கம் மாசி மாதம் வரையிலான பெரு மழை வீழ்ச்சிக் காலத்தில் இக்கிராமம் வெள்ள நீரில் மூழ்குவது வழக்கமாகும். இந்நிலைமை வருடாந்தம் மாரி மழை காலத்தில் இடம்பெற்றுக் கொண்டு தான் வருகின்றது.

இதனால் அக்கிராம மக்கள் வருடாந்தம் இடம்பெயர்ந்து வெல்லாவெளியில் அமைந்துள்ள பாடசாலை இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க கட்டடம், உறவினர்களின் வீடுகள் என்பனவற்றில் , தஞ்சமடைவதுவும், மீண்டும் வெள்ளநீர் வடிந்ததும், மீளக் குடியமர்வதும்









என்பதை வழக்கமாகக் கொண்டுள்ளார்கள். இந்நிலையில் அக்கிராம மக்கள் வேண்டுவதெல்லாம் அக்கிராமத்தைச் சுற்றி வெள்ள நீர் உட்புகாமலிருப்பதற்காக அணைக்கட்டு இடுவதும், வெள்ள காலத்தில் தங்கிருப்பதற்காக மாடிக் கட்டடம் ஒன்றையும் அமைத்துத் தருமாறும் தமது உயிர்களைக் காப்பாற்ற கிராமத்தைச் சுற்றி காட்டு யானை பாதுகாப்பு வேலி அமைத்துத் தருமாறும் தான்

வருடாந்தம் வெள்ளப்பெருக்கிற்குள் அகப்படும் அக்கிராமத்தின் பிரதான வீதி உட்பட அனைத்து வீதிகளும் குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது. இந்நிலையில் அக்கிராமத்தில் ஆரம்ப பாடசாலை ஒன்றுகூட இல்லாத நிலையில் அங்கிருக்கின்ற மாணவர்கள் சுமார் 3 கிலோ மீற்றர் தூரம் வயல் வெளிகளை நடந்து கடந்து வெல்லாவெளிக் கிராமத்தில் அமைந்துள்ள பாடசாலைக்குச் சென்றே தமது கற்றல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கிராமத்தினுள் உட்புகும் வெள்ள நீர் உள்வராமலிருக்க கிராமத்தைச் சுற்றி அணைக்கட்டு போடுதல், ஆரம்ப பாடசாலை ஒன்றை உருவாக்குதல், கிராமத்தின் வீதிகளையும் செப்பனிடுதல், உள்ளிட்ட பல தேவைகளைப் பூர்த்தி செய்து தருமாறு அக்கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இது இவ்வாறு இருக்க வேத்துச்சேனைக் கிராமத்திற்குள் கடந்த ஞாயிற்றுக்கிழமை (06.09.2020) அதிகாலை ஒரு மணியளவில் புகுந்த 3 காட்டுயானைகளால் அக்கிராமமே விடிய விடிய கண்விழித்திருந்ததாக அக்கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். வேத்துச்சேனைக் கிராமத்திற்குள் புகுந்த காட்டுயானைக் கூட்டத்தினால் அக்கிராம மக்கள் மிகுந்த சிரமங்களுக்குட்பட்டு, அல்லோல கல்லோலப்பட்டுள்ளனர். கிராமத்திற்குள் புகுந்த காட்டுயானைகள் வீடுகளை அடித்து உடைத்துள்ளதுடன், வீடுகளில் மக்கள் தமது உணவுக்காக வைத்திருந்த நெல் மூட்டைகளையும் உண்டு சேதப்படுத்தி, மற்றும், வேலிகள், மற்றும் நெல் குற்றும் ஆலை ஒன்றையும் முற்றாக அடித்து உடைத்துவிட்டுச் சென்றுள்ளன.

ஆழ்ந்த உறக்கத்திலிருந்த எமக்கு அதிகாலை ஒரு மணியளவில் வெளியில் ஏதோ சத்தம் கேட்டது நான் மாத்திரம் வெளியில் வந்து பார்த்தேன் மிகவும் உயரமான யானை ஒன்று எமது வீட்டை நோக்கி வருவதை அவதானித்தேன், பின்னர் புத்திசாதுரியமாகச் செயற்பட்டு, உறக்கத்திலிருந்த மனைவி பிள்ளைகளை எழுப்பிக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறி வீதிக்குச் சென்றுவிட்டோம். பின்னர் இன்னுமொரு யானை வந்து இரண்டு யானைகளுமாக எமது வீட்டின் முன் சுவர் பகுதியை உடைத்து உள்ளிருந்த 12 நெல் மூட்டைகளையும் இழுத்து நிலத்திலே கொட்டி உண்டு சேதப்படுத்தின.

இந்நிலையில் கிராம மக்கள் ஒன்றுகூடிவிட்டனர், யானைகள் எமது வீட்டை உடைப்பதை அவதானித்த நாம் அயலவர்களின் உதவியுடன், தீப்பந்தம் ஏந்தியும், உரக்கச் சத்தமிட்டும் யானைகளைத் துரத்த முயற்சித்தோம், எம்மைப் பொருட்படுத்தாத யானைகள் எம்மைத்தான் தாக்குவதற்கு துரத்தி வந்தன. நாம் வீட்டிற்குள்ளே உறக்கதிலிருந்து எழும்பாமல் இருந்திருந்தால் எமது 4 பிள்ளைகளைகளும் நாமும், உயிரிழந்திருப்போம், மயிரிழையில் உயிர் தப்பினோம். எம்மை கடவுள் தான் காப்பாற்றினார் எமக்கு என்ன செய்வதென்று தெரியாதுள்ளது என நள்ளிரவு வேளையில் காட்டுயானையின் தாக்குதலில் மயிரிழையில் உயிர்



கோசலாதேவி



பேரின்பநாயகி



கமலேஸ்வரன்

தப்பிய 4 பிள்ளைகளின் தந்தையான சீ.கோபாலசிங்கம் தெரிவித்தார்.

இந்நிலையில் இச்சம்வம் இடம் பெற்றுக் கொண்டிருந்த அன்றைய தினமே அக்கிராமத்தினுள் மற்றுமொரு வீட்டை வேறொரு காட்டு யானை தாக்கியுள்ளது. அவ்வீட்டிலிருந்தவர்கள் கூக்குரலிட அந்த யானை அவ்வீட்டின் யன்னல் பகுதியை தாக்கிவிட்டுச் சென்றுள்ளது.

பின்னர் 3 யானைகளும் கிராமத்திலிருந்த மரவள்ளி தோட்டம், மற்றும் வாழைகளையும் அழித்துள்ளன. அதன் பின்னர் ஒருவாறு மக்கள் ஒன்றிணைந்து அதிகாலை சுமார் 3 மணியளவில் அவற்றை கிராமத்தை விட்டு வெளியேற்றியுள்ளன.

வேத்துச்சேனை 126 குடும்பங்களைக் கொண்ட ஒரு சிறிய கிராமமாகும். சுற்றிவர வயல் நிலங்களும், அதற்கு அப்பால் ஆங்காங்ககே சிறு சிறு பற்றைகளும் உள்ளன. இதனால் தினம் தினம் காட்டுயானைகள் எமது கிராமத்திற்குள் உட்புகுகின்றன. இவ்வாறு வரும் யானைகள் மக்களின் வாழ்வாதாரப் பயிர்களான வாழை, தென்னை, மரவள்ளி போன்ற பயிர்களை அழிப்பதுடன், வீடுகளையும், உடைத்துவிட்டு, வீட்டுக்குள் மக்கள் உணவுக்காக வைத்திருக்கும், நெல் மூட்டைகளையும், அழித்துவிட்டுச் செல்கின்றன. வனஜீவராசிகள் பாதுகாப்பு பிரிவினருக்கு அறிவித்துள்ள போதிலும் நாங்கள் கிராமத்தில் நிலை கொண்டிருந்த காட்டுயானைகளை ஒருவாறு வெளியேற்றிய பின்னர்தான் அவர்கள் வந்தார்கள், எம்மிடம் யானை வெடிகள்கூட இல்லை கிராமசேவகர் வந்து பார்வையிட்டுச் சென்றுள்ளார். வன ஜீவராசிகள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரும் எமது அயல் மாவட்டமான அம்பாரை மாட்டத்தைச் சேர்ந்தவர்தான். எனவே அவருக்கும் யானைகளின் தொல்லைகள் பற்றி நன்கு தெரியும். எனவே மிகவிரைவில் இந்த யானைத் தொல்லையிலிருந்து நீங்குவதங்கு தீர்க்கமான ஒரு முடிவைப் பெற்றுத்தர வேண்டும். என வேத்துச்சேனைக் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவலர் எஸ்.கமலேஸ்வரன் தெரிவிக்கின்றார்.

அண்மையில் நள்ளிரவு ஒரு மணி அளவில் வெளியில் சத்தம் கேட்டது வெளியில் வந்து பார்த்தபோது 2 யானைகள் எமது மரவள்ளித் தோட்டத்தை அழிப்பதைக் கண்டோம். நாங்கள் சத்தமிட்டோம் பின்னர் யானைகள் எமது தோட்டத்தின் வேலியை உடைத்து தும்பிக்கையால் மண் அள்ளி எமக்கு வீசியது. நாங்கள் பயந்து அயலவரின் வீட்டுக்குள் ஓடி ஒளிந்துவிட்டோம். பின்னர் இளைஞர்கள் ஒன்றுகூடி

(தொடர் 20ஆம் பக்கம்)

## மன்றத்தின் இணைச்செயலாளராகத் திகழ்ந்த... 08ஆம் பக்கத் தொடர்

எட்டியாந்தோட்டையில் உள்ள கன்னியர் மடத்துக்கான அடிக்கல் நாட்ட அப்போதைய பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவல வந்திருந்தார். அந்தனியின் அந்தச் செய்தி பெரிய புகைப்படத்தோடு வீரகேசரி, தினகரன் பத்திரிகைகளின் முன்பக்கத்தில் பிரசுரமானது. பதுளை எஸ்.எம். சுப்பையாவின் பாரியார் தூரத்துப்பச்சை கோகிலம் சுப்பையா தலைவர் நாயர் வீட்டுக்கு ஒருநாள் வந்திருந்தார். அவரை பேட்டிகண்டு அனுப்பிய செய்தி முழுப்பக்கத்தில் பிரசுரமானது.

ஒருநாள் நாயர் அந்தனியிடம் டைம்ஸ் ஒப் சிலோன் பத்திரிகைக்கு எட்டியாந்தோட்டை நிருபராக விண்ணப்பிக்கச் சொன்னார். ஆசிரியருக்கான சிபாரிசுக் கடிதமும் அவரே கொடுத்தார். அவர் நிருபராக நியமனம் பெற்றார். 1954ம் ஆண்டு எஸ். எஸ்.சி பரீட்சை எழுதிவிட்டு அவரது பாடசாலையிலேயே பாலர் வகுப்புக்கு ஆசிரியராகவும் பணியாற்றத் தொடங்கினார்.

ஒருநாள், கொழும்பில் வெளியாகும் அவரது 'நண்பன்' என்ற வாரப் பத்திரிகை தயாரிப்பதில் அதன் ஆசிரியர் டி.எம். பீர்முகம்மதுவுக்கு உதவும்படி பணித்திடவே, அந்தனி கொழும்பு சென்றார். பத்திரிகை புதிய சோனகத்தெரு என்.எஸ்.ஆர் பதிப்பகத்தில் அச்சடிக்கப்பட்டது. அப்போது இ.தொ.கா, ஜ.தொ.காவுக்கிடையே பலத்த போட்டி. ஜனாப் ஏ. அஸீஸ், நாயர் ஆகியோர் கண்டி, பதுளை, நுவரெலியா என்று மலையகத்தின் பல இடங்களுக்கும் சென்று கூட்டங்கள் நடத்துவர். டியெம்பி இவர்களுக்குக் கிடைத்த பெரும் வரப்பிரசாதமாகும். இவர் பீரங்கிப் பேச்சாளர் என்று அழைக்கப்பட்டார். தி.மு.க. அனுதாபியான இவர் அடுக்குத் தமிழில் முழக்கமிடுவார்.

அஸீஸ், நாயர் போகுமிடமெல்லாம் இவரையும் அழைத்துச் செல்வார். அதனால் பத்திரிகையை தயாரிக்கும் பொறுப்பு அந்தனியுடையதாயிற்று. மலையக மக்களின் துன்ப துயரங்களை எடுத்து இயம்பும் கதை, கட்டுரை, கவிதைகளால் பக்கங்களை நிரப்பிடுவார். தமிழகத்தின் கொத்தமங்களம் சுப்புவின் பாணியில் தோட்ட மக்களின் மொழியிலேயே கவிதை எழுதுவார்.

1957 ஆம் ஆண்டு இறக்குவானையில் பாலம்கோட்டா என்ற தோட்டப் பாடசாலையில் உதவி ஆசிரியராகச் சேர்ந்தார். காரப்பந்தாட்டம், கால்பந்தாட்ட தலைவனாகவும் இருந்துள்ளார். இந்த அனுபவம் அவரது ஆசிரியர் பதவிக்கு அனுகூலமாயிருந்தது.

பின்னர் டைம்ஸ் ஒப் சிலோன் ஆங்கில பத்திரிகையின் இறக்குவானை நிருபராக நியமிக்கப்பட்டார். அப்போது வீரகேசரியின் உதவி ஆசிரியாராக இருந்த எஸ். பெருமாளுடன் தொடா'பு ஏற்பட்டது. வீரகேசரிக்கு விண்ணப்பித்து இறக்குவானை நிருபராக நியமனம் பெற்றார்.

1963 இல் அட்டனில் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்ட மலைநாட்டு எழுத்தாளர் மன்ற அங்குரார்ப்பண கூட்டத்துக்கு வரும்படி மலைநாட்டு எழுத்தாளர் மன்ற ஸ்தாபகர் எஸ்.எம். கார்மேகம் அழைப்பு விடுத்தார். அங்கு இர. சிவலிங்கம், எஸ். திருச்செந்தூரன் ஆகியோருடன் பழகும் சந்தர்ப்பம் கிடைத்தது. அந்தனியின் ஆக்கங்களை அவர்கள் கிலாகித்துப் பேசியதாகவும் அவர்களது விருந்தோம்பல் தனக்குக் கிடைத்த பாக்கியம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். தற்போது 88 வயதில் எனது குடும்பத்தோடு எட்டியாந்தோட்டையில் கடைசி மகளோடு வாழ்ந்து வருகிறார்.

## பெருந்தோட்டங்களுக்கு தபால் சேவை...... 08ஆம் பக்கத் தொடர்

2005 இல் இதற்கான தீர்மானம் பெறப்பட்டிருந்தாலும் இதன் நிறைவேற்றம் உரிய தொடர் நடவடிக்கை இல்லாததால் தாமதமாகியது.

**தபால் அலுவலக நியமனம்**

2007 இல் ரவூப் ஹக்கீம்' தபால் அமைச்சராக இருந்த போது 500 பேர் தபால் அலுவலகராக நியமிக்க அமைச்சரவை தீர்மானம் பெறப்பட்டு 400 பேருக்கே திறைசேரியின் ஒப்புதலும் நிதி ஒதுக்கீடும் கிடைத்தது. தோட்டப்புற இளைஞர்கள் 344 பேர் அளவில் நியமனம் செய்யப்பட்டனர். இந்த நியமன முறைமையை கண்காணிப்பு செய்வதற்காக தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளர்களான கே.மாரிமுத்து,சி.நவரட்ண மற்றும் நான் உள்ளிட்ட ஒரு குழு நியமன முறையை கண்காணிப்பு செய்தது.

**தற்போதைய தேவை**

500 பேர் அளவில் நியமிப்பதற்கு அமைச்சரவை தீர்மானம் இருந்தும் 344 பேரே நியமனம் செய்யப்பட்டமையால் ஒரு இடைவெளி ஏற்பட்டது. எனினும் இந்த இடைவெளியை நீக்க தொடர் நடவடிக்கை இன்றி இது நடைமுறைப்படுத்தப்படவில்லை. 2015 இல் நல்லாட்சி அரசாங்கத்தில் இதற்காக முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அந்த முயற்சியும் உரிய பலனை தரவில்லை. எனினும் இறுதியாக 2019 இல் நடுப்பகுதியில் 100 பேரை நியமிப்பதற்கு திறைசேரியிர் அங்கீகாரம் பெறப்பட்டது. அதுவும் நிறைவேற்றப்படவில்லை.

**புதிய இராஜாங்க அமைச்சரின் முன்னுள்ள பணிகள்**

மறைந்த இராஜாங்க அமைச்சர் செல்லசாமி முன்னெடுத்த பணிக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டியது புதிய இராஜாங்க அமைச்சரின் கடமையாகும்.

2002 இற்கு முன்னர் தோட்டப்புறங்களுக்கு 1500 தபால் அலுவலகர்கள் தேவை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. பின்னர் 500 பேருக்கு அமைச்சு அங்கீகாரம் வழங்கியது. இது தொடர்பாக தோட்டப்புறங்களில் ஒரு தேவை மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.

அத்தோடு தோட்ட வீடமைப்பு உட்கட்டமைப்பு சமுதாய அபிவிருத்தி அமைச்சினால் நிர்மாணிக்கப்பட்ட 120 உப தபாற் கந்தோர்களின் தற்போதைய உபயோகம் பற்றி கவனம் செலுத்தி,அவற்றை செம்மையாக உபயோகிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

ஊடகங்களும் சிவில் அமைப்புகளும் தொடர்ச்சியாக வெளிப்படுத்திய பிரச்சினை சரியான முகவரி பற்றியது. தோட்ட வீடுகளுக்கு தனித்த ஒரு முகவரி ஒன்றை கொடுக்க முடியாத நிலை உள்ளது. லயத்து வீடமைப்பு முறைமையில் லயக் காம்பராக்களுக்கு முகவரி இடுவதும் சிரமமானது. அத்தோடு பெயர்களும் முதலெழுத்துகளும் ஒரே மாதிரியாக இருப்பதும் பல சிரமங்களை தோற்றுவித்துள்ளது. தோட்ட லய வீடுகளுக்கு முகவரி இடும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் அவை முழுமையாக வெற்றியளிக்கவில்லை. தற்போது புதிய கிராமங்கள் அமைக்கப்பட்டு வருகின்ற தோட்டங்களில் இந்த முகவரியிடும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணலாம். இது நீண்டகாலப் பிரச்சினை. இதனை தோட்ட வீடமைப்பு அமைச்சோடு இணைந்து தீர்வு காண முயலலாம்.

## தென் தமிழர்களின் முகவரியாக விளங்கும்... (12ஆம் பக்கத் தொடர்)

போய்ப் பார்க்கிறீர்களா? என்று ஆலோசனை சொல்வதைப்போலல்ல. அக்காலத்தில், உனக்கு இன்னும் குழந்தை கிடைக்கவில்லையா? இவளையே நம்பிக்கொண்டிருக்காமல் வேறு ஒரு பெண்ணைக் கட்டிக் கொள் என்று அட்வைஸ் பண்ணுவது மிகவும் சாதாரணம்.

கருப்பையா பிள்ளைக்கும் இவ்வாறு ஆலோசனைகள் வழங்கப்பட்டன. அதே சமயம் அவரது பங்காளிகள், உனக்குத்தான் குழந்தை குட்டிகள் இல்லையே, இனி உன் சொத்துக்களை எங்களுக்கு எழுதி வைக்க வேண்டியது தானே! நீ திடீரென இறந்து போனால் அவ்வளவு சொத்தும் வீணாப் போய்விடுமே! என நச்சரிக்கவும் தொடங்கினார்கள். கருப்பையாவுக்கு இது பெரிய பிரச்சினையாகிப் போனது. நமக்கு ஒரு குழந்தை இருந்தால் ஒரு பிரச்சினையும் இல்லையே என ஏங்கத் தொடங்கினார். இருவரும் கோவில் குளம் என சுற்றத் தொடங்கினார்கள்.

ஆனால் கருப்பையா பிள்ளைக்கு இலங்கையில் ஒரு மனைவி இருந்ததும் அவருக்கு ஒரு மகனும் மகளும் இருந்ததும் பங்காளிகளுக்குத் தெரியாது. ஆனால் முதல் மனைவிக்குத் தெரியும். அதை அவர் பொருட்படுத்திக் கொள்ளவில்லை. அக் காலத்தில் ஒரு ஆணுக்கு இரண்டு மனைவிகள் இருப்பது சர்வ சாதாரணம். இன்றைக்கும் இந்த இரண்டு மனைவி கலாசாரம் தாராளமாகவே தமிழ்ச் சமூகத்தில் காணப்படுகிறது. ஒருமுறை பங்காளிகளின் தொல்லைதாங்க முடியாத நிலையில், என் கணவருக்கு குழந்தை இல்லை என யார் சொன்னது? ராஜகுமாரன், ராஜகுமாரி மாதிரி ரெண்டு பேர் இருக்கிறார்கள் தெரியுமா? என கருப்பையாவின் மனைவி பொரிந்து தள்ளவே, பங்காளிகளின் வாய் அடைத்துப் போயிற்றாம்!

(அடுத்த இதழில் நிறைவு பெறும்)

## 'சதிகளையும் தடைகளையும்... 09 ஆம் பக்கத் தொடர்

மாகாண சபையில் போட்டியிடுவது பற்றிய அவரது நிலைபாடு இதுவரை தெரியவில்லை. தனது செயற்பாடு எப்படி அமைய வேண்டும் என்பதனை அவர் தீர்மானிப்பார் என எண்ணுகிறேன்.

**மலையக மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளராக பேராசிரியர் விஜயச்சந்திரன் நியமிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் உங்களுடைய கருத்து எவ்வாறானது?**

யாராயிருந்தாலும் மாநாட்டின் மூலம் தான் கட்சியின் உயரிய பதவிகள் தீர்மானிக்கப்பட வேண்டும் என்பது யாப்பின் அடிப்படையாகும். செயலாளர் நாயகம், பிரதி செயலாளர் நாயகம், பொருளாளர் என மூன்று முக்கிய பதவிகளும் ஒருவருக்கு வழங்கப்பட்டிருப்பதன் மூலம் கட்சியில் உறுப்பினர்கள் இல்லாமல் வீழ்ச்சி கண்டிருப்பதை புரிந்து கொள்ள முடிகிறது. கட்சியின் நிர்வாகம் இவ்வளவு மோசமான நிலையில் இருப்பது ஆச்சரியத்தை தரவில்லை என்றாலும் மிக வேதனையை தருகின்றது.

**மலையக மக்கள் முன்னணியின் அங்கத்தவர்களிடம் அறவிடப்படும் சந்தா பணத்தை நிறுத்த போவதாக கூறியிருந்தீர்களே இது தொடர்பாக என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்?**

எமது தோட்டத் தொழிலாளர்கள் வெயிலிலும் கடும் குளிரிலும் மழை காலங்களிலும் உழைக்கிறார்கள். அவ்வாறு உழைத்து தொழிற்சங்கங்களுக்கு கொடுக்கும் பணமே சந்தா. அவ்வாறான பணத்தை கொள்ளை அடிப்பதும், மக்களுக்கான சேவைகளை செய்யாமல் சாட்டுகள் சொல்வதும், காரியாலங்கள் வேலை நாட்களில் கூட இயங்காமல் மூடிக் கிடப்பதும் தொழிலாளர்களுக்கு தொழிற்சங்கம் செய்யும் ஒப்பந்த மீறலாகும். ஆகவே தொழிலாளர்கள் என் தந்தைக்காக தொழிற்சங்க உறுப்பினர்களாக இருப்போர் இனியும் ஏமாற்றபட கூடாது என நினைக்கிறேன் அதனால்தான் இந்தத் தீர்மானம்.

## ஆசிரிய கல்விக்கே முன்னுரிமை அவசியம்... 31ஆம் பக்கத் தொடர்

ஆனால் சில கட்டிடங்கள் இன்னும் பழமைவாய்ந்த ஒன்றாகவே காணப்படுகின்றது. இதனால் ஆசிரியர்களுக்கான பயிற்சியை வழங்குவதில் சில வாண்மை விருத்தி நிலையங்கள் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றது. ஆனால் எமது நிலையம் புதிய அமைப்பில் அமைக்கப்பட்டதனால் எவ்விதமான இடர்பாடுகளுக்கும் ஆசிரியர்கள் முகம் கொடுப்பதில்லை. இதனால் அவர்கள் முழுமையான பயன்களை பெறுகின்றார்கள். அத்துடன் நாங்கள் நேரடியாக மத்திய அரசுடன் தொடர்புகளையும் வைத்துள்ளோம்.

***தற்போதைய ஜனாதிபதி கோட்டா பயவின் அரசினால் கல்விக்காக முன்னெடுக்கப்படவுள்ள முன்மொழிவுகள் பற்றி குறிப்பட முடியுமா?***

ஆம். கல்வியில் காலத்திற்கு காலம் மாற்றங்கள் கொண்டு வரப்படவேண்டியது காலத்தின் கட்டாயமாகும் அந்த வகையில் இவ்வரசினால் காலசூழ் நிலைக்கேற்ற மற்றும் தொழில் சந்தைக்கு ஏற்ற கல்வி முறையை கொண்டு வருதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவுள்ளது.

கடந்த 1999இல் நாடு பூராக கொண்டு வரப்பட்ட கல்விச்சீர்திருத்தம் தான் தற்போது கூட நடைமுறையில் உள்ளது. எனவே தான் நடைமுறையில் உள்ள கல்வி முறை மாற்றியமைக்கப்பட வேண்டும்.

***நீங்கள் இலங்கையிலுள்ள தனியார் மற்றும் வெளிநாட்டு பல்கலைக் கழகங்களில் கல்வியியல் பட்டங்களுக்கான பாடங்களில் விரிவுரையாளராக கலந்து கொள்கின்றீர்கள் இது பற்றிய தங்களது அனுபவங்களை பகிர முடியுமா?***

ஆம். உண்மையில் இலங்கைப் பல்கலைக் கழகங்களில் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் உயர் கல்வியை தொடர முடியாத மாணவர்கள், ஆசிரியர்கள், கல்வி அதிகாரிகள் மற்றும் கல்வியியலாளர்கள் ஆகியோருக்கு நல்லதொரு சந்தர்ப்பமாகவும் அவர்களின் தொழில் வாண்மைத்துவத்தை அதிகரிப்பதற்கான ஏற்பாடாகவும் காணப்படுகிறது. இதில் விசேட அம்சம் என்னவெனில் இப் பல்கலைக் கழகங்களில் அதிகமானவர்களை காணக்கூடியதாகவும் ஆர்வத்துடன் கற்கக் கூடிய நிலையையும் அவதானிக்க முடிகிறது.

***இலங்கையில் ஆசிரிய சேவை, அதிபர் சேவை, கல்வியியலாளர் சேவை இதில் பொதுக் கல்வியை சீர்செய்து மாற்றியமைக்கும் போது எந்த பிரிவினருக்கு இது அவசியப்படுகின்றது.?***

ஆம் உண்மையில் கல்வியின் மூலமாக நாளைய தலைவர்களை உருவாக்க வேண்டிய தேவையிருப்பதனால் ஆசிரிய கல்விக்கே முன்னுரிமை கொடுக்க வேண்டியுள்ளது. இதனால் ஆசிரிய சேவையை பலப்படுத்தி அவர்களின் வாண்மைத்துவத்தை அதிகரிப்பதற்காக கூடிய வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டியுள்ளது. இதன் காரணமாக கல்வியில் மாணவர்களின் உயர் மட்ட அடைவுகளை அதிகரிக்கவும் தொழில் சந்தைக்கு ஏற்றவர்களாகவும் உருவாக்க முடியும்.

***கல்விச் சமூகத்தை கட்டியெழுப்புவதில் இலங்கையில் ஆசிரிய சேவை, அதிபர் சேவை, கல்வி நிர்வாக சேவை, கல்வியியலாளர் சேவை இதில் எந்த சேவையினர் மிகவும் அர்ப்பணிப்புடன் செயலாற்றுகின்றனர்?***

உண்மையில் கல்விச் சமூகத்தை கட்டியெழுப்புவதில் மேற்குறிப்பிட்ட நான்கு பிரிவினரும் அர்ப்பணிப்புடன் தான் சேவையாற்றுகின்றனர் ஒவ்வொரு பிரிவினரின் கடமைகளும் பொறுப்பக்களும் கல்விச் சமூகத்தை கட்டியெழுப்பவதில் ஒன்றடன் ஒன்று தொடர்பு படுகின்றனர். பிள்ளைகளை வழிப்படுத்த ஆசிரியர் சமூகம் தேவை, பாடசாலையை கொண்டு செல்ல நல்ல தலைமைத்துவம் தேவை, கல்வியை நிர்வகிக்க கல்வி அதிகாரிகள் தேவை, ஆசிரியர்களின் வாண்மைத்துவத்தை விருத்தி செய்ய கல்வியியலாளர்கள் தேவை ஆகவே நான்கு பிரிவினரின் தேவையும் அவசியமாகின்றது.

## மட்டக்களப்பு வேத்துச்சேனைக் கிராம மக்கள்...

(19ஆம் பக்க தொடர்)

யானைகளை எம்மிடமிருந்த ஒரு யானை வெடியை எறிந்து, துரத்திவிட்டனர். பின்னர் நாங்கள் நித்திரைக்குப் போய்விட்டோம், அதன் பின்னர் அதிகாலை 3 மணியளவில் மீண்டும் அவ்வாறு சத்தம் கேட்டது. வெளியேறிய அந்த 2 யானைகளும் மீண்டும் வந்துவிட்டன அன்றையதினம் விடிய விடிய நித்திரையின்றி யானைகளுக்குப் பயந்து பயந்து, இரவைக் கழித்தோம், இவ்வாறுதான் எமது வாழ்வு காட்டுயானைகளோடு நகர்கின்றது என தெரிவிக்கின்றார் வ.கோசலாதேவி.

ஒவ்வொருநாளும் எமது ஊருக்குள் யானைகள் வந்துகொண்டுதான் இருக்கின்றன. இதனால் எம்மால் இரவில் கூட நிம்மதியாக துங்க முடியாது பிள்ளைகள் படிக்கமுடியாதுள்ளன. இவ்விடையம் தொடர்பல் நாம் பலமுறை பல அதிகாரிகளிடமும் எடுத்தக்கூறியும், இதற்கு எவரும் இதுவரையில் முற்றுப்புள்ளி வைத்தாக தெரியவில்லை. யானைகள் வரும்போது யானைவெடிகளைக் கொழுத்தும்போது கற்பிணித் தாய்மாருக்கும், குழந்தைகளுக்கும் அதிர்ச்சி ஏற்படுகின்றன. யானைகளைத் துரத்துபவர்களுக்கு அறிவித்தாலும், அவர்கள் உரிய நேரத்திற்கு வருகின்றார்கள் இல்லை. எமக்கு தொடர்ந்து அச்சமாக இருக்கின்றது எமது பாதுகாப்பிற்கு உத்தரவாதமில்லை.

வாக்குகேட்கும் காலத்தில் மாத்திரம் அதிகளவானவர்கள் வருகின்றார்கள். பின்னர் அவர்களைக் காணமுடிவதில்லை அரசாங்கத்திற்கு எம்மைப் பாதுகாக்கும் பொறுப்பு உள்ளது. ஆனால் எமக்கு காட்டுயானைகளினால் பாதுகாப்பு இல்லாமல் உள்ளது. எனவே பொறுப்புள்ள அரசாங்கம் என்ற வகையில் எமது கிராம மக்களை அரசாங்கம் இந்த காட்டு யானைகளிடமிருந்து பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். என வேத்துச்சேனைக் கிராமத்தைச் சேர்ந்த ஜீ.பேரின்பநாயகி தெரிவிக்கின்றார்.

கிராமங்கள் தோறும் யானை பாதுகாப்பு உத்தியோகத்தர்களை நியமிக்க வேண்டும், யானைகளைப் பிடித்துக் கொண்டு சரணாலயங்களில் விடவேண்டும், கிராமத்தைச் சுற்றிவர யானை பாதுகாப்பு வேலிகளைப் போடவேண்டும், யானைகளைத் துரத்தக்கூடிய யானைவெடி, அல்லது அதற்கு ஏற்ற கருவிகளை வழங்க வேண்டும் என வேத்துச்சேனைக் கிராம மக்கள் கோரிக்கை முன்வைக்கின்றனர்.

காட்டு யானைகளால் எமக்கு மிகுந்த தொல்லையாக இருந்து வருகின்றது. மக்கள்கூடி ஒருவாறு யானைகளை கிராமத்தைவிட்டு அப்புறப்படுத்திய பின்னரும் மிக நீண்ட நேரத்திற்குப் பின்னர்தார் வன ஜீவராசிகள் திணைக்களத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் வருகின்றார்கள். ஒழுங்கான வீதிகள் இல்லை, எமது கஷ்டங்களை யாரும் புரிந்து கொள்கின்றார்கள் இல்லை. தினம் தினம் எமது மக்களின் வீடுகளையும், பயிரினங்களையும் அழித்துவிட்டுச் செல்கின்றது. இதற்கு உயர் அதிகாரிகள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என நாம் வினயமாக வேண்டுகின்றோம் என தெரிவிக்கின்றார் இ.மகாலிங்கம்

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவாங்கரைப் பிரதேசத்தில் மிக நீண்ட காலமாக இருந்து தொடர்கதையாக இந்த காட்டு யானைகளின் தொல்லைகளும். அட்டகாசங்களும் அதிகரித்து வருகின்றதோடு இதனால் பல அப்பாவி உயிர்களும் காவு கொள்ளப்பட்டு வருவதோடு, சொத்துக்களும் சேதமாக்கப்பட்டு வருகின்றமை எடுத்துக் காட்டாகும்.

மாரி மழை காலத்தில் வருடாந்தம் எமது கிராமம் தொடர்ச்சியாக முற்றாக வெள்ளத்தில் மூழ்கும் கிராமமாக இருந்து வருகின்றது. எமது கிராமத்திற்குள் வெள்ள நீர் உட்புகாமலிருக்க எமது கிராமத்தைச் சுற்றி கட்டுக்கள் இடவேண்டும், அவ்வாறு உயரமான கட்டுக்கள் போடப்படும் பட்சத்தில் வெளிப்பிரதேசங்களிலிருந்து அடித்து வரும் வெள்ளநீர் தடுக்கப்பட்டு அது நேரடியாக ஆற்றிற்குச் செல்லும் நிலமை ஏற்படும் எமது கிராமம் நீரில் மூழ்காமலிருக்கும், மக்களும், வயல் நிலங்களும், சொத்துக்களும், பாதுகாக்கப்படும் வருடாந்தம் மக்கள் இடம்பெயர வேண்டிய நிலையும் ஏற்படாது.

எமது கிராமத்திற்குள் வரும் பிரதான வீதி தற்போது வரைக்கும் கிறல் வீதியாகத்தான் இருந்து வருகின்றது. அதுவும் வருடாந்தம் ஏற்படும் வெள்ளத்தினால் கழுவிச் சென்றுவிடும். அதனை தற்போது எமது மக்கள் சிரமதானம் செய்து கொண்டு இந்த வீதியைப் பயன்படுத்தி வருகின்றார்கள். இவ்வீதியை புனரமைப்புச் செய்ய வேண்டும்.

அதுபோன்று குழாய் மூலமான சுத்தமான குடிநீர், மலசல கூடம், வீடமைப்பு வசதிகள் போன்வற்றையும் சம்மந்தப்பட்டவர்கள் மேற்கொண்டு தருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எமது கிராமத்தில் இருந்து பிள்ளைகள் சுமார் 3 அரைக்கிலே மீற்றர் தூரம் மிகவுத் சிரமத்தின் மத்தியில் நடந்து சென்று படிக்கின்றார்கள் எனவே எமது கிராமத்தில் ஓர் ஆரம்ப பாடசாலை ஒன்றை அமைத்துத் தரவேண்டும். என வேத்துச்சேனைக் கிராமத்தின் கமநல அமைப்பின் செயலாளர் ச.கருணராஜன் தெரிவிக்கின்றார்.

யானைப் பாதுகாப்பு வேலிகளை உடைத்துக் கொண்டுதான் யானைகள் கிராமங்களுக்குள் வருகின்றன. வெல்லாவெளியில் எமது காரியாலயம் ஒன்றும் உள்ளது, அங்குள்ள உத்தியோகத்தர்களும். மக்களின் ஒத்துழைப்புடன் கிராமத்திற்குள் வரும் யானைகளை துரத்தி வருகின்றார்கள். அந்த காரியாலயத்தை வைத்துக் கொண்டு நாம் மிகவும் பரந்த அளவில் சேவை செய்து வருகின்றோம். இவற்றிற்கு மேலாக எமக்கு ஆளணிப் பற்றாக்குறையும் உள்ளது.

## அருகிவரும் குடிசை...

(5ஆம் பக்க தொடர்)

கொண்டு சென்று பாய்களை விற்பனை செய்யக்கூடியதாக இருந்துள்ளது. தற்போது கொறோனா அச்சுறுத்தல் காரணமாக ஆலயத்திருவிழாக்கள் இல்லை. அதனாலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

எது எப்படி இருந்ததாலும் இதை நம்பி வாழும் என்னைப் போன்ற குடும்பங்கள் இந்த தொழிலை செய்வதற்கு மூலப்பொருளாக காணப்படுகின்;ற பன்புல் உற்பத்தியாகும் பாலியாறு பறங்கியாறு போன்ற ஆறுகளில் கரையோரங்கள் பாதுகாக்கப்படவேண்டும் மணல் அகழ்வுகள் தடுக்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

எங்களைச்சூழவுள்ள இயற்கை வளங்களை அழிப்பதனால் சூழல் பாதிப்புக்கள் ஏற்படுவது என்பவற்றுக்கு அப்பால் எத்தனையோ குடும்பங்களின் வாழ்வாதாரம் அழிக்;கப்படுகின்றது என்பதற்கு இது ஒரு உதாரணமாக அமைந்துள்ளது.

இன்றைய நிலையில் சட்டவிரோத மணல் அகழ்வுகள் விவசாயத்தை மேற்கொள்ளக்கூடிய விளைநிலங்கள் சிதைக்கப்படுகின்றன.

இதனால் கடல் நீர் ஊர் மனைகளுக்குள் புகுந்து நல்லநிலையில் காணப்பட்ட நன்னீர் நிலைகளும் கிணறுகளும் உவர் பரம்பலகிடைகின்றன.

இவற்றுக்கும் மேலாக ஆற்றங்கரைகளில் இயற்கையாகவே வளரும் பன்புல் போன்ற புல்லியனம் அழிவடைந்து செல்வதனால் இப்புல்லினத்தை மூலப்பொருளாக வைத்து வாழ்வாதார கைத்தொழில்களை முன்னெடுத்து வரும் பல்வேறு குடும்பங்களின் தொழில்களும் இழக்கப்பட்டு வருகின்றன.

பன்புல் பாய்களுக்கு பதிலாக பிளாஸ்ரிக் பாய்களின் பயன்பாடுகள் அதிகரித்துள்ள போதும் தற்போது உடல் நலத்திற்கு கேடு விளைவிக்காத பொருட்களையும் அவற்றின் பயன்பாடுகளையும் நோக்கி மக்கள் மெல்ல மெல்ல நகரத்தொடங்கியுள்ள இக்காலப்பகுதியில் அருகி வரும் இவ்வாறான குடிசை கைத்தொழில்கள் வளர்த்தெடுக்கப்பட வேண்டும்.



# விலைமனுக்களுக்கான அழைப்பு

## பாதுகாப்பு அமைச்சு

**அக்குரேகொடவிலுள்ள பாதுகாப்பு தலைமையலுவலக கட்டிடத் தொகுதியின் 04ஆம் தொகுதிக்கு தீயைக் கண்டறிதல் மற்றும் தீப் பாதுகாப்பு (Fire Detection and Fire Protection system) முறைமையை வடிவமைத்தல், வழங்கல் மற்றும் நிறுவுதலுக்கான விலைமனு**

## Contract No.: DHQC/FP & FD 04/2020

01. வெட் வரியின்றி 380 மில்லியன் இலங்கை ரூபாவில் மதிப்பீடு செய்யப்பட்டதும் கீழே விபரிக்கப்பட்டதும் பத்தரமுல்ல, பெலவத்த, அக்குரேகொட வீதியில் உத்தேசிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு தலைமையக கட்டிட தொகுதியின் 04ஆம் தொகுதிக்கு தீயைக் கண்டறிதல் மற்றும் தீப் பாதுகாப்பு முறைமையை வடிவமைத்தல், வழங்கல் மற்றும் நிறுவுதலுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பாதுகாப்பு அமைச்சின் சார்பாக பாதுகாப்பு அமைச்சின் அமைச்சுப் பெறுகைக் குழுத் (**MPC**) தலைவர் முத்திரையிடப்பட்ட போட்டி ரீதியிலான விலைமனுக்களை இப்பொழுது அழைக்கின்றார்.

    இவ்வேலைகளில் அக்குரேகொடவிலுள்ள பாதுகாப்பு தலைமையலுவலக கட்டிடத் தொகுதியின் 04ஆம் தொகுதிக்கு தீயைக் கண்டறிதல் மற்றும் தீப் பாதுகாப்பு முறைமையை வடிவமைத்தல், வழங்கல் மற்றும் நிறுவுதல் என்பவை உள்ளடங்குகின்றன.
02. நிர்மாணக் காலப்பகுதியானது 300 நாட்களாகும்.
03. விலைக்கோரலானது தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
04. ஒப்பந்தத்தைப் கையளிக்கப் பெறுவதற்கான தகுதியைப் பெறுவதற்காக, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலுக்கு உள்வாங்கப்படாதவராக இருத்தல் வேண்டும். விலைமனுதாரர்கள் விஷேடத் தன்மையாக நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் மின்னியல் மற்றும் பொறிமுறை சேவைகளுக்கு EM1 தரத்தின் கீழ் உப-விஷேடத் தன்மையாக Fire Detection, Protection and Suppression (FDPS) பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.
05. ஒப்பந்த வழங்கலை பெறும் தகைமைக்கான ஆகக் குறைந்த தகைமைத் தேவைப்படுத்தல்கள் பின்வருமாறு:

| | தகைமைகள் | ஆகக் குறைந்த தகைமைத் தேவைப்பாடுகள் |
|---|---|---|
| (i) | கடந்த 10 வருடங்களில் ஏதாவதொரு ஐந்து வருடங்களில் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்ட தீயைக் கண்டறிதல், தீப் பாதுகாப்பு மற்றும் தீயைக் கட்டுப்படுத்தும் (Suppression) வேலைகளின் வருடாந்த சராசரி நிதிப்புரள்வு | வருடமொன்றிற்கு 456 மில்லியன் இலங்கை ரூபா. |
| (ii) | கடந்த 10 வருடங்களில் வடிவமைப்பு, வழங்கல் மற்றும் நிறுவுதலில் அனுபவம் (2010 முதல் 2019) | கடந்த 10 வருடங்களில் ஆகக் குறைந்தது 5 தீயைக் கண்டறிதல் மற்றும் தீப் பாதுகாப்பு முறைமைகளை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். அவ்வாறான முறைமைகளுள் ஒன்றின் ஆகக் குறைந்த பெறுமதி 95 மில்லியன் இலங்கை ரூபாவிற்கு குறையாததாகவிருத்தல் வேண்டும். |
| (iii) | ஏனைய ஒப்பந்த ரீதியிலான கடப்பாடுகளுக்கு ஒதுக்கிய பின்னர், திரவச் சொத்துக்கள் மற்றும்/ அல்லது கடன் வசதிகளுக்கான ஆகக் குறைந்த தொகை மற்றும் இந்த ஒப்பந்தத்தின் கீழ் பிரத்தியேகமாக மேற்கொள்ளப்பட்ட எந்தவொரு முற்பணம். | 114 மில்லியன் இலங்கை ரூபாவிற்கு குறையாமல் இருத்தல் வேண்டும். |
| | வழங்கப்பட்ட முறைமைக்காக அதனது சேவைக் காலப்பகுதியில் விலைமனுதாரரினால் அல்லது விலைமனுதாரரினால் பெயர் குறிக்கப்பட்ட அதிகாரம் வழங்கப்பட்ட முகவரொருவரினால் பராமரிப்பு சேவைகளை வழங்குவதற்கான ஆற்றல். | கட்டாயமானதாகும். |

06. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை இலங்கை, பத்தரமுல்ல, பெலவத்த, அக்குரேகொட வீதி, பாதுகாப்பு தலைமையலுவலக கட்டிடத்தொகுதி செயற்றிட்டம், செயற்றிட்ட முகாமைத்துவ பணிமனையின் பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். 2020.09.14ஆம் திகதி முதல் 2020.10.09ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மேலேயுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
07. 2020.09.14ஆம் திகதி முதல் 2020.10.09ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மீளளிக்கப்படாத கட்டணமாக 50,000.00 இலங்கை ரூபாவை (ஐம்பதாயிரம் இலங்கை ரூபா) செலுத்திய பின்னர், இலங்கை, கொழும்பு-03, பாலதக்ஷ மாவத்தை, 15/5ஆம் இலக்கத்திலுள்ள பாதுகாப்பு அமைச்சின் கணக்காளர் (பெறுகைகள்) அவர்களுக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் (பாகம் 1A இன்றி) முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவை ரொக்கப் பணத்திலேயே மேற்கொள்ளுதல் வேண்டும்.
08. பத்தரமுல்ல, பெலவத்த, அக்குரேகொட வீதி, பாதுகாப்பு தலைமையலுவலக கட்டிடத்தொகுதி செயற்றிட்டம், செயற்றிட்ட முகாமைத்துவ பணிமனையில் 2020-09-22ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைக்கோரலுக்கு முன்னரான கூட்டம் இடம்பெறும் மற்றும் அதே நாளில் விலைக்கோரலுக்கான கூட்டம் முடிந்த பின் தள விஜயம் மேற்கொள்ளப்படும்.
09. விலைமனுக்களை பின்வரும் முகவரிக்கு 2020.10.12ஆம் திகதியன்று மு.ப. 11.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது பின்வரும் முகவரியில் வைக்கப்பட்டுள்ள விலைமனு பெட்டியில் உள்ளிடல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர், சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் உடன் திறக்கப்படும்.
10. விலைமனுக்கள் 2020.10.12ஆம் திகதியிலிருந்து 2021.02.07ஆம் திகதி வரையும் (விலைமனுக்களை மூடும் திகதியிலிருந்து 119 நாட்கள்) செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
11. 2020.10.12ஆம் திகதி முதல் 2021.03.07ஆம் திகதி வரையும் (விலைமனுக்களை திறந்த பின்னர் 147 நாட்கள்) செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதும் நிபந்தனையற்றதும் இலகுவாக ரொக்கப் பணத்தில் மாற்றக்கூடியதுமாகவும், இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் வங்கியொன்றிலிருந்து ஐம்பத்தேழு இலட்சம் ரூபா பெறுமதியான (5,700,000.00 இலங்கை ரூபா) விலைமனுப் பிணையொன்று அனைத்து விலைமனுக்களுடனும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையின் பயனாளி பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆவார்.
12. பாதுகாப்பு தலைமையலுவலக கட்டிடத்தொகுதி செயற்றிட்டத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்வதற்கு முன்னர், 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் பதிவு செய்தல் சான்றிதழை சமர்ப்பிக்குமாறு விலைமனுதாரர்கள் திடமாக அறிவுறுத்தப்படுகின்றனர்.
13. விலைமனுக்களை திறப்பதற்கு ஆகக் குறைந்தது மூன்று (3) வேலை நாட்களுக்கு முன்னராக விலைமனுக்களின் திறத்தலில் பங்குபற்றும் பிரத்தியேக நபரின் பெயர் மற்றும் தேசிய அடையாள அட்டை/ கடவுச்சீட்டின் இலக்கத்தை பாதுகாப்பு அமைச்சின் பணிப்பாளர் (கணக்கிடல் மற்றும் நிதி) அவர்களுக்கு எழுத்து மூலமாக அறிவிக்கும்படி விலைமனுதாரர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரி பின்வருமாறு:

**தலைவர்,**
**அமைச்சுப் பெறுகைக் குழு (MPC),**
**பாதுகாப்பு அமைச்சு,**
**இல.: 15/ 5, பாலதக்ஷ மாவத்தை,**
**கொழும்பு-03, இலங்கை.**

தொலைபேசி: 0094-2390719.
தொலைநகல்: 0094-2390720.

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## பாதுகாப்பு அமைச்சு

**அக்குரேகொடவிலுள்ள பாதுகாப்பு தலைமையலுவலக கட்டிடத் தொகுதியின் 03ஆம் தொகுதிக்கு தீயைக் கண்டறிதல் மற்றும் தீப் பாதுகாப்பு (Fire Detection and Fire Protection system) முறைமையை வடிவமைத்தல், வழங்கல் மற்றும் நிறுவுதலுக்கான விலைமனு**

## Contract No.: DHQC/FP & FD 03/2020

01. வெட் வரியின்றி 380 மில்லியன் இலங்கை ரூபாவில் மதிப்பீடு செய்யப்பட்டதும் கீழே விபரிக்கப்பட்டதும் பத்தரமுல்ல, பெலவத்த, அக்குரேகொட வீதியில் உத்தேசிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு தலைமையக கட்டிட தொகுதியின் 03ஆம் தொகுதிக்கு தீயைக் கண்டறிதல் மற்றும் தீப் பாதுகாப்பு முறைமையை வடிவமைத்தல், வழங்கல் மற்றும் நிறுவுதலுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பாதுகாப்பு அமைச்சின் சார்பாக பாதுகாப்பு அமைச்சின் அமைச்சுப் பெறுகைக் குழுத் (**MPC**) தலைவர் முத்திரையிடப்பட்ட போட்டி ரீதியிலான விலைமனுக்களை இப்பொழுது அழைக்கின்றார். இவ்வேலைகளில் அக்குரேகொடவிலுள்ள பாதுகாப்பு தலைமையலுவலக கட்டிடத் தொகுதியின் 03ஆம் தொகுதிக்கு தீயைக் கண்டறிதல் மற்றும் தீப் பாதுகாப்பு முறைமையை வடிவமைத்தல், வழங்கல் மற்றும் நிறுவுதல் என்பவை உள்ளடங்குகின்றன.
02. நிர்மாணக் காலப்பகுதியானது 300 நாட்களாகும்.
03. விலைக்கோரலானது தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
04. ஒப்பந்தத்தைப் கையளிக்கப் பெறுவதற்கான தகுதியைப் பெறுவதற்காக, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலுக்கு உள்வாங்கப்படாதவராக இருத்தல் வேண்டும். விலைமனுதாரர்கள் விஷேடத் தன்மையாக நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் மின்னியல் மற்றும் பொறிமுறை சேவைகளுக்கு EM1 தரத்தின் கீழ் உப-விஷேடத் தன்மையாக Fire Detection, Protection and Suppression (FDPS) பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.
05. ஒப்பந்த வழங்கலை பெறும் தகைமைக்கான ஆகக் குறைந்த தகைமைத் தேவைப்படுத்தல்கள் பின்வருமாறு:

| | தகைமைகள் | ஆகக் குறைந்த தகைமைத் தேவைப்பாடுகள் |
|---|---|---|
| (i) | கடந்த 10 வருடங்களில் ஏதாவதொரு ஐந்து வருடங்களில் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்ட தீயைக் கண்டறிதல், தீப் பாதுகாப்பு மற்றும் தீயைக் கட்டுப்படுத்தும் (Suppression) வேலைகளின் வருடாந்த சராசரி நிதிப்புரள்வு | வருடமொன்றிற்கு 456 மில்லியன் இலங்கை ரூபா. |
| (ii) | கடந்த 10 வருடங்களில் வடிவமைப்பு, வழங்கல் மற்றும் நிறுவுதலில் அனுபவம் (2010 முதல் 2019) | கடந்த 10 வருடங்களில் ஆகக் குறைந்தது 5 தீயைக் கண்டறிதல் மற்றும் தீப் பாதுகாப்பு முறைமைகளை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். அவ்வாறான முறைமைகளுள் ஒன்றின் ஆகக் குறைந்த பெறுமதி 95 மில்லியன் இலங்கை ரூபாவிற்கு குறையாததாகவிருத்தல் வேண்டும். |
| (iii) | ஏனைய ஒப்பந்த ரீதியிலான கடப்பாடுகளுக்கு ஒதுக்கிய பின்னர், திரவச் சொத்துக்கள் மற்றும்/ அல்லது கடன் வசதிகளுக்கான ஆகக் குறைந்த தொகை மற்றும் இந்த ஒப்பந்தத்தின் கீழ் பிரத்தியேகமாக மேற்கொள்ளப்பட்ட எந்தவொரு முற்பணம். | 114 மில்லியன் இலங்கை ரூபாவிற்கு குறையாமல் இருத்தல் வேண்டும். |
| | வழங்கப்பட்ட முறைமைக்காக அதனது சேவைக் காலப்பகுதியில் விலைமனுதாரரினால் அல்லது விலைமனுதாரரினால் பெயர் குறிக்கப்பட்ட அதிகாரம் வழங்கப்பட்ட முகவரொருவரினால் பராமரிப்பு சேவைகளை வழங்குவதற்கான ஆற்றல். | கட்டாயமானதாகும். |

06. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை இலங்கை, பத்தரமுல்ல, பெலவத்த, அக்குரேகொட வீதி, பாதுகாப்பு தலைமையலுவலக கட்டிடத்தொகுதி செயற்றிட்டம், செயற்றிட்ட முகாமைத்துவ பணிமனையின் பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். 2020.09.14ஆம் திகதி முதல் 2020.10.09ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மேலேயுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
07. 2020.09.14ஆம் திகதி முதல் 2020.10.09ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மீளளிக்கப்படாத கட்டணமாக 50,000.00 இலங்கை ரூபாவை (ஐம்பதாயிரம் இலங்கை ரூபா) செலுத்திய பின்னர், இலங்கை, கொழும்பு-03, பாலதக்ஷ மாவத்தை, 15/5ஆம் இலக்கத்திலுள்ள பாதுகாப்பு அமைச்சின் கணக்காளர் (பெறுகைகள்) அவர்களுக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் (பாகம் 1A இன்றி) முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவை ரொக்கப் பணத்திலேயே மேற்கொள்தல் வேண்டும்.
08. பத்தரமுல்ல, பெலவத்த, அக்குரேகொட வீதி, பாதுகாப்பு தலைமையலுவலக கட்டிடத்தொகுதி செயற்றிட்டம், செயற்றிட்ட முகாமைத்துவ பணிமனையில் 2020-09-22ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைக்கோரலுக்கு முன்னரான கூட்டம் இடம்பெறும் மற்றும் அதே நாளில் விலைக்கோரலுக்கான கூட்டம் முடிந்த பின் தள விஜயம் மேற்கொள்ளப்படும்.
09. விலைமனுக்களை பின்வரும் முகவரிக்கு 2020.10.12ஆம் திகதியன்று மு.ப. 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது பின்வரும் முகவரியில் வைக்கப்பட்டுள்ள விலைமனு பெட்டியில் உள்ளிடல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர், சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் உடன் திறக்கப்படும்.
10. விலைமனுக்கள் 2020.10.12ஆம் திகதியிலிருந்து 2021.02.07ஆம் திகதி வரையும் (விலைமனுக்களை மூடும் திகதியிலிருந்து 119 நாட்கள்) செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
11. 2020.10.12ஆம் திகதி முதல் 2021.03.07ஆம் திகதி வரையும் (விலைமனுக்களை திறந்த பின்னர் 147 நாட்கள்) செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதும் நிபந்தனையற்றதும் இலகுவாக ரொக்கப் பணத்தில் மாற்றக்கூடியதுமாகவும், இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் வங்கியொன்றிலிருந்து ஐம்பத்தேழு இலட்சம் ரூபா பெறுமதியான (5,700,000.00 இலங்கை ரூபா) விலைமனுப் பிணையொன்று அனைத்து விலைமனுக்களுடனும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையின் பயனாளி பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆவார்.
12. பாதுகாப்பு தலைமையலுவலக கட்டிடத்தொகுதி செயற்றிட்டத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்வதற்கு முன்னர், 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் பதிவு செய்தல் சான்றிதழை சமர்ப்பிக்குமாறு விலைமனுதாரர்கள் திடமாக அறிவுறுத்தப்படுகின்றனர்.
13. விலைமனுக்களை திறப்பதற்கு ஆகக் குறைந்தது மூன்று (3) வேலை நாட்களுக்கு முன்னராக விலைமனுக்களின் திறத்தலில் பங்குபற்றும் பிரத்தியேக நபரின் பெயர் மற்றும் தேசிய அடையாள அட்டை/ கடவுச்சீட்டின் இலக்கத்தை பாதுகாப்பு அமைச்சின் பணிப்பாளர் (கணக்கிடல் மற்றும் நிதி) அவர்களுக்கு எழுத்து மூலமாக அறிவிக்கும்படி விலைமனுதாரர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரி பின்வருமாறு:

**தலைவர்,**
**அமைச்சுப் பெறுகைக் குழு (MPC),**
**பாதுகாப்பு அமைச்சு,**
**இல.: 15/ 5, பாலதக்ஷ மாவத்தை,**
**கொழும்பு-03, இலங்கை.**

தொலைபேசி: 0094-2390719.
தொலைநகல்: 0094-2390720.

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கம்

## சுகாதார அமைச்சு

| | |
|---|---|
| **திகதி** | 2020 செப்டெம்பர் 13ஆம் திகதி |
| **செயற்றிட்டத்தின் தலைப்பு** | **Health System Enhancement Project** |
| **ஒப்பந்த இல.**<br>**மற்றும் பெறுகையின் தலைப்பு** | **APDRF/PMU/PRO/G 5/12/2020**<br>**Procurement of Next Generation Sequencing System** |
| **விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி** | 2020 ஒக்டோபர் 6ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன்னராக |

01. இலங்கை சனநாயக சோசலிச குடியரசானது சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்றிட்ட கிரயச் செலவிற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து (ADB) நிதியிடலை பெற்றுள்ளதுடன் இந்த நிதியிடலின் பகுதியொன்றை மேலே பெயரிடப்பட்டுள்ள ஒப்பந்தங்களின் பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிட உத்தேசித்துள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் தகுதியுள்ள வள நாடுகளின் விலைமனுதாரர்களும் இதில் பங்குபற்றலாம்.

02. பின்வரும் பொருட்களின் பெறுகைக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை சுகாதார அமைச்சு (கொள்வனவாளர்) கோருகின்றது. பொருள் வகையின் சுருக்கமான விளக்கமொன்று கீழே வழங்கப்பட்டுள்ளது.

| பொதி இலக்கம் | பொருட்களின் சுருக்கமான விளக்கம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | Next Generation Sequencing System | 01 |

03. சித்திகரமான விலைமனுதாரர் விலைமனுக்கோரல் ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள ஒப்படைத்தல் மற்றும் பூர்த்தி செய்தலின் பிரகாரம் பொருட்களை குறிப்பிட்டுள்ள அமைவிடங்களில் ஒப்படைத்தல் வேண்டும் என்பதுடன் ஒப்பந்தத்தை கையொப்பமிடும் திகதியிலிருந்து 60 நாட்களுக்குள் விநியோகத்தை பூர்த்தி செய்தல் வேண்டும்.

04. திறந்த போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் (OCB) ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஒற்றைக்கட்ட, தனி-உறை விலைமனுக்கோரல் நடைமுறையின் பிரகாரம் நடாத்தப்படுவதுடன் விலைமனுக்கோரல் ஆவணத்தில் விளக்கப்பட்டவாறு தகுதியுள்ள நாடுகளிலிருந்தும் விலைமனுதாரர் பங்குபற்றலாம். ஆசிய அபிவிருத்தி வங்கியின் தகுதித்தன்மை ஒழுங்குவிதிகள் மற்றும் நடைமுறைகள் விலைமனுக்கோரல் செயற்பாட்டை தனது ஆதிக்கத்தில் வைத்திருக்கும்.

05. பின்வரும் பிரதான தகைமைகளுடனான தகுதியுள்ள விலைமனுதாரர்கள் மாத்திரமே இந்த விலைமனுக்கோரலில் பங்குபற்றலாம் என்பதுடன் தகைமை தகவுத்திறனானது மேலும் முழுமையாக விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டுள்ளது.

- கடந்த 3 வருடங்களில் மொத்த பணக்கொடுப்பனவாகக் கணக்கிடப்பட்ட ஆகக் குறைந்தது வருடாந்த சராசரி நிதிப்புரள்வானது 200.00 மில்லியன் இலங்கை ரூபாவை பூர்த்தி செய்யப்பட்ட அல்லது நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஒப்பந்தங்களுக்காக விலைமனுதாரர் பெற்றுக் கொண்டிருத்தல்.

06. மேலதிக தகவலைப் பெறுவதற்கும் விலைமனுக்கோரல் ஆவணங்களை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் இலவசமாக பரீட்சிப்பதற்கும் விலைமனுதாரர்கள் பின்வரும் வழிகளினூடாக தொடர்பு கொள்ளல் வேண்டும்.

**செயற்றிட்ட பணிப்பாளர்,**
**சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்றிட்டம்,**
**இல. 3/19, கின்சி வீதி,**
**கொழும்பு-08, இலங்கை.**

**தொலைபேசி இலக்கம்: +94 112 697 173/+94 112 056 535**
**தொலைநகல்: +94 112 697 163**
**மின்னஞ்சல்: hsep.pmu@gmail.com**

07. விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று 2020 செப்டெம்பர் 23ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு மேலேயுள்ள முகவரியில் தொழில் வழங்குநரினால் நடாத்தப்படும். அனைத்து விலைமனுதாரர்களும் இந்த விலைமனு முன்னோடிக் கூட்டத்திற்கு சமுகமளிக்கும்படி திடமாக அறிவுறுத்தப்படுகின்றனர்.

08. ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களை கொள்வனவு செய்வதற்குத் தகுதியுள்ள விலைமனுதாரர்கள் 2020 ஒக்டோபர் 05ஆம் திகதியன்று பி.ப. 3.00 மணி அல்லது அதற்கு முன்னராக பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்திய பின்னர், எழுத்து மூலமான கோரிக்கை/ விண்ணப்பமொன்றை மேலேயுள்ள முகவரிக்கு சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்றிட்டத்திற்கு Next Generation Sequencing முறைமை பெறுகைக்கான விலைமனுக்கோரல் ஆவணங்களை வழங்குமாறு விண்ணப்பித்தல் வேண்டும்.

| பெறுகையின் விபரம் | மீளளிக்கப்படாத கட்டணம் |
|---|---|
| Next Generation Sequencing System | 20,000.00 இலங்கை ரூபா |

09. பணக்கொடுப்பனவு முறைமையானது வங்கி வரைவு அல்லது ''செயற்றிட்ட பணிப்பாளர் - சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்றிட்டம்'' என்ற பெயரில் எழுதப்பட்ட காசாளரின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட காசோலை அல்லது ரொக்கப் பணத்தில் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணிக்கும் பி.ப. 3.00 மணிக்குமிடையில் அல்லது இலங்கை வங்கியின் 7040309 என்ற வங்கி கணக்கிலக்கத்திற்கு நேரடியாக வரவு வைத்தல் வேண்டும்.

10. விலைமனுக்கோரல் ஆவணமானது முறையே வெளிநாட்டு ஒப்படைத்தலுக்காக விமான சேவை மூலம் அல்லது தரைமார்க்கமாக அல்லது தூதஞ்சல் மூலமாக உள்ளூர் ஒப்படைத்தலுக்காக மேலதிக கட்டணமாக 100 அமெரிக்க டொலர்கள் மற்றும் 5000.00 இலங்கை ரூபாவில் செலுத்தலாம். காணாமல் போன அல்லது தாமதமான ஒப்படைத்தலுக்கு பொறுப்பேற்கப்பட மாட்டாது.

11. 2020 ஒக்டோபர் 6ஆம் திகதியன்று மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னராக மேலேயுள்ள 6ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ளவாறான முகவரிக்கு விலைமனுப்பிணையுடன் அனுப்பப்படல் வேண்டும். விலைமனுப்பிணையானது வங்கி உத்தரவாதப் பாங்கில் சமர்ப்பிக்கப்படின், ''செயற்றிட்ட பணிப்பாளர் - சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்றிட்டம்'' என்ற பெயரில் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றிலிருந்து விலைமனுக்கோரல் படிவங்களின் 4ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள உருமாதிரியை பாவித்து வழங்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்பட்டு திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்.

12. விலைமனுக்கள் திறக்கப்படும் திகதியிலிருந்து 90 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். விலைமனுப் பிணையானது விலைமனுக்கள் திறக்கப்படும் திகதியிலிருந்து 118 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

13. விலைமனுக்கள் அவைகளின் சமர்ப்பித்தலுக்கான இறுதி நேரம் முடிந்தவுடன் உடனடியாகவே சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

14. விலைமனுக்களின் தயாரித்தல் அல்லது ஒப்படைத்தல் தொடர்பாக விலைமனுதாரர்களுக்கேற்படும் எந்தவொரு கிரயச் செலவு அல்லது செலவினங்களுக்கும் சுகாதார அமைச்சின் சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்றிட்டமானது பொறுப்பேற்க மாட்டாது.

தலைவர், செயற்றிட்ட பெறுகைக் குழு,
சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்றிட்டம்,
இல. 3/19, கின்சி வீதி,
கொழும்பு-08, இலங்கை.

தொலைபேசி இலக்கம்: **+94 112 697 173/+94 112 056 535**
தொலைநகல்: **+94 112 697 163**
மின்னஞ்சல்: **hsep.pmu@gmail.com**




சுகாதாரம், போஷணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு

## இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபனம்

SPMC

# விலைமனுக்களுக்கான அழைப்பு

சர்வதேச போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல்

**Bid Ref: SPMC/03/2020 – Closing on 27th October 2020**

## மருந்தாக்கல் மூலப் பொருட்களின் பெறுகை

1. 2020 ஒக்ரோபர் 27ஆம் திகதியன்று மு.ப. 10 மணி வரை இலங்கை, இரத்மலான, கந்தவள தோட்டம், சேர். ஜோன் கொத்தலாவல மாவத்தை, 11ஆம் இலக்கத்திலுள்ள அரச மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபன பெறுகைக்குழுத் தலைவரினால் மருந்தாக்கல் மூலப் பொருட்களின் வழங்கலுக்கான முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் பெற்றுக் கொள்ளப்படும்.

| | Item | Qty. (Kg) | Non-refundable Tender Fee (SL Rs) |
|---|---|---|---|
| 01. | Amoxicillin Trihydrate BP (Compacted) | 18,000 | 15,000.00 |
| 02. | Ascorbic Acid BP | 500 | 500.00 |
| 03. | Atorvastatin Calcium IP | 1,000 | 8,000.00 |
| 04. | Benzhexol Hydrochloride BP | 100 | 500.00 |
| 05. | Carbamazepine BP | 3,000 | 7,000.00 |
| 06. | Cetirizine Dihydrochloride BP | 150 | 500.00 |
| 07. | Cimetidine (Type A) USP | 1,000 | 2,000.00 |
| 08. | Ciprofloxacin Hydrochloride USP/NF | 1,000 | 2,000.00 |
| 09. | Cloxacillin Sodium BP | 9,000 | 10,000.00 |
| 10. | Clarithromycin USP | 3,000 | 18,000.00 |
| 11. | Diclofenac Sodium USP | 1,000 | 1,000.00 |
| 12. | Diltiazem Hydrochloride USP | 1,000 | 4,000.00 |
| 13. | Domperidone Maleate BP | 1,000 | 4,000.00 |
| 14. | Enalaprill Maleate USP | 300 | 3,000.00 |
| 15. | Famotidine USP | 1,000 | 4,000.00 |
| 16. | Losartin BP | 1,000 | 4,000.00 |
| 17 | Gliclazie BP | 4,500 | 19,000.00 |
| 18. | Indometacin BP | 300 | 1,000.00 |
| 19. | Losartan Potassium BP | 5,000 | 17,000.00 |
| 20. | Mebendazole (polymorph type A) USP | 2,000 | 4,000.00 |
| 21. | Metformin Hydrochloride BP | 9,000 | 2,000.00 |
| 22. | Metronidazole USP | 4,000 | 3,000.00 |
| 23. | Phenoxymethyipencillin Potassium (Compacted) BP | 3,000 | 5,000.00 |
| 24. | Prednisolone BP | 400 | 8,000.00 |
| 25. | Propranolol Hydrochloride BP | 200 | 500.00 |
| 26. | Pyridozine Hydrochloride BP | 25 | 500.00 |
| 27. | Riboflavin BP | 50 | 500.00 |
| 28. | Salbutamol Sulphate BP | 200 | 2,000.00 |
| 29. | Sulfamethozazole BP | 1,000 | 1,000.00 |
| 30. | Spironolactone USP | 400 | 5,000.00 |
| 31. | Theophylline Anhydrous USP | 1,500 | 2,000.00 |
| 32. | Trifluoperazine Hydrochloride BP | 50 | 3,000.00 |
| 33. | Trimethoprim BP | 200 | 500.00 |
| 34. | Verapamil Hydrochloride BP | 300 | 2,000.00 |
| 35. | Ammonio methacrylate Copolymer (Type B) USNF | 3,000 | 8,000.00 |
| 36. | Calcium Sulphate Dihydrate BP | 1,000 | 500.00 |
| 37. | Cetyl Alcohol BP/USP/USNF | 100 | 500.00 |
| 38. | Colloidal Silicon Dioxide UOSP/USNF | 360 | 500.00 |
| 39. | DC Lactose (Lactose Anhydrous) USNF/USP | 20,000 | 5,000.00 |
| 40. | Hydroxypropyl methylcellulose (Hypromellose) USP | 1,500 | 1,000.00 |
| 41. | Lactose Monihydrate BP/USP (200 Mesh) | 80,000 | 6,000.00 |
| 42. | Magnesium Stearate BP | 2,000 | 500.00 |
| 43. | Microcrystalline Cellulose USNF/BP | 8,000 | 1,500.00 |
| 44. | Micro crystalline Cellulose USNF/PH EUR/JP (PH 200 LM) | 4,000 | 500.00 |
| 45. | Maleic Acide BP | 50 | 500.00 |
| 46. | Polythylene glycol USP/NF | 100 | 500.00 |
| 47. | Povidone K-30 (Polyvinyl Pyrrolidone K-30) USP/BP | 1,000 | 500.00 |
| 48. | Purified Talc BP | 5,000 | 500.00 |
| 49. | Sodium Starch Glycolate BP/USNF | 4,000 | 1,500.00 |
| 50. | Stearic Acid (D-grade) BP | 300 | 500.00 |
| 51. | Titanium Dioxide BP | 500 | 500.00 |
| 52. | Zinc Stearate BP/USP | 100 | 500.00 |

2. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் ஒரு முழுமையான விலைமனுக்கோரல் ஆவணங்களின் தொகுதியொன்றில் நகல்பிரதி மற்றும் மூலப்பிரதி என தயாரிக்கப்பட்டு பதிவுத் தபாலில் தலைவர், பெறுகைக் குழு, அரச மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபனம், இல.: 11, சேர். ஜோன் கொத்தலாவல மாவத்தை, கந்தவள தோட்டம், இரத்மலான, இலங்கை என முகவரியிடப்பட்டு அனுப்பப்படல் வேண்டும் அல்லது இலங்கை, இரத்மலான, கந்தவள தோட்டம், சேர். ஜோன் கொத்தலாவல மாவத்தை, 11 ஆம் இலக்கத்திலுள்ள அரச மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபனத்தின் தரை மாடியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

3. 2020 செப்டம்பர் 14ஆம் திகதியிலிருந்து 2020 ஒக்ரோபர் 26ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் பின்வருவனவற்றைச் சமர்ப்பித்து விலைமனு ஆவணத்தை மேலேயுள்ள முகவரியிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

   இலங்கை, இரத்மலான, கந்தவள தோட்டம், சேர். ஜோன் கொத்தலாவல மாவத்தை, 11ஆம் இலக்கத்திலுள்ள அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம், திட்டமிடல் மற்றும் பெறுகைக்கான பிரதி பொது முகாமையாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்தல்.

   அரச மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபன கணக்கிடல் திணைக்களத்திற்கு ரொக்கப் பணத்தில் மேலே கூறப்பட்டுள்ள மீளளிக்கப்படாத விலைமனு ஆவணக் கட்டணத்தை செலுத்துதல்.

4. விலைமனுக்கள் 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகளினால் நிர்வகிக்கப்படுவதனால் விலைமனுதாரர் அவரது சார்பாக முகவரொருவரை, உபமுகவரொருவரை, பிரதிநிதியொருவரை, பெயர் குறிப்பிடப்படுபரொருவரை அமர்த்துவாராயின், அப்படியான பொது ஒப்பந்தத்தின் போது பொது ஒப்பந்த சட்ட 10 ஆம் பிரிவிற்கமைவாக பதிவு செய்த பின்னர் அவ்வாறான செல்லுபடியாகும் தன்மையிலுள்ள சான்றிதழை இக்கேள்வி தொடர்பான எந்தவொரு கொடுக்கல் வாங்கல் வேளையிலும் அல்லது விலைமனுக்கோரலின் காலப்பகுதியின் எக்கட்டத்தின் எந்தவொரு நடவடிக்கையின் போதும் சமர்ப்பித்தல் வேண்டும்.

5. விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் இரத்மலானை SPMC இல் திறக்கப்படுவதுடன் விலைமனுக்களைத் திறக்கும் வேளையில் விலைமனுதாரர் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

6. விலைமனுக்கோரல் ஆவணங்களை SPMC இல் இலவசமாக பரீட்சிக்கலாம்.

7. மேலதிக தகவலை 2623298 என்ற தொலைபேசி எண்ணினூடாக SPMC திட்டமிடல் மற்றும் பெறுகைக்கான பிரதி பொது முகாமையாளர் இடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். **www.spmclanka.lk** என்ற எமது இணையதளத்திலிருந்து விலைமனுக்களின் விபரங்களை பெற்றுக் கொள்ளலாம்.

வெளிநாட்டு முதன்மையாளர்கள் எமது இணையதளத்திலிருந்து விலைமனுவை பதிவிறக்கம் செய்யலாம். (உள்ளூர் முகவர்களினால் பிரதிநிதிப்படுத்தப்படாதவர்களின் முன்வைப்புகள் விலைமனுவின் கொடுப்பனவுக் கட்டணமாக அ.ஐ. டொலருக்கு நிகரான பெறுமதி/பெறுமதிகளுக்கான வங்கிவரைவொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்)

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம்,**
**இல.: 11, சேர். ஜோன் கொத்தலாவல மாவத்தை:**
**கந்தவள தோட்டம்,**
**இரத்மலானை,**
**இலங்கை.**

**தொலைபேசி : (00) 94-11-2635353/(00) 94-11- 2637574 / (00) 94-11-2623298**
**மின்னஞ்சல் : spmclanka@sltnet.lk**
**இணையதளம் : www.spmclanka.lk**
**தொலைநகல் : (00) 94-11-2634771, 2626621**

# இலங்கை தரைப்படை

## தரைப்படையில் பாவிக்கப்பட்டதன் பின்னரான பின்வரும் தகுதியற்ற வாகனங்கள்/ பொதுப் பொருட்களை இலங்கைத் தரைப்படையின் யுத்த உபகரண படைப் பிரிவிலிருந்து கேள்விச் செயற்பாடுகள் மூலம் விற்பனைச் செய்யப்படவுள்ளன

**கேள்விச் செயற்பாடுகள் தொடர்பான விபரங்களும் குறித்த பெறுகை நிபந்தனைகளும்**

(1) பெறுகை நேர அட்டவணை (வார இறுதி நாட்கள் மற்றும் பொது விடுமுறை நாட்களை தவிர்த்து)

| இடம் | பொதுவான பொருட்கள் மற்றும் வாகனங்கள் | பொதுவான பொருட்கள் மற்றும் வாகனங்களின் தொகுதி இலக்கம் | விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டிய கால எல்லை | கேள்விகள் திறக்கப்படும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| 1ம் இலங்கை தரைப்படை படைக்கலச் சிறப்பணி, தரைப்படை குடியேற்றம், பனாகொடை, ஹோமாகம | டிரக் வண்டிகள், பிரைம் மூவர்கள், வான், டபள்/சிங்கள் கெப், ஜீப், டிராக்டர், டிராக்டர் டேலர், நீர்த்தாங்கி பவுசர் டிரேலர்கள், கை டிராக்டர், முச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிகள் மற்றும் பொதுவான பொருட்கள் | 01 முதல் 117 வரை (வாகனங்கள்) | 2020-09-16ஆம் திகதி மு.ப. 09.00 முதல் 2020-09-29ஆம் திகதி மு.ப. 10.00 வரை | 2020-09-29ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு |
| | | 01 முதல் 24 வரை (பொதுவான பொருட்கள்) | 2020-09-16ஆம் திகதி மு.ப. 09.00 முதல் 2020-09-30ஆம் திகதி மு.ப. 10.00 வரை | 2020-09-30ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு |
| 2ம் இலங்கை தரைப்படை படைக்கலச் சிறப்பணி, தரைப்படை முகாம், ரணசேவாபுரம், அனுராதபுரம் | பஸ் வண்டிகள், டிரக், பிரைம் மூவர் டிரேலர்கள், டபள்/சிங்கள் கெப், ஜீப், டிராக்டர், நீர்த்தாங்கி பவுசர், டிராக்டர் /டிரேலர், கை டிராக்டர் /டிரேலர், முச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள் மற்றும் பொதுவான பொருட்கள் | 01 முதல் 102 வரை (வாகனங்கள்)<br>01 முதல் 11 வரை (பொதுவான பொருட்கள்) | 2020-09-16ஆம் திகதி மு.ப. 09.00 முதல் 2020-10-12ஆம் திகதி மு.ப. 10.00 வரை | 2020-10-12ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு |
| 3ம் இலங்கை தரைப்படை படைக்கலச் சிறப்பணி, தரைப்படை முகாம், மகசேன்புர, மின்னேரிய | டிரக், வான், டபள்/சிங்கள் கெப், ஜீப், டிராக்டர், டிராக்டர் டிரேலர், நீர்த்தாங்கி பவுசர்கள், நீர்த்தாங்கி பவுசர் டிரேலர்கள், கை டிராக்டர்கள், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் பொதுவான பொருட்கள் | 01 முதல் 58 வரை (வாகனங்கள்)<br>01 முதல் 13 வரை (பொதுவான பொருட்கள்) | 2020-09-16ஆம் திகதி மு.ப. 09.00 முதல் 2020-10-13ஆம் திகதி மு.ப. 10.00 வரை | 2020-10-13ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு |
| 5ம் இலங்கை தரைப்படை படைக்கலச் சிறப்பணி, தரைப்படை முகாம், காங்கேசன்துறை | பஸ் வண்டிகள், டபள்/சிங்கள் கெப், வான், டபள் கெப், ஜீப், பிரைம் மூவர்கள், டிராக்டர், நீர் பவுசர் டிரேலர்கள், டிராக்டர் டிரேலர்கள், கை டிராக்டர் டிரேலர்கள், முச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் பொதுவான பொருட்கள் | 01 முதல் 35 வரை (வாகனங்கள்)<br>01 முதல் 13 வரை (பொதுவான பொருட்கள்) | 2020-09-16ஆம் திகதி மு.ப. 09.00 முதல் 2020-10-06ஆம் திகதி மு.ப. 10.00 வரை | 2020-10-06ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு |
| 6ம் இலங்கை தரைப்படை படைக்கலச் சிறப்பணி, தரைப்படை முகாம், கிளிநொச்சி | ஜீப், டிராக்டர், நீர்த்தாங்கி பவுசர்கள், நீர்த்தாங்கி பவுசர் டிரேலர்கள். மோட்டார் சைக்கிள் மற்றும் பொதுவான பொருட்கள் | 01 முதல் 07 வரை (வாகனங்கள்)<br>01 முதல் 09 வரை (பொதுவான பொருட்கள்) | 2020-09-16ஆம் திகதி மு.ப. 09.00 முதல் 2020-10-07ஆம் திகதி மு.ப. 10.00 வரை | 2020-10-07ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு |
| 7ம் இலங்கை தரைப்படை படைக்கலச் சிறப்பணி, தரைப்படை முகாம், முல்லைத்தீவு | டிரக், சிங்கள் கெப், நீர்த்தாங்கி பவுசர் டிரேலர், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் பொதுவான பொருட்கள் | 01 முதல் 16 வரை (வாகனங்கள்)<br>01 முதல் 14 வரை (பொதுவான பொருட்கள்) | 2020-09-16ஆம் திகதி மு.ப. 09.00 முதல் 2020-10-08ஆம் திகதி மு.ப. 10.00 வரை | 2020-10-08ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு |
| பொறியியல் சேவைகள் மத்திய வேலைத்தளம் (ஹபரகட), தரைப்படை முகாம், பனாகொட, ஹோமாகம | மின் பிறப்பாக்கிகள், நீர்ப் பம்பிகள் மற்றும் பொதுவான பொருட்கள் | 01 முதல் 03 வரை (பொதுவான பொருட்கள்) | 2020-09-16ஆம் திகதி மு.ப. 09.00 முதல் 2020-09-30ஆம் திகதி மு.ப. 10.00 வரை | 2020-09-30ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு |
| 16 வேலைத்தள இலங்கைப் பொறியியல் படையணி, (மத்தேகொட), இலங்கை தரைப்படை முகாம், மத்தேகொட, பொல்கஸ்ஓவிட்ட | உடைந்த காணி வாகனங்கள் (பக்கோ), லோடர், டோசர், வைபரேட்டர்கள், ரோலர்கள், மோட்டார் கிரேடர், வீல் லோடர் மற்றும் ஸ்கவேட்டர் இயந்திரங்கள் மற்றும் பொதுவான பொருட்கள் | 01 முதல் 30 வரை (உடைந்த காணி வாகனங்கள்)<br>01 முதல் 02 வரை (பொதுவான பொருட்கள்) | 2020-09-16ஆம் திகதி மு.ப. 09.00 முதல் 2020-09-30ஆம் திகதி மு.ப. 10.00 வரை | 2020-09-30ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு |

(2) கேள்விச் செயற்பாடுகளுக்காக முன்வைக்கப்பட்டுள்ள வாகனங்கள்/ பொதுவான பொருட்களைப் பரீட்சித்துப் பார்த்தல் மற்றும் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளல் என்பவற்றுக்கான கால எல்லை 2020-09-16ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் 2020-09-28ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரையாகும். (வார இறுதி நாட்கள் மற்றும் பொது விடுமுறை நாட்களை தவிர்த்து)

(3) கேள்விச் செயற்பாட்டின் பொருட்டு அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்வாங்கப்பட்டவர்கள் கேள்விகளைச் சமர்ப்பிக்க முடியாது.

(4) கேள்விப் படிவங்களை வாகனங்கள் / பொதுவான ஒன்றுசேர்த்து வைத்துள்ள இடத்தில் அமைக்கப்பட்டுள்ள அலுவலகங்களில் இருந்து கொள்வனவு செய்யலாம். கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு ஒரு தொகுதிக்கு (Lot) மீளளிக்கப்படாத கட்டணமாக 500.00 ரூபா (ஐந்நூறு ரூபா) அறவிடப்படும் என்பதுடன் அப்பணத்தை அவ்விடத்திலுள்ள காசாளரிடம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை சமர்ப்பித்து தேவையான கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். வாகனங்கள் / பொதுவான பொருட்களுக்காக வெவ்வேறான கேள்விப் படிவங்களை அவ்விடத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன் அந்தந்த கேள்விப் படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ள வாகனங்கள் / பொதுவான பொருட்களுக்கு மாத்திரம் விலைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். (உதாரணம்: வாகனங்களுக்கான விண்ணப்பப் படிவத்தின் மூலம் பொதுவான பொருட்களுக்காக விலைகளைச் சமர்ப்பிக்க முடியாதென்பதுடன் வாகனங்களுக்காக மட்டும் விலைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்) ஒரு கேள்விதாரர் பல தொகுதிகளுக்குக் கேள்விகளைச் சமர்ப்பிப்பாராயின் ஒவ்வொரு தொகுதிக்கும் தனித்தனியாக கேள்விப் படிவங்களைக் கொள்வனவு செய்தல் வேண்டும். ஒரு கேள்விப் படிவத்தில் ஒரு தொகுதி இலக்கத்திற்கு இயைபான விலைமனு மாத்திரமே சமர்ப்பிக்க முடியும் என்பதுடன் அவ்வாறல்லாத கேள்விப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

(5) வாகனம் மற்றும் பொதுவான பொருட்களுக்கான பிணை வைப்பின் (மீளளிக்கப்படும்) அளவுகளை உள்ளக்கிய அட்டவணையொன்று வாகனம் / பொதுவான பொருட்களுக்கான விண்ணப்பப் படிவத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதற்கமைய வாகனங்கள் / பொதுவான பொருட்கள் தொகுதி ஒன்றின் பொருட்டு வெவ்வேறான வகையில் பிணை வைப்பு சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன் அப்பணத்தை அவ்விடத்திலுள்ள காசாளரிடம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் (மூலப் பிரதியை) குறித்த கேள்விப் படிவத்துடன் கட்டாயம் இணைத்தல் வேண்டும். அவ்வாறு பற்றுச்சீட்டு இணைக்கப்படாத கேள்விப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

(6) விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும்போது வாகனங்கள் / பொதுவான பொருட்களில் குறிப்பிடப்பட்டுள்ள தொகுதி இலக்கத்தை (Lot No) கேள்விகளை சமர்ப்பிக்கும் போது கட்டாயமாக கேள்விப் படிவத்தில் மற்றும் கேள்விகளை தாங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட வேண்டும்.

(அ) தொகை இலக்கம் ...................................................... (ஆ) கேள்வி திறக்கப்படும் திகதி 2020 .................. திகதி
(இ) (வாகனங்கள் / பொதுவான பொருட்கள்) ரகம் ........................

(7) கேள்விப் பெட்டி வைக்கப்பட்டுள்ள இடங்கள் மற்றும் பெறுகைப் படிவங்களைப் பதிவுத் தபாலில் அனுப்புவதாயின் அனுப்ப வேண்டிய முகவரிகள் கீழே தரப்பட்டுள்ளன. வாகனங்கள் / பொதுவான பொருட்களுக்காக தனித்தனியான பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. இந்தக் பெட்டிகள் வார நாட்களில் (வார இறுதி நாட்கள் அரசாங்க விடுமுறை நாட்களை தவிர்த்து) மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 4.00 மணி வரை பிரதிநிதியின் பொறுப்பில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் வைக்கப்பட்டிருக்கும். விண்ணப்பங்களை இந்தப் பெட்டிகளில் இடுவதற்கு முன் அந்த இடத்தில் உள்ள பிரதிநிதியின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ள பதிவேட்டில் பதிவு செய்து உரிய கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். வாகன விண்ணப்பங்களை வாகனப் பெட்டியிலும் பொதுவான பொருட்களுக்கான விண்ணப்பங்களை பொதுப் பொருட்கள் பெட்டியிலும் உள்ளிடல் வேண்டும் என்பதுடன் ஏற்புடையதற்ற பெட்டியில் உள்ளிடப்பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களாகக் கொள்ளப்படும்.

| இடம் | கேள்விப் பெட்டி வைப்பிடம் | விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய தபால் முகவரி | கேள்விப் படிவங்கள் திறக்கப்படும் இடம் |
|---|---|---|---|
| 1ம் இலங்கை தரைப்படை யுத்த உபகரண படைப் பிரிவு, தரைப்படை குடியேற்றம், பனாகொடை, ஹோமாகம | பாதுகாப்புக் படைத் தலைமையகம், (மேற்கு) தரைப்படை குடியிருப்பு, பனாகொடை, ஹோமாகம (பிரதான வாயில் அருகே) | கேள்விச் சபைத் தலைவர், 1ம் இலங்கைத் தரைப்படை யுத்த உபகரண படைப் பிரிவு, தரைப்படை குடியிருப்பு, பனாகொடை, ஹோமாகம. | போதிராஜராம, தரைப்படை குடியேற்றம், பனாகொடை, ஹோமாகம |
| 2ம் இலங்கை தரைப்படை யுத்த உபகரண படைப் பிரிவு, தரைப்படை முகாம், ரணசேவாபுரம், அனுராதபுரம் | 2ம் இலங்கைத் தரைப்படை, யுத்த உபகரண படைப் பிரிவு (பிரதான வாயில் அருகே) | கேள்விச் சபைத் தலைவர், 2ம் இலங்கை தரைப்படை படைக்கலச் சிறப்பணி, தரைப்படை முகாம், ரணசேவாபுரம், அனுராதபுரம் | 2ம் இலங்கை தரைப்படை படைக்கலச் சிறப்பணி, தரைப்படை முகாம், ரணசேவாபுரம், அனுராதபுரம் |
| 3ம் இலங்கை தரைப்படை யுத்த உபகரண படைப் பிரிவு, தரைப்படை முகாம், மகசேன்புர, மின்னேரிய | 3ம் இலங்கைத் தரைப்படை, யுத்த உபகரண படைப் பிரிவு (பிரதான வாயில் அருகே) | கேள்விச் சபைத் தலைவர், 3ம் இலங்கை தரைப்படை படைக்கலச் சிறப்பணி, தரைப்படை முகாம், மகசேன்புர, மின்னேரிய | 3ம் இலங்கை தரைப்படை படைக்கலச் சிறப்பணி, தரைப்படை முகாம், மகசேன்புர, மின்னேரிய |
| 5ம் இலங்கை தரைப்படை யுத்த உபகரண படைப் பிரிவு, தரைப்படை முகாம், காங்கேசன்துறை | 5ம் இலங்கை தரைப்படை, யுத்த உபகரண படைப் பிரிவு (பிரதான வாயில் அருகே) | கேள்விச் சபைத் தலைவர், 5ம் இலங்கைத் தரைப்படை, யுத்த உபகரண படைப் பிரிவு, தரைப்படை முகாம், காங்கேசன்துறை | 5ம் இலங்கை தரைப்படை படைக்கலச் சிறப்பணி, தரைப்படை முகாம், காங்கேசன்துறை |
| 6ம் இலங்கை தரைப்படை யுத்த உபகரண படைப் பிரிவு, தரைப்படை முகாம், கொக்காவில், கிளிநொச்சி | 6ம் இலங்கைத் தரைப்படை, யுத்த உபகரண படைப் பிரிவு (பிரதான வாயில் அருகே) | கேள்விச் சபைத் தலைவர், 6ம் இலங்கைத் தரைப்படை, யுத்த உபகரண படைப் பிரிவு தரைப்படை முகாம், கொக்காவில், கிளிநொச்சி | 6ம் இலங்கை தரைப்படை படைக்கலச் சிறப்பணி, தரைப்படை முகாம், கொக்காவில், கிளிநொச்சி |
| 7ம் இலங்கை தரைப்படை யுத்த உபகரண படைப் பிரிவு, தரைப்படைக் குடியேற்றம், நந்திக்கடல், முல்லைத்தீவு | 7ம் இலங்கைத் தரைப்படை, யுத்த உபகரண படைப் பிரிவு (பிரதான வாயில் அருகே) | கேள்விச் சபைத் தலைவர், 7ம் இலங்கைத் தரைப்படை, யுத்த உபகரண படைப் பிரிவு தரைப்படைக் குடியேற்றம், நந்திக்கடல், முல்லைத்தீவு | 7ம் இலங்கை தரைப்படை படைக்கலச் சிறப்பணி, தரைப்படைக் குடியேற்றம், நந்திக்கடல், முல்லைத்தீவு |
| பொறியியல் சேவைகள் மத்திய வேலைத்தளம் (ஹபரகட), தரைப்படை முகாம், பனாகொட, ஹோமாகம | பொறியியல் சேவைகள் மத்திய வேலைத்தளம் (ஹபரகட) (பிரதான வாயில் அருகே) | கேள்விச் சபைத் தலைவர், பொறியியல் சேவைகள் மத்திய வேலைத்தளம் (ஹபரகட), தரைப்படை முகாம், பனாகொட, ஹோமாகம | போதிராஜாராமய, தரைப் படைக் குடியேற்றம், பனாகொட, ஹோமாகம. |
| 16 வேலைத்தள இலங்கைப் பொறியியல் படையணி, (மத்தேகொட), இலங்கை தரைப்படை முகாம், மத்தேகொட, பொல்கஸ்ஓவிட்ட | 16 வேலைத்தள இலங்கைப் பொறியியல் படையணி, (மத்தேகொட) (பிரதான வாயில் அருகே) | கேள்விச் சபைத் தலைவர், 16 வேலைத்தள இலங்கைப் பொறியியல் படையணி, (மத்தேகொட), இலங்கை தரைப்படை முகாம், மத்தேகொட, பொல்கஸ்ஓவிட்ட | போதிராஜாராமய, தரைப் படைக் குடியேற்றம், பனாகொட, ஹோமாகம. |

(8) சகல கேள்விப் படிவங்களும் முறையாக பூர்த்தி செய்யப்பட்டு, உறையில் இடப்பட்டு 7ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் வைக்கப்பட்டுள்ள குறித்த சரியான கேள்விப் பெட்டிகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ள திகதி நேரத்திற்கு முன் நேரடியாக கொண்டு வந்து உள்ளிடல் வேண்டும் அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி மற்றும் நேரத்திற்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(9) விண்ணப்பப் படிவங்கள் திறக்கப்படும் போது கேள்விதாரர்கள் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் தேசிய ஆள் அடையாள அட்டை/ கடவுச் சீட்டு / சாரதி அனுமதிப்பத்திரம் சகிதம் கேள்விதாரர்களும், கேள்விதாரர்கள் சமுகமளிக்க முடியாவிடின் அவர் சார்பில் அவர்களது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் கேள்விதாரரின் அங்கீகாரம் அளிக்கும் கடிதத்துடன் கட்டாயமாக சமுகமளிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(10) **கவனிக்க வேண்டியது:**

அ. சுங்கத் தீர்வையற்ற வாகனங்கள் மற்றும் மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தில் பதிவு செய்திராத வாகனங்களைக் கொள்வனவு செய்யும் கேள்விதாரர்களால் குறித்த வாகனத்தை மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தில் பதிவு செய்யும் போது சுங்கத் தீர்வையை மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திற்குச் செலுத்துதல் வேண்டும் என்பதுடன் சுங்கத் தீர்வையில்லாமல் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்கள் தொடர்பான விபரங்கள் மற்றும் சுங்கத் தீர்வைப் பணம் என்பன இயைபுடைய இலங்கை யுத்த உபகரண படைப்பிரிவினால் அறியத் தரப்படும்.

ஆ. சிதைவுற்ற வாகனங்கள் தவிர்ந்த ஏனைய வாகனங்களைக் கொள்வனவு செய்யும் கொள்வனவாளரால் அந்த வாகனத்தை முகாம் வளவிலிருந்து அகற்றிக் கொள்வதற்கு முன் இயைபுடைய முகாமின் பிரதிநிதியினால் வழங்கப்படும் ஆவணங்களுடன் வாகனத்தின் செஸி/இயந்திர இலக்கங்கள் சரியாகவுள்ளதா என உறுதிப்படுத்திக் கொண்டதன் பின் வாகனத்தை அப்புறப்படுத்திக் கொள்ளல் வேண்டும். (முகாம் வளவிலிருந்து வாகனத்தை அப்புறப்படுத்திக் கொண்டதன் பின் ஏற்படும் சிக்கல்கள் தொடர்பாக இலங்கைத் தரைப்படை பொறுப்புக்கூறாது)

(இ) பொதுவான பொருட்கள் தொகுதி இலக்கத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பொருட்கள் தொடர்பான விபரங்கள் கேள்விப் படிவங்களுடன் விநியோகிக்கப்படும்.

(11) இந்த கேள்விச் செயற்பாடுகளுக்கு மேற்படி நிபந்தனைகள் மற்றும் கேள்விப் படிவங்களில் குறிப்பிட்ட நிபந்தனைகளை நன்கு வாசித்து அறிந்து அதற்கு இணங்க கேள்விகளை சமர்ப்பித்து செயற்படுதல் கேள்விதாரர்களின் பொறுப்பாகும் என அறியத்தரப்படுவதுடன் கேள்வி தொடர்பிலான இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமையை கேள்விச் சபைத் தலைவர் தன்னகத்தே கொண்டுள்ளார். இது தொடர்பான மேலதிக விபரங்களை வாரத்தின் வேலை நாட்களில் கடமை நேரங்களில் தரைப்படை தலைமையகத்தின் தொலைபேசி: 011-2987525 அல்லது தரைப்படை இணையத்தளத்திலிருந்து **(www.army.lk)** பெற்றுக்கொள்ளலாம்.

**தரைப்படை தளபதி**



# சிறுவர் உலகம்

- சிங்கம் -

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 288

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | | 05 |
| 06 | | 07 | | 08 | 09 |
| 10 | 11 | 12 | | 13 | |
| | 14 | | 15 | | 16 |
| 17 | 18 | 19 | 20 | | 21 |
| | 22 | | 23 | 24 | 25 |

பெயர் ........................................
வகுப்பு ........................................
பாடசாலை பெயர் ........................................
பாடசாலை முகவரி ........................................
........................................
.............................. ..............................
மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் / பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

1. காதுக்கு இனிய பாடல் தருகின்ற கலைஞன் இவன்.
8. மழைக் காலத்தை குறிக்கின்ற சொல்.
10. கண்ணால் காண முடியாது. ஆனால் ஆக்ரோஷமாக அசைந்தால் அழிவுகளை ஏற்படுத்துகின்ற இயற்கை அனர்த்தம்.
17. வானில் இருந்து புவியை நோக்கி திடீரெனத் தாக்கும் இயற்கை அனர்த்தம். (தலைகீழான சொல்)
23. நெல்லின் உமியை நீக்கியதும், அரிசியைச் சூழ படர்ந்திருப்பது. அரிசியை விட்டு இது நீங்கினால், சோறு ஊட்டச்சத்து இல்லாமல் போய்விடும்.

**மேலிருந்து கீழ்**

1. கொடிய விஷம் கொண்ட நகருயிரி.
3. புவியின் மேற்பரப்பில் பெரும் பகுதி இதுதான்.
5. கொடை வள்ளல்களில் ஒருவனாக இன்றும் போற்றப்படும் மன்னன். இந்தியாவின் பறம்பு நாட்டை ஆட்சி செய்த மன்னன்.
8. அந்திப் பொழுது.
11. வீட்டுக்குள் காற்றும், வெளிச்சமும் வரவேண்டுமானால் இது அவசியம்.
15. உலக மொழிகளில் செம்மையான இனிய மொழி. (தலைகீழான சொல்)
16. மாவினால் தயாரிக்கப்படும் உணவுப் பண்டம்.

குறுக்கெழுத்துப் போட்டி
இல. 288
சிறுவர் உலகம்
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல.834. கொழும்பு

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 287

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. வெள்ளி 05. கண் 07. கதவு 10. மடி
12. மணி 14. தலை 17. சத்தம் 24. கனி

**மேலிருந்து கீழ்**

01. வெண்டி 02. மகள் 04. குதம் 07. கணிதம்
14. முதலை 16. கணினி 17. சனி

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 286 பரிசு பெறுவோர்

**முதலாம் பரிசு**
எஸ்.ஏ. மேத்தா,
தரம் 13 (வர்த்தகம்),
மட்/மட்/மெதடிஸ்த மத்திய கல்லூரி,
மட்டக்களப்பு.

**இரண்டாம் பரிசு**
முகம்மது நவாப் நக்ஷா,
தரம் 10, அல் அமான் மு.ம.ம.வி.,
கல்லொலுவ, மினுவாங்கொட.

**மூன்றாம் பரிசு**
எம்.ஏ. ஆயிஷா ஸைனப்,
தரம் 09 C,
மேமா/மது/வெலிப்பன்னை ரஹ்மானிய்யா ம.வி.,
வெலிப்பன்னை.

## பாராட்டு பெறுவோர்

1. **ஆர். இமாசப்னம்,**
தரம் 07 B,
அக்/அல் முனீறா பெண்கள் உயர்தர பாடசாலை,
அட்டாளைச்சேனை.

2. **ஏ.ஆர். பஹ்மா,,**
தரம் 06, பென்ஹில் கல்லூரி,
கம்பளை.

3. **எம்.என். நுஸைப் ரனா,**
தரம் 05, அப்துல் மஜீது வித்தியாலயம்,
கிண்ணியா.

4. **எம்.சி. எப். சீமா,**
தரம் 05, மா/அல்மினா ஆரம்பப் பாடசாலை,
எல்கடுவ வீதி,
உக்குவெல.

5. **ஐ.எச். தைய்யிபா,**
தரம் 05 C,
கொ/பாத்திமா முஸ்லிம் மகளிர் பாடசாலை,
கொழும்பு 12.



குறளமுதம் :

**கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு**
**சொல்வேறு பட்டார் தொடர்பு**

**தெளிவுரை :** செய்யும் செயல் வேறாகவும் சொல்லும் சொல் வேறாகவும் உள்ளவரின் நட்பு, ஒருவனுக்குக் கனவிலும் துன்பம் தருவதாகும்.

## செய்யும் செயலில் அவதானம் வேண்டும்



ஒரு ஊரில் இளம் பெண்ணொருவர் பால் விற்று வாழ்க்கையை நடத்தி வந்தாள். அவள் தினமும் தன்னிடம் இருந்த ஒரு பசு மாட்டிலிருந்து பாலைக் கறந்து அதை ஒரு குடத்திலிட்டு தன் தலையில் வைத்து எடுத்துச் சென்று வியாபாரம் செய்து வந்தாள். தான் ஏழையாக இருப்பதனாலே இப்படி தினமும் பால் விற்று சீவிக்க வேண்டி உள்ளது என் போன்ற மற்றப் பெண்களெல்லாம் விதம் விதமாக ஆடை அணிந்து எடுப்பாகச் செல்கிறார்களே என தன்னுள் கவலையுடன் இருந்தாள். ஒருநாள் அவள் வழமைபோல் பாலைக் கறந்தெடுத்து குடத்தினுள் விட்டு அதனை விற்பதற்காக தெரு வீதி வழியே சென்று கொண்டிருந்த போது தன் வாழ்க்கைத் தரத்தை எப்படி முன்னேற்றலாம் என கற்பனை செய்தாள்.

இன்று பாலை விற்று வரும் பணத்தில். சில கோழிக் குஞ்சுகள் வாங்குவேன். அவை வளர்ந்து பெரிதானதும். அவைகளை விற்று வரும் பணத்தில் இரண்டு ஆட்டுக் குட்டிகள் வாங்குவேன். அவை வளர்ந்ததும் அவற்றை விற்று இன்னொரு பசு மாடு வாங்குவேன். அவற்றைக் கொண்டு ஒரு பெரிய மாட்டுப் பண்ணை வைப்பேன். அதில் வேலை செய்ய பல பெண்களை வேலைக்கு அமர்த்துவேன்.

வருமானம் பெருகவே பலவிதமான ஆடை அணிகளையும் நகைகளையும் வாங்கி அவற்றை அணிந்து கொண்டு மற்றப் பெண்கள் எல்லாம் என்னைப் பார்த்து அதிசயிக்கக் கூடியதாக உல்லாசமாக இப்படி நடப்பேன் என தலையில் பால் குடம் இருந்ததை மறந்து அதைப் பிடித்திருந்த கையை எடுத்து விசுக்கி அழகாக நடக்க ஆரம்பித்தாள். என்ன பரிதாபம் அவள் நடந்த நடையில் தலையில் இருந்த அனைத்து பாலும் கீழே கொட்டியது. குடமும் உடைந்தது.

அவளுக்கு அன்றைய பால் வியாபாரம் நஷ்டமடைந்ததுடன் பால் குடமும் வேறு வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அப்போதுதான் அவள், எந்த ஒரு காரியமும் நடந்து முடிக்கும் முன், அதை எண்ணி திட்டங்கள் போடக் கூடாது என்பதை உணர்ந்தாள்.

எந்த ஒரு செயலில் ஈடுபட்டாலும் அதை முதலில் கவனமாக முடிக்க வேண்டும். இடையில் வேறு நினைவுகள் வந்தால் நஷ்டமே!

**செய்யும் செயலில் அவதானம் வேண்டும். இல்லையேல் பெருநஷ்டம்.**

தாரிணி குமார்,
தலவாக்கலை.

## தொடர் மொழிக்கு ஒரு மொழி

**விகடகவி:** நகையும் பரிகாசமும் பொருந்தக் கவி புனையும் ஆற்றல் படைத்தவர்
**அணிந்துரை:** ஒரு நூலுக்கு நூலாசிரியர் அல்லாத பிறர் வழங்கும் புகழுரை.
**முன்னுரை:** நூலாசிரியர் தமது நூலைப்பற்றி எழுதும் உரை
**பதிப்புரை:** ஒரு நூலைப் பதிப்பிப்போர் அந்நூலைப்பற்றி கூறும் உரை.
**அட்டாவதானி:** ஒரே சமயத்தில் எட்டு விடயங்களை அவதானிக்கும் ஆற்றல் உள்ளவர்.
**தீர்க்கதரிசி:** எதிர்கால நிகழ்ச்சிகளை அறியும் ஆற்றல் படைத்தவன்.
**ஆத்திகன்:** கடவுள் உண்டு என்று நம்புகின்றவன்
**நாத்திகன்:** கடவுள் உண்டு என்று நம்புகின்றவன்
**ஒத்திகை:** கலை நிகழ்ச்சிகளை மேடையேற்றுவதற்கு முன் சரி பிழை பார்த்தல்.

கே. இந்துஜா,
தரம் 06, ப/ தேவேந்திரா தமிழ் வித்தியாலயம்,
உடுவரை கீழ்ப்பிரிவு, தெமோதர.





மத்திய மாகாண கல்வி திணைக்களத்தில் அண்மையில் நடந்த சமூக விஞ்ஞான போட்டியில் வெற்றிபெற்ற மாத்தளை, கம்மடுவ தமிழ் மகா வித்தியாலய மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு பாடசாலை பிரதி அதிபர் ராஜ்மோகன் தலைமையில் வழங்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள்.



இஸ்லாமிய புது வருடம் ஹிஜ்ரி 1442 பிறந்ததை முன்னிட்டு பாணந்துறை பள்ளிமுல்லை வை.எம்.எம்.ஏ. பாலர் பாடசாலையில் நடைபெற்ற முஹர்ரம் புதுவருட நிகழ்வின்போது எடுத்துக் கொண்ட படம்.

(படம்: மொறட்டுவை மத்திய விசேட நிருபர்)

மாணவர் கழக அங்கத்துவ
இல : 418



ந. அக்சயன்,
தரம் 03A,
கொ/ இந்துக்கல்லூரி,
கொழும்பு 04.

மாணவர் கழக அங்கத்துவ
இல : 419



அ.றா. அஜ்மல் றுமான்,
தரம் 02 A,
கமு/கமு/அல். ஹிக்மா ஜூனியர் பாடசாலை,
மருதமுனை.

## மாணவர் கழக அனுமதி

மாணவர் பெயர் ........................................
பிறந்த திகதி ........................................
வகுப்பு ........................................
பாடசாலை ........................................
........................................

வர்ணப் புகைப்படம்

........................................
வகுப்பாசிரியர் கையொப்பம்

மாணவர் கழகம்
சிறுவர் உலகம்
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல.834 கொழும்பு.

## இவ்வார மழலை




மனோஜ் - சாந்தா
கினைமோறா டிவிசன்,
தலவாக்கலை.

## சிறுவர் சித்திரங்கள்





டேவிட் கமரூன்,
UKG, ஹைலெவல் சர்வதேச பாடசாலை,
ஹட்டன்.



பி. தனுசன்,
தரம் 13, கம்மடுவ தமிழ் மகா வித்தியாலயம்,
கம்மடுவ,மாத்தளை.



ஜி. சுகத்,
தரம் 13, கம்மடுவ தமிழ் மகா வித்தியாலயம்,
கம்மடுவ,மாத்தளை.



ரஞ்சன் அரஞ்சிகா,
தரம் 11,
யா/பன்னாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்,
குமாரபுரம் மூலாய், சுழிபுரம்.

# விளையாட்டு



## டெஸ்ட் வரலாற்றில் 600 விக்கெட்டுகள்

# வீழ்த்திய முதலாவது வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் அண்டர்சன்

எம்.எஸ்.எம் ஹில்மி...

இங்கிலாந்து அணியின் சிறந்த வேகப்பந்து வீச்சாளர்களில் ஒருவரான ஜேம்ஸ் அண்டர்சன் பாகிஸ்தானுடனான 3வது போட்டியின் இரண்டாவது இன்னிஸ்சில் பாகிஸ்தான் அணியின் தலைவர் அஸார் அலியை ஆட்டமிழக்கச் செய்ததன் மூலம் டெஸ்ட் வரலாற்றில் 600 விக்கெட் என்ற மைல்கல்லை அடைந்த முதலாவது வேகப்பந்து வீச்சாளர் என்ற சாதனையைப் படைத்துள்ளார்.

கொரோனா முடக்கத்தின் பின் மேற்கிந்தியத் தீவுகளுடனான மூன்று டெஸ்ட் போட்டிகள் மற்றும் பாகிஸ்தானுடனான முதல் போட்டியில் குறிப்பிடத்தக்களவு தனது திறமையை வெளிக்காட்டத் தவறியதால் அவரது ஓய்வு குறித்து சில விமர்சனங்களும் எழுந்தன.

ஆனால் 38 வயதான அண்டர்சன் அண்மைய விமர்சனங்களுக்கெல்லாம் பதிலளிப்பது போல் தன்னம்பிக்கையுடன் தொடர்ந்து விளையாடி மேற்படி மைல்கல்லை அடைந்துள்ளார்.

அண்மையில் தனது ஓய்வு குறித்த விமர்சனங்களுக்கு பதிலளித்த அவர் "என்னால் எவ்வளவு காலத்துக்கு விளையாட முடியுமோ அதுவரை விளையாட விரும்புகிறேன். கடந்த ஓரிரு போட்டிகளில் விளையாடியதைப் பார்க்கையில் எனது இலக்கு சற்று தளர்வடைந்துள்ளதை உணர்கிறேன். கடந்த பத்து ஆண்டுகளில் முதன் முறையாக மைதானத்தில் பந்து வீசும் போது சற்று பின்னடைவை அடைந்துள்ளதை நான் உணர்ந்தேன். ஆனால் நான் தொடர்ந்து கிரிக்கெட் விளையாடுவதில் ஆர்வமாகவே உள்ளேன். இந்த ஓரிரு போட்டியில் சரியாக விளையாடவில்லையென்பதால் எனது ஓய்வுபற்றி பேசப்படுகிறது. இது எனக்கு விரக்தியை ஏற்படுத்துவதாக உள்ளது. இந்த ஓரிரு போட்டியின் பின்னடைவினால் இதுபோன்ற விமர்சனங்கள் நியாயமானது என நான் நினைக்கவில்லை. கடந்த பந்து வருடங்களில் எனது கிரிக்கெட் வாழ்க்கையில் மிக மோசமான காலம் இது என நான் நினைக்கிறேன். ஆனால் தொடர்ந்தும் முயற்சி செய்து இங்கிலாந்து அணிக்கு போட்டிகளை வென்று கொடுக்க வேண்டும் என விரும்புகிறேன். எனது முழுக்கவனத்தையும் இதில்தான் செலுத்தியுள்ளேன். 600 விக்கெட் வீழ்த்தினால் மிகச்சிறப்பு. அந்த சாதனையை எட்ட முடியாமல் ஓய்வு பெற நேர்ந்தால் கவலையடைய மாட்டேன். இங்கிலாந்து அணிக்காக நீண்ட காலம் விளையாடியமைக்காக சந்தோசப்படுவேன்" எனக் கூறியிருந்தார். அவர் எதிர்பார்ப்புக்கமைய அண்மையில் 600 என்ற மைல்கல்லை அடைந்ததுடன் பாகிஸ்தானுடனான அப்போட்டியில் மிகச் சிறப்பாக விளையாடி 7 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியிருந்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

38 வயதான அண்டர்சன் முதன் முதலாக 2003ம் ஆண்டு மே மாதம் 22ஆம் திகதி சிம்பாப்வே அணிக்கு எதிராக லோட்ஸ் மைதானத்தில் டெஸ்ட் போட்டிகளில் அறிமுகமானார். இதுவரை 17 வருடங்களில் 156 போட்டிகளில் விளையாடியுள்ளார். அவர் விக்கெட் கைப்பற்றிய முக்கிய தருணங்கள்:

**முதல் விக்கெட்:** மார்க் வேர்மூலன் (சிம்பாப்வே) 2003ம் ஆண்டு லோட்ஸ்ட் மைதானம்.

**100வது விக்கெட்:** ஜெக் கலிஸ் (தென்னாபிரிக்கா) 2008ம் ஆண்டு ஓவல் மைதானம்.

**200வது விக்கெட்:** பீட்டர் சிடில் (அவுஸ்திரேலியா) 2010ம் ஆண்டு பேர்த் மைதானம்.

**300வது விக்கெட்:** பீட்டர் பூல்டன் (நியூசிலாந்து) 2013ம் ஆண்டு லோட்ஸ் மைதானம்.

**384வது விக்கெட்:** தினேஸ் ராம்டீன் (மேற்கிந்தியத் தீவுகள்) 2014ம் ஆண்டு அண்டிகுவா மைதானம். அதுவரை இங்கிலாந்து சார்பாக அதிக விக்கெட் வீழ்த்திய வேகபந்து வீச்சாளர் இயம் பொத்தமின் சாதனையை முறியடித்தார்.

**400வது விக்கெட்:** மார்டின் குப்டில் (நியூசிலாந்து) 2015ம் ஆண்டு ஹெடின்லி மைதானம்.

**500வது விக்கெட்:** கிரேட் பிரேத்வெச் (மேற்கிந்தித்தீவுகள்) 2017ம் ஆண்டு லோட்ஸ் மைதானம்.

**564வது விக்கெட்:** மொஹம்மட் சமி: (இந்தியா) 2018ம் ஆண்டு ஓவல் மைதானம். அதுவரை சர்வதேச ரீதியில் அதிக விக்கெட் வீழ்த்திய வேகப்பந்துவீச்சாளரான அவுஸ்திரேலியாவின் கிளேன் மெக்ராத்தின் சாதனையை முறியடித்தார்.

**600வது விக்கெட்:** அசார் அலி (பாகிஸ்தான்) 2020 ஆம் ஆண்டு சௌதம்டன் மைதானம்.

600 விக்கெட் என்ற மைல்கல்லை தாண்டிய ஏனைய மூவரும் சுழற்பந்து வீச்சாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

முத்தையா முரளிதரன் (இலங்கை) 800

ஷேன்வோர்ன் (அவுஸ்திரேலியா) 708

அனில் கும்ளே (இந்தியா) 619

156 போட்டிகளில் விளையாடியுள்ள அண்டர்சன் இதுவரை 42 ஓட்டங்களுக்கு 7 விக்கெட் கைப்பற்றியதே ஒரு இன்னிங்சில் சிறந்த பந்து வீச்சாக அமைந்துள்ளது. ஒரு போட்டியில் 71 ஓட்டங்களுக்கு 11 விக்கெட் கைப்பற்றியதே சிறந்த பந்து விச்சாகும். இதுவரை ஒரு இன்னிஸ்சில் 5 விக்கெட் அல்லது அதற்கு மேல் 29 முறை கைப்பற்றியுள்ளார். மூன்று முறை ஒரு போட்டியில் 10 விக்கெட் அல்லது அதற்கு மேல் கைப்பற்றியுள்ளார்.

இவர் அண்மையில் டெஸ்ட் அந்தஸ்து கிடைத்த நாடுகளான ஆப்கானிஸ்தான், அயர்லாந்து நாடுகளைத் தவிர அனைத்து நாடுகளுக்கெதிராகவும் விளையாடியுள்ளார். இந்திய அணிக்கு எதிராகவே அதிக விக்கெட்டுக்ககள் கைப்பற்றியுள்ள இவர், 27 போட்டிகளில் விளையாடி 110 விக்கெட்டுகளையும், அவுஸ்திரேலியாவுக்கு எதிராக 32 போட்டிகளில் 104 விக்கெட், தென்னாபிரிக்காவுக்கு எதிராக 26 போட்டிகளில் 93 விக்கெட்களையும், மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு எதிராக 22 போட்டிகளில் 87 விக்கெட்டுகளையும் பாகிஸ்தானுக்கு எதிராக 18 போட்டிகளில் 74 விக்கெட்டுகளையும், நியூசிலாந்துக்கு எதிராக 14 போட்டிகளில் 60 விக்கெட்டுகளையும் இலங்கைக்கு எதிராக 13 போட்டிகளில் 52 விக்கெட்டுகளையும் பங்களாதேஷ், சிம்பபாப்வே அணிகளுக்கெதிராக தலா 2 போட்டிகளில் விளையாடி 9 விக்கெட்டுகளையும் கைப்பற்றியுள்ளார்.

இவர் வெளிநாட்டு மைதானங்களில் இதுவரை 61 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 194 விக்கெட்டுகளையும், இங்கிலாந்து மைதானங்களில் 89 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 384 விக்கெட்டுகளையும், மத்தியஸ்த மைதானங்களில் 6 டெஸ்ட் போட்டிகள் விளையாடி 22 விக்கெட்டுகளையும் கைப்பற்றியுள்ளார்.

இவரின் சாதனையை முறியடிக்க தற்போது கிரிக்கெட் விளையாடுபவர்களின் வேகப்பந்து வீச்சாளர்கள் எவரும் இல்லை என்றும் எனவே இந்த சாதனைக்கு அவரே சொந்தக்காரராக இருப்பார் என்றும் பல விமர்சகர்களும் கூறினாலும் தற்போது விளையாடுபவர்களில் அண்டர்சனின் சக வீரரான மற்றொரு வேகப்பந்து வீச்சாளரான 34 வயதான ஸ்ட்டுவர்ட் புரோட் உள்ளார். அவர் அண்மைய மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான தொடரில் சிறப்பாகப் பந்து வீசி 500 விக்கெட் என்ற மைல்கல்லை தாண்டியுள்ளார். அவர் தற்போது 514 விக்கெட்களை வீழ்த்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. அவரும் தனது உடற்தகுதியைப் பேணி சிறந்த பயிற்சிகளில் ஈடுபட்டு இன்னும் ஓரிரு வருடங்கள் டெஸ்ட் போட்டிகளில் களமிறங்குவாறாயின் 600 விக்கெட் சாதனை முறியடிக்கும் வாய்ப்புள்ளது என சில கிரிக்கெட் விற்பன்னர்கள் தெரிவிக்கின்றனர்.



விளையாட்டுப் பாடசாலை அபிவிருத்தி தொடர்பிலான

# ஆலோசனைகள் உள்ளடங்கிய சுற்றுநிருபம் வெளியீடு

**புத்தளம் விசேட நிருபர்**

விளையாட்டுப் பாடசாலைகளுக்காக விளையாட்டுப் புலமைப்பரிசில்தாரிகளை உள்ளீர்த்தல் மற்றும் விளையாட்டுப் பாடசாலை அபிவிருத்தி தொடர்பிலான ஆலோசனைகள் உள்ளடங்கிய சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளது.

விளையாட்டுப் பாடசாலைகளுக்கு மாணவர்களை இணைத்துக் கொள்ளல், விளையாட்டுப் பாடசாலைகளின் நிர்வாகம் மற்றும் நிதி நடவடிக்கைகள், விளையாட்டுப் பாடசாலைகளின் அபிவிருத்தி தொடர்பில் எதிர்காலத்தில் கல்வி மற்றும் விளையாட்டு அமைச்சுக்களின் ஒருங்கிணைப்பில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய முறைகள் தொடர்பில் அனைத்து மாகாண மற்றும் வலயக் கல்வி அதிகாரிகள், விளையாட்டுப் பாடசாலைகளின் அதிபர்களுக்கு தெளிவூட்டும் ஆலோசனைகள் உள்ளடங்கிய சுற்றுநிருபம் கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளது. (2020.09.08ம் திகதியின் 24/2020ம் இலக்க சுற்றுநிருபம்)

நாட்டின் அனைத்து மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் தற்போது 25 விளையாட்டுப் பாடசாலைகள் உருவாக்கப்பட்டுள்ளதோடு, அந்தப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கான தேவைக்கு ஏற்ப செயற்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக அண்மையில் கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ், விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் நாமல் ராஜபக்ச ஆகியோரின் தலைமையில் அனைத்து விளையாட்டுத் துறை பாடசாலைகளின் அதிபர்களின் பங்குபற்றலுடன் இடம்பெற்ற விசேட கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாகவே இந்த சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்களின் விளையாட்டு மட்டத்தினை உயர் நிலைக்கு கொண்டு சென்று, முறையான விளையாட்டுக் கல்வியை வழங்குவதற்கான பாடசாலைச் சூழலை ஏற்படுத்துவதும், அதன் மூலம் சர்வதேசத்தை வெற்றி கொள்ளக் கூடிய சிறப்பான விளையாட்டு வீரர்களை இந்நாட்டு பாடசாலை விளையாட்டுக் கட்டமைப்பினுள் உருவாக்குவதும் விளையாட்டுப் பாடசாலைகள் உருவாக்கப்பட்டமைக்கான முக்கிய நோக்கமாகும். விளையாட்டுப் பாடசாலைகளில் மாணவர்களை இணைத்துக் கொள்வது எட்டாம் வகுப்பிலிருந்து ஆரம்பிக்கப்படவுள்ளதோடு, விளையாட்டுத் துறையில் விசேட ஆற்றல் மற்றும் ஆர்வத்தைக் கொண்ட மாணவர்களில் உரிய செயற்றிறன் மட்டத்தை அண்மிக்கும் மாணவர்கள் நேர்முகப் பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்பட்டு விளையாட்டுப் பாடசாலைகளுக்கு அனுமதித்துக் கொள்ளப்படுவார்கள்.

எனினும் ஐந்தாம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து ஆறாம் வகுப்பில் இணைத்துக் கொள்ளப்படும் மாணவர்களில் வகுப்பறையில் இருக்க வேண்டிய அதிகூடிய மாணவர் தொகை அதிகரிப்பதால் விளையாட்டுப் பாடசாலைகளில் மாணவர்களை இணைத்துக் கொள்ளும் போது எழும் பிரச்சினைகளுக்குத் தீர்வாக அனைத்து விளையாட்டுப் பாடசாலைகளிலும் எட்டாம் வகுப்பிற்கு தனியான வகுப்பை ஆரம்பிப்பதற்கு இந்த சுற்றுநிருபத்தின் மூலம் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் விளையாட்டுப் பாடசாலைகளின் மனிதவள அபிவிருத்தி, பௌதீக வள அபிவிருத்தி, தற்போதுள்ள விளையாட்டு மைதானங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் நவீனமயப்படுத்தல், தங்கும் விடுதிகளை புனரமைத்தல் மற்றும் தேவையான வளங்களை ஏற்படுத்திக் கொடுத்தல் உள்ளிட்ட முக்கிய அபிவிருத்தி தேவைகளுக்காக விளையாட்டுத் துறை அமைச்சின் மற்றும் கல்வி அமைச்சின் ஒருங்கிணைப்பில் முப்படைகளின் விசேட ஒத்துழைப்புடன் எதிர்கால அபிவிருத்திச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்.





# ரசிகர்கள் இல்லாத மைதானம் கோமாளி இல்லாத சர்க்கஸ்

-றொனால்டோ

**சர்வதேச கால்பந்து போட்டியில் 100 கோல்கள் அடித்து சாதனைப் படைத்த கிறிஸ்டியானோ றொனால்டோ, இரசிகர்கள் இல்லாதது கோமாளி இல்லாத சர்க்கஸ் போன்றது எனத் தெரிவித்துள்ளார்.**

**கொரோனா வைரஸ் தொற்று காரணமாக ஐரோப்பிய நாடுகளில் கால்பந்து போட்டிகள் இரசிகர்கள் இன்றி வெறிச்சோடிய மைதானத்தில் நடைபெற்று வருகிறது. ரசிகர்கள் ஆரவாரத்திற்கு மத்தியில் கம்பீரமாக விளையாடிய வீரர்களுக்கு இது சங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக முன்னணி வீரர்களுக்கு ரசிகர்களின் ஆரவாரம் கூடுதல் பூஸ்ட் அளிப்பதாக இருக்கும்.**

**தற்போது நேஷன்ஸ் லீக் கால்பந்து போட்டிகள் நடைபெற்று வருகிறது. போர்ச்சுக்கல் சுவீடன் அணிகள் மோதின. போர்த்துக்கல் அணி தலைவர் கிறிஸ்டியானோ றொனால்டோ இரண்டு கோல் அடிக்க போர்த்துக்கல் 20 என வெற்றி பெற்றது. முதல் கோலை அடிக்கும்போது றொனால்டோ சர்வதேச அளவில் 100வது கோலை பதிவு செய்தார்.**

**இரசிகர்கள் இல்லாமல் போட்டி நடைபெறுவது குறித்து கிறிஸ்டியானோ றொனால்டோ கூறுகையில் ''இரசிகர்கள் இல்லாமல் நடைபெறும் போட்டி என்பது, கோமாளி இல்லாத சர்க்கஸ், பூக்கள் இல்லாத தோட்டம் போன்றது. வீரர்களாகிய நாங்கள் ரசிகர்கள் இல்லாததை விரும்பவில்லை.**

**ஆனால் நான் ஏற்கனவே இந்த சூழ்நிலையில் விளையாடியிருக்கிறேன். மைதானம் வெறிச்சோடி இருக்கும் என்பது முன்னதாகவே தெரியும் என்பதால், அதற்கு ஏற்ப என்னைத் தயார்படுத்திக் கொள்வேன். இரசிகர்கள் இல்லாதது கவலை அளிக்கிறது.**

**வெளி மண்ணில் விளையாடும் போது இரசிகர்கள் ஆரவாரம் எழுப்புவது எனக்கு உத்வேகமாக இருக்கும். ஆனால், உடல்நிலை முக்கியம் என்பதால், அதற்கு மரியாதை கொடுக்க வேண்டும். இன்னும் சில மாதங்களில் இரசிகர்கள் மீண்டும் மைதானத்திற்கு திரும்புவார்கள். ஏனென்றால் அவர்கள் போட்டியை இரசிக்கக் கூடியர்கள்'' என்றார்.**

**சர்வதேச கால்பந்தில் தேசிய அணிக்காக 100 கோல்களை கடக்கும் 2வது வீரர்கள் என்ற பெருமையை பெற்றுள்ளார். ஈரானின் அலி தயேய் 109 கோல்கள் அடித்துள்ளார்.**



# சுவீடனுக்கு குடியேறுகிறார் ஜொன்டி ரோட்ஸ்

தென்ஆபிரிக்காவின் முன்னாள் கிரிக்கெட் வீரர் ஜொன்டி ரோட்ஸ், சுவீடன் கிரிக்கெட் பெடரேசன் தலைமை பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ள நிலையில், அங்கேயே குடியேறுகிறார். தென்ஆபிரிக்கா அணியின் தலைசிறந்த களத்தடுப்பாளராக திகழ்ந்தவர் ஜான்டி ரோட்ஸ். இவர் சுவீடன் கிரிக்கெட் பெடரேசன் தலைமை பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இதனால் குடும்பத்துடன் சுவீடனில் குடியேற இருக்கிறார்.

ஜொன்டி ரோட்ஸ் ஐபிஎல் தொடரில் மும்பை இந்தியன்ஸ் அணியில் களத்தடுப்பு பயிற்சியாளராக இருந்தார். இந்த பருவகாலத்தில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி அவரை களத்தடுப்பு பயிற்சியாளராக நியமித்துள்ளது. கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னதாகவே சுவீடன் கிரிக்கெட் பெடரேசனுடன் பேச்சுவார்த்தை தொடங்கியது. கடந்த மூன்று மாதங்களில் சிறந்த ஒப்பந்தம் நிகழ்ந்துள்ளது. எனது குடும்பத்துடன் சுவீடனில் குடியேற இருக்கிறேன். இது ஒரு ஆலோசனை மாத்திரம் இல்லை. நான் நீண்ட காலமாக செய்ய விரும்பும் ஒன்று. தற்போது குழந்தைகளுக்கு 13, 10, 5, 3 வயது ஆகிறது. எப்போதாவது ஒரு இடத்தில் இருந்து நகர முடியும் என்றால், தற்போது அது தேவை'' என்றார்.

கரீபியன் பிரிமீயர் லீக் ரி20:

# சம்பியனானது டிரிபாகோ நைட்ரைடர்ஸ்



கரீபியன் பிரிமீயர் லீக்கின் இறுதிப்போட்டியில் செயின்ட் லூசியா சாக்ஸ் அணியை 8 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தி டிரிபாகோ நைட் ரைடர்ஸ் சம்பியன் பட்டத்தை வென்றது.

டாஸ் வென்ற டிரிபாகோ நைட்ரைடர்ஸ் அணி பந்து வீச்சை தேர்வு செய்தது. இதையடுத்து, செயின்ட் லூசியா சாக்ஸ் அணியின் தொடக்க வீரர்களாக கார்ன்வெல் மற்றும் மார்க் டியல் களமிறங்கினர். கார்ன்வெல் 8 ஓட்டங்களிலும் மார்க் டியல் 29 ஓட்டங்களிலும் வெளியேறினர். அடுத்துவந்த வீரர்களும் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்து வெளியேறினர். சற்று நிலைத்து நின்று ஆடிய ஆன்ரே பிளட்சர் அதிகபட்சமாக 39 ஓட்டங்கள் எடுத்தார். டிரிபாகோ அணி வீரர்களின் சிறப்பான பந்து வீச்சு காரணமாக செயின்ட் லூசியா சாக்ஸ் அணி 19.1 ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 154 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. கீரன் பொலாட்டு அதிகபட்சமாக 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

155 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் டிரிபாகோ நைட் ரைடர்ஸ் அணியின் சிமன்ஸ் மற்றும் வெப்ஸ்டர் தொடக்க வீரர்களாக களமிறங்கினர். வெப்ஸ்டர் 5 ஓட்டங்களில் ஆட்டமிழந்து வெளியேறினார். அடுத்துவந்த டிம் செய்ஃப்ரிட் 4 ஓட்டங்களில் ஆட்டமிழந்து வெளியேறினார். பின்னர் களமிறங்கிய டெரன் பிராவோ, சிமன்ஸ் உடன் ஜோடி சேர்ந்து அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தி இருவரும் அரை சதம் கடந்தனர். 18.1 ஓவரில் 2 விக்கெட்டுகள் மட்டுமே இழந்து 157 ஓட்டங்களைப் பெற்று சம்பியனானது டிரிபாகோ நைட் ரைடர்ஸ்.

சிமன்ஸ் ஆட்டமிழக்காமல் 49 பந்துகளில் 4 சிக்சர்கள், 8 பவுண்டரிகள் உட்பட 84 ஓட்டங்களுடனும் டேரன் பிராவோ ஆட்டமிழக்காமல் 47 பந்துகளில் 6 சிக்சர்கள், 2 பவுண்டரிகள் உட்பட 58 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

சிமன்சுக்கு ஆட்டநாயகன் விருதும் கீரன் பொலாடுக்கு தொடர்நாயகன் விருதும் வழங்கப்பட்டது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2020 செப்டெம்பர் மாதம் 13ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# குடும்ப வைத்திய முறை நோய்களை எதிர்த்துவாழ உதவும்

## சர்க்கரை நோய் நிபுணர் மருத்துவர் காயத்ரி பெரியசாமியுடன் ஓர் ஆரோக்கியமான உரையாடல்



**'சர்க்கரை நோயாளர்கள் மூன்று மாதத்துக்கு ஒரு தடவை மருத்துவரை அணுகி பரிசோதனைகள் செய்ய வேண்டியது அவசியம்'**

**'உங்கள் விட்டுக்கு அருகே உள்ள உங்களை நன்கு அறிந்த, நீங்கள் அடிக்கடி சென்று வருகின்ற மருத்துவரே உங்கள் குடும்ப வைத்தியர்'**

குடும்ப மருத்துவர் என்பது வசதியான குடும்பத்தவருக்கு உரித்தான வசதி என்பது பொதுவான எண்ணம். ஆனால் அது பிழையான அர்த்தப்படுத்தல் என்கிறார் மருத்துவர் காயத்ரி பெரியசாமி.

கொழும்பு மருத்துவ வட்டாரத்தில் நன்கு அறிமுகமான பெயர் இது. குறிப்பாக சர்க்கரை நோயாளர்களுக்கு பரிச்சயமான பெயர். சில வருடங்களுக்கு முன்னர் கொழும்பில் சர்க்கரை நோயாளர்களுக்கு விழிப்புணர்வுடன் மருத்துவமும் ஆலோசனைகளும் தந்து சிகிச்சை செய்ய ஆரம்பித்து புகழ் பெற்றவர். ஒரு நோயாளி எதிரே வந்து அமர்ந்ததும் அவரிடம் உமக்கு என்ன பிரச்சினை என்பதைக்கேட்டு சில பரிசாதனைகளின் பின்னர் மருந்து எழுத்தித் தருவது மட்டுமல்ல ஒரு மருத்துவரின் வேலை என்பதை ஒரு கொள்கையாகவே வைத்திருப்பது மருத்துவர் காயத்ரியின் தனிச் சிறப்பு.

இந்த வகையில்தான் குடும்ப வைத்தியர் முறையை வலியுறுத்துகிறார் இவர்.

குடும்ப மருத்துவர், நம்மிடம் பணம் நிறைய இருந்தால்தானே மருத்துவர் வீட்டுக்கு வருவார், நம்மடன் பேசுவார் என்று நினைப்பவர்களுக்காக காயத்ரி சில விஷயங்களைக் கோடிட்டுக் காட்டுகிறார்.

குடும்ப மருத்துவர் அல்லது பிரத்தியேக மருத்துவர் என்பவர் ஒரு பெரிய, புகழ் பெற்ற மருத்துவராக இருக்க வேண்டிய அவசியம் இல்லை. வீட்டுக்குப் பக்கத்தில் உள்ள மருத்துவர், நீங்கள் சுகயீனத்துக்காக அடிக்கடி செல்லும் டிஸ்பென்சரி மருத்துவர், நண்பர், உறவினர், நெடுநாள் பழக்கம் என்ற வகையில் அறிமுகமாகியிருக்கும் மருத்துவர் இவர்கள் எல்லாரும் குடும்ப மருத்துவர்களே. ஏனெனில் நீங்கள் யார், உங்கள் பண நிலை என்ன, உங்களுக்கு அடிக்கடி வரக்கூடிய வியாதிகள் யாவை, உங்கள் பழக்க பழக்கங்கள் யாவை, வாழும் சூழல் எத்தகையது என்பது போன்ற தனிப்பட்ட தகவல்களை அறிந்தவரே குடும்ப மருத்துவர். உங்கள் நோய்களுக்கு அப்பாலும் அவர் உங்களை அறிவார். மது அருந்துபவரா, சிகரட் பழக்கமுண்டா, டென்ஷன் பாட்டியா இவற்றை அவர் தெரிந்திருக்கக் கூடும்.

இப்போதிருக்கும் புதிய பழக்கம், நோய் ஏற்பட்டதும் நேராக ஒரு ஸ்பெஷலிஸ்ட்டிடம் செல்வதே. அவர் சிறப்பு மருத்துவர் என்பதால் வியாதியின அடிநுனியைப் பிடித்து தீர்க்கமான மருந்துகளை எழுதி ஒரே தடவையில் நோயைக் குணமாக்கி விடுவார் என்பது எமது புரிதலாக இருக்கிறது. ஆனால் நோய் நொடி என்றால் உங்களுக்கு பழக்கனமான, நெருக்கமான, உங்களை தனிப்பட்ட ரீதியாகவும் அறிந்து வைத்திருக்கும் அருகில் உள்ள மருத்துவரை நாடுவதே சரியானது என்கிறார் மருத்துவர் காயத்ரி பெரியசாமி.

"அவரிடம் சென்று உடம்பைக் காட்டுங்கள். ஏற்கவே உங்கள் உபாதைகள் பற்றி அவர் அறிவார். அவர் தரும் சிகிச்சை பலன் தராதவிடத்து அவரே அடுத்ததாக நீங்கள் யாரிடம் மருத்துவ ஆலோசனை பெறலாம் என்பதை சொல்வார். சிபாரிசும் செய்வார். மருந்துக்கு முதலிடம் தருவதற்கு பதிலாக ஆலோசனைகளுக்கு முதலிடம் தருவதும், பரிசோதனைகள் மேற்கொள்வதுமே சிறந்தது. அவ்வாறு செய்யும் போது மருந்து இல்லாமலும் நோய் குணமாகலாம். அருகில் உள்ள பாடசாலையே சிறந்த பாடசாலை என்பது போல அருகில் உள்ள மருத்துவரே சிறந்த மருத்துவர் என்பதை புரிந்து கொள்ளுங்கள்" என்கிறார் மருத்துவர் காயத்ரி.

கொழும்பு விகாரமகாதேவி பூங்காவுக்கு எதிரே தர்மபால மாவத்தையில் அவரது ஹெல்தி லைஃப் மருத்துவ நிலையம் அமைந்துள்ளது. கனிவான, பயிற்றப்பட்ட ஊழியர்கள் உங்களை வரவேற்பார்கள். பல்வகையான சிகிச்சைகளையும், ஆலோசனைகளையும், பரிசோதனைகளையும் இங்கே பெற முடியும். இங்கே வாசலைத் தாண்டி உள்ளே சென்றதும் சுவரில் வாசகங்கள் எழுதப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். நாளைய மருத்துவர் உங்களுக்கு மருந்துதர மாட்டார். ஆலோசனைகளை வழங்குவார் என்று எழுதப்பட்டுள்ளது. இதன் அர்த்தம் என்ன என்று மருத்துவர் காயத்ரியிடம் கேட்டபோது, அவர் விளக்கமாகச் சொன்னதைத்தான் மேலே குறிப்பிட்டுள்ளோம்.

இங்கே ஒரு மருத்துவர் நிறைய மருந்துகளை எழுதினால் அவர் 'நல்ல டொக்டர்' என்று கருதும் மனப்பான்மை இன்றுமுள்ளது. "நான் என் வருத்தங்களை எல்லாம் விளக்கமாக சொன்ன பிறகும்கூட டொக்டர் இரண்டு மருந்துகளைத்தான் தந்தார்" என்று வருத்தப்படும் நோயாளர்களை இன்றைக்கும் பார்க்கலாம். அனால் மேல் நாடுகளில் அவசியமில்லாமல் மருத்துவர்கள் மருந்து எழுவதில்லை. ஆலோசனைகள் தான் தருவார்கள். இங்கெ தடுமல், காய்ச்சல் என்றால் பெனடொல், பிரட்டன், விட்டமின் சி, சில சமயம் இருமல் மருந்தும் சிபாரிசு செய்யப்படும் வழக்கம் உள்ளது. மேல் நாடுகளில் மருத்துவர்கள் இப்படி சிபாரிசு செய்ய மாட்டார்கள் என்கிறார் டொக்டர் காயத்ரி.

எனவே எதிர்கால மருத்துவர்கள் நோய்க்கான ஆலோசனைகளை அதிகமாகத் தந்து மருந்துகளை குறைவாக, அவசியமானால் மட்டுமே சிபாரிசு செய்வார்கள் என்று அவர் சொன்னபோது, ஜே.வி.பி. ஒருமுறை தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தாம் ஆட்சிககு வந்தால் மருத்துவ காப்புறுதியைப் போலவே மருத்துவப்பரிசோதனைக்கான காப்புறுதியை வழங்குவோம் என்றும், நோய் கண்டவுடன் மருத்துவம் செய்வதை விட பரிசோதனைகள் மூலம் நோய்க்குறிகளை முன்கூட்டியே அறிந்து கொள்வதே பாதுகாப்பானது என்றும் குறிப்பிட்டிருந்ததை நினைவுபடுத்திக் கொண்டோம்.

எமது உரையாடல் அப்படியே மருத்துவரின் ஏரியாவான சர்க்கரை நோய்ப்பக்கமாகத் திரும்பியது. தலைவலியோ, காய்ச்சலோ அது உடம்புக்கு வருத்தம் அளிப்பதாகவும் இருப்பதால் நாம் உடனடியாக மருத்துவரைத் தேடிச் செல்வோம். அந்த உபாதையில் இருந்து விடுபடுவதற்காக. ஆனால் சர்க்கரை நோய் என்பது வெளிப்படையாகத் தன் குணக் குறிகளைக் காட்டாது. நோயாளிக்கு சந்தேகம் ஏற்பட்டால் அல்லது வேறு ஒரு நோய்க்காக மருத்துவம் செய்யச் சென்ற வேளையில் பரிசோதனையில் வெளிப்பட்டால் தான் தனக்கு நிரிழிவு இருப்பதை அறிந்துகொள்கிறார்கள். சர்க்கரை நோய் பெரும்பாலும் தன் இருப்பை வெளிக்காட்டாது. ஆனால் படிப்படியாக எல்லா நோய்களுக்குமான வாசல்களை அது திறந்து விடும். இதை அறியாத நோயாளி உடம்புக்குத்தான் ஒன்றும் இல்லையே! என வாளாவிருப்பார்.

"இங்கு என்னிடம் வரும் நோயாளர்களை பரிசோதித்து, ஆலோசனைகள் வழங்கி மருந்துகளைக் கொடுப்பேன். மூன்று மாதங்களின் பின்னர் திரும்பி வரும்படி சொல்வேன். ஆனால் பெரும்பாலானோர் திரும்பி வருவதில்லை. சர்க்கரை நோய் மீண்டும் தீவிரமடையும் போதுதான் திரும்பி வருவார்கள்" என்று அவர் கூறிய போது இதற்கு என்ன மாற்று வழி உள்ளது என்று கேட்டோம்.

"இதன் பொருட்டு சில பெக்கெஜ்களை நாம் உருவாக்கி வைத்துள்ளோம். ஸ்மார்ட் D என்ற மருத்துவத் திட்டம் ஒரு வருட காலம் கொண்டது. இதன் கீழ் மூன்று மாதங்களுக்கு ஒருதடவை நோயாளர்கள் சிகிச்சை மற்றும் ஆலோசனைக்காக தர்மபால மாவத்தை ஹெல்தி லைஃப் கிளினிக் வர வேண்டும். முன்றாவது மாதம் முடியும் பொது எமது ஊழியர்களே அவர்களுக்கு தொலைபேசியூடாக மருத்துவ சிகிச்சைக்கு வரவேண்டியதன் அவசியத்தை எடுத்துச் சொல்லி நினைவுபடுத்துவார்கள். மேலும் அவர்கள் ஒரு வருட காலத்துக்கு பணமும் செலுத்தியிருப்பதால் சிகிச்சைக்கு திரும்பி வருவதில் அசமந்தமாக இருக்க மாட்டார்கள்" என்று புன்னகையுடன் விளக்கம் தந்தார் மருத்துவர் காயத்ரி.

இது போலவே நீழிவு வராமல் தடுப்பதற்கான மருத்துவத் திட்டமும் இவரிடம் இருக்கிறது. அதிக எடை, வரையறையற்ற உணவுப் பழக்கம், நீரிழிவு நோயாளர்களைக் கொண்ட குடும்பத்தில் பிறந்தவர்கள் ஆகியோர் இத்திட்டத்தில் சேர்ந்து கொண்டு, சர்க்கரை நோயை அண்ட விடாமல் அல்லது அதைத் தாமதப்படுத்தும் முயற்சிகளில் ஈடுபடலாம். இங்கே பெரும்பாலும் உடற் பயிற்சிகளுக்கான ஆலோசனைகளுடன் ஆரோக்கியமான உணவுப் பழக்கம் தொடர்பாகவும் யோசனைகள் தரப்படும்.

'இலங்கையின் மொத்த சனத்தொகையில் எட்டு சதவீதமானோர் நீரிழிவு நோயாளர்கள் என்று உலக சுகாதார தாபனம் தெரிவித்துள்ளது. நொயல் சோமசுந்தரம் தான் எடுத்த கணிப்பில், நகர்ப்புறத்தில் 25% வீதமானோருக்கு சர்க்கரை நோய் காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார். இருபது வயதைத் தாண்டிய ஐவரில் ஒருவருக்கு இந்நோய் காணப்படுவதாகவும் தெரிகிறது. இங்கு மட்டுமல்ல. உலகெங்கும் சர்க்கரை நோய் அதிகரித்துச் செல்வதையே நாம் காண்கிறோம். இந்நோய்க்கு மருந்து இல்லை என்பதால் நாம் கைக்கொள்ள வேண்டியது நோய் வராமல் தடுப்பதும், வந்த நோயை வெற்றிகரமாக நிர்வகிப்பதும்தான். நான் நடத்தும் 'ஹெல்தி லைஃப்' நிறுவனமும் அதைத்தான் மக்களுக்கு பரிந்துரைக்கிறது" என்கிறார் மருத்துவர் காயத்ரி.

**சர்க்கரை நோய் அதிகரிப்பதற்கான காரணங்கள் யாவை?**

"நாம் நமது கிராம வாழ்க்கை முறைகளை விட்டு விலகிச் செல்கிறோம். கிராமங்கள் நகர்மயமாகி வருகின்றன. மருத்துவத்துறை வளர்ச்சி காரணமாக அறுபது வயதுக்கு மேற்பட்டோர் தொகை அதிகரித்து வருகிறது. உலகம் குறுகி வருவதால் நாம் ஏனைய நாடுகளின் பழக்க வழக்கங்கள், உணவு முறைகளுக்குப் பரிச்சயமாகி வருகிறோம். பெருநகர கலாசாரம் நகர்ப்புறங்களுக்கும் வியாப்பிப்பதன் விளைவாக பொரித்த, அதிக கொழுப்பு கொண்ட மற்றும் துரித உணவுகளை உண்பது அதிகரிக்கிறது. இயந்திரமான வாழ்க்கை பருத்த, எடை கூடிய மனிதர்களை உருவாக்குகிறது. இவை அனைத்தும் நீரிழிவுக்கு வழிகோலுகிறது. எனவே இதில் இருந்து விடுபட வேண்டுமானால் மருந்துகளை விட மருத்துவ ஆலோசனைகளும் மருத்துவ ரீதியான விழிப்புணர்வுமே அவசியம். எமது ஹெல்த் லைஃப் கிளினிக்கில் நாம் இதைச் செய்கிறோம். ஒவ்வொரு மூன்று மாதங்களிலும் நோயாளர்களை முழுமையாக ஸ்கிறீன் செய்து, அதற்கு ஏற்றமாதிரி ஆலோசனைகள் வழங்கி அவசியமானால் மருந்துகளையும் மாற்றித் தருகிறோம். வித்தியாசமாகவே நாங்கள் நோயாளர்களை கையாள்கிறோம்" என்று சொல்லும் மருத்துவர் காயத்ரி,

சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்டவர்கள் இங்கே ஒரு தடவைவந்து தம்மை பரிசோதித்து அவசியமானால் பொருத்தமான ஒரு மருத்துவ திட்டத்தில் சேர்ந்துக் கொள்ளலாம். ஏனெனில் சர்க்கரை நோய் மிகவும் அமைதியான நோய். ஆக்ரோஷமாக அது வெளிப்படாது. ஆக்ரோஷமாக அது வெளிப்பட்டால் கட்டுப்படுத்துவது சிரமமாகிவிடும் என்கிறார். சில வீடுகளில் அதிகமாக சமைத்து ஐயோ குப்பையில் கொட்ட வேண்டியிருக்கிறதே என அங்கலாய்த்து அவற்றை சாப்பிட்டு முடிக்கச் சொல்வார்கள். வயிறு ஒரு குப்பைக் கூடை அல்ல. தேவைக்கு அதிகமாக எதையும் உண்ண வேண்டாம் என்பது இவர் வாசகர்களுக்கு அளிக்கும் அறிவுரை.

குடும்ப வைத்தியர் அணுகுமுறை, சர்க்கரை நோய் மருத்துவம், பருமன் குறைப்பு சிகிச்சை என்பவற்றுக்கு அப்பால் வயதானவர்களுக்கான பராமரிப்பு சேவையையும் ஹெல்தி லைஃப் மேற்கொண்டு வருகிறது.

அருள் சத்தியநாதன் ✍

## உணவும், மருந்தாகும்...

*28ஆம் பக்கத் தொடர்*

அநேகமாக கடைகளில் இவற்றை வாங்கி உபயோகிக்கும் மக்கள். சித்த வைத்தியசாலைகளுக்கு போவதில்லை. காரணம், அவர்களின் வைத்தியமுறைகளில் பத்தியம் உண்டு. அதனால் மக்களின் விருப்பத்தேர்வு அவர்களுக்கில்லை.

அதிலும் அண்மையில் நான் ஒரு சித்த வைத்திய நிலையத்துக்குப் போனேன். அங்கிருந்த வைத்தியரின் 'பந்தா' என்னை வியக்க வைத்தது. அவரது ஆணவமான பேச்சும் நோயாளியை சமூக இடைவெளிக்கும் மேலாகவே தள்ளி மறைவாக உட்கார வைத்து தனது எக்ஸ்ரே கண்ணாலேயே பார்த்து மருந்து எழுதியதையும் கண்டேன். மறந்தும் கூட அவரிடம் நான் முதல் ஆஸ்பத்திரியில் மருந்தெடுத்தேன் என்பதை சொல்ல வேண்டாம் என என் நணபர் எச்சரித்ததை மறந்துவிட்டேன் எனவே நான் வைத்தியசாலையில் மருந்து எடுத்ததை சொல்லிவிட்டேன். அவர் சித்த வைத்தியத்தைப் பற்றியும் ஆங்கில மருத்துவ முறைகள் பற்றியும் ஒரு நீண்ட சொற்பொழிவே ஆற்றி விட்டார். போகட்டும் என பொறுமையாக மருந்தை வாங்கிக் கொண்டுவந்தால்'மருந்து வேலை செய்ய வேண்டுமே. நான் இதற்காக வருந்தவில்லை. 'ஆலையில்லாத ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரை.'

எனது உணவை சீராக்கினேன். மருந்துக் குப்பதில் எனது உணவில் மருத்துவ மூலிகைகளை தேடி எடுத்தேன். என் தந்தை காட்டிய அரிய பல மூலிகை உணவுகள் அவர் சுவைக்காக என்று மட்டுமே செய்தவை. அவை அரு மருந்துகள் என்பதை மூலிகை அகராதியில் படித்தேன். அவற்றை எனது உணவில் சேர்த்துக் கொண்டது மட்டுமல்ல, மருந்தையும் அவர் வழியில் உணவாக்க தொடங்கினேன். இப்போது எனது அயலவர்கள் பெரும்பாலான மூலிகைகளை தேடி வீட்டுக்கு வருகின்றனர்.

நாமாக செய்யும் இயற்கை விவசாயம் நமக்கு பேருதவி செய்யும் ஒன்று. எமக்கான உடற்பயிற்சியும் உணவும், மருந்தும் அதுவாகவே ஆகிவிடுகிறது மனதுக்கு மகிழ்ச்சி தரும்.

# மனத்திரை



### தேசத்தின் கண்

### கே.எஸ்.சிவகுமாரன்

# ஆங்கில மொழியைப் புரிந்து கொள்ள வைப்பது கடினம்

1998ம் ஆண்டு ஆங்கிலத்தில் ஒரு கட்டுரையை 'தி ஐலண்ட்' பத்திரிகையில் எழுதினேன். அதன் சாராம்சம் இதோ.

காலனித்துவவாதிகள் கொண்டுவந்த அங்கிலமொழி எமது கலாசாரத்தை அழித்துவிட்டது என்று தேசியப்பற்றுள்ளவர்கள் எனக் கூறப்படும் சிலர் அன்று கூக்குரலிட்டனர். "கடுவ"என அழைக்கப்பட்டவர்களே ஆங்கில மொழியை ஆண்டவர்கள் இலங்கையில் சொற்ப விகிதத்தினரே.

ஆங்கில மொழியிற்றான் பெறுமதியான அரசியல் கருத்துக்களும், கொள்கைகளும் வெளிவருகின்றன. ஆயினும் அவற்றைப் புரிந்து கொள்பவர்கள் நமது மொத்த சனத்தொகையில் மிகமிகக் குறைந்தவர்களே.

பெரும்பாலான மக்கள் தமது தாய்மொழிகளில் வரும் கருத்தோட்டங்களையே நம்பியும், உள்வாங்கியும் வருகின்றனர். இதனால், எமது மொழி சார்ந்த, இவைகள் சார்ந்த பிரச்சினைகள் மீளவும் குழப்பியடிக்கப்படுகிறது.

தாய்மொழிதான் நமக்கு உயிர் என்பதில் மாற்றுக் கருத்து இல்ல. ஆனால் நவீன உலகில், தாய்மொழிப்பற்று மாத்திரம் போதுமானதாய் இல்லை என்பதை யதார்த்த ரீதியாக நாம் உணர வேண்டும்.

ஆயினும் நம்மில் சிலர், தேவை காரணமாக , ஆங்கிலத்தின் முக்கியத்துவம் கருதி பிரயாசையுடன் ஆங்கிலத்தைக் கையாளுவதில் கடும் பிரயத்தனங்களை எடுத்து வருவதும் கண்கூடு.

வெளியில் தேசாபிமானிகள் என்று கதையளப்பவர்கள், இரகசியமாகத் தமது பிள்ளைச் செல்வங்களை ஆங்கிலம் போதிக்கும் சர்வதேசக் கல்லூரிகளுக்கும், பிறநாடுகளுக்கும் அனுப்பி வைக்கின்றனர். இந்த வேஷதாரித்தனத்தை என்னவென்று அழைப்பதாம்?

இரண்டாம் நிலை பள்ளிக்கூடங்களில் ஆங்கில மொழியைப் போதிப்பதே பெரும் கஷ்டம். குறிப்பாக கிராமப் பாடசாலைகளில் படிப்பிக்கும் ஆசிரியர்களுக்குக் கூட போதிய பயிற்சியில்லை. தகமையும் இல்லை. நிலைமை அப்படியென்றால், உயர்தர வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் படும்பாடு சொல்வதற்கில்லை. பல்கலைக்கழகங்களிலும் நிலைமை மோசமாய் இருக்கிறது. பல தசாப்தங்களாக இந்த நிலையே நீடிக்கிறது.

பேராசிரியர் ஏ. ஜே. குணரதன இந்தப் பிரச்சினையின் சில கூறுகளை இனம்கண்டு 1988, ஜுலை 06ந் திகதி வெளியான தமது கட்டுரையில் விளக்கிக் காட்டியிருக்கிறார்.

"பெரும்பாலான பல்கலைக்கழக மாணவர்கள் அங்கிலத்தில் சில பாடங்களைப் பயின்றாலும், அவர்கள் அங்கில மொழியில் எழுதவோ, பேசவோ தெரியாமல் திண்டாடுகின்றனர்."

"ஆங்கில மொழியை இரண்டாம் மொழியாகப் பயிலுவதிலும் கஷ்டங்கள் தோன்றியுள்ளன. அதற்குக் காரணம், மாணவரின் மொழிப் பிரயோகங்கள் அவர்களின் தாய் மொழிகளின் அடிப்படையிலேயே வேருன்றியுள்ளன.

பள்ளிக்கூடங்களில் அந்நியமாகவிருந்த ஆங்கிலத்தை பல்கலைக்கழகங்களில் வாலாயமாக்கிக் கொள்வதில் அவர்களுக்குப் பெரும் செலவும், நேர விரயமும் ஏற்படுகின்றது. எனவே ஆங்கிலம் அநாவசியமானது என்று பல்கலைக்கழக மாணவரத்கள் சலிப்படைகின்றனர்.

இந்தச் சூழ்நிலையிலேயே 1988ம் ஆண்டு ஜுலை 7 முதல் 9 வரை பல்கலைக்கழகங்களில் ஆங்கிலத்தைப் போதிப்பது பற்றிய பயிற்சி வகுப்பொன்று நடைபெற்றது. பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு, ஆசிய நிதிநிலையம், அமெரிக்க தகவல் நிலையம் அகியன இந்த மாநட்டை ஒழுங்குபடுத்தியிருந்தன.

சிகாகோ டீ போல் பல்கலைக்கழகத்தைச் செர்ந்த லிண்டா ஹிலமன் அங்கு ஒரு வாரகால பயிற்சி வகுப்புகளை நடத்தினார். அமெரிக்காவில் கூட, வெளிநாட்டு மாணவர்களுக்கு ஆங்கில மொழியில் விரிவுரை செய்வது கடினமானது என்று, கலந்துகொண்ட என்னிடம் எடுத்துக்கூறினார். அவேளையில், TOFEL பரீட்சைகளில் 550 புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் அமெரிக்கப் பல்கலைக்கழகங்களில், ஆங்கில மொழியில் பரிச்சயம் பெற்றவர்களாகவும் விளங்கினர் எனவும் அவர் கூறினார்.

ஆங்கில மொழியைக் கற்ற போதிலும் அங்கிலம் மூலமான உலக இலக்கியத்தை பயில்வதற்கு அவர்கள் விரும்புவதில்லை. ரிச்சர்ட் றைட் போன்றவர்களின் ஆக்க இலக்கியங்களில் காணப்படும் மாதிரி எழுத்து நடைகள் அவர்களுக்கு வழிகாட்டப்பட்ட பொழுது அவர்கள் அதனை விரும்பினர்.

திருமதி லலிதா குணவர்தன,(ELTU) அங்கு கருத்துத் தெரிவிக்கையில், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஆங்கில இலக்கியத்தை போதிப்பது நிறுத்தப்பட்டது (புதிய மாணவர்களுக்கு) எனக் கூறினார்.

இந்த மாநாடடில், ஜோன் அயர், ஜக்கலன் மோக்கா. பரிட்டிஷ் உயர் ஸ்தானிகர் டேவிட் கிளாட்ஸ்ரன், கனேடிய, அவுஸ்திரேலிய உயர் ஸ்தானிகர்கள், கலாநிதி ஸ்ரான்லி கல்பகே, சரோஜினி நைட், ரிலீஸியா குணவர்தன போன்றவர்களும் உரையாற்றினர்.

கூடியிருந்த பெண் போதனாசிரியர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தது.

இவர்களின் கூற்றுப்படி, பெரும்பாலான மாணவர்கள் வாசிப்பதில் குறைபாடு உடையவர்களாகக் காணப்பட்டனர். சுருக்கமாக எழுதுவதையோ, முக்கியமானவற்றிற்கும், ஏனைய விபரங்களுக்குமிடையே எதைத் தேர்ந்தெடுப்பதில் பயிற்சி குன்றியவர்களாக மாணவர்கள் காணப்பட்டனர் எனத் தெரிவித்தனர். ஆங்கில மொழியும், ஆங்கில இலக்கியமும், கட்டாய பாடமாக ஆக்கப்பட்டால், சிறிது முன்னேற்றம் காண முடியும் என அனைவரும் ஏறறுக் கொண்டனர்.

## உள்நாட்டு இறப்பர் பால் கொள்வனவு செய்யும் DSI Tyres

இலங்கையின் பொருளாதாரத்தை வலுவூட்டுவதற்கு பெரும் பங்களிப்பினை வழங்கி பெருமளவு வருமானத்தை ஈட்டுவதற்கும் இறக்குமதி வரையறைகள் காரணமாக பெருமளவு அந்நிய செலாவணியினை மீதப்படுத்துவதற்கும் DSI Tyres நிறுவனத்தினால் முடிந்துள்ளது. தேசிய பொருளாதாரத்தை மேம்படுத்தும் தற்போதைய அரசாங்கத்தின் கொள்கைக்கு அமையவும் உள்நாட்டு உற்பத்திக்கு முன்னுரிமை அளித்து வருடாந்த உற்பத்தி அளவை 25 வீதத்தால் அதிகரித்தும் DSI Tyres நடைமுறைப்படுத்தியுள்ள புதிய வேலைத்திட்டம் காரணமாக உள்ளூர் இறப்பர் உற்பத்தியாளரின் வளர்ச்சிக்கும் பெரும் பலம் சேர்ந்துள்ளது.

கேகாலை, எஹலியகொட, படல்கும்புர ஆகிய பிரதேசங்களில் அமைந்துள்ள இறப்பர் பால் சேகரிப்பு நிலையங்களிலிருந்து இறப்பர் உற்பத்திகளை கொள்வனவு செய்யும் DSI Tyres எமது நாட்டின் இறப்பர் செய்கையின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றுகின்றது.

மேலும், கொரோனா நோய் காரணமாக பொருளாதார நெருக்கடிகளை சந்தித்துள்ள வாடிக்கையாளர்களின் வசதி கருதி இந்த ஆண்டில் DSI Tyres விலைகள் அதிகரிக்கப்படாமையும் குறிப்பிடத்தக்கது.

100வீத சுதேச நிறுவனமான DSI Tyres எமது நாட்டின் மிதிவண்டி, மோட்டார்சைக்கிள், முச்சக்கரவண்டி டயர்கள் மற்றும் டியூப்கள் சந்தையின் முதல்வனாக திகழ்வதோடு தேசிய பொருளாதாரத்துக்கு அந்நிய செலாவணியை ஈட்டித்தருவதில் முன்னோடியாக விளங்கி சர்வதேச சந்தையையும் வெற்றி கண்டுள்ளது. சிறந்த ஏற்றுமதிக்கான ஜனாதிபதி விருது உள்ளிட்ட பல்வேறு உள்நாட்டு, வெளிநாட்டு விருதுகளை வென்றுள்ள DSI Tyres அண்மையில் Best Brand of the Year 2019 என்ற மகத்தான விருதினையும் வென்றுள்ளது.

பல்தேசிய கம்பனிகளை கூட பின் தள்ளி உள்நாட்டு நிறுவனமாக பெற்றுள்ள இந்த வெற்றியுடன் சுமார் 75 நாடுகளுக்கு DSI Tyres தமது உற்பத்திகளை ஏற்றுமதி செய்து சாதனை படைத்துள்ளது.



## ஒவ்வொரு புதிய மஹிந்திரா யுவோ டிரக்டர் கொள்வனவின் போதும்

## ரொட்டவேட்டர் ஒன்றை இலவசமாக வழங்கும் DIMO

விவசாய இயந்திர பிரிவானது பெரும் போகத்திற்கு தயாராகும் பொருட்டு தனது வருடாந்த டிரக்டர் சேவை பிரசாரத்தை ஆரம்பித்திருந்ததுடன், இதன் போதுவிசேடசலுகையாகஒவ்வொரு புதிய மஹிந்திரா டிரக்டர் கொள்வனவின் போதும் ரொட்டவேட்டர் ஒன்றை இலவசமாக வழங்கியது.

பருவகாலம் முழுவதும் அதிகபட்ச செயல்திறனுடன் இயங்குவதற்கும், நீடித்துழைக்கும் பொருட்டும் எந்தவொரு டிரக்டரும் பருவகாலத்துக்கு முன்னதாக சீராக்கம் செய்யப்பட வேண்டும் என்பது அனைவரும் அறிந்த உண்மையாகும். இதனைக் கருத்தில் கொண்டு இந்த சேவை பிரசாரத்தின் ஊடாக மஹிந்திரா டிரக்டர் உரிமையாளர்கள் தங்கள் டிரக்டர்களை பெரும் போகத்திற்கு தயார்படுத்தும் பொருட்டு விரிவான டிரக்டர் பரிசோதனை அறிக்கையை பெற்றுக் கொண்டதுடன், சிறிய பழுதுபார்ப்பு மற்றும் சீராக்கல் சேவையை எந்தவொரு உழைப்புக் கட்டணமும் இன்றி மேற்கொள்ள வாய்ப்பு வழங்கப்பட்டது. அதேவேளை, உதிரிப் பாகங்களுக்கு விசேட கழிவுகளும் வழங்கப்பட்டன. மேலும், பெரும்போகத்தின் பொருட்டு விவசாயிகளுக்கு ஒவ்வொரு புதிய மஹிந்திரா யுவோ டிரக்டர் கொள்வனவுடனும் இலவச ரொட்டவேட்டரை வழங்கவும் நிறுவனம் ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தது.



பெரும் போக மஹிந்திரா சேவை பிரசாரம், 2020 ஒகஸ்ட் 11 ஆம் திகதி ஆரம்பமாகி 2020 செப்டம்பர் 5 ஆம் திகதி வரை அம்பாறை, மொனராகலை, பதுளை, பொலன்னறுவை, அனுராதபுரம், திருகோணமலை, குருநாகல், புத்தளம், மட்டக்களப்பு, வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் மன்னார் மாவட்டங்களில் நடைபெற்றதன் மூலம் நாட்டின் பிரதான விவசாய பிரதேசங்கள் அனைத்தையும் உள்ளடக்கியிருந்தது.

இந்த சேவை பிரசாரங்களில் பங்கேற்கும் விவசாயிகள் தமது மஹிந்திரா டிரக்டர்களுக்கு சேவையைப் பெற்றுக்கொள்ளும் அதேவேளை, தமது உடல்நலம் மற்றும் உடற்தகுதி நிலையை பரிசோதித்து, தகுதி வாய்ந்த மருத்துவ நிபுணர்களிடமிருந்து மருத்துவ ஆலோசனையைப் பெறக் கூடிய ஒரு இலவச மருத்துவ முகாமையும் DIMO ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## Colombo Fashion Week, One Galle Face விற்பனை வாரம்

### செப்டெம்பர் 11 முதல் ஒக்டோபர் 4 வரை

ஒரு புதிய இயல்பான சூழல் ஒரு புதிய சாதாரண அனுபவத்திற்கு அழைப்பு விடுக்கிறது. அறிவார்ந்த மற்றும் பொறுப்பான ஆற்றல் மூலம் ஒரு அனுபவத்துடனான விற்பனை நிகழ்வைக் கையாளுகிறது. CFW Retail Week என்ற தலைப்பில், 2020 செப்டெம்பர் 11 முதல் 2020 ஒக்டோபர் 4 வரை நடைபெறவுள்ள மூன்று வார நிகழ்ச்சித்திட்டம் நவநாகரிகம் மற்றும் ஆரோக்கியம், சுற்றுச்சூழல் மற்றும் பாதுகாப்பு மற்றும் இலக்கிய வாரம் போன்ற வாராந்த கருப்பொருள்களை மையமாகக் கொண்டுள்ளது. இந்த திட்டம் ஆக்கபூர்வமான ஒத்துழைப்புகளை அடிப்படையாகக் கொண்டதுடன், இது விருந்தினர்களுக்கும் புரவலர்களுக்கும் சுவாரசியமான விற்பனை தொடர்புகளைத் தருகிறது. One Galle Face மற்றும் HSBC Sri Lanka ஆகியவற்றுடன் இணைந்து இந்த திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஒரு மாத கால நிகழ்வுத் திட்டம் என்பது அறிவு மற்றும் ஈடுபாட்டை அடிப்படையாகக் கொண்ட அனுபவமாகும், இதில் தொடர்புடைய கருப்பொருள்கள்மற்றும்விடயங்களில்புத்தகவாசிப்புகள் மற்றும் செயலமர்வுகள், பெறுமதி சேர்க்கப்பட்ட கொள்வனவு அனுபவங்கள், திரைப்படத் திரையிடல்கள், சிறுவர் சமையல் நிகழ்வு, குழந்தைகளுக்கான கலைச் செயலமர்வு மற்றும் வைன் மது சுவைத்தல், உணவு மற்றும் பான வகை தயாரிப்பு விளக்கங்கள் போன்றவை பற்றிய நிபுணர் உரையாடல்கள் மற்றும் சிறப்பு நிகழ்வுகள் அடங்கும்.

இந்த புதிய கொள்வனவு அனுபவத்திற்கான இடம் மற்றும் கூட்டாளர் One Galle Face ஆகும். One Galle Face என்பது கொழும்பின் முதலாவது சர்வதேச அளவில் உருவாக்கப்பட்ட மற்றும் நிர்வகிக்கப்பட்ட கலப்புபயன்பாட்டு நிர்மாணச் செயற்திட்டமாகும்.

## வாடிக்கையாளர் சௌகரியத்தை மேம்படுத்தும் Huawei விரைவு அஞ்சல் பழுதுபார்ப்பு சேவை

புத்தாக்க ஸ்மார்ட்போன் தயாரிப்பாளரான Huawei நிறுவனம், Huawei சாதனங்களை வைத்திருப்போருக்கு ஆதரவளிக்கும் வகையில் புத்தம் புதிய விரைவு தபால் மூலமான பழுதுபார்க்கும் சேவையை அறிமுகப்படுத்தியுள்ளது. 24/7 மற்றும் 365 நாட்களும் கிடைக்கும் இந்த புதிய முயற்சியின் மூலம், வாடிக்கையாளர்கள் இலவச எடுப்பிப்பு மற்றும் விநியோக சேவையைப் பெறுவதுடன், இது வசதியான ஸ்மார்ட்போன் பழுதுபார்ப்புக்கு வழி செய்கின்றது.




இந்த வசதியான விரைவு அஞ்சல் சேவையானது பழுதுபார்ப்பு மற்றும் பயண செலவுகளில் நேரத்தை மீதப்படுத்தும் அதேவேளை போக்குவரத்து நெரிசலில் பயணிக்க வேண்டிய தேவையையும், நீண்ட வரிசைகளில் காத்திருக்க வேண்டிய தேவையையும் நீக்குவதன் மூலம் வாடிக்கையாளர்களுக்கு பயன்மிக்கதாக அமையவுள்ளது.

'எமது சேவை வழங்கலின் போது வாடிக்கையாளரின் சௌகரியம் மற்றும் திருப்தியே எமக்கு முக்கியமானதாகும். இந்த வீட்டுக்கு வீடு விரைவு தபால் மூலமான பழுதுபார்ப்பு சேவையானது பழுதுபார்ப்புக்கு செலவிட்ட நேரத்தை மீதப்படுத்த உதவுவதுடன், எங்கள் நன்கு பயிற்சி பெற்ற தொழில்நுட்ப வல்லுநர்கள் அனைத்து சாதன பழுதுபார்ப்புகளையும் உகந்த முறையில் முன்னெடுப்பதால் வாடிக்கையாளர்கள் பழுதுபார்ப்பு தொடர்பில் கவலைப்பட தேவையில்லை.

அனைத்து பழுதுபார்ப்பு சேவைகளும் அனுபவம் வாய்ந்த Huawei மொபைல் தொழில்நுட்ப வல்லுநர்களால் முன்னெடுக்கப்படுவதுடன், அவர்கள் இச் சேவையில் சிறந்த சேவைகளை வழங்கி தம்மை நன்கு நிரூபித்தவர்களாவர். இந்த மிகவும் நம்பகமான மற்றும் தொந்தரவு இல்லாத பழுதுபார்க்கும் சேவையைப் பயன்படுத்த அனைத்து Huawei வாடிக்கையாளர்களையும் அழைக்கிறோம்," என Huawei Devices Sri Lanka உள்நாட்டு தலைமை அதிகாரியான பீட்டர் லியூ தெரிவித்தார்.

உத்தரவாதக் காலத்துக்குட்பட்ட சாதனங்கள் இலவசமாக பழுதுபார்க்கப்படும் அதேவேளை, உத்தரவாத நிபந்தனைகளுக்கு உட்படாத சாதனங்களுக்கு உதிரிப் பாகங்களுக்கான செலவு உள்ளிட்ட பழுதுபார்க்கும் கட்டணம் அறவிடப்படும்.

சேகரிக்கப்பட்ட தொடர்பு விபரங்கள் ஊடாக பழுதுபார்ப்பு செயற்பாட்டின் முன்னேற்றங்கள் குறித்து சேவை மையம் தொடர்ந்து வாடிக்கையாளருக்கு தகவல்களை வழங்கும்.



## தரத்துக்கான அர்ப்பணிப்புக்கு ISO 9001:2015 சான்றளிக்கப்பட்ட 'Multichemi'

இலங்கையின் மாபெரும் டிடர்ஜன்ட் உற்பத்தியாளர் எனும் நற்பெயரைக் கொண்டுள்ள Multichemi இன்டர்நஷனல் லிமிடெட், அண்மையில் ISO 9001:2015 Quality Management System (QMS) சான்றிதழைப் பெற்றுக் கொண்டது. சர்வதேச தர நிர்ணயங்களுக்கமைய பரந்தளவு டிடர்ஜன்ட்கள் மற்றும் தூய்மைப்படுத்தல் தயாரிப்புகளை உற்பத்தி செய்வதில் காண்பிக்கும் தொடர்ச்சியான ஒப்பற்ற அர்ப்பணிப்புக்காக இந்த தரச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

1993 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட Multichemi இன் முன்னணி வர்த்தக நாமமான 'dash' இலங்கையின் முதலாவது உயிரினக் கழிவாக உக்குவது, நச்சுத்தன்மையற்ற, பொஸ்பேட் அற்ற சூழலுக்கு நட்பான டிடர்ஜன்ட் தயாரிப்பாக அமைந்துள்ளது. வீட்டுப் பராமரிப்பு, ஆடைகள் சலவை மற்றும் வாகனங்கள் பராமரிப்பு ஆகிய மூன்று பிரிவுகளில் தயாரிப்புகளை கொண்டுள்ளதுடன், கடந்த காலங்களில் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்ற தயாரிப்புகளாக வளர்ச்சியடைந்திருந்தன.

வாகன பராமரிப்பு பிரிவில் அறிமுகம் செய்யப்பட்டு நான்கு வருட காலப்பகுதியினுள் சந்தை முன்னோடி எனும் நிலையை 'dash' எய்தியிருந்ததுடன், தற்போதும் இந்த நிலையை பேணி வருகின்றது. வீட்டுப் பராமரிப்பு மற்றும் ஆடைகள் சலவை பிரிவுகளில் Multichemi இனால் இதர புகழ்பெற்ற வர்த்தக நாமங்களான 'Gliz' Dish Wash, 'Safematic' Laundry liquid, 'Magic Soft' Fabric Conditioner, 'SpringTime' Air Freshener, 'Safeol' Disinfectant மற்றும் 'Comox' Toilet Bowl Cleaner ஆகியன 'dash' நாமத்தின் கீழ் உற்பத்தி செய்யப்படுகின்றன.

ஸ்தாபிக்கப்பட்டது முதல், நிறுவனம் தனது செயன்முறை மற்றும் கட்டமைப்பு மேம்படுத்தல்கள், வலுச் சிக்கனம், கழிவு முகாமைத்துவ செயன்முறைகள், பயிற்சிகள், ஆய்வு மற்றும் விருத்தி ஆகியன செயற்பாடுகளில் அதிகளவு முதலீடுகளை மேற்கொண்டுள்ளது.


## யாழ்ப்பாணத்தின் முதலாவது இணைய பலசரக்கு விற்பனையகமான Maligai.lk-க்கு QR குறியீட்டு வசதியை வழங்கியது கொமர்ஷல்



யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள முதலாவது இணைய பலசரக்கு விற்பனையகமும் மளிகைக் கடையுமான Maligai.lk (மளிகை.lk) நிறுவனத்துக்கு LANKAQR வசதியை கொமர்ஷல் வங்கி அறிமுகம் செய்ததைத் தொடர்ந்து, தற்போது QR குறியீடு மூலமாகக் கொடுப்பனவுகளை ஏற்கும் வசதியை அந்நிறுவனம் பெற்றுள்ளது. இதற்கு மேலதிகமாக, அந்நிறுவனத்தின் இணையக் கொடுப்பனவு நுழைவாயில் சேவை வழங்குநராகவும் (Internet Payment Gateway IPG) கொமர்ஷல் வங்கி மாறியுள்ளது.

யாழ்ப்பாணத்திலும் அதன் சுற்றுப்பகுதிகளிலும் வாழும் மக்கள், குழந்தைப் பராமரிப்புப் பொருட்கள், பலசரக்குப் பொருட்கள், வீடுகளில் வளா'ந்த பழங்களும் மரக்கறிகளும், உலாவு கோழி, இறைச்சியும், மீனும், அழகுசாதனப் பொருட்களும் சுகாதாரப் பொருட்களும், தோலகட்டி உற்பத்திகள், வி.எஸ்.எஸ் நல்லெண்ணெய் போன்ற யாழ்ப்பாணத்துக்கே உரித்தான பொருட்கள் உள்ளிட்ட 1000க்கும் மேற்பட்ட பொருட்களை, www.Maligai.lkLANKAQR நியமத்தின் கீழாக உருவாக்கப்பட்ட QR அடிப்படையிலான இலங்கையின் முதலாவது செயலியான கொமா'ஷல் வங்கியின் Q+ செயலி, (Q + App) QR கொடுப்பனவுகளுக்கான தேசிய நிமயத்துடன் ஒருங்கிணைப்பட்ட முதல் சில டிஜிட்டல் வங்கித் தளங்களில் ஒன்றான Flash செயலியின் "QR Pay" வசதி மூலமாக அல்லது LANKAQRஇன் பதிவு செய்யப்பட்ட வேறு எந்த QR கொடுப்பனவுச் செயலி மூலமாக, தமது கொள்வனவுக்கான கொடுப்பனவை வாடிக்கையாளர்கள் மேற்கொள்ள முடியும்.

QR கொடுப்பனவு வசதியானது இணையத்தளத்தின் கொள்வனவின் பின்னரான சரிபார்ப்பு (checkout) பக்கத்தில் காணப்படுவதோடு, அவ்வசதிக்கு மேலதிகமாக விஸா, மாஸ்டர்கார்ட் நேரடியான வங்கிப் பரிமாற்றம் போன்ற தெரிவுகளும் கொடுப்பனவு வசதிகளாகக் காணப்படுகின்றன. எனவே, இவ்விணையத்தளமானது பல்வேறு வழிகளில் கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளும் வசதிகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது.




## மேஷம்

**மேடம் – (அஸ்வினி, பரணி, கார்த்திகை 1ம் பாதம்)**

செவ்வாய் கிரகத்தின் ஆதிக்கத்தில் உள்ளவர்கள். நீங்கள் மிகவும் பிடிவாத குணம் கொண்டவர்கள். இப்பொழுது குருகிரகம் வக்கிர நிவர்த்தி அடைந்து பாக்கிய தானமான 9ஆம் இடத்தில் மூலதிரிகோண ஆட்சி பலம் பெற்று நவம்பர் 15வரை சஞ்சாரம் செய்கின்றார். தந்தையார்வழி உறவுகள் மேம்படும் தந்தையின் உடல் நிலை சீராகும். பூர்வீக சொத்து பிரச்சினைகள் தீரும். புனித ஆலய யாத்திரைகளும் தரும காரியங்களிலும் நாட்டம் ஏற்படும்.

## ரிஷபம்

**இடபம் (கார்த்திகை 2ஆம், 3ஆம், 4ஆம் பாதம், ரோகினி, மிருகசீரிடம் 1ம், 2ம் பாதங்கள்)**

சுக்கிர கிரகத்தின் ஆதிக்கத்தில் உள்ளவர்கள். மிகுந்த நகைச்சுவையாக பேசும் இயல்பு உடையவர்கள். குருகிரகம் வக்கிர நிவர்த்தி அடைந்து நவம்பர் 15ந் திகதி வரை அட்டமதானத்தில் மூலதிரிகோண பலம் பெற்று ஆட்சி பெற்று சஞ்சரம் செய்கின்றார். நீண்ட தூர பயணங்களில் மிகவும் எச்சரிக்கையாக இருங்கள். கொடுக்கல் – வாங்கல் வியாபாரங்களில் கவனம் எடுங்கள். உடல் ஆரோக்கியம் பற்றியும் சிரத்தையாக இருங்கள்.

## மிதுனம்

**மிதுனம் (மிருகசீரிடம், 3ம், 4ம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம், 1ம், 2ம், 3ம் பாதங்கள்)**

புதன் கிரகத்தினது ஆதிக்கத்துக்கு உட்பட்டவர்கள். ராஜதந்திரியாக செயல்படும் திறமை கொண்டவர்கள். குருகிரகம் வக்கிர நிவர்த்தி அடைந்து மூல திரிகோண, ஆட்சி பலம்பெற்று 7ஆம் இடத்தில் நவம்பர் வரை சஞ்சரிக்கின்றார். கூட்டு பங்கு விற்பனை வியாபாரம் மேலோங்கும். நண்பர்களின் ஆதரவு கிடைக்கும் சமூகத்தில் உங்கள் புகழ் மேலோங்கும் விளையாட்டு வீரர்களுக்கு சிறப்பு அந்தஸ்து கிடைக்கும். இல்லறம் சிறப்பு அடையும்.

## கடகம்

**கடகம் (புனர்பூசம் 4ஆம், பாதம், பூசம், ஆயிலியம்)**

சந்திர கிரகத்தின் ஆதிக்கத்தின் கீழ் உள்ளவர்கள். எளிதில் உணர்ச்சிவசப்படும் குணம் கொண்டவர்கள். குருகிரகம் வக்கிர நிவர்த்தி அடைந்து மூலதிரிகோணம், ஆட்சி பெற்றும் 6ஆம் இடத்து குருவாக நவம்பர் 15வரை சஞ்சிரிக்கின்றார். தேவை இல்லாமல் கடன் பெறுவதை இயலுமான வரை தவிர்த்து கொள்ளுங்கள். வழக்குகளில் மாட்டி கொள்ளாதீர்கள் உடல் நலம் கவனம் எடுங்கள்.

## சிம்மம்

**சிங்கம் (மகம், பூரம், உத்தரம் 1ம் பாதம்)**

சூரிய கிரகத்தின் ஆதிக்கத்தின் கீழ் உள்ளவர்கள். எல்லாவற்றிலும் முதன்மையாக இருக்கும் ஆற்றல் கொண்டவர்கள். குருகிரகம் வக்கிர நிவர்த்தி பெற்று மூலதிரிகோணம். ஆட்சி பெற்று பூர்வ, புண்ணிய தானமான 5ஆம் இடத்தில் சஞ்சாரம் செய்வதால் பிள்ளைகளால் பெருமை அடைவீர்கள். ஆண் வாரிசு சந்ததி கிடைக்கலாம். உத்தியோகத்தில் உள்ளவர்கள் சிறப்பு அடைவார்கள். சொத்துக்களும் சேரலாம்.

## கன்னி

**கன்னி (உத்தரம் 3ம், 4ம், பாதம், அத்தம் சித்திரை 3ம், 4ம் பாதம்)**

புதன் கிரகத்தின் ஆதிக்கத்தின் கீழ் உள்ளவர்கள் சாதுமிரண்டால் காடு கொள்ளாது என்பதற்கமைய உங்கள் குணம் இருக்கும். குரு கிரகம் வக்கிர நிவர்த்தி அடைந்து நவம்பர் 15வரை மூலதிரிகோணம், ஆட்சியான குருவாக 4ஆம் இடத்தில் சஞ்சாரம் செய்கின்றார். தாய் வழி உறவுகள் மேன்மை அடையும். புதிய காணி, வாகனம் சேரலாம். தாயாரின் உடல் நலம் மேம்படும். பண்ணை வியாபாரிகளுக்கு நன்மை.

## துலாம்

**துலாம் (சித்திரை 3ம், 4ம், பாதம், சுவாதி, விசாகம் 1ம், 2ம், 3ம் பாதம்)**

சுக்கிர கிரக ஆதிக்கத்தில் உள்ளவர்கள். எல்லோரையும் சமமாக பார்க்கும் நீதி கண்கொண்டு பார்ப்பவர்கள். குருகிரகம் வக்கிர நிவர்த்தி அடைந்து நவம்பர் 15 வரை மூல திரிகோணம் ஆட்சி பெற்று 3இல் சஞ்சாரம் செய்கின்றார். எல்லாவிடயங்களிலும் முன் எச்சரிக்கையாக இருந்து கொள்ளுங்கள். நம்பும்படி நடவுங்கள். நம்பி நடக்க வேண்டாம் இழுபறியுடன் முயற்சி கைகூடிவரும்.

## விருச்சிகம்

**விருச்சிகம் – (விசாகம் 4ம் பாதம், அனுசம், கேட்டை)**

செவ்வாய் கிரகத்தின் ஆதிக்கத்தின் கீழ் உள்ளவர்கள். தேன் போன்ற கொட்டும் சொற்களை பேச கூடியவர்கள். குருகிரகம் வக்கிர நிவர்த்திபெற்று நவம்பர் 15 வரை மூல திரிகோணம் பெற்று ஆட்சியான குருவாக 2ஆம் இடத்தில் சந்திப்பது சிறப்பாகும். கல்வியியலாளர்கள் சிறப்பு அடைவார்கள். தாராளமாக பணம் வந்துசேரும். உங்கள் சொல்லுக்கு மதிப்பு சமூகத்தில் ஏற்படும். வழக்கறிஞர்கள், ஆசிரியர்கள், பாடகர்கள் சிறப்பு அடைவார்கள்.

## தனுசு

**தனுசு (மூலம் பூராடம், உத்தராடம் 1ம் பாதம்)**

வியாழ கிரகத்தின் ஆதிக்கத்தின் கீழ் உள்ளவர்கள். வெட்டு ஒன்று துண்டு இரண்டு என பேசும் குணங்கொண்டவர்கள். உங்கள் ராசிநாதன் குரு இப்பொழுது வக்கிர நிவர்த்திபெற்று மூலதிரிகோணம் பெற்று, ஆட்சியான குரு நவம்பர் 15 வரை உங்கள் ராசியில் சஞ்சாரம் செய்வதால் புதிய உத்வேகமும், தன்னம்பிக்கையும் மனதில் ஏற்படும். எல்லா காரியங்களும் உங்கள் மனம் எண்ணியபடி திருப்தியும் கை கூடிவரும் வெற்றி நடை போடுவீர்கள்.

## மகரம்

**மகரம் (உத்தராடம் 2ம், 3ம், 4ம் பாதம், திருகோணம் அவிட்டம் 1ஆம் 2ஆம் பாதம்)**

சனி கிரகத்தின் ஆதிக்கத்தில் கீழ் உள்ளவர்கள் சாதுரியமாக வேலைகளை செய்வதிலும், வேலை வாங்குவதிலும் சாமர்த்தியசாலிகள் குருகிரகம் நிவர்த்தி அடைந்து தனுசு ராசியில் மூலதிரிகோணம், ஆட்சியான குருவாக நவம்பர் 15 வரை சஞ்சாரம் செய்கின்றார். வீடு கட்டுவது, வாகனம் வாங்குவது மங்களகரமான காரியங்கள் போன்றவற்றிக்கு செலவுகள் ஏற்படும்.

## கும்பம்

**கும்பம் (அவிட்டம் 3ம், 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1ம், 2ம், 3ம் பாதங்கள்)**

சனி கிரகத்தின் ஆதிக்கத்தின் கீழ் உள்ளவர்கள். பணக்காரர்கள் நீங்கள் தான். குருகிரகம் வக்கிர நிவர்த்தி பெற்று நவம்பர் 15வரை 11ஆம் இடத்தில் தனுசு ராசியில் மூல திரிகோணம், ஆட்சிபெற்று சஞ்சாரம் செய்கின்றார். 11ஆம் இடமான ஏகாதசி தானத்தில் இருப்பது மிகவும் சிறப்பு பொன், பொருள் வரவுக்கு குறைவு இருக்காது. மூத்த சகோதர உறவுகள் மேம்படும். எல்லா விதத்திலும் நன்மைகள் சேரும்.

## மீனம்

**மீனம் – (புரட்டாதி 4ம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)**

வியாழகிரகத்தின் ஆதிக்கத்தில் உள்ளவர்கள். சொகுசு வாழ்க்கையை விரும்புபவர்கள். உங்கள் ராசி நாதன் குரு தனுசு ராசியில் மூலதிரிகோணம் பெற்று ஆட்சி பெற்று வக்கிர நிவர்த்தி அடைந்து தொழில் ஸ்தானத்தில் 10ஆம் இடத்தில் சஞ்சாரம் செய்கின்றார். தொழில் மாற்றமோ, இடம் மாற்றமோ நல்லதையும், உயர்வையும் தரும்.

# அமானா வங்கியின் பணிப்பாளர் சபைக்கு புதிய பணிப்பாளர்கள் நியமனம்

அமானா வங்கியின் பணிப்பாளர் சபையில் பல்துறை அனுபவம் வாய்ந்த நான்கு புதிய பணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அனுபவம் வாய்ந்த பட்டயக் கணக்காளர் திஷான் சுபசிங்க, நிதித் தொழில்நுட்ப தொழில்முயற்சியாளர் ஓமர் காசிம், சட்டத்துறை நிபுணர் மொஹமட் ஆதமலி மற்றும் இஸ்லாமிய வங்கியியல் சட்ட நிபுணர் போல் மேர்சர் ஆகியோர் புதிய பணிப்பாளர் சபை அங்கத்தவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.



வங்கியின் முன்னால் தலைவர் ஓஸ்மான் காசிம், இலங்கை மத்திய வங்கியினால் வர்த்தக வங்கியொன்றின் பணிப்பாளர் ஒருவருக்கு வரையறுக்கப்பட்ட அதிகபட்ச சேவைக்காலமான 9 வருடங்களை பூர்த்தி செய்ததினை அடுத்து தனது பதவியிலிருந்து ஓய்வு பெற்றார். இவரின் பணிப்புரையின் பெயரில் ஓமர் காசிம், பணிப்பாளர் சபைக்கு நியமிக்கப்பட்டுள்ளார். ஓஸ்மான் காசிம் அவர்கள் ஓய்வு பெற்ற போதிலும், வங்கியின் முதல் 10 பங்காளர்களில் ஒருவராக தொடர்ந்தும் அங்கம் வகிக்கின்றார். வங்கியின் பணிப்பாளராக 9 வருடங்கள் பணியாற்றியதைத் தொடர்ந்து, ஓய்வு பெற்ற சிரேஷ்ட பணிப்பாளரான ஜஸ்ரி மெக்டொன் இஸ்மைல் அவர்களுக்கு பதிலாக, திஷான் சுபசிங்க நியமிக்கப்பட்டுள்ளதுடன், பணிப்பாளர் சபை நிறுவப்பட்ட காலம் முதல் அதன் அங்கத்தரவாக திகழ்ந்து, 2020 ஆம் ஆண்டின் முற்பகுதியில் பதவி துறந்த ஹர்ஷ அமரசேகர PC அவர்களுக்கு பதிலாக சட்டத்துறை நிபுணர் மொஹமட் ஆதமலி நியமிக்கப்பட்டுள்ளார். வங்கியின் மூலோபாய பங்காளரான ICD இன் இரண்டாம் பிரேரிப்பு பணிப்பாளர் நிலையில் காணப்பட்ட வெற்றிடத்துக்கு இஸ்லாமிய வங்கியியல் சட்ட நிபுணர் போல் மேர்சர் நியமிக்கப்பட்டுள்ளார்.

திஷான் சுபசிங்க நிறைவேற்று அதிகாரமற்ற சுயாதீன பணிப்பாளராக இயங்குவதுடன், ஓமர் காசிம், மொஹமட் ஆதமலி மற்றும் போல் மேர்சர் ஆகிய மூவரும் நிறைவேற்று அதிகாரமற்ற சுயாதீனமற்ற பணிப்பாளர்களாக இயங்குவார்கள்.

புதிய பணிப்பாளர்கள் நியமனம் தொடர்பில் வங்கியின் தலைவர் அஸ்கி அக்பரலி கருத்துத் தெரிவிக்கையில், “எமது பணிப்பாளர் சபையில் நான்கு பல்துறை அனுபவம் நிறைந்த நிபுணர்களான திஷான் சுபசிங்க, ஓமர் காசிம், மொஹமட் ஆதமலி மற்றும் போல் மேர்சர் ஆகியோரை நியமித்துள்ளதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். அவர்களின் திரண்ட அனுபவம் மற்றும் வியாபார உள்ளார்ந்த அறிவு போன்றன வங்கியை உயர்ந்த நிலையை நோக்கி வழிநடத்தி அதன் மூலோபாய இலக்குகளை எய்துவதற்கு வழிகாட்டுவதாக அமைந்திருக்கும்.” என்றார்.

# பெரிய திரையுடன் அதிக இலங்கையரை ஈர்க்கும் OPPO A1K

ரூபா 19,990 எனும் விலையுடன், 4000mAh மின்கலம் மற்றும் 2GB RAM + 32GB ROM கொண்ட OPPO A1k ஆனது ரூபா 20,000 இற்கும் குறைவான தொலைபேசி வரிசையில் பூரண செயற்றிறனை ஈடுசெய்யும், புகழ்பெற்ற கையடக் தொலைபேசி மற்றும் உபகரணங்களை வழங்கும் தரக்குறியீடான OPPO வின் கையடக்க தொலைபேசியாக அமைவதோடு, இலங்கையர்களுக்கும் இப்போது OPPO வில் காணப்படும் அனைத்து சிறந்த அம்சங்களையும் கொண்ட 'பட்ஜட்' இற்குள் அமையும் உயர் செயல் திறன் கொண்ட ஸ்மார்ட் போனை பெறும் வாய்ப்பு கிட்டியுள்ளது.




ரூபா 20,000 இற்கும் குறைவான சந்தைப் பெறுமதியில் ஸ்மார்ட் போன் ஒன்றை வழங்குவது என்பது இலங்கை மொபைல் போன் சந்தையில் ஒரு சவாலான மாற்றத்தை ஏற்படுத்தும் செயற்பாடாகும் என்பதோடு, இது நாட்டில் வளர்ந்து வரும் ஸ்மார்ட்போன் பயன்பாட்டை மேலும் ஊக்குவிப்பதற்கான புத்துணர்ச்சியூட்டும் நடவடிக்கையாக அமையவுள்ளது. A1k கையடக்க தொலைபேசியானது, 4000mAh மின்கலத்தை கொண்டுள்ளதுடன், இப்பிரிவில் இது முன்னணி இடத்தை வகிக்கின்றது. சார்ஜ் செய்யாமல் ஒரு நாள் முழுவதும் (சுமார் 17 மணிநேரம்) பயன்படுத்துவதை இது உறுதி செய்கிறது. ‘Bigger Memory’ எனும் பெருமை கொண்ட இத்தொலைபேசி, 32GB ROM மற்றும் 256GB வரை அதிகரிக்கப்படக்கூடிய நினைவகம் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. A1K ஆனது, உங்கள் தனிப்பட்ட புகைப் படங்கள் மற்றும் தரவுகளுக்கான பெரிய சேமிப்பகத்தை கொண்டுள்ளது. OPPO A1K ஆனது 6.1 அங்குல HD+ திரையுடன் வருகிறது. இது, வீடியோக்களைப் பார்க்கும்போது அல்லது கேம்களை விளையாடும் போது சிறப்பான அனுபவத்தை பெற வழிவகுக்கிறது. Corning Gorilla Glass 3 திரை ஆனது திரையின் உறுதித்தன்மையை மேலும் மேம்படுத்துகிறது.

OPPO A1K தொலைபேசி, மெட் (matte) மேற்பரப்புடன் எளிய வடிவமைப்போடு, கையில் பிடிப்பதற்கு இலகுவான வகையில் நேர்த்தியாக அமைகிறது. இது வெற்று பின்புற பெனலைக் கொண்டுள்ளது. அது மிகவும் கடினமானதும் உடைக்க முடியாத வகையிலும் அமைந்துள்ளதுடன், கைரேகைகள் காரணமான அடையாளங்கள் இதில் பதியாது.

# PickMe அப்ளிகேஷன் ஊடாக விசா அட்டைகளுக்கு அற்புதமான தள்ளுபடிகளை வழங்கவுள்ள Litro




இலங்கை திரவ பெற்றோலியஎரிவாயுசந்தையில் முன்னணியில் திகழும் நிறுவனமான Litro Gas Lanka Limited, பிரபல போக்குவரத்து சேவை வழங்கும் தளமான PickMeஉடன் கைகோர்த்துள்ளதுடன், PickMeஅப்ளிகேஷன் ஊடாக கொள்வனவு செய்யப்படும் ஒவ்வொரு சிலிண்டருக்கும் அல்லது மீள்நிரப்பலுக்கும் ரூபா 250தள்ளுபடியை வழங்கவுள்ளது.ஓகஸ்ட் 8 முதல் செப்டம்பர் 21 வரையான குறிப்பிட்ட காலம் வரையிலேயே இந்த சலுகை கிடைக்கவுள்ளது.

மேலும் இந்த சலுகையானது இலங்கையில் வழங்கப்பட்டுள்ள அனைத்து விசா அட்டைகளுக்கும்( வரவட்டை, கடனட்டை மற்றும் முற்கொடுப்பனவு அட்டை) கிடைக்குமென்பதுடன், கொள்வனவின் போது தானாக இந்த தள்ளுபடித் தொகை கழிக்கப்படும். இதற்காக எவ்வித ஊக்குவிப்பு குறியீட்டையும் பாவிக்க வேண்டிய தேவையில்லை.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட, Litro Gas Lanka Limited இன் தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்று அதிகாரியான அனில் கொஸ்வத்த,□ இந்த நெருக்கடியான காலப்பகுதியில் எமது விசுவாசமான வாடிக்கையாளர்களுக்கு இந்த சிறிய நிவாரணத்தை வழங்குவது தொடர்பில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம். மேலும், இது Litroபோல, வாடிக்கையாளர்களும் டிஜிட்டலை ஏற்றுக்கொள்ள காரணியாக அமையுமென நாம் நம்புகின்றோம். Litro எரிவாயுவிற்கான இந்த விநியோக சேவையானது PickMeஉடன் இணைந்து கொவிட் 19 தொற்றின் போது ஆரம்பிக்கப்பட்டது. இந்த சேவையானது விரைவில் கொழும்பு மற்றும் புறநகர் பகுதியில் மிகவும் பிரபலமான சேவையாக மாறியது என்றார்.

PickMeஇன் உட்கட்டமைப்பு மற்றும் வளங்களைப் பயன்படுத்துவதன் மூலம், Litro நாட்டின் எந்தப் பகுதிக்கும் ஒரு மணி நேரத்திற்குள் அல்லது அதற்கும் குறைவான நேரத்திற்குள் சென்றடைகின்றது. கொவிட் 19 ஐத் தணிக்க நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவு விதிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் வாடிக்கையாளர்களுக்கு உகந்த வசதிகளை வழங்குவதற்காக தொழில்நுட்ப தீர்வுகளில் முதலீடு செய்து, அவற்றை ஏற்றுக்கொண்ட இலங்கையின் முதல் திரவ பெற்றோலிய எரிவாயு விநியோகஸ்தர் மற்றும் வழங்குநர் Litro Gas என்பது குறிப்பிடத்தக்கது.

# முதலாவது உலகளாவிய அபிவிருத்தி மையத்தை கொழும்பில் அங்குரார்ப்பணம் செய்து வைத்துள்ள HCL Technologies

ஒரு முன்னணி உலகளாவிய தொழில்நுட்ப நிறுவனமான HCL Technologies (HCL), தனது உலகளாவிய அபிவிருத்தி அமையத்தை இலங்கையின் கொழும்பில் உத்தியோகபூர்வமாக திறந்து வைத்துள்ளமை தொடர்பில் அறிவித்துள்ளது. இப்புதிய அபிவிருத்தி மையத்தை இலங்கையின் பிரதமர் மகிந்த ராஜபக்ச மற்றும் இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகரான கோபால் பாக்லே ஆகியோர் HCL Technologies இன் ஸ்தாபக முகாமைத்துவப் பணிப்பாளரும், தலைமை மூலோபாய அதிகாரியுமான . ஷிவ் நாடார் மற்றும் HCL Technologies இன் தலைவரும், தலைமை நிர்வாக அதிகாரியுமான சீ. விஜயகுமார் ஆகியோர் முன்னிலையில் ஒரு மெய்நிகர் வைபவத்தினுளடாக உத்தியோகபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்து வைத்துள்ளனர்.




கொழும்பிலுள்ள HCL அலுவலகமானது உலகத் தரம் வாய்ந்த உள்கட்டமைப்பு, பல் அடுக்கு தரவு மற்றும் பௌதிக பாதுகாப்பு நெறிமுறைகள் மற்றும் அதன் உலகளாவிய வாடிக்கையாளர் தளத்திற்கு உதவும் உயர்நிலை தொழில்நுட்ப கட்டமைப்புகள் ஆகியவற்றைக் கொண்டிருக்கும். அதன் புதிய அதிநவீன அலுவலகத்திலிருந்து, முக்கிய உள்நாட்டு முன்னிலை நிறுவனங்களுக்கு சேவை செய்ய அடுத்த தலைமுறை தீர்வுகளை வழங்குவதில் HCL பிரதானமாக கவனம் செலுத்தும்.

மெய்நிகர் நிகழ்வாக இடம் பெற்ற அங்குரார்ப்பண வைபவத்தின் போது பிரதமர் கருத்து வெளியிடுகையில், “HCL Technologies இலங்கையில் தனது முதல் உலகளாவிய விநியோக மையத்தை திறந்து வைக்கும் சந்தர்ப்பத்தில் உங்களுடன் இணைவது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. ஒரு தேசமாக, HCL போன்ற ஒரு பன்னாட்டு தொழில்நுட்ப நிறுவனத்தை வரவேற்பதில் நாங்கள் பெருமைப்படுவது மட்டுமல்லாது இந்த மையம் எங்கள் இளைஞர்களுக்கு வழங்கும் வாய்ப்புகளுக்கும் நன்றியுடையவர்கள் ஆகிறோம்.

HCL technologies போன்ற உலகளாவிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முன்னோடியின் பிரசன்னமானது இலங்கைக்கு ஒரு சொத்தாக இருப்பது மட்டுமல்லாது, உலகளாவில் பரவும் தொற்றுநோயை வெற்றிகரமாக கட்டுப்படுத்தியுள்ள நிலையில், இலங்கை மீண்டும் வணிக முயற்சிகளில் இறங்கியுள்ளது என்பதற்கு முழு உலகிற்கும் ஒரு வலுவான செய்தியை இது எடுத்துக் கூறுவதாக அமைந்துள்ளது.

HCL Technologies நிர்வாகத்திற்கு பாராட்டுக்களையும், எனது வாழ்த்துக்களையும் இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்,” என்று குறிப்பிட்டார்.

# மண் வளம் பாதிக்கப்படுமானால் மலர் வளர்ப்புதுறை குன்றும்

## மலர்ச் செய்கையாளர்கள் கவலை

ருஸ்மான்

சூழ்நிலை மாற்றங்களிலினால் மனித உள்ளங்களில் ஏற்படும் பாதிப்புகளை மிகவும் வெளிப்படையாக மாற்றவைக்கும் திறமை மலர்களுக்கு உண்டு. மலர்களின் கவர்ச்சிகரமான அழகும் அவற்றின் பொலிவும் மனித உள்ளங்களை என்றுமே நெகிழ்வுறச் செய்கின்றன. மலர்கள் பூத்துக் குலுங்குவதற்கு காலநிலை துணை நிற்கின்றது. மனிதர்களின் மனதை ஆறுதல்படுத்துவதிலும் மலர்களுக்கு விசேட பங்கு உண்டு. மலர்களும் மலர்ச் செடிகளும் என்றுமே ரசிக்கக் கூடியவை. அவை இயற்கைக்கு மெருகூட்டுகின்றன. மத வழிபாடுகளிலும் மலர்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

அலுவலகங்களின் வரவேற்புக் கூடங்களிலும் மற்றும் அலுவலக மேசைகளிலும் மலர்களின் அலங்கரிப்பை காணலாம். ஐந்து நட்சத்திர ஹோட்டல்களின் நீச்சல் தடாகங்கள் உட்பட பிரதான வீதிகளின் இருமருங்குகளின் அழகையும் மெருகூட்டுவதற்கு மலர்ச்செடிகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. இந்து மத பக்தர்கள் தமது வழிபாடுகளுக்கு ஏற்ற வகையில் மலர்களையும் மலர்மாலைகளையும் பயன்படுத்தி வருகின்றனர். அவர்களின் கலாசாரத்துடன் மலர்மாலைகளுக்கு நெருக்கமான தொடர்புகள் உள்ளன. இந்துக்கள் அதிகமாக வசிக்கும் ஊர்களில் காலத்துக்கு காலம் நடைபெற்று வருகின்ற திருவிழாக்களின் போது மலர்களுக்கு அதிக கேள்வி இருக்கின்றது. இந்து கோயில்களுக்கு அருகில் மலர்களாகவும் விதம் விதமான மாலைகளாகவும் இவை விற்கப்படுகின்றன.

அன்தூரியம், ஓர்க்கிட், பாபடென்ஸ் மற்றும் டெய்ஸி ஆகிய மலர்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்காக எமது நாட்டில் வளர்க்கப்பட்டு வருகின்றன. இவற்றுக்கு அதிக கிராக்கி உள்ளது. இவை எமது நாட்டின் குளிர்ப் பிரதேசங்களிலும் மற்றும் அவை வளர்வதற்குரிய காலநிலையுள்ள இடங்களிலும் பாரியளவில் வளர்க்கப்படுகின்றன. இவற்றை நுவரெலியா, தியத்தலாவ மற்றும் நானுஓயா ஆகிய குளிரான காலநிலை கொண்ட ஊர்களில் காணலாம். எமது நாட்டில் மலர்ச்செடிகளை வளர்த்தல் குடிசைத் தொழில் முயற்சியாகவும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அன்றாட ஜீவனோபாயத்துக்கும் உதவுகின்றது.

தனவந்தர்கள் மலர்ச்செடிகளை பாரியளவில் வளர்த்து பூக்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் வர்த்தகத்திலும் ஆர்வம் காட்டி வருகின்றனர். இதற்காக பாரிய முதலீடுகளை மூலதனமாகப் பயன்படுத்தியும் வருகின்றனர்.

ஏற்றுமதியாளர்கள் மலைநாட்டின் குளிர் பிரதேசங்களிலேயே ஏற்றுமதிக்கான மலர்ச்செடிகளைப் பயிரிட்டு வருகின்றனர். சிங்கப்பூர், யப்பான், தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கு எமது நாட்டிலிருந்து அன்தூரியம், ஓர்க்கிட் மற்றும் டெய்ஸி ஆகிய மலர்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன. எமது நாட்டுக்கு அந்நியச் செலாவணியை பெற்றுத் தரக்கூடிய சிறந்த வர்த்தகமாகவும் மலர் உற்பத்தியைக் குறிப்பிடலாம். மலர்களையும் மலர்ச்செடிகளையும் பயிரிட்டு விற்பனை செய்தல் எமது நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது. மலர்ச்செடிகளை வளர்த்து, பராமரித்து மலர்களை உள்நாட்டு சந்தையில் விற்பனை செய்யும் பல குடும்பங்கள் உள்ளன. அவ்வாறான குடும்பங்கள் தமது வாழ்வாதாரத்துக்காக இதனை சுயதொழில் முயற்சியாக மேற்கொண்டு வருகின்றன. தமது வீடுகளில் இருந்து கொண்டே பெண்கள் இவ்வாறான சுயதொழில் முயற்சியை மேற்கொள்ளலாம். சிறிய முதலீடுகள் மூலம் இவ்வாறான சுயதொழிலை ஆரம்பிக்க முடியும் . நல்ல வருமானத்தையும் இதன் மூலம் பெறலாம். இவ்வாறான மலர்ச்செடிகளை எமது வீட்டுத் தோட்டத்தில் நட்டு அவற்றை உரிய முறையில் வளர்த்து, பராமரித்து அதன் மூலம் வருமானம் ஈட்டும் குடும்பப் பெண் ஒருவரை சந்தித்தேன். அவர் மலர்களை விற்பனை செய்து தமது வாழ்வாதாரத்தை மேற்கொண்டு வருகின்றார். பம்மன்ன என்ற சிறிய கிராமத்தைச் சேர்ந்த 48 வயதுடைய நிலூகா என்ற குடும்பப் பெண் தனது சுயதொழில் முயற்சி தொடர்பாகப் பேச ஆரம்பித்தார்' மிகவும் சுதந்திரமான சுயதொழில் முயற்சியாகவே இதனை நான் குறிப்பிடுவேன். நாங்கள் எமது வீட்டுச்சூழலிலேயே மலர்ச்செடிகளை பயிரிட்டு வளர்த்து வருகின்றோம். மலர்களையும் மலர்ச்செடிகளையுமே விற்பனை செய்தும் வருகின்றோம். மலர்களையும் , மலர்ச்செடிகளையும் விற்பனை செய்வதற்கு எமது வீட்டிலுள்ள வாகனத்தை பயன்படுத்தி வருகின்றோம். எனது கணவர் இவற்றை தனது வாகனத்தில் ஏற்றிக் கொண்டு நீர்கொழும்பு, வென்னப்புவ, கொச்சிக்கடை, நாத்தாண்டிய மற்றும் தங்கொட்டுவ ஆகிய நகரப் பிரதேசங்களுக்கு கொண்டு சென்று விற்கிறார். பல வகையான மலர்ச்செடிகளும், பூக்களும் எம்மிடம் உள்ளன. அன்தூரியம், ஓர்க்கிட், போகன்விலா, பாபடைஸ் மற்றும் டெய்ஸி ஆகிய மலர்ச்செடிகளுக்கு நகர மக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பு இருக்கின்றது. மக்கள் ஆர்வமாக வாங்கும் மலர்ச் செடிகளையே எமது தோட்டத்தில் நாம் வளர்த்து வருகின்றோம். எனது வீட்டுக்கு அருகில் ஒரு சில வீடுகளிலுள்ள பெண்கள் மலர்ச்செடிகளை வளர்த்து வருகின்றனர். அவர்களிடமும் மலர்களையும் மலர்ச்செடிகளையும் விலைக்கு வாங்குவோம். கிராமப்புற பெண்களுக்கு இவ்வாறான தொழிலை கூட்டு முயற்சியாகவும் மேற்கொள்ள முடியும். எம்மிடம் விற்பனைக்கு இல்லாத மலர்ச்செடிகளை அருகிலுள்ள மலர்ச்செடி விற்பனை நிலையங்களிலும், தூர இடங்களிலுள்ள விற்பனை நிலையங்களிலும் விலைக்கு வாங்குவோம். வாடிக்கையாளர்கள் சில செடிகளின் பெயர்களைச் சொல்லி அவற்றைக் கொண்டு வருமாறும் சொல்லி அனுப்புகின்றனர். எனக்கு இரண்டு பிள்ளைகள். அவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கான அன்றாட செலவுகளையும் அதேபோன்று ஏனைய செலவுகளையும் இதன் மூலமே பூர்த்தி செய்து வருகின்றோம். பூச்சாடிகளையும் வீட்டில் செய்து வருகின்றோம். அழகான பூச்சாடிகளை சீமெந்து கலவையை பயன்படுத்தி செய்து வருகின்றோம். உலர் வலயத்தில் வாழ்பவர்கள் வருடத்திற்கு ஒரு முறையாவது

நுவரெலியா செல்ல ஆசைப்படுகின்றனர். அழகான பூஞ்சோலைகள் இயற்கைக் காட்சிகள் என அந்நகர் நிறைந்துள்ளது. வெளிநாட்டவர்களும் அழகான நுவரெலியா நகரத்தைச் பார்த்து ரசிக்க எமது நாட்டுக்கு வருகின்றனர்.

பூஞ்சோலைகளை பார்வையிடுவதற்கு வருகை தரும் வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் தமது எமது நாட்டிலிருந்து மலர்களையும் மலர்ச்செடிகளையும் விலைக்கு வாங்கிச் சென்றனர். இவ்வாறான ஆர்வம் உள்நாட்டு உல்லாசப் பயணிகளின் மத்தியிலும் உருவாகியது. காலை வேளையிலும் மலர்கள் பூக்கும். பூக்கும் மலர்களுக்கு என்று ஒரு கூட்டமே உள்ளது. மாலையிலும் மலர்கள் பூக்கும். அதுமட்டுமல்லாமல் இரவிலும் மலர்கள் பூக்கும். மலர்களைப் போல் மலர்ந்த முகங்களை நாளாந்தம் காண வேண்டும் என்ற ஆசை யாரைத்தான் விட்டு வைத்துள்ளது? மலர்ச் செடிகள் மனதுக்கு இதமான அமைதியைத் தருவதால் பூங்காக்கள் எப்போது திறக்கும் என்ற ஆவலில் சிறுவர் மட்டுமின்றி பெரியோர்களும் ஆவலாக உள்ளனர். எமது நாட்டின் மத்தியிலுள்ள மலையகப் பிரதேசங்களை நோக்கி பயணிக்கும் போது பிரதான நகரங்களின் பல இடங்களில் பூங்காக்கள் காணப்படுகினறன. மலர்ச்செடிகளைப் பயிரிட்டு விற்பனை செய்தல் சிறுதொழில் முயற்சியாகவும் தற்போது எமது நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. நாளுக்கு நாள் இவற்றின் வளர்ச்சி அதிகரித்து வருகிறது.

மலர்ச் செடி உற்பத்தியாளர்கள் தமக்குள் சங்கங்களை உருவாக்கி வருகின்றனர். மலர்ச்செடிகளை வளர்ப்போருக்கான சங்கங்கள் பிரதான நகரங்களில் மலர்க் கண்காட்சிகளை நடாத்துகின்றன. பிரதான நகரங்களிலுள்ள சில வர்த்தக நிலையங்களில் மலர்ச் செடிகளை வளர்ப்பதற்குரிய பசளைகள், அவற்றுக்கான பூச்சாடிகள் மற்றும் மலர்ச்செடிகளை கிருமி தொற்றிலிருந்து பாதுகாப்பதற்கான கிருமிநாசினிகள் அவற்றைப் பாதுகாக்கும் மருந்துகள் ஆகியவை விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. சிறப்பான மண் வளத்தைக் கொண்ட எமது நாட்டில் இவ்வாறான சுயதொழில் முயற்சிகளை பாதுகாக்க வேண்டும். சமுர்த்தி ஊக்குவிப்பு நிதி பெறும் குடும்பங்களும் வறிய குடும்பங்களும் மலர்ச்செடிகளை வளர்த்து விற்பனை செய்வதை சுயதொழில் முயற்சியாக மேற்கொண்டு வருகின்றன. மண் வளத்தை நாம் பாதுகாக்க வேண்டும் .

திருட்டுத்தனமான முறையில் மணல் அகழ்வுகள் நாட்டின் ஒரு சில இடங்களில் இடம் பெற்று வருகின்றன. இவை தொடர்பான செய்திகளை ஊடகங்கள் தினந்தோறும் வெளிப்படுத்தி வருகின்றன. மண் வளத்தை நாம் துஷ்பிரயோகம் செய்தால் மனித வாழ்வாதாரம் கேள்விக்கு உட்பட்டு விடும் என்பதையும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். எமது நாட்டின் இயற்கை வளத்தை நாம் ஒன்று பட்டு பாதுகாப்போம்.







படங்கள்: நீர்கொழும்பு தினகரன் நிருபர்





## இயற்கை விவசாயம்

### வாழ்வாதாரமா சேதாரமா? 146



தமிழ்க் கவி பேசுகின்றார்

“மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது, அற்றது போற்றி உணின்” இது திருக்குறள் என்பது அனைவருக்கும் தெரிந்திருக்கும். இவரே இன்னுமொரு குறளில் ‘உணவே மருந்து’ என்றும் கூறியிருக்கிறார். வாழ்க்கைக்கு ஆதாரமே நோயற்ற வாழ்வு தான். மனிதவளம் என்பதும் நோயற்ற மனிதர்களை அதாவது உழைக்கும் வலுவுள்ள மனிதா்களை வைத்துத் தான் கணிக்கப்படுகிறது. அது மூளை வலுவோ தேகவலுவோ. மூளை வலுவுள்ளவனும் தேகவலிமை அற்றிருந்தால் அவனால் பயனேதும் இல்லை.

எனவேதான் எல்லா அரசுகளும் பிறக்கும் முன்பே கருவிலேயே ஒவ்வொரு குழந்தையையும் பாரமெடுத்துக் கவனிக்கிறது. அந்தவகையில் நமது நாட்டிலும் ஒரு பெண் கர்ப்பமானது உறுதி செய்யப்பட்டதுமே அவளுடைய நலனையும் கருவிலுள்ள சிசுவின் நிலையையும் கவனித்துக்கொள்ள வைத்தியத்துறை ஆரம்பிக்கிறது. அவர்களுக்கென மருத்துவ தாதியர் வைத்தியர்கள் விசேட முகாம்களை அமைத்து பரிசோதனைகளையும் தேவையான மருத்துவ காப்பீடுகளையும் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதி உச்சமாக பிரசவ உதவி குழந்தைக்கான நோய்த்தடுப்புகள் என விரிகிறது இந்த நடவடிக்கை.

ஒவ்வொரு குழந்தைக்கும் அது பாடசாலைக்கு செல்லும் வரை பல லட்ச ரூபாக்களை செலவிடவேண்டிய நிலையில் அரசாங்கம் இருக்கிறது. அதன்பிறகும் செலவினம் வேறுவடிவில் தொடரும். இதற்கிடையில் அந்த குழந்தைக்கோ தாய்க்கோ ஏற்படும் சுகக்குறைவுகள் போசாக்குக்குறைவுகள் அனைத்தும் நிறைவு செய்யப்படுகின்றன. இதற்காகவே அரசசார்பற்ற நிறுவனங்களும் “தாய்சேய் நலப்பிரிவு” ஒன்றைக் கொண்டிருக்கிறது. அப்படியிருந்தும் ஏன் வைத்தியசாலைகள் நிரம்பி வழிகின்றன.

ஒருபுறம் நோய்த்தடுப்பில் ஈடுபட்டாலும் மறுபுறம் சுயமான பொருளாதாரக் கொள்கையை நாம் கடைப்பிடிக்கவில்லை. மதுபானக்கடைகள், பீடி சிகரட் போன்ற புகைத்தல்கள். உடலுக்கு ஒவ்வாத உணவு உற்பத்திகள். அடைத்துவரும் உணவுப்பொதிகள் குளிர்பானங்கள் என அநேகமான பொருட்கள் எம்மிடையே வழக்கமான புழக்கத்தில் உள்ளன. இவற்றோடு கூடவே நாம் நமது தட்பவெப்ப நிலைகளை செயற்கையாக மாற்றி குளிர் செய்யப்பட்ட நீரையோ பழங்களையோ குளிர்களியையோ உண்பதை பெருமையோடும் விருப்பத்தோடும் செய்கிறோம். அது மட்டுமல்ல நாம் வாழும் இடங்களையே குளிராக மாற்ற கற்றுக் கொண்டிருக்கிறோம். இயற்கையை அப்படியே ஏற்க எவரும் தயாராக இல்லை. அப்படியிருக்க உணவை மட்டும் அப்படியே ஏற்போமா.



முத்துச்சம்பா அரிசி எமது மண்ணில் விளையும் நெல்லே பார்ப்பதற்கு மிக அழகாக இருக்கும் அதிலிருந்து கலப்புச் செய்து உருவான இனம் ‘பீஜீ லெவன்’ நான்கு மாதங்களுக்கு மேலாக நிலத்தில் நிற்கும் அதுதான் அதன் சிறப்பு. நின்றபடியே நிற்க அதன் தண்டுகள் பலமானவை. இயந்திரங்களை வைத்து அறுவடை செய்ய அது தோதானது. போகப்போக இது வயதைக்குறைத்து வளரக்கூடிய வகையிலும் மாற்றினார்கள் விளைவு என்னவோ அமோகம்தான் ஆனால் எமது நாட்டு நெல்லான முத்துச்சம்பாவை அது அழித்துவிட்டது. முத்துச்சம்பா மட்டுமா பச்சைப்பெருமாள் சீனட்டி, முருங்கைக்காயன், மொட்டைக்கறுப்பன் என அரியவகைகள் இப்போது நம் கையில் இல்லை.

வெறுமனே அறுவடைக்குப்பின் வயற்காட்டில் மேயும் மாடுகளின் சாணமும், அந்தவயலிலேயே முளைத்து சடைத்த எருக்கஞ்செடிகளின் உரமுமாக வளர்ந்த நெல் அழிக்கப்பட்டு செயற்கையான இரசாயன பசளைகளுக்கு மண்ணை பழக்கப்படுத்தி எமது பழக்கத்தையும் மாற்றிக்கொண்டோம். இதேபோல நமது பால் உற்பத்தியும் மாறியது. உணவுகளாக கோதுமை, ஓட்ஸ் போன்ற தானியங்கள் வந்துவிட்டன.

நம் முன்னோர்கள் வாழ்ந்த அந்த வாழ்க்கையை நாம் சில வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்து பார்த்திருக்கிறோம் அது மிகவும் இலகுவானது. செலவு குறைவானது. ஆரோக்கியமானது. இயற்கைப்பசளையில் நெல் விளைந்தது. காய்கறிகளுக்கு இராசயன மருந்துகள் இல்லை. பலவகைப்பட்ட மூலிகைகளை உண்ட பசுக்களின் பால் கிடைத்தது.

தேன் தேவைக்கு மேலாகவே இருந்ததால் கிராமத்து மக்களின் உணவில் சீனி மறக்கப்பட்டது. நோய்க்குக்கூட சித்த ஆயுர்வேத மருந்துகளில் நாட்டம் கொண்டிருந்தோம்.

‘அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும்’ என்றொரு பழமொழி உண்டு. அது போல ஆங்கில மருத்துவம் உடனடி சுகம் தரும். சித்த ஆயுர்வேத மருத்துவம் நின்று பலன்தரும் என்பது பலருக்கும் தெரியும். அதை நாம் போர்க்காலத்தில் மிகவும் அனுபவித்தோம் மிகக் குறைந்த அளவிலேயே சித்த வைத்தியர்கள் இருந்தாலும் சில வைத்திளர்களுடைய பெயர் புலம்பெயர் நாடுகள் வரை பரவும் வண்ணம் அவர்களுடைய மருத்துவம் இருந்தது. விசேடமாக வைத்தியசாலையில் அறுவைச்சிகிச்சை செய்ய வேண்டும் என அறிவுறுத்தப்பட்ட ஒரு நோயை உடையார் காட்டிலிருந்த ஒரு வைத்தியர் ஒரு மண்டல மருந்தில் போக்கினார். அதேபோல கிளிநொச்சி, சாஸ்த்திரி கூழாங்குளம் பம்பைமடு ஒட்டகப்புலம். கோரக்கன் கட்டு என சொல்லக்கூடிய அளவில் நாட்டு வைத்தியர்கள் மிக திறமையாக மருத்துவம் செய்தனர்.

இலங்கை மூலிகை வைத்தியத்தில் ஒரு நல்ல இடத்தை வைத்திருக்கிறது. இன்று சந்தையில் விற்பனையாகும் தலைவலி மருந்துகள் சர்வரோக நிவாரணிகள் தைலங்கள் என்பவை உலகப்புகழ் பெற்றவை. உதாரணமாக தென்னிந்தியாவிலிருந்து வரும் தைலங்கள் களிம்புகளை விட உள்நாட்டு உற்பத்தியான தைலம் மிக அருமையான மருந்து நுளம்புகளைக்கூட அண்டவிடாது. இதேபோன்று இன்னும் பல மூலிகை மருந்துகள் பற்றி நான் சொல்ல முடியும்.

25ஆம் பக்கம் பார்க்க...

சுகாதார அமைச்சு

SPMC அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம்

## பண்டங்கள் மற்றும் சேவைகளுக்காக வழங்குனர்களை பதிவு செய்தல் – 2021

2021 ஆம் ஆண்டில் கீழே குறிப்பிட்டுள்ள பண்டங்கள் மற்றும் சேவைகளுக்காக அரச மருந்தாக்கற் உற்பத்தி கூட்டுத்தாபனத்துடன் பதிவு செய்ய விரும்பும் அரசாங்க திணைக்களங்கள், அரசாங்கத்திற்கு உரித்தான வியாபார முயற்சி, அரசாங்க கூட்டுத்தாபனங்கள், புகழ்வாய்ந்த வழங்குனர்கள், உள்ளூர் முகவர்கள், உற்பத்தியாளர்கள், விநியோகஸ்தர்கள், வியாபார அமைப்புக்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
அனைத்து விண்ணப்பங்களும் இந்த அறிவித்தலின் இறுதியில் வழங்கப்பட்டுள்ள உருமாதிரி படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்படல் வேண்டும்.

**A – பண்டங்களின் வழங்கல்:**

01. அலுவலக காகிதாதி மற்றும் கணனி காகிதாதி
02. மின்னியல் பண்டங்கள்
03. இலத்திரனியல் பண்டங்கள்
04. கட்டிட பொருட்கள் மற்றும் ஹாட்வெயார் பொருட்கள்
05. உருக்கு தளபாடம்
06. அலுவலக உபகரணம் (கணனிகள் இன்னும் பலவும்)
07. கணனி மென்பொருள்
08. Local Software & Website Creators
09. ஆய்வுகூட உபகரணம் மற்றும் உதிரிப்பாகங்கள்
10. ஆய்வுகூட இரசாயனங்கள்
11. Plastic containers, plastic spoons, corks, screw & press-on caps and waddings (food grade)
12. Polythene including polythene bags, printed cellulose film, printed aluminium foil, aluminium bags and printed shrink sleeves (food grade)
13. PVC foil/PVD foil
14. PVC adhesive tapes
15. பொதியிடுவதற்கான ஒட்டும்பசை
16. சீருடைகள் மற்றும் மேஸ்கள் இன்னும் பலவற்றிற்காக ஆடை பொருட்கள்
17. துவாய்கள் (பெரியது மற்றும் சிறியது)
18. சப்பாத்துக்கள் - கறுப்பு மற்றும் வெள்ளை (கன்வெஸ்)
19. மோட்டார் உதிரிப்பாகங்கள்
20. டயர்கள் மற்றும் ரியுப்புக்கள்
21. V பெல்டுக்கள்
22. நியுமட்டிக் உதிரிப்பாகங்கள்
23. Fire Extinguishers, safety equipment, gas masks, goggle, rubbery gloves etc.
24. Cloth masks and cloth gloves etc.
25. Soap, detergents and cleaning materials (brooms, mops, washing powder, teepol etc)
26. பால் மா, தேயிலை, பிஸ்கட்ஸ்
27. Sugar (Food grade)/Pure white refined sugar (for pharmaceuticals manufacturing)
28. சமைக்கப்பட்ட உணவு வழங்குனர்கள் (மதிய உணவு, காலை உணவு மற்றும் இரவு உணவு)
29. Ethyl Alcohol 96%
30. Pharmaceutical Raw materials (ex-stock suppliers)
31. Pharmaceutical Reference standards
32. வெற்று கண்ணாடி போத்தல்கள்
33. Printed corrugated cartons
34. Printed box board cartons
35. அச்சடிக்கப்பட்ட பொருட்கள் (லேபல்கள், சிறிய பிரசுரங்கள், ஸ்டிக்கர்ஸ் இன்னும் பலவும்)
36. வெல்டிங் உபகரணம் மற்றும் துணைபொருட்கள்
37. வளிச்சீராக்கிகளுக்கான உதிரிப் பாகங்கள்
38. இயந்திராதி உபகரணம் மற்றும் உதிரிகள்
39. துருப்பிடிக்காத உருக்கு போல்டுக்கள் மற்றும் நட்டுக்கள்
40. பெயாரிங்ஸ்
41. Oil seal & "O" rings
42. மோட்டார் கார்களுக்கான பட்டரிகள்
43. Printed Aluminium foils
44. Printed ribbon Toner/cartridges
45. Laboratory reagents and glassware
46. Sticker label Rolls
47. Silica gel individual sachets and sachets in reel form

**B – Supply of services**

01. மோட்டார் வாகனங்களை பழுதுபார்த்தல்
02. வாகனங்களை சேவிஸ் செய்தல்
03. Tinkering, spray painting, body construction and upholstery work of vehicles
04. கட்டிட நிர்மாணம் மற்றும் புதுப்பித்தல்
05. பண்டங்களை எடுத்துச் செல்லல்
06. பயணிகளை எடுத்துச் செல்லல்
07. வேன்கள், லொறிகள், கார்கள் இன்னும் பலவற்றை வாடகைக்கு எடுத்தல்
08. பொருட்களை அகற்றல் மற்றும் ஏற்றல்
09. காப்புறுதி
10. களஞ்சியப்படுத்துவதற்காக கொள்கலன்களை வாடகைக்கு அமர்த்துதல்
11. Electrical installation and repairs
12. Pipe, drainage and allied service
13. தொழிலாளர் ஒப்பந்தங்கள்
14. மர வேலை மற்றும் பான்ரி கப்போட் வேலை
15. தையல் வேலை
16. அச்சடித்தல் கட்டுதல்
17. வருடாந்த அறிக்கைகளை வடிவமைத்தல் மற்றும் அச்சடித்தல்
18. பாதுகாப்பு மற்றும் தீயணைக்கும் உபகரணங்களை பழுதுபார்த்தல் மற்றும் சேவிஸ் செய்தல்
19. அலுவலக உபகரணங்களை பழுதுபார்த்தல் மற்றும் சேவிஸ் செய்தல்
20. Repair and service of central air-conditioning systems, split-type air-conditioners and refrigerators.
21. வாகன வளிச்சீராக்கல் இயந்திரங்களை பழுது பார்த்தல் மற்றும் சேவிஸ் செய்தல்
22. ஆய்வுகூட உபகரணங்களை பழுதுபார்த்தல் மற்றும் சேவிஸ் செய்தல்
23. மோட்டார் ரீவைண்டிங்
24. Steel fabrications, welding, metal filling, machine and fitting work
25. கணனிகள் மற்றும் உதிரிப்பாகங்களை பழுதுபார்த்தல் மற்றும் சேவிஸ் செய்தல்
26. மின்னியல் உபகரணங்களை பழுதுபார்த்தல் மற்றும் சேவிஸ் செய்தல்
27. இலத்திரனியல் உபகரணங்களை பழுதுபார்த்தல் மற்றும் சேவிஸ் செய்தல்
28. தராசுகளை பழுதுபார்த்தல் மற்றும் சேவிஸ் செய்தல்
29. கட்டிடங்களுக்கு பெயிண்ட் பூசுதல்
30. பீடை ஒழிப்பு
31. சுகாதார துப்புரவேற்பாட்டுச் சேவைகள்
32. வாடகைக்கு களஞ்சியசாலை (இரத்மலானைக்கு அருகாமையில்)
33. Aluminium fabricators
34. உலோகம் மற்றும் துருப்பிடிக்காத உருக்கு வேலைகள்
35. சிவில் மற்றும் குழாய் வேலைகள்
36. தேநீர் வேளைக்கான சிற்றுண்டிகளை வழங்கல்

### மாதிரி படிவம்

**2021 ஆம் ஆண்டிற்காக வழங்குனரொருவராக பதிவு செய்தலுக்கான விண்ணப்பம்**

1. வியாபாரப் பெயர் மற்றும் முகவரி :
2. பதிவிலக்கம் மற்றும் திகதி :
3. உரிமையாளர்களின் பெயர் மற்றும் முகவரி :
4. நீங்கள் பதிவு செய்ய விரும்பும் அம்சம் :
5. தொலைபேசி மற்றும் தொலைநகல் இலக்கங்கள்:
6. வங்கியின் பெயர் மற்றும் கணக்கிலக்கம் :
7. 2020 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட கம்பனிகள், அரசாங்க திணைக்களங்கள், நியதிச்சட்டசபைகள்/ கூட்டுத்தாபனங்களின் பட்டியல் :
8. கூட்டுத்தாபனத்திற் வழங்கப்படும் கடன் வசதி :

காலப்பகுதி: ........................ பெறுமதி: ...........................
திகதி:: .............................. கையொப்பம்: ..................... பதவி: .................

தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ''வழங்குனர்களை பதிவு செய்தல்-2021'' என குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 2020.11.05 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் தலைவருக்கு அனுப்பப்படல் வேண்டும். ஒவ்வொரு அம்சத்திற்கும் பதிவு செய்தல் கட்டணமாக மீளளிக்கப்படாத வரவுத் தொகையாக 1,000 ரூபாவை காசோலை வடிவில் ''அரச மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபனம்'' என்ற பெயரில் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

தனித்தனியான விண்ணப்பங்கள் ஒவ்வொரு வகுதி பண்டங்கள்/ சேவைகளுக்கு தயாரிக்கப்படல் வேண்டும். ஆனால் அனைத்தும் ஒரு தபாலுறையிலேயே அனுப்பப்படலாம்.

மேலதிக விபரங்கள் ஏதுமிருப்பின், 2637574/ 2635353 ஆகிய தொலைபேசி இலக்கங்களூடாக திட்டமிடல் மற்றும் பெறுகைக்கான பிரதி பொது முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**அரச மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபனம்,**
**இல.: 11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை,**
**கந்தவள தோட்டம்,**
**இரத்மலான.**



## ஈ.டி.ஐ. பினான்ஸ் எல்டிடீ

**மீட்கப்படாத அடகு தங்க ஆபரணங்களின் பகிரங்க ஏல விற்பனை**

ஈ.டி.ஐ. பினான்ஸ் எல்டிடீ இன் பின்வரும் கிளைகளில்,
2019.04.30, 2019.05.31, 2019.06.30 மற்றும் 2019.07.31
திகதிகள் வரை அடகு வைக்கப்பட்டு 2020.09.25 அன்று அல்லது
அதற்கு முன்னர் மீட்கப்படாத அல்லது புதுப்பிக்கப்படாத தங்க ஆபரணங்கள்
தலைமை அலுவலகத்தில் பகிரங்க ஏல விற்பனை மூலம் விற்கப்படும்.
ஒவ்வொரு நாளும் மு.ப.9.30 மணிக்கு ஏல விற்பனை ஆரம்பமாகும்.


| அடகு வைக்கப் பட்ட திகதி | அடகு வைக்கப்பட்ட கிளைகள் | ஏல விற்பனை நடைபெறும் இடம் மற்றும் திகதி |
|---|---|---|
| 2019.04.30 2019.05.31 2019.06.30 2019.07.31 வரை | அம்பாறை, அம்பலாங்கொடை, பதுளை, பண்டாரவளை, எஹலியகொட, எம்பிலிப்பிட்டிய, காலி, திஸ்ஸமஹாராம, கேகாலை, குருநாகல், மாத்தறை, மொனராகலை, வெலிமடை, இரத்தினபுரி, அவிசாவளை, பம்பலப்பிட்டி, பத்தரமுல்ல, தெமட்டகொட, கம்பஹா, கிராண்ட்பாஸ், ஹோமாகம, ஹொரண, களுத்துறை, கடவத்தை, கடுவலை, கந்தான, கிரிபத்கொட, கொட்டாஞ்சேனை, கொட்டாவ, பிலியந்தலை, மஹரகம, மலே வீதி, மருதானை -143, மருதானை -435, புறக்கோட்டை, மொறட்டுவை, கல்கிசை, நீர்கொழும்பு, நுகேகொடை, பாணந்துறை, வோர்ட் பிளேஸ், (கொழும்பு 07), பொரளை, (டீ.எஸ்.எஸ். மாவத்தை) வெள்ளவத்தை -307, வெள்ளவத்தை -99, செட்டியார்தெரு, மத்துகம, தம்புள்ளை | இல.114, வோர்ட் பிளேஸ், கொழும்பு -07 பொரளை கிளை 28-09-2020, 29-09-2020, 30-09-2020, 02-10-2020, |

இந்த ஏல விற்பனையில் கலந்துகொள்ளும் அனைவரும், தமது தேசிய அடையாள அட்டையை சமர்ப்பிக்க வேண்டும்.
மேலதிக அறிவித்தல்களின்றி குறித்த ஏல விற்பனையை இரத்துச் செய்யும், ஒன்றிணைக்கும் அல்லது பிற்போடும் உரிமையை, குறித்த நிறுவனமானது தன்வசம் வைத்துள்ளது.

**இல. 114, வோர்ட் பிளேஸ், கொழும்பு -07.**
**தொலைபேசி இலக்கம்: 0117534200, பெக்ஸ் இலக்கம்: 0112674435**



BE BETTER INFORMED!




News you can trust now free on your mobile phone.

Dinamina Daily News Thinakaran

VISIT
apps.lakehouse.lk

DOWNLOAD TODAY!

AVAILABLE AT

LAKE HOUSE



## மக நெகும வீதி கட்டுமான உபகரண நிறுவனம்

මග නැගුම MNRCE

MNRCE இன் கொள்வனவு குழுவின் தலைவரினால் கீழே விற்பனைக்குள்ள வாகனங்கள் மற்றும் இயந்திரங்களுக்காக ஆர்வமுள்ள ஏலதாரர்களிடமிருந்து சீல் செய்யப்பட்ட விலைமனுக்களுக்கான அழைப்புக்கோரல்.

| இல. | இடம் | வாகன இல. | வகை | மாதிரி | வருடம் | சாலை | திருப்பப் பெறக்கூடிய வைப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | பேலியகொட | 01) LF - 7249 | Tipper - Leyland | Commet | 2008 | A | 10,000.00 |
| | | 02) LF - 7251 | Tipper - Leyland | Commet | 2008 | A | 10,000.00 |
| | | 03) LG - 2392 | Tipper - Leyland | Commet 1613 | 2008 | A | 10,000.00 |
| | | 04) LJ - 3847 | Tipper - Leyland | Commet 1613 | 2011 | A | 10,000.00 |
| | | 05) LJ - 3861 | Tipper - Leyland | Commet 1613 | 2011 | A | 10,000.00 |
| | | 06) MPV - 002 | Paver - Mitsubishi | MF 24 | - | A | 10,000.00 |
| | | 07) MRV - 009 | Double Drum Roller - Sakai | TW 500P | 2001 | A | 10,000.00 |
| | | 08) MRV - 020 | Double Drum Roller - Hamm | HD 90 | - | A | 5,000.00 |
| | | 09) MAC - 001 | Air Compressor - Air Man | PDS 175 | 1987 | A | 2,500.00 |
| | | 10) MAC - 002 | Air Compressor - Air Man | PDS 175 | 1987 | A | 2,500.00 |
| | | 11) MAC - 010 | Air Compressor - Air Man | PDS 175 | 1987 | A | 2,500.00 |
| | | 12) JP - 6395 | Jeep - Mahindra Bolero Invader | | 2005 | A | 5,000.00 |
| | | 13) SF - 6911 | Hand Tractor - Sunfaang (5195 N) | GN 12 | 2008 | A | 5,000.00 |
| 02. | அங்குலான | 14) MMG - 106 | Motor Grader - Changlin | PV 165 H | 2004 | B | 35,000.00 |
| | | 15) MMG - 107 | Motor Grader - Changlin | PV 165 H | 2004 | B | 35,000.00 |
| | | 16) MMG - 109 | Motor Grader - Changlin | PV 165 H | 2004 | B | 35,000.00 |
| 03. | கனேவல்பொல | 17) MMG - 101 | Motor Grader - Changlin | PV 165 H | 2004 | C | 35,000.00 |
| | | 18) MMG - 102 | Motor Grader - Changlin | PV 165 H | 2004 | C | 35,000.00 |
| | | 19) MMG - 108 | Motor Grader - Changlin | PV 165 H | 2004 | C | 35,000.00 |
| | | 20) MMG - 110 | Motor Grader - Changlin | PV 165 H | 2004 | C | 35,000.00 |
| | | 21) MMG - 111 | Motor Grader - Changlin | PV 165 H | 2004 | C | 35,000.00 |
| | | 22) MEX - 112 | Excavator - Hitachi | UH07-5 | 2000 | C | 25,000.00 |
| | | 23) SF - 6912 | Hand Tractor - Sunfaang (5195 N) | GN 12 | 2008 | C | 5,000.00 |
| | | 24) MMG 112 | Motor Grader - Changlin | PV 165 H | 2004 | C | 35,000.00 |
| 04. | அநுராதபுரம் | 25) MMG - 103 | Motor Grader - Changlin | PV 165 H | 2004 | D | 35,000.00 |
| | | 26) MMG - 104 | Motor Grader - Changlin | PV 165 H | 2004 | D | 35,000.00 |
| 05. | வீரவில (ஹம்பந்தோட்டை) | 27) MMG - 105 | Motor Grader - Changlin | PV 165 H | 2004 | E | 35,000.00 |

**பார்வையிடக்கூடிய காலம்**

**2020.09.14 முதல் 2020.10.05 (மு.ப 9.00 முதல் பி.ப 4.00 ) (செப்டெம்பர் 18 தவிர்த்து)**
**வாரத்தில் 5 நாட்கள் மட்டுமே** (சனி, ஞாயிறு மற்றும் போய தினங்கள் தவிர)

**பார்வையிடும் இடங்கள்**
1. சாலை A - மக நெகும தலைமையகம், இல. 81/4, புதிய நுகே வீதி, பேலியகொட, களனிய.
2. சாலை B - RDA வேலைத்தளம், புகையிரத நிலைய வீதி, அங்குலான, மொறட்டுவ
3. சாலை C - மக நெகும நிலக்கீழ் ஆலை, கனேவல்பொல, கெக்கிராவ
4. சாலை D - RDA வேலைத்தளம், தகய்யாகம சந்தி, அநுராதபுரம்
5. சாலை E - மக நெகும நிலக்கீழ் ஆலை - சேதவத்தை, வீரவில, ஹம்பந்தோட்டை

**திருப்பிச் செலுத்த முடியாத வைப்புத்தொகை மற்றும் விலைமனு ஆவணங்களை வழங்குதல்**
திரும்பசெலுத்தப்படாத ஏலக்கட்டணம் ரூபா. 2,000/- 14.09.2020 முதல் செலுத்தலாம். ஏல ஆவணங்களை தலைமை காரியாலய கொள்வனவு பிரிவில் பரிசோதிக்கலாம். (முகவரி கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.)

**கேள்விப்பத்திரம் திறப்பு**
சீல் செய்யப்பட்ட விலைமனு அழைப்பை பொது முகாமையாளர், மக நெகும வீதி கட்டுமான உபகரண நிறுவனம், இல.81/4, புதிய நுகே வீதி, பேலியகொட, களனிய. என்ற முகவரிக்கு பதிவுத் தபால் அல்லது பொது முகாமையாளர் அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் **06.10.2020 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு** முன் செலுத்தப்பட வேண்டும். ஏலங்களைக் கொண்ட உறை மேல் இடது பக்க மூலையில் "**விற்பனைக்கு அகற்றும் வாகனங்கள மற்றும் இயந்திரங்கள்**" என்று குறிக்கப்பட வேண்டும். கேள்விப்பத்திரம் திறக்கப்படும் போது ஏலதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் இருக்க அனுமதிக்கப்படுவார்கள்.

**முன் ஏலக் கூட்டம்**
முன் ஏலக் கூட்டம் 2020 செப்டம்பர் 29 ஆம் தேதி காலை 11.00 மணிக்கு நடைபெறும்.
போக்குவரத்து முகாமையாளரிடமிருந்து மேலதிக தகவல்களையும் ஆய்வு நேரத்தையும் 071-6847103 என்ற இலகத்தை தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்

பெறப்பட்ட எந்த சலுகைகளையும் ஏற்றுக்கொள்ள அல்லது நிராகரிக்கும் உரிமையை MNRCE யை கொண்டுள்ளது.

பொது முகாமையாளர்
**மக நெகும வீதி கட்டுமான உபகரண நிறுவனம்**
இல.81/4, புதிய நுகே வீதி, பேலியகொட, களனிய.
தொலைபேசி: 011-2914121-2, தொலைநகல் 011-2914214
மின்னஞ்சல் – mnrcesupply@yahoo.com

சற்றே நீண்ட சிறுகதை

# சைக்கோ

பாலா. சங்குப்பிள்ளை

அந்த பாலத்தினருகே ஒரே கூட்டமாக இருந்தது. அப்போது நேரம் காலை ஏழு மணியிருக்கும். மலைக்கு வேலைக்கு போவதற்காக வந்த தோட்டத் தொழிலாளர்கள் அப்படியே பாலத்தினருகே சென்ற நிலையில் அதிர்ச்சியில் நின்று விட்டார்கள்.

அப்போது வேகமாக வந்த அந்த பொலிஸ் ஜீப்பிலிருந்து ஐந்தாறு பொலிஸ்காரர்களுடன் இன்ஸ்பெக்டர் பார்த்திபன் கீழே இறங்கி வேகமாக பாலத்தை நோக்கி நடந்தார். பாலத்தினடியிலே மிதந்து கொண்டிருந்த அந்த மனித உடலையே சற்று நேரம் பார்த்தவர் உடனடியாக உத்தரவுகளைப் பிறப்பித்தார்.

பிரேதம் மேலேகொண்டு வரப்பட்டு தரையில் கிடத்தப்பட்டது. அது ஓர் ஆணின் சடலம். தலைஅடையாளம் தெரியாதளவுக்கு சிதைக்கப்பட்டிருந்தது. பார்க்க கொடூரமாக இருந்தது. பார்த்திபன் பொலிஸ்காரரொருவரை விட்டு உடலை பரிசோதனை செய்ய உத்தரவிட்டவர் சட்டென சிந்தனையில் ஆழ்ந்தார். மூன்று மாதங்களுக்கு முன் தலைமட்டும் முற்றாக எரிந்த நிலையில் ஒரு ஆண் பெண்ணின் சடலங்கள் பக்கத்து தோட்டத்தில் மூங்கில் தோப்பு சுடுகாட்டில் கண்டெடுக்கப்பட்டன. அவர்களைப் பற்றிய எந்தத் தகவலும் இதுவரை கிடைக்கவில்லை. பிணவறையினுள் இருக்கும் அவர்களை தேடி யாருமே வரவில்லை. இந்த நிலையில் இப்போது அதே முறையில் தலை சிதைந்த அதே பாணியில் மற்றுமொரு சடலம்.

“சேர்... கால்சட்டை பொக்கெற்றுல இந்த துண்டுப் பேப்பர் இருந்தது... நனைஞ்சு ஊறிப்போயிருந்ததாலும் எழுத்துக்கள் ஓரளவு விளங்குது...”

பார்த்திபன் மிக கவனமாக அந்த பேப்பரை வாங்கினார். அதுவொரு பற்றுச் சீட்டு, சேலை ஒன்று வாங்கப்பட்டதற்கான சீட்டு.

அதில் புடவைக்கடையின் பெயரும் வாங்கியவரின் பெயரும் இருந்தது. “மனோகர்” இதுதான் வாங்கியவரின் பெயர் – பார்த்திபன் அடுத்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை மனதில் அசைபோட்டவாறு பொலிஸ் உத்தியோகஸ்தர்களை பார்த்தார்.

சுகுமார் கண்டியிலிருந்து பதுளை நோக்கி ஓடிக் கொண்டிருந்த கொழும்பு புகையிரதத்தில் யன்னல் பக்கமாக அமர்ந்திருந்தான். அப்போது நேரம் இரவு மணி பதினொன்று தலவாக்கலை போய்ஸ் டவுனிலிருக்கும் தன் அண்ணன் வீட்டில் தங்கி காலையில் புறப்பட்டு நுவரெலியா போக வேண்டும். அவன் வெளியே தெரியும் இருட்டையே பார்த்துக் கொண்டிருந்தான்.

“என்ன நீங்க எதுக்காக இதெல்லாம் வாங்கிட்டு வந்தீங்க.... எனக்காக இவ்வளவு செலவு செய்யிறது எனக்கு பிடிக்கவே பிடிக்காது... இதெல்லாம் வீண் செலவுத் தானே....”

“கௌசல்யா நாம எவ்வளவு காலமா பழகுறோம். உங்களுக்கு நான் செய்யாம யார் செய்யிறதாம்.”

“இல்லையில்லை.... நான் அதுக்காக சொல்லலை. நீங்கல்லாம் எனக்கு எவ்வளவோ உதவி செஞ்சுருக்கீங்க.... அண்ணா திடீர்ன்னு மரணமான நிலையில என்னசெய்யிறதுன்னு தடுமாறிபோயிருந்த நிலையில் அம்மாவுக்கும் எனக்கும் எல்லாமாயிருந்து காரியங்களை செஞ்சீங்க. இதுக்காக என்ன கைமாறு செய்யிறதுன்னு தெரியாம தவிச்சிக்கிட்டிருக்கிற நிலையில் நீங்க எனக்காக இவ்வளவுசெலவு செய்யிறதை என்னால் ஏத்துக் கொள்ள முடியலை... என்னால யாருக்கும் நஷ்டம் ஏற்டக்கூடாது....”

“கைமாறெல்லாம் தேவையில்லை. இது என்னோட கடமை. அதோட உங்களை அறிமுகம் செஞ்சி வச்ச மணிமாறனுக்குத்தான் முதலில் நன்றி சொல்லணும்..”

“நானும் கேட்கணும்னு நினைச்சேன். மணிமாறனை ரொம்ப நாளா காண முடியலையே... கடைசியா பார்த்தப்ப ரொம்ப சோர்வா சோகமா இருந்தாரே....”

“மணிமாறன் என்னோடதான் கண்டியில ஒண்ணா வேலை செஞ்சான். ரெண்டுமூணு மாசமா ஒழுங்கா வேலைக்கு வாரதில்லை. அப்புறம் கொழும்புல இன்னும் அதிகமான சம்பளத்துக்கு வேலைக்குப் போறதா சொல்லிட்டு போனான். இருந்திருந்து போன் போடுவான்...”

புகையிரதம் சட்டென ஏதோவொரு நிலையத்தில் நிற்கவே சிந்தனை கலைந்தவன் மெதுவாக இருக்கையை விட்டு எழுந்தான். தண்ணீர் போத்தலுடன் கதவருகே சென்றவன் தண்ணீரை மடமடவென குடித்தான்.

மனோகர் மணிமாறனுடன் ஒன்றாக வேலை செய்த நிலையில் தொடர் விடுமுறைகள் வந்தால் அவர்கள் எங்காவது சுற்றுப்பிரயாணம் மேற்கொள்வார்கள். இந்த நிலையில் தான் சில மாதங்களுக்கு முன் மணிமாறன் அவனின் இன்னொரு நண்பனான செந்திலின் வீட்டிற்கு கூட்டிச் சென்றான். செந்தில் நுவரெலியா மின்சார காரியாலயத்தில் வேலை செய்தான். பகுதி நேரத்தில் வீட்டினருகே இருந்த நிலத்தில் விவசாயம் செய்து வந்தான். அவனுக்கு அப்பா இல்லை. அம்மா லட்சுமி. தங்கை கௌசல்யா. அவள் தனியார் வர்த்தக வங்கியொன்றில் வேலை செய்து வந்தாள். நல்ல சிவந்த நிறம்... நீண்ட அடர்த்தியான கூந்தல்... முகத்தில் எந்நேரமும் மலர்ச்சி... உதட்டில் புன்னகை... கலகலப்பான பேச்சு... எளியோருக்கு உதவி செய்யும் குணம்... உண்மையிலேயே அவள் ஒரு நடமாடும் அழகுச் சிலை....

செந்திலும், தாய் லட்சுமியும் விருந்தோம்பலில் சிறந்தவர்கள். கௌசல்யா அவர்களுக்கும் மேலானவள். கலகலவென சிரித்து பேசுவாள்.

மணிமாறனைப் போலவே சுகுமார் மற்றும் மனோகரிடமும் சமமாக பழகியதுடன் விதவிதமாக உணவு தயாரித்து கொடுத்தாள். அந்த இரண்டு நாட்களும் அவர்கள் வாழ்வில் மறக்க முடியாத வசந்த காலமாக இருந்தது. அதற்காக மணிமாறனுக்கு நன்றி சொன்னார்கள்.



மறுபடியும் கண்டிக்கு வேலைக்காக வந்த பின்னும் சுகுமாரினால் கௌசல்யாவை மறக்கமுடியவில்லை. கைபேசியில் தொடர்பு கொள்ள யோசித்து அவள் ஏதாவது சொல்லிவிடுவாளோ என்ற பயத்தில் பேசாமல் இருந்து விடுவான். சில நாட்கள் சென்றபின் தைரியத்துடன் மறுபடியும் தொடர்பு கொண்டான்.

“அட நீங்களா... இப்பத்தான் உங்களுக்கு எங்களை யெல்லாம்... ஞாபகம் வருதாக்கும்...”

“இல்ல....நீங்க போல வேலை செய்யிறீங்க... என்னத்துக்கு தொந்தரவுன்னு தான் பேசாம இருந்தேன்....”

“அப்படியெல்லாம் இல்லை... உங்களோட நண்பர் மனோகர் போனவுடனேயே எனக்கு கைபேசியில பேசினாரே... உங்களைப் பற்றி விசாரிச்சேன் சொல்லலையா...?

சுகுமாருக்கு சற்று அதிர்ச்சியாகத்தானிருந்தது. ஏனென்றால் அவன் இதுவரை எதுவுமே சொல்லவில்லை. அப்படியானால் அவன் அவளை கையகப்படுத்த நினைக்கிறானா... விடக்கூடாது அவள் எனக்குரியவள். எந்தக் காரணம் கொண்டும் யாருக்காகவும் அவளை விட்டுக்கொடுக்க மாட்டேன்...”

அப்புறம் – சுகுமார் அவளிடம் அடிக்கடி பேசினான். நேரம் போவது தெரியாமல் பேசினான். இந்த நிலையில் தான் மனோகர் அவனை காரியாலயம் முடிய மாலை நேரத்தில் லேக் சைடில் உள்ள ஓர் உணவு விடுதிக்கு அழைத்துச் சென்றான்.

“சுகுமார்... உனக்கே தெரியும்... என்னோட ஒரே பாடசாலையில படிச்ச காரணத்துக்காக உன்னை நான் வேலை செய்யிற இதே கம்பெனியில் உதவி கணக்காய்வாளராக சேர்த்து விட்டதுல இருந்து எவ்வளவுவோ உதவி செஞ்சிருக்கேன். இதுவரையில் நான் உதவின்னு எதுவும் உன் கிட்ட கேட்டதில்லை. இப்ப கேட்கிறேன். நான் கௌசல்யாவை மனசார நேசிக்கிறேன். அதுக்கு நீ தான் உதவி செய்யணும். என் காதலை எடுத்துச் சொல்லணும்..”

சுகுமார் அதிர்ச்சியுடன் அவனைப் பார்த்தான்.

“கௌசல்யா... உன்னை நேசிக்கிறாளா... இதைப் பத்தி உன் கிட்ட சொன்னாளா?

“இல்லை... சொல்லலை. ஆனா கைபேசியில நேரம் போவது தெரியால பேசுவா... அவளோட சிரிப்பு இனிமையான குரல் என் மனசுல ஆழமா பதிவாயிடுச்சி. அவ இல்லாம என்னால வாழவே முடியாது. என் ஆசை நிறைவே உன்னோட ஆதரவும் ஆசீர்வாதமும் தேவை...”

சுகுமாரால் எதுவுமே பேச முடியவில்லை. முடியும் என்றோ முடியாதென்றோ அவனால் சொல்ல முடியவில்லை. ஏனென்றால் – அவனால் அவளை யாருக்காகவும் விட்டுக் கொடுக்க முடியாது.

இரண்டு மாதங்கள் சென்றன. ஒரே காரியாலயத்தில் ஒன்றாக வேலைசெய்தாலும் மனோகரை பார்ப்பதையோ சந்திப்பதையோ சுகுமார் தவிர்த்தான். நாட்கள் செல்லச் செல்ல மனோகர் மேல் சுகுமாருக்கு அடக்க முடியாத ஆத்திரமும் கோபமும் ஏற்பட்டது. ஏனென்றால் மனோகர் கௌசல்யாவிடம் நாள் தவறாமல் தொடர்ந்து மணிக்கணக்கில் பேசுவதை விடவில்லை. மனோகர் கௌசல்யாவுக்கு இணைப்பை ஏற்படுத்தும் போது அவள் மறைக்காமல் அதைப் பற்றி சுகுமாரிடம் சொல்லி விடுவாள்.

இந்த நிலையில் தான் – அந்த சம்பவம் நடந்தது. கௌசல்யா பதற்றத்துடன் கதறியழுதவாறு சுகுமாருக்கு கைபேசியில் அழைப்பை ஏற்படுத்தினாள். அப்போது காலை ஏழு மணி.

“ஐயோ... என்ன சொல்லுவேன்... என்னோட அண்ணன்... காலையில ஆறுமணிக்கு கிழங்குக்கு மருந்து அடிக்கணும்னு புறப்பட்டுப் போனாரு... நான் தான் தேநீர் ஊற்றி கொடுத்தேன். இப்கொஞ்ச நேரத்துக்கு முன்னாலத்தான் தோட்டத்துல இருந்து பேசினாங்க... அண்ணன் தோட்டத்துல இருக்கிற கிணத்துல விழுந்து கிடக்கிறாராம். அங்க வேலை செய்யிறவங்க வழமையா போறதைவிட கொஞ்சம் நேரம் கழிச்சித்தான் போயிருக்காங்க...

எனக்கு ரொம்ப பயமாயிருக்கு... நீங்க கொஞ்சம் சீக்கிரமா வரமுடியுமா...”

சுகுமார், தாமதிக்கவில்லை. அவளோட நெருக்கமாக பழக இதைவிட வேறு வழியில்லை. எனவே அவனுக்கு பழக்கமான நண்பனின் காரை எடுத்துக்கொண்டான் காரியாலயத்துக்கு விடுப்பு அறிவித்து விட்டு உடனடியாக புறப்பட்டான். காரை புயல் வேகத்தில் செலுத்தியவன் மூன்றரை மணித்தியாலயத்தில் நுவரெலியாவை அடைந்தான். வீட்டில் யாரும் இல்லை. எல்லோரும் வைத்தியசாலைக்கு போயிருப்பதாக கேள்விப்பட்டவன் தாமதமில்லாமல் புறப்பட்டான். அங்கே – கௌசல்யாவின் தாய் மயங்கிய நிலையில் இருந்தாள். கௌசல்யா அழுதழுது முகம் சிவந்து வீங்கியிருந்தது. சுகுமாரைக் கண்டவுடன் ஓடி சென்று அவன் கரங்களை பற்றியவாறு அழத்தொடங்கினாள்.

“ஐயோ... ஐயோ... அண்ணா கிணத்துக்குள்ள விழும் போதுதலை அடிப்பட்டிருச்சாம். கிணறு கொஞ்சம் ஆழம். தண்ணியும் கொஞ்சமா இருந்திருக்கு. வேலைக்கு ஆட்கள் வரநேரமாகவே இவரே நேரடியா வேலை செய்ய ஆரம்பிச்சிருக்காரு. அப்பத்தான் தவறி விழுந்துட்டதா பேசிக்கிறாங்க தலையில பலமா அடிபட்டதால எதுவும் சொல்ல முடியாதுன்னு டொக்டர்மாருங்க சொல்லிட்டாங்க...” “இங்க பாருங்க சௌசல்யா... இனிமேதான் நீங்க தைரியமாக இருக்கணும். நீங்க ஒண்ணும் கவலைப் படாதீங்க. நான் எல்லாம் பார்த்துக்குறேன். எனக்கு தெரிஞ்ச டொக்டர்மாருங்க இருக்காங்க...”

அன்று இரவு சிகிச்சை பலனின்றி செந்தில் இறந்து விட்டதை விட ஒரு அதிர்ச்சியான விடயம் நடந்தது. விஷயம் கேள்விப்பட்டு மனோகர் வந்து விட்டான். சுகுமாருக்கு முன்னதாக முந்திரி கொட்டை போல ஓடியாடி வேலைசெய்யத் தொடங்கினான். எள் என்பதற்கு முன் எண்ணெய்யாக மாறி சுழன்று சுழன்று வேலை செய்தான். இது சுகுமாருக்கு நிச்சயமாக அதிர்ச்சியான விஷயம்தான்.

முக்கியமாக அடிக்கடி கௌசல்யாவிடம் போய் ஆறுதல் கூறியதுடன் அவளுக்குத் தேவையான பணிவிடைகளையும் அவனே முன்னின்று செய்தான். சுகுமாரை அவளிடம் நெருங்கவிடாமல் திட்டமிட்டு செயல்படுவதைப் போல சுகுமாருக்கு விளங்கியது.

சுகுமாருக்கு மனோகர் மேல் ஆத்திரமும் கோபமும் அதிகமானது. அவன் மேல் கொலைவெறி ஏற்பட்டது. சுகுமாரிடம் ஏதாவது பேசுவதற்காக கௌசல்யா வந்தாலும் தூரத்திலிருந்து அவதானித்துக்கொண்டிருக்கும் மனோகர் ஓடோடி வந்து விடுவான். எப்படியோ கௌசல்யா மனதில் மனோகர்தான் இருக்கிறானென்பதை அவளின் நடவடிக்கைகளின் மூலம் சுகுமார் தெரிந்துக்கொண்டாலும் மனோகர் இருக்கும் வரை அவனுக்கு எப்போதுமே ஆபத்துத்தானென்பதையும் மறந்து விடவில்லை.

செந்திலின் உடல் அடக்கம் செய்யும் போதுதான் மணிமாறன் வந்து சேர்ந்தான். மனோகர் அடுத்த நாள் புறப்பட அதற்கு மறுநாள் சுகுமார் புறப்பட்டான்.


அடுத்தடுத்த நாட்களின் சுகுமாருக்கு கண்டியில் வேலை ஓடவில்லை. வேலைகளுக்கு நடுவே கொளசல்யாவுக்கு கைபேசியின் மூலம் அழைப்பை ஏற்படுத்துவான். ஆறுதல் சொல்லுவான். மனோகரும் அவளுக்கு அழைப்பு எடுப்பதாக கௌசல்யா கூறும் போது அவனுக்கு கோபத்தில் உடம்பெல்லாம் நடுங்கத் தொடங்கும். நாளுக்கு நாள் அவன் மேலுள்ள கோபம் அதிகரிக்கவே அவன் உயிருடன் இருந்தால் கௌசல்யாவை அடைய முடியாது என்பதால் விபரீதமான அந்த முடிவுக்கு வந்தான். மிக கடுமையாக சிந்தித்து திட்டத்தைத் தீட்டினான். இந்த நிலையில்தான் சுகுமாருக்குத் தெரியாமல் வெள்ளிக்கிழமை மனோகர் நுவரெலியாவுக்குப் புறப்பட்டான். சுகுமார். ஏற்கனவே மனதுக்குள் போட்டியிருந்த திட்டத்தை செயல்படுத்த இதுதான் சரியான தருணம் என்று அவன் மனம் எண்ணியது.

ரயில் மறுபடியும் ஓடத் தொடங்கியது. அவன் தன் இருக்கையை நோக்கி நடந்தான். மனோகர் வெள்ளிக்கிழமை நுவரெலியா புறப்பட்டுப் போனான். சுகுமார் நிதானமாக யோசித்தான். எந்தவித சந்தேகமோபிரச்சினையோ வரமால் எப்படி காரியத்தை முடிப்பது என்று சிந்தித்து அதற்கேற்றாப் போல திட்டமிட்டான்.

அவன் திட்டமிட்டவாறே மனோகர் வெள்ளிக்கிழமை புறப்பட சுகுமார் அடுத்த நாள் சனியன்று அதிகாலையில் நுவரெலியாவுக்குப் பயணமானான். கௌசல்யாவுக்கு சொல்லவில்லை.

**அடுத்த வாரம் தொடரும்...**

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல : 09



**திரு/திருமதி/செல்வி** ..........................................................

(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)

**முகவரி** ..........................................................

..........................................................

..........................................................

.............................  .............................

**திகதி**  **கையொப்பம்**

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 09

**இடமிருந்து வலம்**

1. விரும்பியதைக் கொடுக்கும் வியத்தகு மரம்.
6. மயானம்.
7. பாவச்செயல்.
8. குதிரை (திரும்பிவிட்டது).
10. பெருங்காற்று (திரும்பியுள்ளது)
12. சிலப்பதிகாரப் பாத்திரங்களுள் ஒன்று.
14. உதவி அல்லது ஆதரவு.
15. மாமி (குழம்பியுள்ளது)
17. ஒரு தமிழ் மாதம்
20. மாமி (குழம்பியுள்ளது)
22. இருபத்தைந்தாவது தமிழ் வருடம்.
23. பயனற்ற தன்மை
25. திடல்
27. நாதம் எழுப்பும் சாதனம் (திரும்பியுள்ளது)
28. வேதனம் (குழம்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

1. தன்மானத்திற்கு உதாரணம்.
2. வளர்ப்பு பிராணியில் இது பெண்ணினம்
3. மிகப் பரந்த நீர்நிலை.
4. உறக்கத்திற்குத் தேவை
5. இந்தியாவிலுள்ள ஒரு மாநகரம்
9. சொல்.
11. இந்தியாவின் ஒரு பிரதேசம்.
13. எதிர்பாராத வகையில் சேதத்தை ஏற்படுத்துவது.
16. துன்புறுத்தல்
18. காடு (குழம்பிவிட்டது)
19. தலை.
21. நிசப்தம்.
23. சேவை.
24. கோடரி போன்ற இரும்பு ஆயுதம்.
26. இதுவும் ஒரு நிறம்.

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 05

**விடைகள்**

**இடமிருந்து வலம்**

01. நிரபராதி 04. பாலை 06. மாருதம் 08. பசை 10. பாட்டி 11. வடு
12. தேன் 13. உதிரம் 15. காசு 16. தரிசு 17. ஏரி 19. கையகம்
21. யமன் 23. திடம்

**மேலிருந்து கீழ்**

01. நிராசை 02. பணி 03. திருட்டு 04. தலை 05. பாம்பன் 07. மாடி
9. பத்திரிகை 10. பாவம் 12. தேசு 13. உதயம் 14. சுரம் 15. காரியம்
18. மூடன் 20. கதை 22. மதி

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 04

**பரிசுபெறுவோர்**

| முதலாம் பரிசு | இரண்டாம் பரிசு | மூன்றாம் பரிசு |
|---|---|---|
| **ஏ.எல். அப்துல் ஜலீல்,**<br>61/1/1, மஹாபுத்கமுவ,<br>கொட்டிகாவத்தை. | **ராஜேந்திரன் ரஜிரேக்கா,**<br>இல. 88, விபுலாநந்த வீதி,<br>காரைதீவு 01. | **பி. வாஞ்சுதா,**<br>10/25, பன்சச வீதி,<br>பலாங்கொடை. |

## பாராட்டு பெறுவோர்

1. **ஏ.ஆர். பாக்கியராஜா,** கொழும்பு 06.
2. **இல்யாஸ் தாஸிம்,** தொட்டவத்தை, பாணந்துறை.
3. **பாத்திமா ஹன்பா,** மங்கெதர, துல்ஹிரிய.
4. **ரி. நாகையா,** பாண்டிருப்பு 01, கல்முனை.
5. **எம்.எம்.பி.எப். ரிஸ்னா,** ஹபுகஸ்தலாவை.

# "நான் சாகமாட்டேன்" நூல் தந்த சாகாத படைப்பாளி




சிறந்த முற்போக்குப் படைப்பாளி.
இளவயதில் போய்விட்ட இலட்சியவாதி.
அவர் படைப்புகள் சாகாமல் நிலைத்து நிற்கின்றன.

"நான் சாகமாட்டேன்" மொழிபெயர்ப்புக் குறுநாவலை நூலாக வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டிருந்த வேளையில் அவர் இறந்துவிட்டமை கவலைக்குரியது.

இக்குறுநாவல் வாரவெளியீடொன்றில் தொடராகப் பிரசுரமானதாகும்.

இந்நூலுக்குப் பேராசிரியர் க. கைலாசபதி முன்னுரை வழங்கிச் சிறப்பித்துள்ளார்.

"தனது எழுத்தை அக்கறையோடும், ஆர்வத்தோடும் கைக்கொண்டதோடமையாது அது அக்கிரமம், அநீதி ஆகியவற்றுக்கு எதிரான ஆயுதமாயும் அமைதல் வேண்டுமென்ற ஆழ்ந்த நம்பிக்கையும் கொண்டிருந்தவர் அவர்..!

மானிடத்தின் நலத்திலும், நன்மையிலும் தீவிர ஈடுபாடு உடையவராயிருந்த அவர் அடக்கமானவராயிருந்தமை வியப்புக்குரியதன்று..!"

எனப் பேராசிரியர் கைலாசபதி குறிப்பிட்டுள்ளமை கவனிக்கத்தக்கது.

"நான் சாகமாட்டேன்" குறுநாவலுடன் ஆசிரியரின் மிகச் சிறந்த மூன்று சிறுகதைகளும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

"யூனெஸ்கோ" நிறுவனத்தினால் உலகமொழிகளில் வெளியிடுவதற்கெனத் தெரிவுசெய்யப்பட்ட ஈழத்துச் சிறுகதைகளில் ஒன்றான "ஒரு கிராமத்துப் பையன் கல்லூரிக்குச் செல்லுகிறான்" என்ற சிறுகதை இந்நூலில் இடம்பெற்றுள்ளது.

1971 ஜனவரி மாதம் "அஞ்சலி" மாத சஞ்சிகையில் பிரசுரமானதும் இலங்கை சாகித்திய மண்டலத்தினால் சிங்களத்தில் மொழிபெயர்ப்பதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்ச் சிறுகதைகளில் ஒன்றானதுமான "வெறும் சோற்றுக்கே வந்தது" என்ற கதையும் இந்நூலில் இடம்பெற்றுள்ளது. இக்கதை இந்தியாவிலும் மறுபிரசுரமாகிப் பாராட்டுகள் பெற்றதாகும்.

ஆசிரியரின் இறுதிக் கதையான வீரகேசரியில் பிரசுரமான "வியட்னாம் உனது தேவதைகளின் தேவவாக்கு" என்ற சிறந்த கதையும் இந்நூலில் இடம்பெற்றுள்ளது.

செ. கதிர்காமநாதன் 1942 ல் கரவெட்டி மேற்கில் பிறந்தவர். பேராதனைப் பல்கலைக்கழகப் பட்டதாரியாக (1963) வெளிவந்த அவர் சிறிது காலம் ஆசிரியராகப் பணிபுரிந்தார். 1966 ம் ஆண்டு தொடக்கம் "வீரகேசரி மித்திரன்" பத்திரிகை அலுவலகத்தில் உதவி ஆசிரியராகப் பணியாற்றினார்.

அக்காலத்தில் படைப்பாக்கத்தில் தீவி



ரமாக ஈடுபட்டார். அவரது முதல் சிறுகதைத் தொகுதி "கொட்டும் பனி" 1968 ல் வெளிவந்தது.

அந்நூல் அடுத்த ஆண்டு இலங்கை சாகித்திய மண்டலப் பரிசையும் பெற்றது.

இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சையில் தேர்ச்சி பெற்று 1971 ம் ஆண்டு நிர்வாக சேவையில் இணைந்து பணியாற்றினார்.

மிக இளம்வயதிலேயே பாராட்டுகள் பல பெற்ற படைப்பாளியாக வளர்ந்துவந்த கதிர்காமநாதன் 01 09 1972 ல் இயற்கை எய்தியமை ஈழத்துப் படைப்பாளிகளையும் மக்களையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது..! கவலையைக் கொடுத்தது..!!

அவரது படைப்புகள் சாகாமல் அவரது பெயரை என்றும் நிலைநிறுத்தி நிற்கும்..!

**வி.ரி. இளங்கோவன் ✍**

# வாசிப்பிற்குப் பெரிதும் வளம் சேர்க்கும் கலை இலக்கிய சமூக இதழ் கலைமுகம்




ஏறத்தாழ ஒன்பது மாதங்களின் பின்னரான "கலைமுகம்" இதழின் வருகை இலக்கிய வாசகர்களை மகிழ்விக்கிறது! ஈர்க்கவும் செய்கிறது! என்பது முகமன் அல்ல. 2020 ஜூலை - செப்டெம்பர் காலாண்டிற்கான 69ஆவது இதழ் ஆகஸ்ட் இறுதி வாரத்திலேயே வாசகர்களின் கைகளுக்கு வந்திருக்கிறது.

காலாண்டிதழ் என்றே அடையாளப்படுத்திக் கொண்டிருந்தாலும் தலைமுகம் ஒவ்வொரு காலாண்டிலும் வந்ததாகவும் இல்லை. அதற்கான காரணங்கள் இருப்பதையும், இலக்கிய சிற்றதழ்கள் அனைத்துக்குமான அவ்வக் காலத்தைய பொதுவான பிரச்சினையே, அவை என்பதும் உண்மையே, என்றாலும் வாசகர்களுக்குத் தேவை அந்த ஆராய்வல்ல! வந்திருக்கும் இதழ் வாசிக்கத்தருவது என்ன என்பதே!

- ★ ஜனவரி – மார்ச் – 2019 இதழ் 67
- ★ ஏப்ரல் – செப்டம்பர் 2020 இதழ் 68
- ★ ஜூலை – செப்டம்பர் 2020 இதழ் 69

மிக நீண்ட இடைவெளிக்குப் பின் வெளிவந்திருக்கும் இந்த 69 ஆவது இதழ் மூலம் கலைமுகத்தின் பொறுப்பாசிரியர் செல்மர் எமின் வாசகர்களுடன் இப்படி உரையாடுகின்றார்.

'கலைமுகம் 68 ஆவது இதழ் வெளிவந்து மூன்று காலாண்டுகள் கடந்துவிட்ட நிலையில் இந்த 69 ஆவது புதிய இதழ் உங்கள் கரங்களை வந்தடைகிறது. நாம் நினைப்பதற்கும் நடைமுறை சாத்தியப்பாடுகளுக்கும் இடையில் எப்போதுமே பெரும் போராட்டம் தான். எனினும் அதனைவென்று கலைமுகம் தொடர்ந்தும் தன்வரவை நிகழ்த்திக்கொண்டே இருக்கும்.

தமது படைப்புக்களை முகநூலிலும் வேறு மின் ஊடகங்களிலும் பதிவேற்றிவிட்டு உடனுக்குடன் கிடைக்கின்ற விருப்புக்குறிகளிலும் கருத்துக்களிலும் எழுத்துலகமும் மகிழ்ந்திருக்கும் இக்காலத்தில் இதழ்களுக்காக படைப்புக்களை வழங்கிவிட்டு அவை அச்சில் வெளிவரும் காலம் வரை பொறுமையுடன் காத்திருக்கும் படைப்பாளர்கள் போற்றுதற்குரியவர்களே. இந்த இதழ் மார்ச் 2020ல் வெளியிடுவதற்கான ஆயத்தங்கள் நிறைவாகிக் கொண்டிருந்த காலத்தில் கொரோனா வைரஸ் தன் கோரமுகத்தை உலகின் திசையெங்கும் காட்டத் தொடங்கியிருந்தது. உலகமே முடங்கிப்போனது. ஆறுலட்சத்துக்கும் மேற்பட்ட மனித உயிர்கள் பலிகொள்ளப்பட்டுள்ளன. உலகின் அதி உயர் விருது விழாவான நோபல் பரிசு: விளையாட்டு விழாவான ஒலிம்பிக், போன்ற பல நிகழ்வுகள் சமூக, கலை இலக்கிய ஆன்மிக வாழ்வில் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. அல்லது வேறுவடிவம் எடுத்துள்ளன. இத்தகைய பின்னணியில் கொரோனாவின் ஆதிக்கத்திலிருந்து இலங்கை விடுபட்டுவிட்டதா இல்லையா என்பதே தெரியாத இயல்புக்குத் திரும்புதலுக்கும் திரும்பாமைக்கும் இடைப்பட்ட காலத்தில் கலைமுகம் வெளிவந்துள்ளது...' என்று நீள்கிறது ஆசிரியர் உரை.

'வழமையாக 80 பக்கங்களைத் கொண்டிருக்கும் கலைமுகத்தின் இந்த 69ஆவது இதழ் சற்றே பெரிதாகி 96 பக்கங்களைக் கொண்டிருக்கிறது.

பேசப் பெரிதும் இனியாய் நீ என்னும் நிஜனின் பத்தி எழுத்துத் தலைப்பைப் போலவே பேசுவதற்குப் பெரிதும் வளமூட்டுவதாகவும் இருக்கின்ற இதழ் கலைமுகம். இதழுக்குள் நுழைந்ததுமே "மூதறிஞர் ஆ. சபாரத்தினம் யாழ் பொது நூலகத்திலிருந்து எடுத்திருந்த 'மார்டின் ஹைடக்கரின்' 'Existence and Being' நூலினூடாக, கவிஞர் ஹோர்ல்டர்லின், மெய்யியல் சிந்தனையாளர் மார்ட்டின் ஹைடக்கர்: நமது மண்ணின் மூதறிஞர் ஆ. சபாரத்தினம் ஆகியோரை அறிமுகம் செய்கின்றார் நா.நவராஜ், ஜேர்மனியின் ஹிட்லர் காலத்தில்தான் இந்த நூலின் ஆங்கில மொழிபெயர்ப்பைத்தான் ஆ. சபாரத்தினம் யாழ் பொதுசன நூலகத்திலிருந்து எடுத்து ஒரு மாணவனின் தேவைக்காக அதைத் தமிழாக்க முனைந்திருந்ததில் கட்டுரை தொடங்குகிறது. ஒரு புத்தகத்தின் பிரமாண்டமான முக்கியத்துவம் பேசப்படுகிறது இங்கே.

ஒரு நூலகத்தினுள் நுழைவதுபோலவே இவ்விதழுக்குள் நுழையும் நமக்கு ஒவ்வொன்று ஒவ்வொன்றாக பெறுமதிமிக்க நூல்கள் பார்வைக்குத் தரப்படுகின்றன. திருமறைக் கலாமன்ற இயக்குநரும் கலைமுகத்தின் பிரதம ஆசிரியருமான நீ. மரியசேவியர் அடிகளாரின் இரண்டு புதிய நூல்கள் பற்றிய செய்தி அடுத்தது.

- ★ காலத்தின் தடங்கள். கலைமுகம் ஆசிரியர் தலையங்கங்களின் தொகுப்பு
- ★ மறைபொருள் நாடகங்கள் –தொகுப்பு 1, சி. ரமேஷின் தொடர்கட்டுரை
- ★ சேனனின் லண்டன் காரர்
- ★ ஷோபா சக்தியின் 'இச்சா'
- ★ தேவகாந்தனின் 'நதிமேல் தனித்தலையும் சிறுபுள்' ஆகிய மூன்று நாவல்கள்

**எஸ்.கே. விக்னேஸ்வரனின் பத்திப்பகுதி பார்க்கத் தூண்டும் நூல்கள் ஆறு.**

- ★ காற்றில் எழுதுதல் – சேரனின் கவிதைகள் மலையாள மொழிபெயர்ப்பாக.
- ★ இளங்கோவின் (டி.சே. தமிழன்) நாவல்கள் 'மெக்ஸிக்கோ'
- ★ இளங்கோவின் கட்டுரைத் தொகுப்பு 'உதிரும் நினைவின் வர்ணங்கள்'
- ★ காலம் செல்வத்தின் 'சொற்களில் சுழலும் உலகம், (வாழ்வனுபவங்கள்)
- ★ ஆனந்த பிரசாத்தின் நாவல் 'கொல்லப் படாத கதை'
- ★ கேதாரநாதனின் சினிமாத்தடம். பன்மொழித்திரைப்படங்கள் பற்றிய விமர்சனக் கட்டுரைகள் தொகுதி. நூல் மதிப்பீடுகள் தரும் நூல்காட்டுகள் ஆறு!
- ★ தேவா மொழிபெயர்த்துள்ள நாவல் 'என் பெயர் விக்டோரியா அருண் மொழிவர்மன்.
- ★ சீமான் பத்திநாதன் பர்ணாந்துவின் நாவல் 'குஞ்சரம் ஊர்ந்தோர் இயல் வாணன்.
- ★ அன்புராசா அடிகளாரின் அதிர்வுகள் 2 – கணபதி சர்வானந்தா.
- ★ திருமலை இ. மதன் எழுதிய 'ஒருவானம் இரு நிலவு' நாவல் சி. ரமேஷ்
- ★ வாகரை வாணனின் 'மட்டக்களப்புக் காவியம் ந. குருபரன்.
- ★ ஓவியர் ஆசை இராசையாவின் 'விம்பம்' பி.எஸ். அல்பிரட்.

இப்படிப் 17 நூல்களை நமது பார்வைக்கு வைக்கிறது இந்த இதழ். இவை மாத்திரமன்றி கட்டுரைகள் இரண்டு சிறுகதைகள், மொழிபெயர்ப்புச் சிறுகதை – கவிதைகள் தாமரைச் செல்வியின் நேர்காணல், பத்தி எழுத்து பத்துக்கும் மேற்பட்ட கவிதைகள் எனப் பேசப்பெரிதும் இனிதான இதழ் கலைமுகம்.

ஓவியர் முத்தையா கனகசபை அமரர் ஆனதற்கான (1925 ஏப்ரல் 2020) அஞ்சலிக்கட்டுரை 47ஆம் பக்கத்தில் இருக்கிறது. அஞ்சலி செய்பவர் ஓவிய ஆளுமை ஆசை இராசையா ஈழமண்ணின் ஓவியமன்னரான ஆசை இராசையா கடந்த 29ம் திகதி 29.08.2020 காலமாகிவிட்டமையையும் பெருந்துயருடன் பதிவு செய்கின்றேன்.

***கலைமுகத்துடன் தொடர்பு கொள்ள***
***Judesondivera@gmail.com***

**தெளிவத்தை ஜோசப் ✍**

# ஆசிரிய கல்விக்கே முன்னுரிமை அவசியம்

**கலாநிதி ஏ.றியாஸ்**
**காத்தான்குடி ஆசிரியர் வாண்மை வளநிலையத்தின் முகாமையாளராக கடமையாற்றி வருகின்றார். மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்திற்குட்பட்ட ஓட்டமாவடி, ஏறாவூர், காத்தான்குடி கோட்டத்திலுள்ள பாடசாலை ஆசிரியர்களின் தொழில்சார் ஆசிரியர் அபிவிருத்தி வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றி வரும் இவர் கிழக்கில் விரல் விட்டு எண்ணக்கூடிய கலாநிதிகளில் ஒருவர். தினகரன் வாரமஞ்சரிக்கு அவர் வழங்கிய நேர்காணல்**



***உங்களது ஆரம்பக் கல்வி மற்றும் உயர் கல்வி பற்றி குறிப்பிடமுடியுமா?***

ஆம்: நான் எனது ஆரம்பக் கல்வியை ஏறாவூர் ஜிப்ரியா பாடசாலையில் தொடர்ந்து அதன் பிறகு க.பொ.த உயர் தரக் கல்வியை ஏறாவூர் அலிஹார் தேசியப் பாடசாலையில் கற்றேன். பல்கலைக் கல்வியை கிழக்குப் பல்கலைக் கழகத்தில் பயின்று 2ம் நிலைப் பிரிவில் திறமைச் சித்தியையும் பெற்றுக் கொண்டேன். அதன் பின்னர் PGDE. PDC. MED.Phd (Education) ஆகிய பட்டங்களைப் பெற்றேன்.

***நீங்கள் கடமையாற்றும் ஆசிரிய வாண்மை விருத்தி கலாசாலையில் ஆசிரியர்களுக்கான வாண்மை விருத்தி செயற்பாடுகள் முழுமையாக இடம்பெருகின்றனவா?***

ஆம் நிறைவான சேவையை எமது ஆசிரியர்கள் பெற்றுக்கொள்கிறார்கள் அதன் காரணமாக அவர்களின் வாண்மை விருத்தியடைகின்றது

***பாடசாலை மட்டத்தில் ஆசிரிய வாண்மைத்துவ செயற்பாடுகளை முன்னெடுக்க அதிபர்களுக்கு நீங்கள் கூறும் ஆலோசனைகள் என்ன?***

ஒவ்வொரு ஆசிரியர்களும் இற்றைப்படுத்தப்பட வேண்டியவர்கள் அந்த வகையில் அதிபரானவர் பாடசாலையில் இவ்வேலைத்திட்டத்தை முன்னெடுக்க முதலில் ஒரு குழுவை அமைத்து அதன் ஊடாக ஆசிரியர்களின் தேவைகளை இனம்கண்டு அதனை முதலில் பாடசாலை மட்டத்திலே நிவர்த்தி செய்ய திட்டங்களை தயாரிக்க வேண்டும். அதன் பிறகு எமது மத்திய நிலையத்துடனும், ஏனைய நிறுவனங்களுடனும் தொடர்பு கொண்டு மேலதிக வாண்மைத்துவ பயிற்சிகளை பெற்றுக் கொடுக்க முயற்சிக்க வேண்டும்.

***இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கும், இலங்கை கல்வியியலாளர் சேவைக்கும் இடையிலான வித்தியாசம் என்ன?***

கல்வி நிர்வாக சேவையினர் கல்வியை நிர்வகிப்பதில் கூடிய பங்கினை வகிக்கின்றனர் அது கல்வியின் அடுக்குகளான பாடசாலை மட்டத்திலிருந்து கோட்டம், வலயம், மாகாணம் மற்றும் அமைச்சு என அதன் எல்லைப் பரப்பு நீண்டு கொண்டு செல்கின்றது. அத்துடன் இச்சேவை பழைமை வாய்ந்த ஒன்றாகவும் காணப்படுகின்றது.

கல்வியியலாளர் சேவையினர் ஆசிரியர்களின் வாண்மைத்துவ வேலைத்திட்டங்களையும் அதற்கான செயற்பாடுகளையும் வழங்கி அவர்களை சிறந்த பூரணத்துமிக்கவர்களாக மாற்றுதல் இதற்காக அவர்களுக்கு சேவைக்கால பயிற்சி, சேவை முன்பயிற்சி மற்றும் குறுங்கால பயிற்சி போன்றவற்றை வழங்குகின்றது. இதற்காக கல்வியில் கல்லூரி, ஆசிரியர் பயிற்சி கலாசாலை மற்றும் ஆசிரிய மத்திய நிலையம் போன்றவை இப்பயிற்சிகளை வழங்கும் நிறுவனங்களாகும்.

**யூ.எல்.எம்.ஹரீஸ் ✍**
(வாழைச்சேனை விசேட நிருபர்)

***கல்விச் சமூகத்தை உருவாக்குவதில் அதிக பங்களிப்பு வழங்குவது இலங்கை கல்வி நிர்வாக சேவையினரா அல்லது இலங்கை கல்வியியலாளர் சேவையினரா?***

இரண்டு சேவையினரும் தான். ஆனால் நாங்கள் அதிகமாக ஆசிரியர்களின் வாண்மைத்துவத்தில் அதிகமாகவும் நேரடியாகவும் தலையிடுகின்றோம். அவர்கள் மாணவர்களின் கல்வி அடைவில் அதிகமான வேலைத்திட்டங்களில் தலையிடுகின்றனர்.

***இலங்கையில் ஆசிரியர்களுக்கான வாண்மைத்துவத்தை பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்புக்கள் மற்றும் நிறுவனங்கள் பற்றி கூற முடியுமா?***

ஆம். புதிதாக நியமனம் பெற்றவர்களும் பெற இருக்கின்றவர்களும் அவர்களின் வாண்மைத்துவத்தை அதிகரிக்க வேண்டிய சூழ்நிலையில் இருக்கின்றார்கள். அதற்காக அரச நிறுவனங்கள். பல்கலைக்கழகங்கள். வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள் (NIE, University and foreign university) அதிகமான பங்களிப்பினை செய்து வருகின்றது.

***கிழக்கு மாகாணங்களில் காணப்படும் ஆசிரிய மத்திய நிலையங்களுக்கிடையில் வேறுபாடுகள் காணப்படுவதாக நீங்கள் உணர்கின்றீர்களா?***

அவ்வாறு இல்லை. நாட்டில் காணப்படும் 112 ஆசிரிய மத்திய நிலையங்களுக்கிடையில் வளப்பங்கீடு சமமான முறையில் தான் கல்வியமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்றது. இதில் புதிய கட்டிடங்கள் கடந்த ஆட்சிக்காலங்களில் அமைக்கப்பட்டது.

**19ஆம் பக்கம் பார்க்க**




**(“யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்பது கணியன் பூங்குன்றனது வரிகள். இதில் கேளிர் என்பது உறவினர் எனப் பொருள்படும். இந்த உறவினருக்கு நான் தரும் பத்தி யாவரும் கேளீர்’)**

## எழுத்தாளர் எஸ். முத்துமீரானுக்கு வாழ்நாள் சாதனையாளர் கொடகே விருது



ஈழத்து நவீன தமிழ் இலக்கியத்தின் முக்கியமான ஒரு படைப்பாளியாக விளங்கும் எஸ். முத்துமீரானுக்கு இவ்வாண்டு கொடகே சாகித்தியவிழாவில் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டுள்ளது. அவரது சாதனைகள் பற்றிய சிலகுறிப்புகளை இங்கு தருகிறேன். 1957ஆண்டு டிசம்பர் மாதம் 02ஆம் திகதி ஒலிபரப்பாகிய காதலும் கருணையும்’ என்னும் வானொலி நாடகத்தின் மூலம், எழுத்துலகில் தடம் பதித்த இவர், ஆறு தசாப்தங்களுக்கு மேலாக நவீன தமிழிலக்கியத்தின் பல்வேறு துறைகளான கவிதை, சிறுகதை, நாடகம், வானொலி நாடகம், உருவகக் கதை, நாட்டார் இலக்கிய ஆய்வு என்பனவற்றில் இயங்கிவருபவர்.

1941ஆம் ஆண்டு மே மாதம் மூன்றாம் திகதி அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த நிந்தவூரில் சிக்கந்தர் லெவ்வை சின்னத்தம்பி, மீராசாகிபு மீரா உம்மா தம்பதிக்கு சிரேஷ்ட புதல்வராகப் பிறந்த இவர், தனது ஆரம்பக் கல்வியை நிந்தவூர் அல்ஃஅப்றக் மகா வித்தியாலயம், கல்முனை பாத்திமா கல்லூரி, கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலை ஆகியவற்றில் கற்று, உயர்கல்வியை மட்டக்களப்பு சிவாநந்தா வித்தியாலயத்திலும் கற்றுத் தேறினார்.

1964ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதி மாணவ ஆசிரியராக, கல்விச்சேவையில் புகுந்த இவர் படிப்படியாக முன்னேறி, முதலாம்தர அதிபராக இருந்து ஓய்வுபெற்றவர். கொழும்பு பல்கலைக்கழக சட்டத்துறை பட்டதாரியான முத்துமீரான் 1981ஆம் ஆண்டு இலங்கை சட்டக்கல்லூரியில் சேர்ந்து உயர் நீதிமன்ற சட்டத்தரணியாகத்தேறி சட்டத்துறையில் சேவைசெய்தவர்.

இலங்கைவாழ் முஸ்லிம்களுடைய நாட்டார் இலக்கியங்களைக் களஆய்வு செய்து, கிழக்கிலங்கை முஸ்லிம்களின் கிராமியக் கவியமுதம்’, கிழக்கிலங்கை முஸ்லிம்களின் நாட்டார் பாடல்கள் இலங்கைக் கிராமத்து முஸ்லிம்களின் பழமொழிகள், இலங்கை கிராமத்து முஸ்லிம்களின் தாலாட்டுப் பாடல்கள் இலங்கை கிராமத்து முஸ்லிம்களின் வாய்மொழிக் கதைகள்’, கிழக்கிலங்கை கிராமத்து முஸ்லிம்களின் பூர்வீகமும் வாழ்வும் வாழ்வாதாரங்களும்’ ஆகிய ஆறு நூல்களை வெளியிட்டுள்ளார். இவற்றுள், கிழக்கிலங்கை முஸ்லிம்களின் நாட்டார் பாடல்கள் என்ற நூலுக்கு, வடகிழக்கு மாகாண தமிழ் இலக்கிய சாகித்யவிருது கிடைத்தது.


முத்துமீரான் இரண்டு உருவகக்கதைத் தொகுப்புகளை வெளியிட்டுள்ளார். அவையாவன, உருவகக் கதைகள், இயற்கை என்பனவாகும். இவற்றுள், இயற்கை என்னும் உருவகக்கதைத் தொகுதிக்கு அரசகரும மொழிகள் திணைக்களத்தின் மொழித்திறன் விருது கிடைத்தது.

இவர், இதுவரை 200க்கும் மேற்பட்ட வானொலி நாடகங்களை எழுதியுள்ளார். மானிடம் சாகவில்லை’ இவர் வெளியிட்ட நாடகத் தொகுதியாகும். அத்தோடு இவர் இலங்கை வானொலியில் தடாகங்கள்’ என்ற நிகழ்ச்சியை நடத்திவந்தார்.

முத்துமீரான் சிறுகதைகள், மானிடம் உயிர் வாழ்கிறது, கக்கக்கனிய... என்பன முத்துமீரானின் சிறுகதைத் தொகுதிகள். இவற்றோடு முத்துமீரான் கவிதைகள், கருவாட்டுக் கஸ்ஸா, அண்ணல் வருவானா? ஆகிய மூன்று கவிதைத் தொகுதிகளையும் வெளியிட்டுள்ளார்.

அரசமட்டத்தில் கலாபூஷணம், தாஜுல் அதிப் (இலக்கிய வேந்தன்) ஆகிய விருதுகளையும், தமிழ்மாமணி என்ற விருதினையும் பெற்றுள்ள முத்துமீரான் இலக்கியத்திலகம், கவிக்குருசில் ஆகிய விருதுகளை இலக்கியப் பேரவைகளின் மூலமாகவும் பெற்றுள்ளார்.
வடக்கு கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விழாவில் ஆளுனர் விருதும், அம்பாரை மாவட்ட அரச சாகித்ய விழாவில் சாகித்ய விருதும், பெற்றவர்.

## சிந்தனையைத் தூண்டும் ஓர் அறிவியல் ஆய்வுநூல்




கலாநிதி ஏ. சீ. எல். அமீர் அலி 2019ஆம் ஆண்டில் எழுதிய சிந்தனைச் சுவடுகள்’ என்ற கட்டுரைத் தொகுதி எனது பார்வைக்குக் கிடைத்தது. இந்நூலின் ஆசிரியர் கிழக்கிலங்கையைச் சேர்ந்தவர். 1977ஆம் ஆண்டு புலம்பெயர்ந்து அவுஸ்திரேலியாவில் வாழும் இவர், அங்குள்ள மேர்டொக் பல்கலைக்கழகத்தின் ஆட்சிமுறை முகாமைத்துவத் துறையில் விசேட விரிவுரையாளராகப் பணியாற்றுகிறார். இந்நூலில் பத்தொன்பது கட்டுரைகள் அடங்கியுள்ளன. இக்கட்டுரைகள் நான்கு பகுதிகளாக வகுக்கப்பட்டு, இஸ்லாமும் முஸ்லிம்களும், இலங்கை முஸ்லிம்கள், தமிழர் போராட்டமும் முஸ்லிம்களும், பொருளியல் சிந்தனைகள் என அவற்றிற்குத் தலைப்பிடப்பட்டுள்ளன. இந்த நூலின் முதலாவது கட்டுரையான தீவிரவாத இஸ்லாமியத்தின் நீண்டபயணம்’ என்ற கட்டுரையில் “முஸ்லிம்களுக்குள் தற்போது வீசிவரும் தீவிரக்காற்று இஸ்லாம் தோன்றிய காலத்திலிருந்தே மேற்குலகில் உருவான இஸ்லாத்தைப் பற்றிய துர்ப்பிரசாரத்தின் ஒரு விளைவு எனவும் இத்துர்ப்பிரசாரம் கீழைத்தேய வாதத்தினாலும் குடியேற்ற வாதத்தினாலும் மேலும் பலப்படுத்தப்பட்டது” என்றும் கூறும் ஆசிரியர், இந்தப் போக்கினை மாற்றுவதற்கு மேற்குபோபியா’வின் ஆரம்பத் தோற்றத்தைச் சரியாக விளங்கி அதனடிப்படையில் மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்ற கருத்தினை முன்வைத்துள்ளார். அடுத்துவரும் கட்டுரைகள் உலக முஸ்லிம்கள் உறங்கிய வரலாறு’, நாளைய மறுமலர்ச்சியின் இன்றைய விடிவெள்ளி, வரலாற்றுப் பின்னணியில் வஹ்ஹாபியம், பூகோளமயச் சூழலில் வஹ்ஹாபியமும் பாரம்பரியக் கலாசாரங்களும், கொந்தளிக்கும் அரபு உலகு, தணியாத தாகம் ஆகிய தலைப்புகளில் அமைந்துள்ளன. இரண்டாவது பகுதியில் இலங்கை முஸ்லிம்கள்’ என்ற தலைப்பின்கீழ் நான்கு கட்டுரைகள் அடங்கியுள்ளன. நூலின் மூன்றாவது பகுதியில் தமிழர் போராட்டங்களும் முஸ்லிம்களும் என்ற தலைப்பில் ஐந்து கட்டுரைகளும் நான்காவது பகுதியில் பொருளியல் சிந்தனைகள் என்ற தலைப்பில் மூன்று கட்டுரைகளும் அடங்கியுள்ளன. சிந்தனையைத் தூண்டும் பல கட்டுரைகள் அடங்கிய இந்நூல் எம்.பி.எம். ஜமீலால், விதானையார் வீதி, 143 மானிப்பாய் றோட், யாழ்ப்பாணம் என்ற முகவரியிலிருந்து வெளியிடப்பட்டுள்ளது.

## சாஜகானின் செங்கோட்டை.



உலகப் புகழ்பெற்ற தாஜ்மஹாலைக் கட்டியவன் சாஜகான். அவன் அழகை ஆராதிப்பவன். கலையுள்ளம் படைத்தவன். கேளிக்கைகளில் விருப்புடையவன். அவனது தாத்தா மொகலாயப் பேரரசர் அக்பர் கட்டிய அரண்மனையில் இருந்தவாறே இவனும் ஆட்சி புரிந்துகொண்டிருந்தான். ஆனாலும் அவனது மனம் திருப்திப்படவில்லை. பெரிய அளவில் ஊர்வலம் செல்ல வசதியாக ஆக்ராவில் அகலமான வீதிகள் இல்லையே என்று அவனது மனம் ஏங்கியது. எனவே அவன் தனது தலைநகரை மாற்றுவதற்குத் தீர்மானித்தான். டில்லியில் யமுனை நதித் தீரத்தில் ஒரு புதிய நகரை உருவாக்குங்கள் எனத் தனது மந்திரி பிரதானிகளுக்கு ஆணை பிறப்பித்தான்.

அடர்ந்து பரந்து விரிந்த காட்டுப்பகுதியில் புதிய தலைநகர் உண்டாகியது. 1638இல் கட்டிடவேலைகள் ஆரம்பமாகி 1648இல் முடிவடைந்தன. முகலாய மன்னர்களுக்கு வேண்டிய சகல வசதிகளுடனும் இந்தக் கோட்டையை சாஜகான் கட்டிமுடித்தான்.



மக்களின் வாழ்த்தொலிகள் முழங்க, வாண வேடிக்கைகளுடன் 1648 ஏப்ரல் 19ஆம் திகதி சாஜகான் யமுனா நதியில் பயணித்து செங்கோட்டையின் பின்பகுதியில் அமைந்திருந்த வெள்ளியாலான கதவுகளைத் திறந்துகொண்டு இந்தச் செங்கோட்டைக்குள் நுழைந்தான்.

அவன் அமருவதற்கென ஒரு புதிய மயில் ஆசனம் செய்யப்பட்டது. இந்த மயில் ஆசனம் பொன்னாலும் மணியாலும் வைர வைடூரியங்களாலும் இழைக்கப்பட்டிருந்தது. விலைமதிப்பற்ற கோகினுளர் வைரம் அதில் ஒளிவீசிக்கொண்டிருந்தது. வாத்தியங்கள் முழங்க நிலப்பாவாடையில் நடந்துசென்று மன்னன் மயில் ஆசனத்தில் அமர்ந்தான்.

இந்தக் கோட்டையின் முன்பகுதி தர்பான் மண்டபமாக அமைந்துள்ளது. இங்கேதான் மன்னன் நாட்டுப் பிரஜைகளைச் சந்தித்து அவர்களது தேவைகளைக் கேட்டறிந்து கொள்வான். இந்த மண்டபத்தின் மேல்விதானத்தில் கலைத்திறன்மிக்க அற்புத ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. இன்றளவும் நிறம் மங்காமல் இந்த ஓவியங்கள் மண்டபத்தை அழகு செய்து கொண்டிருக்கின்றன. கோட்டையின் உள்ளே அழகிய விதானத்துடன்கூடிய மாளிகைகள் அமைந்துள்ளன. மூன்று குளியலறைகள், தொழுகைக்கான மண்டபம், பூந்தோட்டங்கள் ஆகியனவும் காணப்படுகின்றன. இந்தக் கோட்டையை சாஜகான் தனது எதிர்கால அரசாட்சிக்காகப் பல திட்டங்களோடு கட்டியெழுப்பியபோதும் அவனால் நீண்டகாலம் இந்தக் கோட்டையிலிருந்து அரசாட்சிசெய்ய முடியவில்லை. அவனது மகன் அவுரங்க சீப் தந்தையை சிறையில் அடைத்துவிட்டுத் தான் ஆட்சிபீடம் ஏறினான். இவனே இக்கோட்டையிலிருந்து ஆட்சி செய்த கடைசி மொகலாய மன்னன் ஆவான்.

டெல்லியிலுள்ள உள்ள நினைவாலயங்களில் இதுவே மிகப் பெரியதாகும். செங்கற்களினால் கட்டப்பட்ட இந்தக் கோட்டை இயற்கை அழிவுகளையும் தாண்டி இன்றும் கம்பீரத்துடன் காட்சி தருகிறது. 1947இல் இந்தியா சுதந்திரம் அடைந்த பின் இந்திய இராணுவத்தின் பொறுப்பில் இக்கோட்டை வந்தது. அதன் பின்னர் 2003இல் இந்திய சுற்றுலாத்துறைக்குக் கையளிக்கப்பட்டு சுற்றுலாத் தலமாகத் திகழ்கிறது.

(இனி அடுத்தவாரம்)




### நல்லதை சொல்கிறோம்

## நல்லொழுக்கமுள்ள சந்ததியினரை உருவாக்குவோம்!




இன்றைய நாகரீக உலகில் பிள்ளைகளை ஒழுக்க சீலர்களாக வளர்ப்பது பெற்றோர் மீதுள்ள பாரிய பொறுப்பாக உள்ளது. நாகரிகம் வளர்ந்து பாரம்பரிய கலை, கலாசார விழுமியங்கள் வழுவிழந்து வருகின்றமை இக்காலத்தில் ஒழுக்கம் நிலை பெறுவதற்கு தடையாக உள்ளது எனலாம்.

ஒருவர் தன் பிள்ளைகளுக்காக பெரிய அளவில் சொத்துக்களை சேர்த்து வைப்பதை விட அவர்களை ஒழுக்க சீலர்களாக வளர்ப்பதே சாலச்சிறந்ததாகும். இல்லையெனில் அவர்களுக்காக சேர்த்த சொத்துக்கள் அனைத்தும் கடலில் கரைத்த உப்பு போல் ஆகிவிடும்.

இன்று சினிமா மட்டுமன்றி சமூக வலைத்தளங்களும், வேறுபட்ட சமூக ஊடகங்களும் இளவயதினரின் ஒழுக்கம் சீர் குறைவதற்கு பரவலான காரணிகளாக உள்ளன. இத்தகைய ஊடகங்களினால் நன்மைகள் விளைகின்றன என்று சிலர் கூறியபோதிலும் அவற்றினால் இளம் வயதினரின் ஒழுக்கம் சீர் குலைவதிலேயே இவை அதிக தாக்கம் செலுத்துவதைக் காணலாம்.

இவற்றுக்கு மத்தியில் தம் பிள்ளைகளை நல்லொழுக்கம் உள்ளவர்களாக, நற்குணம் நிறைந்தவர்களாக, நற்பண்புகளில் சிறந்தவர்களாக ஆக்குவதில் பெற்றோர்கள் கூடிய கரிசனை எடுப்பது அவசியம் என்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும். இதற்காக பிள்ளைகளின் அன்றாட நடவடிக்கைகளை முறையாக கவனித்து, உரிய அறிவுரைகளை வழங்கி, தவறுகளை திருத்தி, நல்வழியில் நடக்கச்செய்வது பெற்றோரின் பொறுப்பாகும்.

பெற்றோர் தம் பிள்ளைகளுக்கு சிறந்த முன்மாதிரியாக நடந்து கொள்வதும் அவசியமாகும். பெரும்பாலான விடயங்களில் பிள்ளைகள் தம் பெற்றோர்களையே முன்மாதிரியாகக் கொள்கின்றனர். அவர்களையே பின்பற்றுகின்றனர். இதனையுணர்ந்து பெற்றோர் தமது செயற்பாடுகளையும், நடத்தைகளையும் சீராக்கிக்கொள்ள வேண்டும்.

குடும்பமும், சமூகமும், சூழலும், நாடும் சிறக்க நல்லொழுக்கமுள்ள சந்ததியினர் உருவாக வேண்டும். இதனை கருத்தில் கொண்டு எம் பிள்ளைகளை நல்லொழுக்கமும், நற்பண்பும் நிறைந்தவர்களாக வளர்க்க திடசங்கற்பம் கொள்வோம்.

### தகவல் களஞ்சியம்

## இலங்கை நாட்டின் தலைவரான முஸ்லிம்?



இலங்கை அரசியல் யாப்பின்படி ஜனாதிபதி. பிரதமர் பதவிகளுக்கு அடுத்து மூன்றாவது உயர்பதவியாக சபாநாயகர் பதவி திகழ்கின்றது. 1980ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் அப்போது ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர். ஜயவர்தனவும், பிரதமராக இருந்த ஆர். பிரேமதாசாவும் இலண்டனில் நடைபெற்ற இளவரசர் சார்ள்ஸ் டயானா திருமணத்தில் கலந்து கொள்ள ஒரே நேரத்தில் வெளிநாடு சென்றனர். இலங்கை நாட்டின் தலைவராக ஜனாதிபதியின் கடமைகளை நிறைவேற்றும் அரிய வாய்ப்பு, அப்போது சபாநாயகர் பதவியை வகித்த அல்ஹாஜ் பாக்கீர்மாக்கார் அவர்களுக்கு அன்று கிடைத்தது. சிறுபான்மையினத்தைச் சேர்ந்த ஒருவருக்கு இத்தகைய ஒரு வாய்ப்பு கிடைத்தமை இலங்கை வரலாற்றில் ஒரு அபூர்வ நிகழ்வாகும்.

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் முதலாவது சபாநாயகராகத் தெரிவான பாக்கீர்மாக்கார் கொழும்பில் உள்ள பழைய பாராளுமன்றத்தின் கடைசி சபாநாயகராகவும், ஜயவர்தனபுரக் கோட்டையில் அமைந்துள்ள புதிய பாராளுமன்றத்தின் முதலாவது சபாநாயகராகவும் செயலாற்றும் சிறப்பையும்பெற்றார். இவரது 23வது நினைவு தினம் கடந்த செப்டம்பர் 10ம் திகதியாகும்.

சேவை மனப்பான்மை உள்ள ஆசிரியராக, திறமை மிக்க வழக்கறிஞராக, நகர சபையின் தலைவராக, மாகாண சபையின் ஆளுநராக, அமைச்சரவை அந்தஸ்தில்லா அமைச்சராக, அமைச்சரவை அமைச்சராக, சபாநாயகராக, முஸ்லிம் லீக் தொண்டனாக, முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் ஸ்தாபகராக, அதன் ஸ்தாபக தலைவராக என பல்வேறு பதவிகளை வகித்து, பொதுவாக முழு இலங்கை திருநாட்டுக்கும், முஸ்லிம் சமூகத்துக்கும் அளப்பரிய சேவைகள் ஆற்றிய தலைவர் பாக்கீர்மாக்கார். இவற்றை கௌரவிக்கும் முகமாக இலங்கை அரசாங்கம் இவருக்கு “தேசமான்ய” என்று பட்டம் அளித்து கௌரவித்தது.

### நலமே வாழ்வோம்

## மஹாதீர் முஹம்மத் தரும் ஆரோக்கிய அறிவுரைகள்



மலேசிய நாட்டைக் கட்டி எழுப்பிய சிற்பி மஹாதீர் முஹம்மத், தம் இளம் வயதிலேயே மலேசிய நாட்டின் பிரதமராகி அதனை தன் நிறைவு பெற்ற நாடாக ஆக்கியவர் இவர். மலேசியா ஊழல்வாதிகளால் உருக்குலையும் நிலையை அடைந்தபோது, மீண்டும் களத்துக்கு வந்து தன்னுடைய 92வது வயதில் தேர்தலில் வெற்றிபெற்று, மீளவும் பிரதமராகி, அந்நாட்டை பொறுப்பேற்று வீழ்ச்சியிலிருந்து பாதுகாத்தார்.

இப்போது, தன்னுடைய 95வது வயதில், மலேசிய நாட்டுக்கு புத்துயிரூட்டும் இளம்பரம்பரை ஒன்றை உருவாக்கும் நடவடிக்கைகளில் உற்சாகத்தோடு ஈடுபட்டுள்ளார். இன்றும் சுறுசுறுப்பாக இளைஞன் போன்று இயங்குகிறார். அவர் போன்று என்றும் இளமையுடன், சுறுசுறுப்பாக உற்சாகத்துடன் இருக்க அவர் கூறும் அறிவுரைகளில் சில உங்களுக்காக. படியுங்கள், பின்பற்றுங்கள், சுகதேகியாக நீண்ட ஆயுளுடன் வாழுங்கள்.

வயதாக ஆக ஓய்வெடுக்க முற்படாதீர்கள். நீங்கள் ஓய்வெடுக்கத் தொடங்கினால் விரைவாக பலவீனமடைந்து விடுவீர்கள். திறனற்றவர்களாக ஆகிவிடுவீர்கள். முதுமையின் தளர்வை அடைந்து விடுவீர்கள்.ஓய்வடையும் வயதை எட்டும்போது சுறுசுறுப்பாகி விடுங்கள்.

உங்களின் தசைகளும் அது போன்றதுதான். உங்களின் தசைகளைப் பயன்படுத்தாமல் எந்நேரமும் ஒரே இடத்தில் இருந்து கொண்டு இருந்தீர்களானால் உங்களின் தசைகள் உங்களைக்கூட சுமக்க இயலாத நிலைக்கு ஆகிவிடும். உங்களால் எழுந்து நிற்க முடியாது. உங்களால் நடக்க முடியாமல் போய்விடும்.

உங்களின் மூளையும் அது போன்றதுதான். உங்கள் மூளையை நீங்கள் பயன்படுத்தாமல் விட்டுவிட்டால், உங்களால் சிந்திக்க முடியாது, வாசிக்க முடியாது, உங்களால் எழுத முடியாது, நீங்கள் பின்னோக்கித் தள்ளப்படுவீர்கள். முதுமையின் தளர்வை அடைந்துவிடுவீர்கள். ஆகவே, எப்போதும், என்றென்றும் இளமையான எண்ணங்களுடன் சுறுசுறுப்பாக இருங்கள்.

### காண வேண்டிய காட்சியொன்று



உலகின் மிகச்சிறந்த புகைப்படங்களில் ஒன்று இது. அப்படியென்ன புதுமை இதில் இருக்கிறது என்று யோசிக்கிறீர்களா? காரணம் எதுவென்று புரியவில்லையா? நன்றாக உற்றுப் பாருங்கள். இன்னும் புரியவில்லையா? பத்திரிகையை திருப்பி புகைப்படத்தை தலை கீழாக பாருங்கள். அப்போது புரியும்.

### கவிக் 'கடி'கள்

வரிசையில் நிற்கின்றன
வேரில்லா ஒற்றை
கிளை கொண்ட
மரங்கள்.
தெருவிளக்கு
...
அடைமழையில்
எத்தனையோ முறை
அகப்பட்ட போதிலும்
நனைந்ததே இல்லை
நிலவு
...
ஒற்றை நரம்பில்
உயிர் வாழ்கிறது
விளக்கு
...
எங்கள் சொத்தில்
ஒரு பகுதி
அடுத்தவர்
கணக்கில்
இரத்த தானம்.

காலை ஊன்றி நிற்க
தலையில் அடி வாங்கும்
தலையெழுத்து.
ஆணி
...
மா மேதைகளை
உலகுக்குத்தரும்
கட்டிடமில்லா
பல்கலைக்கழகம்.
புத்தகம்
...
சுரங்கப்பாதையை
மூடித் திறக்க
இரண்டு கதவுகள்.
உதடுகள்
...
வானம் தன்
நரையை மறைக்க
கறுப்புச் சாயம்
பூசி இருக்கிறது.
இரவு

**எம். வஸீர், வாழைத்தோட்டம்**

### காண வேண்டிய காட்சியொன்று



தாயுக்கும் மகளுக்குமிடையிலான நெருக்கமான பிணைப்பை, இணைப்பை ஓரிரு கோடுகள் மூலம் மிகத் தத்ரூபமாகக் காட்டியிருக்கும் சித்திரக் கலைஞனின் அபூர்வ ஆற்றலை என்னவென்று புகழ்வது?

**இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எழுத விரும்புவோர், “படித்ததும் பகர்வதும்” பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்எப் (WhatsApp): 0777314207**

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2020 செப்டெம்பர் மாதம் 13ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.